உ

கடவுள் துணை

# சிராமலைக்கோவை

இது

மஹாமஹோபாத்யாய-திராவிடவித்யாபூஷண-
தாக்ஷிணாத்யகலாநிதி-டாக்டர்

## உ. வே. சாமிநாதையரவர்களால்

பரிசோதித்துத்
தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்
பதிப்பிக்கப்பெற்றது.

செந்தமிழ்ப் பிரசுரம்—௬௪

மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலை
மதுரை
1937

—

விலை அணா 12

# பொருளடக்கம்


1. முகவுரை i—vii

[கோவையின் இயல்பு—சிராமலைக்கோவை—ஏட்டுப்பிரதி—பதிப்பு.]

2. சிராமலைச் சிறப்பு viii—xvi

[பெயர்—அகநானூற்றிற்கண்ட செய்தி—தலப்பெயர்கள்—மூர்த்திகளின் திருநாமங்கள்—பூசித்தோர்—தீர்த்தங்கள்—சிற்பமும் சிலாசாசனங்களும்—தேவாரம் முதலியன—புராணம்—உலா—பிரபந்தங்கள்—தனிப்பாடல்கள்.]

3. நூலாசிரியர் வரலாறு xvii—xxii

[காலம் முதலியன—முத்துக்குமாரசாமிக் கவிராஜர்—கல்வியறிவு—மாரியப்பமுதலியார்—வைத்தியலிங்கமௌனத்தம்பிரான்—நூலாசிரியர் குணவிசேடங்கள்.]

4. நூலாராய்ச்சி xxiii—xxxi

[தலச்செய்திகள் —புராணச்செய்திகள் — சைவநூற்கருத்துக்கள்—புலவர்களைப்பற்றியசெய்திகள் — முதலும் முடிவும் — குறட்சொற்பொருளாட்சி — பிறநூற்கருத்துக்கள்—பழமொழிகள்—தொனி—ஒருபொருளிருசொற்கள்—மயக்கம்—குறிப்பு—வெளிப்படை—அணிகள் முதலியன—அரும்பதங்கள்.]

5. சிராமலைக் கோவை—
மூலமும் குறிப்புரையும் 1—135

6. செய்யுண்முதற்குறிப்பகராதி 136—139

7. சிறப்புப்பாயிரம் 140

உ

கணபதி துணை

# முகவுரை

(திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தேவாரம்)

திருச்சிற்றம்பலம்

நன்றுடை யானைத் தீயதி லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் னுள்ளங் குளிருமே.

## கோவையின் இயல்பு

கோவையென்பது தமிழிலக்கணங்களுட் சிறந்த அகப் பொருளுக்கு இலக்கியமாகப் பிற்காலத்துப் புலவர்பெருமக்களாற் பாடப்பெற்றுவரும் பிரபந்தம்; சங்கநூல்களிற் காணப்படும் அகப் பொருட்செய்யுட்களைப்போலன்றித் தொடர்ந்த பொருள் அமையும்படி துறைகள் கோக்கப்பெற்றமையின் இப்பெயர்பெற்றது. இதனைப் பொருட்டொடர்நிலைச்செய்யுட்களுள் ஒருவகையாகிய சிறுகாப்பியத்தின்பாற்படுத்துவர் தண்டியலங்கார உரையாசிரியர்.

எழுத்து முதலிய ஐந்திலக்கணப்பகுதிகளின் அமைதியும் அவற்றுட்சிறப்பாக அகப்பொருளமைதியும்கோவைகளில்இருத்தலின், இவ்வகைப் பிரபந்தங்களை இயற்றுவதற்கு நற்புலமை வேண்டும். "யாவையும் பாடிக் கோவை பாடு" என்று வழங்கும் பழமொழியால், பிற பிரபந்தங்களைப் பாடிக் கைவந்த புலவர்களே கோவையை இயற்றும் தகுதியுடையாரென்பது தெளியப்படும்.

யாப்பருங்கலவிருத்தியுரைகாரர் வித்தாரகவியின் இலக்கணத்தை,

> 'வித்தாரகவியாவான் மும்மணிக்கோவையும் பன்மணிமாலையும் மறமும் கலிவெண்பாவும் மடலூர்ச்சியும் முதலாகிய நெடும்பாட்டும், கோவையும், பாசண்டமும், கூத்தும், விருத்தமும், கதை முதலாகிய செய்யுளும் இயலிசைநாடகங்களோடும் கலைநூல்களோடும் பொருந்தப் பாடும் பெருங்கவியெனக் கொள்க'

என்று வகுக்கின்றார்; வித்தாரகவியாற் செய்யப்படும் சிறப்புடைய நூல்களிற் கோவையும் ஒன்றாதல் காண்க.

இப்பொழுது தெரியவரும் கோவைகளுள் மாணிக்கவாசகர் இயற்றிய திருச்சிற்றம்பலக்கோவையாரும், பாண்டிக்கோவையும், தமிழ்முத்தரையர்கோவையும், குமரசேனாசிரியர்கோவையும் பழமையுடையன. இவற்றுள் பாண்டிக்கோவையிற் பல செய்யுட்கள் இறையனாரகப்பொருள், களவியற்காரிகை, யாப்பருங்கல விருத்தி, இலக்கணவிளக்கம் என்பவற்றின் உரைகளில் மேற்கோளாக வந்துள்ளன. அங்ஙனம் வந்துள்ள செய்யுட்களையன்றி நூல்முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லை. பின்னவை இரண்டன் பெயர்கள்மட்டும் வழங்குவதன்றிச் செய்யுட்கள் கிடைத்தில.

கோவையென்னும் பிரபந்தம் நானூற்றின் மிக்க கலித்துறைகளால் இயற்றப்பெறுவது. திருக்கோவையார் நானூறே செய்யுட்களாலாகியது. முதற்கோவையாகிய அதிலுள்ள செய்யுட்களின் தொகையை நினைந்து கோவைகள் எல்லாவற்றிற்கும் நானூற்றுக் கோவையென்னும் பெயர் பிரபந்தத்திரட்டு என்னும் நூலொன்றிற் சொல்லப்படுகிறது. நின்றசீர்நெடுமாறநாயனாராகிய நெல்வேலி வென்ற மாறனைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டதெனக் கருதப்படும் பாண்டிக்கோவையில் ஒருதுறைக்கே பல செய்யுட்கள் இருக்கின்றன. ஆதலின் அதன்கண் ஆயிரத்தின் மிக்க செய்யுட்கள் இருத்தல்வேண்டுமென்று தோற்றுகின்றது. கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றியதாக அறியப்படும் காங்கேயன் நாலாயிரக்கோவை யென்பது நாலாயிரஞ்செய்யுட்களை உடையதென்று அப்பெயரால் ஊகிக்கப்படுகிறது. துறைக்குப் பப்பத்தாக, நானூறுதுறைக்கும் நாலாயிரம் செய்யுள் பாடியிருத்தல் கூடும்.

கோவைநூல்கள் கட்டளைக்கலித்துறையால் இயற்றப்படும் வரையறையுடைமைபற்றி அச் செய்யுளுக்குக் கோவைக்கலித்துறையென்னும் பெயர் வழங்கலாயிற்று (வீரசோழியம், யாப்புப். 17, உரை.) அக் கலித்துறைகளைத் தொல்காப்பிய உரையிற்

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கொச்சகத்தின்பாற்படுத்துவர்; யாப்பருங்கலவிருத்தியுடையார் கலிப்பாவின் இனமாக்குவர்; சந்தப் பாவகையில் ஒன்றாகவும் பகுப்பர்;

'குமரசேனாசிரியர்கோவையும், தமிழ்முத்தரையர்கோவையும், யாப்பருங்கலக்காரிகையும்போன்ற சந்தத்தால் வருவனவற்றின் முதற்கண் நிரையசைவரின் ஓரடி பதினேழெழுத்தாம்; முதற் கண் நேரசைவரின் ஓரடி பதினாறெழுத்தாம்.' (ப. 486.)

அகப்பொருளமைதியுடைமையின் அகப்பொருட்கோவை யெனவும், ஐந்திணைநெறியளாவுதலின் ஐந்திணைக்கோவை யெனவும் இவ்வகைநூல் பெயர்பெறும். குறிஞ்சி முதலிய அகனைந்திணை ஒழுக்கங்களையும் முறையாக இது கூறுவிடினும் ஒரு கதைபோலத் தொடர்புபெறும் பயனோக்கி இம்முறை இறையனார்களவியலிற் குறிப்பாகவும், நாற்கவிராசநம்பியார் இயற்றிய அகப்பொருள் விளக்கத்தில் விளக்கமாகவும் அமைக்கப்பட்டதுபோலும். ஐந் திணையேயன்றிக் கைக்கிளையும் பெருந்திணையும் இவ்வகைநூலிற் காணப்படும். அகனைந்திணைக்கு முன்னர் நிகழ்வதாகிய இக் கைக் கிளைக்கும் பிற கைக்கிளைக்கும் வேறுபாடு உண்டு. இதிலுள்ளது ஆண்பாற்கைக்கிளையே. இதைப்பற்றிப் பேராசிரியர்,

'அகத்திணையின்கண் கைக்கிளை வருதல் திணைமயக்காம் பிற வெனின், கைக்கிளைமுதற் பெருந்திணையிறுவாய் எழுதிணையினுள்ளும் கைக்கிளையும் பெருந்திணையும் அகத்தைச் சார்ந்த புறமாயினும், களவிக்கோவையின் எடுத்துக்கோடற்கண் காட்சிமுதலாயின சொல்லுதல் வனப்புடைமைநோக்கிக் கைக்கிளை தழீஇயினார். பெருந்திணை தழுவுதல் சிறப்பின்மையின் நீக்கினார்' (சிற். 4, உரை)

என்று எழுதியவை இங்கே அறிதற்குரியன.

நாற்கவிராசநம்பி நற்காமத்துக்கு முன் நிகழும் கைக்கிளையை அகப்பொருட்கைக்கிளை யெனவும், காமஞ்சாலா இளமையோள் வயிற் காமுறல் முதலியனவற்றை அகப்புறக்கைக்கிளை யெனவும், பாட்டுடைத்தலைவனையே களவித்தலைவனாகக் கூறும் கைக்கிளை யைப் புறப்பொருட்கைக்கிளை யெனவும் வகுப்பர். இங்ஙனமே பெருந்திணையையும் அகப்பொருட்பெருந்திணை முதலியனவாகப் பகுத்துக் கூறுவர்.

திருக்கோவையாருக்குப் பின் எழுந்த கோவைகளிற் பெரும்பாலன அகப்பொருள்விளக்க இலக்கணத்தைப் பின்பற்றி யமைந்தன. இவற்றிற் கூறப்படும் கிளவிகள் கைக்கிளைமுதல் பொருள்வயிற்பிரிவு இறுதியாக 33 ஆகும். ஒவ்வொரு கிளவியிலும் பல துறைகள் உள்ளன. சிலர் சிலதுறைகளை விரித்து இரண்டும் பலவும் ஆக்குவர். சிலர் பலவற்றைச் சுருக்கி ஒன்றாக்குவர். பாங்கி, நாற்றம் தோற்ற முதலிய எழுவகையானும் ஐயுறுதலை ஒருதுறையாக்கிச் சிலர் ஒருபாட்டிற் கூறுவதும், அதனையே விரித்து ஏழு பாட்டாற் சிலர் கூறுவதும்போன்றன இதற்கு உதாரணமாகும். இக்கிளவிகள் முப்பத்துமூன்றனுள் தெளிவென்பதும் வரைவென்பதும் ஒவ்வொரு துறையையே உடைய கிளவிகள். இயற்கைப் புணர்ச்சியின்கண் உள்ள 'வறிது நகைதோற்றல்' என்ற துறையைக் கவியினது கூற்றாக அமைப்பதே பெரும்பான்மையான மரபென்று என்னுடைய ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அம்மரபினின்றும் மாறுபட்ட கோவைகளும் உண்டு.

கோவையில் வரும் அகத்துறைகளிற் பல அந்தாதி, கலம்பகம் முதலிய வேறுவகைப் பிரபந்தங்களின் இடையிடையே காணப்படும். கலம்பகத்தில் அமைக்கப்படவேண்டுமென்று வரையறுக்கப்பெற்ற உறுப்புக்களில் பாண், இரங்கல், தூது, வண்டு, தழையென்பன அகப்பொருட்டுறைகளேயாம். இங்ஙனம் அமைந்த இடங்களில் அத்துறைகளுக்குரிய பெயர்களிற் சில வேறாகவும் வழங்கும். இடையூறுகிளத்தலை நாணிக்கண்புதைத்தலெனவும், பாங்கி தலைமகள் அவயவத்தருமைசாற்றலென்பதை, எழுதரிதென்ன ஏந்தலை விலக்கலெனவும் வழங்குவது காண்க.

இத்துறைகளில் ஒன்றையே பொருளாகக்கொண்ட நூறு கலித்துறைகளேனும், நானூறுகலித்துறைகளேனும் பாடப்பெற்ற நூல்கள் சில ஒருதுறைக்கோவை யென்னும் பெயர்பெற்று வழங்கி வருகின்றன. இரகுநாதசேதுபதி ஒருதுறைக்கோவை, சசிவர்ணன் கோவை, தியாகேசர்கோவை முதலியன இவ்வகையைச் சார்ந்தன. இவை முறையே நாணிக்கண்புதைத்தல், வண்டோச்சி மருங்கணைதல், வெறிவிலக்கென்னும் துறைகளை யுடையன.

மொழிக்கு முதலாகும் எழுத்துக்களுள் ஒவ்வொன்றையும் முதலாக உடைய ஒவ்வொரு செய்யுளுக்கும் ஒவ்வொருதுறையை அமைத்துக் கட்டளைக்கலித்துறையாற் பாடப்படும் வருக்கக் கோவை யென ஒருவகைப்பிரபந்தம் உண்டு. நெல்லைவருக்கக் கோவை, பாம்பலங்காரர் வருக்கக்கோவை முதலியன அவ்வகை யைச் சார்ந்தவை.

பிரபந்தவகைகளில் தூது, மடல் முதலியன அகப்பொருட் டுறையையே பின்பற்றி விரிவாகச் செய்யப்படுவனவாம்.

அகப்பொருளமைதியினால் இயலும், சந்தவகையைச்சார்ந்த செய்யுட்களையுடைமையினால் இசையும், கூற்றுவகையுடைமையி னால் நாடகமும் ஒருங்கேபொருந்திய கோவை முத்தமிழிலக்கிய மாகவும் சிறப்பிக்கத்தகும் பெருமை வாய்ந்தது. அத் தகுதி பற்றியே பேராசிரியர் திருக்கோவையாருக்கு உரை இயற்றினார்; சொக்கப்பநாவலரென்ற புலவர் தஞ்சைவாணன் கோவைக்கு உரையெழுதினர்.

நன்றியறிவின் திறத்தினால் தம்மை ஆதரித்த பிரபுக்கள் மீதும், பக்திச்சிறப்பால் தெய்வங்களின்மீதும் பாடப்பெற்ற கோவைகள் பல. தலங்களிற் பற்றுடைய புலவர்கள் அவ்வத்தல மூர்த்திகளின் விஷயமாகப் பாடிய கோவைகள் பல. திருச்சிற்றம் பலக்கோவையார் தில்லைத்தலத்திற் குரிய கோவையாதல் காண்க. இப்படியே மதுரை முதலிய சிவஸ்தலங்களுக்கும் பழனி முதலிய சுப்பிரமணியஸ்தலங்களுக்கும் ஸ்ரீரங்கம் முதலிய விஷ்ணுஸ்தலங் களுக்கும் கோவைகள் உண்டு. ஒரேவகையான பொருளமைப் பின்மேல் இவ்வளவு கோவைகளையும் தனித்தனிச் சிறப்பியல்கள் பொருந்த இயற்றிய புலவர்களின் திறமையை நினைக்கையில் விம்மித முண்டாகின்றது. ஒரேவகை உறுப்புக்களால் அமைந்தன வாயினும் மக்களின் முகங்களில் ஒன்றைப்போல மற்றொன்று இராமல் அமைத்த கடவுளின் படைப்பையே இக் கவிஞர்களின் படைப்புக்கு உவமை கூறவேண்டும்.*

---

* கோவையைப்பற்றிய வேறுசில செய்திகளையும், கோவைப்பொருட் டொடர்பையும் சிவக்கொழுந்துதேசிகர் பிரபந்தங்களி லுள்ள கொடீச்சுரக் கோவையின் நூன்முக முதலியவற்றால் அறியலாகும்.

## சிராமலைக் கோவை

சிராமலைக்கோவை யென்பது தட்சிணகைலாய மென்னும் சிறப்புடைய திருச்சிராப்பள்ளியி லுள்ள மலையிற் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள தாயானசெல்வரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு இற்றைக்குச் சற்றேறக்குறைய 150 வருஷங்களுக்கு முன் பாடப்பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர்பெயர் தெரிய வில்லை. இந்நூல் காப்பு, வாழ்த்தாகிய இரண்டும் உட்பட 458 செய்யுட்களை யுடையது. இது சிரகிரிக்கோவை யென்றும் வழங் கும்.

## ஏட்டுப்பிரதி

இக்கோவையின் ஏட்டுப்பிரதியொன்று இளமையில் எனக்குத் திருவாவடுதுறையாதீனத்திலிருந்து கிடைத்தது. அப்பால் திருநெல்வேலி, சாலிவாடீசுவர ஓதுவாரவர்கள் வீட்டிலிருந்து வேறொன்று கிடைத்தது. திருவாவடுதுறைப்பிரதியின் முடிவில்,

> 'காலயுக்தி௵ மாசி௴ உ௬-சனிவாரமும் ரேவதி நக்ஷத்திரமும் திரிதியையும் கூடின சுபதினத்தில் சிரகிரிக்கோவை எழுதி நிறைந்தது; தெட்சிணகைலாஸபதி ஸ்ரீமாதுருபூதேசுவரஸ்வாமி பாதாரவிந்தமே துணை; குமரகுருபரன் துணை'

என்பன எழுதப்பட்டிருந்தன. திருநெல்வேலிப் பிரதியின் ஓரேட்டில் இதன் பின் உள்ள ஆசிரியர் வரலாற்றிற் காணப்படும் நிருபம் எழுதப்பட்டிருந்தது; அப்பிரதியின் இறுதியில்,

> 'சார்வரி௵ தை௴ கஙுவ சிரகிரிக்கோவை எழுதி நிறைந்தன'

என்ற வாக்கியம் காணப்பட்டது.

இந்நூலைச் சிறப்பித்துச் சாமிநாதகவிராயரென்னும் ஒருவர் பாடிய இரண்டு செய்யுட்கள் உண்டு. அவை இந்நூலைப் பலபடப் பாராட்டுகின்றனவேயன்றி இந்நூலாசிரியர் இன்னாரென்பதைப் புலப்படுத்தவில்லை.

## பதிப்பு

தாயான செல்வத்தின் திருவருளால் இப்பொழுது குறிப்புரை முதலியவற்றுடன் இந்நூல் வெளியிடப்படுகின்றது. படிப்பவர்களுக்குப் பயன்படும்பொருட்டுச் சிராமலைச்சிறப்பும் நூலாசிரியர் முதலியோர் வரலாறும், நூலாராய்ச்சியும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

இக்கோவையை வெளியிடவேண்டுமென்று பன்முறை வற்புறுத்தி ஊக்கியவரும் திரிசிரகிரிசம்பந்தமான பல செய்திகளைத் தெரிந்து எனக்கு அறிவித்து உதவியவரு மாகிய திருச்சிராப்பள்ளி ஸெயிண்ட் ஜோஸப் கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமான். மு. நடேச முதலியாரவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

நான் பிரதிசெய்து ஆராய்ந்துவைத்திருக்கும் பிரபந்தங்களை வெளியிடுதற்கு வேறுவழியின்மையின் செந்தமிழ், கலைமகள், சிவநேசன் ஆகிய பத்திரிகைகளில் சிலபிரபந்தங்களை வெளியிட லானேன். இந்நூலைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டு உதவிய அதிபர்களுடைய ஆதரவு எனக்கு ஊக்கமளிக்கின்றது.

இந்நூலை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்து உதவிசெய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

'தியாகராஜ விலாஸம்'
திருவேட்டீசுவரன்பேட்டை
14—1—37.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# சிராமலைச் சிறப்பு

## பெயர்

சிராமலை யென்பது திரிசிராமலையென்பதன் நாமைகதேசம். திரிசிரனென்னும் அரக்கன் இருந்து அரசாண்டு இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றமையின் இப்பெயர் உண்டாயிற்றென்று இத்தலத்திற்குரிய புராணம் கூறும். இக்காரணம்பற்றியே திரிசிராப்பள்ளி, திரிசிரபுரம், திரிசிரகிரி யென்னும் பெயர்கள் அமைந்தன. முடியுடைவேந்தரான சோழருடைய இராசதானிநகரமாகிய உறையூர் இதன் மேல்பால் அமைந்திருக்கின்றது.

## அகநானூற்றிற் கண்ட செய்தி

இத்தலத்தைப்பற்றி அகநானூற்றில் குறுங்குடி மருதனா ரென்னும் புலவர்,

> "கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
> நெடும்பெருங் குன்றத்து" (சு: 14-5)

என்று பாடியுள்ளார். இப்பகுதிக்குப் பழைய உரையாசிரியர்,

> 'உறையூர்க் குணாது குன்றமென்றது உறையூர்க்
> குக் கீழ்ப்பக்கத்ததாகிய சிராப்பள்ளிமலை'

என்று பொருள் எழுதினர்.

## தலப்பெயர்கள்

கைலையங்கிரியின் கொடுமுடிகள் மூன்று வாயுவினாற் பெயர்த்து வீசப்பட்டன வென்பதும் அம்*மூன்றனுள் ஒன்று இம்மலை யென்பதும் அதனால் இதற்குத்தட்சிண கைலாசமென்னும் பெயர்வந்த தென்பதும் புராணவரலாறுகள். தென்கயிலை யெனத் தமிழில் வழங்கும். சாரமாமுனிவ ரென்பவரால் நாகலோகத்தி லிருந்து கொணர்ந்து வளர்த்த செவ்வந்திமலர்களாற் சிவபிரான்

---

* ஏனையிரண்டும் திருக்காளத்தியும் திருக்கோணசலமுமாம்.

பூசிக்கப்பெற்றமையின் அவருக்குச் †செவ்வந்திநாத ரெனவும் இத்தலத்துக்குச் செவ்வந்திமாநக ரெனவும் திருநாமங்கள் அமைந்தன.

## மூர்த்திகளின் திருநாமங்கள்

மலைமேல் எழுந்தருளியிருத்தலின் திருமலைக்கொழுந்தென வும், கருவுற்றிருந்த வணிகப்பெண்ணிற்குத் தாயாகிவந்து மருத்துவம் புரிந்தமையின் தாயானசெல்வர், தாயுமானவர், மாத்ருபூதேசுவரர் எனவும் இத்தலத்துச் சிவபெருமான் வழங்கப்பெறுவார்.

அம்பிகையின் திருநாமம் மட்டுவார்குழலம்மை, சுகந்த குந்தளாம்பிகை யென்பன.

இங்கே சிவாலயத்தில் செவ்வந்திவிநாயகரென்ற விநாயகரும், மலையின் உச்சியில் உச்சிப்பிள்ளையாரென்ற விநாயகரும் எழுந்தருளியிருக்கின்றனர். விபீஷணனிடமிருந்து திருவரங்கநாதனை வாங்கி ஸ்ரீரங்கத்தில் வைத்துவிட்டு இம்மலையில் விநாயகக்கடவுள் ஏறி உச்சியில் அமர்ந்தன ரென்றதொரு கர்ணபரம்பரைச்செய்தி வழங்கிவருகின்றது.

இங்குள்ள குகையில் முருகக்கடவுள் எழுந்தருளியிருந்த தாகப் புராணம் கூறும்.

## பூசித்தோர்

இத்தலத்திலுள்ள சிவபெருமானைப் பூசித்துப்பேறுபெற்றோர் அகத்தியர், அருச்சுனன், அனுமான், இந்திரன், இரத்தினவதி யென்ற செட்டிப்பெண், இராமன், உமாதேவியார், சப்தகன்னியர், சப்தரிஷிகள், சாரணர்கள், சாரமாமுனிவர், சித்தர்கள், சூரவாதித்தசோழன், திரிசிரன், நாககன்னியர், பாம்பு, பிரமதேவர்,

† செவ்வந்தியப்பன், செவ்வந்தியாண்டி எனத் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த இடங்களிலுள்ளோர் பெயர்வைத்துக்கொள்ளும் வழக்கம் இன்றும் உள்ளது.

வண்டு, ஜடாயு முதலியோர். அனுமான் பூசித்ததற்கு அறிகுறியாக அனுமக்கொடியும் அனுமமுத்திரையும் இக்கோயி லுக் குரியனவாக வழங்கிவருகின்றன.

## தீர்த்தங்கள்

இத்தலத்துக்குரிய தீர்த்தங்கள் காவிரி, சிவகங்கை, பிரமதீர்த் தம், நன்றுடையான், தீயதிலான் முதலியன. இவற்றுள் பின் இரண்டுதீர்த்தங்களின் பெயர்களும் "நன்றுடை யானைத் தீயதி லானை" என்ற தேவாரத்தொடரைப் பின்பற்றி அமைந்தன போலும். இங்கே 'நாஷனல் காலேஜு'க் கருகில் காவிரியம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. சின்னையாப் பிள்ளையவர்கள் சத்திரத் திற்கருகில் ஓடத்துறைப்பிள்ளையார்கோயில் என ஒரு கோயில் உண்டு. முற்காலத்தில் காவிரி அவ்விடத்துக்கு அருகில் ஓடி யிருக்கக்கூடு மென்றும், ஓடம்விடுந்துறையில் இருந்தமையின் அவ் விநாயகருக்கு அத் திருநாமம் உண்டாயிற் றென்றும் சிலர் சொல் வர். இங்ஙனம் ஆறுகள் பழையகாலத்தில் இருந்த நிலையிலிருந்து மாறிச்செல்லும் இடங்கள் பல உண்டு.

"குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீர"

என்று திருப்புகழில் உள்ள பகுதியால் காவிரி முற்காலத்திற் சிரா மலைக்கு அருகில் ஓடியதாகக் கருதவும் இடமுண்டு.

## சிற்பமும் சிலாசாசனங்களும்

சிராமலைக்கோயில் மிகப் பழமையானது. இவ்வாலயத்தில் பல்லவர்களால் அமைக்கப்பட்ட இரண்டு குகைகள் உள்ளன. மேலுள்ள குகையில் திருநாவுக்கரசருடைய வரலாற்றைவிளக்கும் சிற்பங்கள் இருக்கின்றன. இக்கோயிலில் பல அருமையான சிலா சாஸனங்களைக் காணலாம். அவற்றுள் முதல் மகேந்திரவர்மன் காலத்து* வடமொழிச்சாஸனம் ஒன்று. அச் சாஸனம்

* தென்னிந்திய சிலாசாஸன அறிக்கை, 1888ஞு 63, 64.

தெரிவிக்கும் அப் பல்லவனுடைய பெயர்களில் குணபரனென்ப தொன்று. திருநாவுக்கரசரை அலைத்துப் பின் அவருடைய அருணிலைகண்டு சைவனாகிய குணபரனே அவனென்று அறிஞர் கருதுகின்றனர். அப்பல்லவ அரசன் இங்கே ஒருகோயிலெடுப்பித்துச் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தானென்று மேற்கூறிய சாஸனம் தெரிவிக்கின்றது.

முதல் இராஜராஜன்காலத்துச்*சாஸனமொன்றில் இவ்வூர் உறையூர்க் கூற்றத்துச்சிற்றம்பரிலுள்ள சிராப்பள்ளியென்று குறிக்கப்பட்டிருக்கின்றது. வேறுள்ள சாஸனங்களிலிருந்து இம்மலைக்குத் திருமலையென்னும் பெயரும், இறைவனுக்குத் திருமலைப் பெருமானடிகளென்னும் திருநாமமும் உண்டென்பது அறியப்படுகின்றது.

அம்பிகை திருக்கோயிலில் ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அருளிச்செய்த ஸ்ரீஸௌந்தர்யலஹரி கல்லிற் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேலுள்ள குடைவரைக்கோயிலில் 104 செய்யுட்களடங்கிய †சிலாசாஸனமொன்று இருக்கின்றது. அதில் முதல் 102 பாட்டுக்கள் ஒரு கலித்துறையந்தாதிநூலாகவும், 103-ஆம் செய்யுளாகிய கலித்துறையும் 104-ஆம் செய்யுளாகிய வெண்பாவும் நூல் செய்தார் இன்னாரென்பதை வெளியிடுவனவாகவும் உள்ளன. அவற்றால் அந்நூல் வேம்பையர்கோன் நாராயணன் என்ற ஒருவரால் இயற்றப்பட்டதாகத் தெரியவருகிறது. அந்நூற் செய்யுட்களிற் பல சிதைந்துள்ளன; சில வருமாறு:—

1. நிற்குந் துயர்கொண் டிருக்கும் பொழுதின்றி நெஞ்சனுங்கித்
தெற்கும் வடக்குந் திரிந்தே வருந்திச் சிராமலைமேற்
பொற்குன்ற னைக்கண்டு கொண்டே னினிப்புறம் போகவொட்டேன்
கற்குன் றனையநெஞ் சிற்செல்வ ராலில்லை காரியமே.

---

* தென்னிந்தியசிலாசாஸன அறிக்கை, 1904ஞு 412.

† தென்னிந்தியசிலாசாஸனங்கள்-தொகுதி IV-167-ஆம் சாஸனம்.

2. தழைகொண்ட கையர் கதிர்கொண்ட மெய்யர் தளர்வுகண்டு
பிழைகொண்ட பொய்யொன்று பேசிவிட் டேற்கவர் பேரருளால்
மழைகொண்ட கண்டர்தம் மாநீர்ச் சிராமலை வந்துநின்றார்
உழைகொண்ட நோக்கியின் றென்னுரைக் கேனவ ருற்றிடினே. (17)

3. மதவிடைப் பாகன் மதியிடைப் பாகன் மழைநிறத்தோற்
குதவிடப் பாக னுமையிடப் பாக னுயர்கலிங்கு
கதவிடப் பாகு கமுகெழக் காமர் கடிநகர்வாய்ப்
புதவிடப் பாய்புனற் பொன்னிச் சிராமலைப் பொன்வண்ணனே. (21)

4. அயிர்ப்புடை யாய்நெஞ்ச மேயினித் தேறா மங்கையல்லள்
செயிர்ப்புடை யார்தந் திரிபுரஞ் செற்றான் சிராமலைவாய்ப்
பயிர்ப்புடை யாளடி பார்தோய்ந் தனபடைக் கண்ணிமைக்கும்
உயிர்ப்புடை யாளிவ் வுலகுடை யார்பெற்ற வொல்கிடையே. (24)

5. பெருஞ்சிலை யாற்புர மூன்றெரித் தோன்பிறைக் கோட்டுக்கைம்மா
உரிஞ்சிலை தேங்கமழ் பாங்கர்ச் சிராமலை யுள்ளலர்போல்
வருஞ்சிலை யோர்நும ராயின் மறைவன்வன் கானவரேற்
கருஞ்சிலை யாலழிப் பன்கலங் காதுநில் காரிகையே. (27)

6. பனிப்படம் போர்த்தனள் பார்மகள் யானும் பசலையென்னுந்
துனிப்படம் போர்த்திங்குற் றேனங்குற் றாரன்பர் துங்கக்கைம்மா
முனிப்படம் போர்த்த பிரான்சிராப் பள்ளியு மூரிக்கொண்மூத்
தனிப்படம் போர்க்கும் பருவமன் றோவந்து சந்தித்ததே. (31)

7. இனிச்செல்வர் முன்கடைக் கென்செயச் சேறு மினையநெஞ்சே
கனிச்செல்வ மாம்பொழிற் காவிரித் தென்கரைப் பூவிரிக்கும்
முனிச்செல்வர் சேருஞ் சிராப்பள்ளி மேயமுக் கட்சுடரைத்
தனிச்செல்வ னைப்பணிந் துள்ளமிர் தூறித் தடித்தனமே. (35)

8. காலால் வலஞ்செய்து கையாற் றொழுதுகண் ணாரக்கண்டு
மேலா னவருடன் வீற்றிருப் பானெண்ணின் மெய்ப்புலவீர்
சேலார் கழனிச் சிராமலை மேயசெம் பொற்சுடரைப்
பாலா னறுநெய்யொ டாடியைப் பாடிப் பணிமின்களே. (39)

9. நெஞ்சந் துணையுண்டு நீர்நிலத் துண்டு நிழலுமுண்டு
தஞ்சப் பெருக்குள தானஞ் சிராமலைச் சாரலுண்டு
துஞ்சுந் துணையுஞ் சிவனைத் தொழுது துறக்கமெய்தார்
பஞ்ச நலியப் பலிதிரி வார்சிலர் பாவியரே. (42)

10. கள்ளு முருகுந் தருமல ரான்மிக்க சந்திறைஞ்சி
உள்ளும் புறமு மொருக்கவல் லார்கட் குலகறியக்
கொள்ளு மடிமை கொடுக்குந் துறக்கம் பிறப்பறுக்கும்
தெள்ளு மருவிச் சிராமலை மேய சிவக்கொழுந்தே. (47)

11. கொடும்பற் றுயங்கிக் குழிகண் ணிடுங்கிக் குரனடுங்கி
இடும்பைக் கொதுங்கி யிருமற் பகைகொல்ல வில்லிபட்ட
நெடும்பக் கனைய நிலையா வுடலை நிலையுமென்னார்
திடும்பற் கலுழிச் சிராமலை யாளியைச் சேர்ந்தவரே. (60)

12. கொடிக்கட் டியமணி மாளிகைத் தில்லையுட் கொற்றமன்னர்
முடிக்கட் டியமுகை சேர்கழன் மூவா யிரவர்முன்னின்
றடிக்கட் டியகழ லார்க்கநின் றம்பலத் தாடுமையர்
வடிக்கட் டியபொழில் வான்றோய் சிராமலை மாணிக்கமே. (67)

13. மருந்தே சிராமலை மாமணி யேமரு தூரமர்ந்தாய்
குருந்தேய் நறும்பொழிற் கற்குடி மேய கொழுஞ்சுடரே
முருந்தேய் முறுவ லுமைகண வாமுதல் வாவெனநின்
றிருந்தே நிறையழிந் தேன்வினை யேன்பட்ட வேழைமையே. (75)

14. வந்திறைஞ் சித்தளர்ந் தென்சொல்லு மோசிந்தை மாதவர்மேற்
சந்திறைஞ் சிப்படர் சாரற் சிராமலைத் தாழ்பொழில்வாய்க்
கொந்திறைஞ் சிக்கமழ் கோதை குலாவிக் குழலவிழப்
பந்திறைஞ் சிப்பிடிப் பாளிடைக் கேசென்று பற்றுண்டதே. (89)

15. நோயிலங் காத லுடையநெஞ் சேநுரை வெண்கடலுட்
போயிலங் காபுரஞ் செற்றபொற் றேரவன் போந்திருந்து
வாயிலங் கார்தரு மந்திரத் தால்வணங் கிப்பணிந்த
சேயிலங் கார்கழற் றீர்த்தன் சிராமலை சென்றடைந்தே. (91)

16. தொடரிடை யாத்த ஞமலியைப் போலிருந் தேனிச்சுற்றத்
திடரிடை யாப்பவிழ்த் தென்னைப் பணிகொள்பொன் னைப்புரையும்
சுடரிடை யாத்தபைங் கொன்றையு மத்தமுஞ் சூழ்சடையின்
படரிடை யாத்த பரமா சிராமலைப் பால்வண்ணனே. (94)

17. பொய்யினைப் பேசிப் பொருளினைத் தேடிப் புழுப்பொதிந்த
மெய்யினைக் காத்து வெறுத்தொழிந் தேன்வியன் பொன்மலைமேல்
ஐயனைத் தேவர்தங் கோனையெம் மானையம் மான்மறிசேர்
கையனைக் காலனைக் காய்ந்த பிரானைக் கழல்பணிந்தே. (97)

18. ஒக்கிய கையொ டொருக்கிய வுள்ளத்தி யோகியர்தம்
வாக்குயர் மந்திரம் வானரங் கற்றுமந் திக்குரைக்கும்
தேக்குயர் சாரற் சிராமலைக் கூத்தன்செம் பொற்கழன்மேல்
ஆக்கிய சிந்தை யடியர்க்கென் னேவின் றரியனவே. (101)

19. அரியன சால வெளியகண் டீரரு வித்திரள்கள்
பரியன நேர்மணி சிந்துஞ் சிராமலைப் பால்வண்ணனைக்
கரியன செய்யன நுண்புகர்ப் பைங்கட் கடாக்களிற்றின்
உரியனை நாழிகை யேத்தவல் லார்க்கிவ் வுலகத்துளே. (102)

20. மற்பந்த மார்வன் மணியன் மகன்மதிள் வேம்பையர்கோன்
நற்பந்த மார்தமிழ் நாரா யணனஞ் சிராமலைமேற்
கற்பந்த னீழலில் வைத்த கவித்துறை நூறுங்கற்பார்
பொற்பந்த னீழ லரன்றிருப் பாதம் பொருந்துவரே. (103)

## மண்டப முதலியன

தளவாய்முதலியாரவர்களால் வஸந்தோத்ஸவத்திற்காக அமைக்கப்பட்ட பதினாறுகால்மண்டபமொன்று இங்கு உண்டு; அதற்குத் தளவாய்மண்டபமென்று பெயர். திருமதிலில் தளவாய் முதலியாருடைய பிம்பமும், இத்தலத்தில் அவர் பெயரால் தளவாய்க்குளமென்ற தீர்த்தமும் உள்ளன. அவ்வக்காலங்களில் பலரால் இயற்றப்பட்ட வேறு பல மண்டபங்கள் இங்கே இருக்கின்றன.

## தேவாரமும் பிற பாடல்களும்

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குறிஞ்சிப்பண்ணில் அருளிச்செய்த தேவாரப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிச்செய்த திருக்குறுந்தொகைப்பதிகமொன்றும் இருக்கின்றன. ஐயடிகள் காடவர்கோன் நாயனாரால் அருளிச் செய்யப்பெற்ற க்ஷேத்திரத்திருவெண்பாவில் இத்தலத்தைப்பற்றியதாக உள்ள செய்யுள் ஒன்று வருமாறு:—

"கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடலிரா வண்ணம்—அழிந்த
திராமலையா கொண்டுபோ வென்னுமுன் னெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்."

அருணகிரிநாதராற் பாடப்பெற்ற திருப்புகழ்ப்பாக்கள் சில இத்தலத்திற்கு உண்டு.

தமிழ்நாவலர்சரிதையில் 'இறையனார் பொய்யாமொழிப்புலவர் முன்பு சிராமலையைப் பாடிய வெண்பா' என்னும் தலைப்பின்கீழ்,

"கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுத்துக்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை"

என்றதொரு வெண்பாவும், 'பொய்யாமொழியார் பாடல்' என்னும் தலைப்பில்,

"அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே"

என்ற கலித்துறையும் இச் சிராப்பள்ளிவிஷயமாகக் காணப்படுகின்றன.

இத்தலத்தில் எழுந்தருளியிருந்த சிவஞானச்செல்வராகிய தாயுமானசுவாமிகள் இயற்றிய சிரகிரித் தக்ஷிணாமூர்த்தி பதிகமும், சிராமலையப்பரைப் பாடிய வேறு சில செய்யுட்களும் உண்டு.

## புராணம்

இத்தகைய சிறப்பமைந்த தலத்தின்சம்பந்தமாகச் சைவ எல்லப்பநாவலர் இயற்றிய புராணம் ஒன்று உண்டு; செவ்வந்திப் புராணமென்பது அதன் பெயர்.

## உலா

பழைய ஏட்டுச்சுவடியொன்றில் இருந்த ஓரேட்டில் இத்தலத்திற்குரிய உலாவின் இறுதிக்கண்ணிகள் சில எழுதப்பட்டிருந்தன. பலவிடங்களில் தேடியும் அந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. அக்கண்ணிகள் வருமாறு:—

"........................மட்டு வார்குழலாம்
நல்லாளோ டின்ப நகைமேவிச்—சொல்லார்ந்த
மூவர் முதலோர் முழுத்தமிழு மன்புடையார்
யாவர் தமிழு மணிந்தருள்வோன்—ஆவியாய்
அத்தனு மாவதன்றி யன்னையுந்தா னுயபிரான்
சித்த மகிழ்தேன் சிரகிரியான்—சுத்த
நிலாவும் பகீரதியு நீண்ட சடைமேல்
உலாவவே போந்தா னுலா."

வேறு பிரபந்தங்கள்

பழைய *பதிற்றுப்பத்தந்தாதிகள் இரண்டும், திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களாற் பாடப் பட்ட †யமக அந்தாதி யொன்றும், அவர்களுடைய மாணுக்க ராகிய சோடசாவதானம் சுப்பராயசெட்டியார் இயற்றிய *சிலேடை வெண்பா வொன்றும் இத் தலத்திற்கு உள்ளன.

தனிப்பாடல்கள்

இத்தலசம்பந்தமான தனிப்பாடல்களிற் சில வருமாறு:—

1. "சிரபுரமா வீசர் செட்டிமகட் காவேடம்
தரித்து மருத்துவஞ்செய் தாயானு ரம்மானை
தரித்து மருத்துவஞ்செய் தாயானு ராமாயின்
மருத்தெண்ணெய்ச் சிக்கன்றி மணமிவர்க்கே தம்மானை
மட்டுவார் குழலிருக்க மணமரிதோ வம்மானை"

(மூவரம்மானை.)

(வெண்பா)

2 "முல்லையுங் குழலு முளைப்பதற்கு முன்னே
கலையும் வளையுங் கழன்றாள்—மலையிற்
சிராப்பளியா னேறிவருஞ் சேவின்மணி யோசைக்
கிராப்பளியுங் கொள்ளா ளிவள்."

பல வடமொழிச் சுலோகங்களும் வடமொழி தென்மொழிக் கீர்த்தனங்களும் இத்தலமூர்த்திவிஷயமாக இருக்கின்றன.

---

* இவை அச்சிடப்படவில்லை.

† இதனை ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டிற் காணலாம்.

# நூலாசிரியர் வரலாறு

## காலம் முதலியன

சிராமலைக்கோவையின் ஆசிரியர் பெயர் இன்னதென்று தெரியவில்லையாயினும் நூலினுள் வந்துள்ள சான்றுகளைக்கொண்டு இவருடைய காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 150 வருஷங்களுக்கு முன்னதென்றும், இவர் சிவபக்திச்செல்வரென்றும், செந்தமிழ்ப்புலவரென்றும், நன்றியறிவு மிக்கவரென்றும் அறிந்துகொள்ளலாம். சிராமலைக்கோவை எழுதியிருந்த சுவடியொன்றன் ஓரேட்டில் இவ்வாசிரியர் தம்முடைய ஆசிரியராகிய திருநெல்வேலி முத்துக்குமாரசாமிக்கவிராஜருக்கு எழுதிய கடித மொன்றன் பிரதி உள்ளது. அது வருமாறு:—

(வெண்பா)

"அருளே திருவுருவா யம்புவியின் மேலாம்
பொருளே தமியேன் பொருட்டா—இருடீர
வந்தருளு முத்துக்கு மாரசா மிக்குருவைப்
பந்தமற நெஞ்சே பணி.

"சுவாமியவர்கள் பாததூளியில் ஒன்றை அடியேன் சிரசின்மேற் கொண்டதன் வல்லபத்தாற் பாடிய கோவையைச் சுவாமியவர்கள் ஸந்நிதானத்திற் கனுப்பினேன். திருக்கண் சாத்தியருளவேண்டுவது. வேணும் விண்ணப்பம்.

"சுவாமியவர்கள் கிருபாகடாட்சத்தினாலே இந்தப்பிரதேசங்களெல்லாம் பிரபலமாக நன்னூலுரையே படித்து வருகிறார்கள். அகப்பொருளுரை வேண்டியிருக்கிறது.

"தாயுமானசுவாமிக்கும் 'சீர்கொண்ட' என்பதற்கும் பொருத்தம்:-

"சீர்கொண்டவென்பது மங்கலமொழியாதலானும், வகையுளி சேர்தல்முதலாயினகுற்றமின்றிநிற்றலானும், 'தப்பாத மூன்றைந்தே ழொன்பான் றவறில' என்பவாகலான் இஃதஞ்செழுத்துச்சீராகலானும், 'குறிலைந்துந் தந்நெடில்கொண் டிஉ ஐ ஔசேர்ந், தறிபாலன்' என்பதனால் குமாரப்பொருத்தமாதலானும், 'எண்ணுங் குறிலா ணியைந்த நெடிலெல்லாம், பெண்ணுகு

மொற்றுய்தம் பேடாகும் — பெண்ணினே, டாண்புகழ்ச்சிக் கவ்வவ் வெழுத்தா மயங்கினுமாம்' என்பவாதலிற் பாற்பொருத்தமும், 'மதித்த கசதநப மவ்வொடு வவ்வு, முதித்தமைந்த நாற்குற் றுயிரும்—துதித்தமிழ்தென்று' என்பவாகலான் உண்டியும், 'ஒழியா வுயிரனைத்து மொற்றுமுத லாறும், அழியா மறையோர்க் காம்' என்பவாகலின் வருணமும், 'போற்றுமிரண் டேழ்மூன்று பொய்தீர் தகரத்துச், சாற்றுவர் சோதி முறஞ்சதயம்' என்பவாகலினால் தகர ஆகாரம் சோதியாதலானும் 'பிரிந்த சகரத்து நான்கைந்து பின்மூன், றரிந்த கடைமுதன்மூன் றாகும்' என்பவாகலின் சகர ஈகாரம் இரேவதியாகலானும் சுவாதிக்கும் இரேவதிக்கும் பொருத்தமுடைமையானும், 'வேண்டுங் குறில்வன்மை யீரெழுத்தால் விண்ணோர்க்காம்' என்பவாகலிற் கதியும், 'நேர் மூன் றாகிய சீரிய மானன்' என்பவாகலானும் 'நிலனு நீரு மதியுமிய மானனு, நலமிகு முதல்வரின்' என்பவாகலானும் கணமும் ஆகிய பத்துப்பொருத்தமும் பொருந்தியிருத்தல் கண்டுகொள்க."

இதன்பின் கையெழுத்துக் காணப்படவில்லை. இதனால் இவ்வாசிரியர் குருபக்தியுடையவரென்பதும் நன்னூல் முதலியவற்றைப் பல மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லிவந்தவரென்பதும் புலனாகின்றன.

## முத்துக்குமாரசாமிக் கவிராஜர்

இந்நூலாசிரியரின் ஆசிரியராகிய முத்துக்குமாரசாமிக்கவிராஜரென்பவர் திருநெல்வேலி மேலைரதவீதியிலிருந்த அம்பலவாணகவிராஜருடைய புதல்வர். அவர் திருப்புடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, அறுபத்துமூன்று நாயன்மார்களும் மாணிக்கவாசகரும் சிவபதமடைந்த திருநக்ஷத்திர அந்தாதிக்கலித்துறை முதலியநூல்களை இயற்றியிருக்கின்றனர். அவருக்கு அம்பலவாணகவிராஜர், கவிராஜநெல்லையப்பபிள்ளை யென இரண்டு குமாரர் இருந்தனர்.

## கல்வியறிவு

முத்துக்குமாரசாமிக்கவிராஜர்பால் இந்நூலாசிரியர், பலநூல்களைப் பயின்றார்; நன்னூல்முதலிய ஐந்திலக்கணங்களினும்

பொருத்தவிலக்கணத்திலும் இலக்கிய நூல்களிலும் நல்ல பயிற்சியுடையவர்; திருக்குறளிற் பேரன்புடையவர்; இந்நூலிற் பல விடங்களில் அந்நூற் கருத்துக்களையும் பாக்களையும் எடுத்தாண்டிருப்பதனால் இதனை அறியலாகும்.

## மாரியப்பமுதலியார்

இவரை ஆதரித்தசெல்வர் மாரியப்பமுதலியாரென்பவர். அவர் தொண்டைமண்டலத்தில் சென்னைக்கருகில் பொன்னேரிதாலூகாவைச் சேர்ந்ததாகவுள்ள *விளாங்காட்டுப்பாக்கமென்னும் ஊரினர். அவ்வூரில் ஒரு பழைய சிவாலயம் இருக்கிறது. அங்கே எழுந்தருளியுள்ள ஸ்வாமியின் திருநாமம் இலவபுரீசரென்பது. இராமபிரான் புதல்வர்களாகிய குசலவர்களில் லவன்பூசித்ததனால் இத்திருநாமமுண்டாயிற்றென்று அங்குள்ளார் கூறுகின்றனர். அம்பிகை திருநாமம் திரிபுரசுந்தரி யென்பது. மாரியப்பமுதலியாருடைய சந்ததியினர் யாரும் இப்பொழுது அவ்வூரில் இல்லை.

அம்முதலியார் கொண்டைகட்டிவேளாளரென்ற சைவர்கள் வகையில் கன்னவராயகோத்திரத்திற் பிறந்தவர். அவருடைய தந்தையார்பெயர் அருணாசலமுதலியாரென்பது. கன்னவராய கோத்திரத்திலுதித்தவராதலின் ராய அருணாசலனென்றும், அருணாசலராயனென்றும் அவர் வழங்கப்பெறுவர். மாரியப்பமுதலியாரையும் அவர் தந்தையாரையும் இந்நூலாசிரியர் பாராட்டியுள்ள பகுதிகள் வருமாறு:—

1. "பொறையாரு மாரியப் பேந்திரன் வாய்மையைப் போற்றுதல்போல்" (152)

2. "குளங்காட்டு கண்ணர் சிராமலை நாதர் குவளையந்தார்
விளங்காட்டு மாநகர் வாழ்மாரி யப்பனை மெய்யருளால்
வளங்காட்டு வண்செல்வ மீந்தென்றுங் காப்பது மான" (153)

3. "பந்தப் பவந்தொலைத் தாள்வோன் சிராமலை பாடினர்க்குத்
தந்தச் சிவிகை தருமாரி யப்பன் றடக்கைநிதி
முந்தச் சொரிவ தென" (283)

---

* பல வயல்களுக் கிடையிலுள்ள இவ்வூருக்குச் சிலவாரங்களுக்குமுன் சென்று விசாரித்ததில் மாரியப்பமுதலியாரைப்பற்றியேனும் அவர் குடும்பத்தைப்பற்றியேனும் சொல்லுவார் ஒருவரும் இலர்.

4. "பன்னு கலைபெறி னெம்மான் சிராமலைப் பான்மொழியாய்
மன்னர் புகழும் விளங்காட்டுப் பாக்கநன் மாநகர்வாழ்
கன்னவ ராய மரபரு ணாசல கன்னனருள்
தென்னவன் மாரியப் பேந்த்ரன் மகிழ்ந்தருள் செய்குவனே" (433)

5. "நீடு மிராய வருணா சலன்மரு நீதியினால்
நாடு மதிதொறும் பெய்வதுபோல்" (285)

இவை மாரியப்பமுதலியாரது சிவபக்தியையும், புலவர்களை ஆதரிக்கும் வண்மையையும் அறிவிக்கின்றன. தம்மைப் பாடுவாருக்குப் பரிசிலையளித்துவக்கும் செல்வர்கள் பலரினும் சிவபிரானைப் பாடுவாருக்கு வழங்குவோர் மிகச்சிறந்தோராவர்; அத்தகைய சிறப்பையுடையவர் மாரியப்பமுதலியாரென்பதை, 'சிராமலை பாடினர்க்குத், தந்தச் சிவிகை தரு மாரியப்பன்' என்னும் பகுதி தெளிவிக்கும். அவர்மீது கோவை பாடாது சிராமலைக்கோவை பாட இவ்வாசிரியர் முற்பட்டதும் முதலியாரது இயல்புகண்டேயென்று தோற்றுகின்றது.

முதலியார் அக்காலத்தில் 'நாயிப் சிரஸ்தேதார்' (Naib-Sheristadar) என்னும் உத்தியோகத்தில் இருந்தனர். இரண்டு வெள்ளி ரிஷபவாகனங்கள் செய்வித்துத் தாயுமானவர் ஆலயத்திற்கு வழங்கினர். சித்திரை உத்ஸவத்தில் ஐந்தாந்திருவிழாவில் வெள்ளிரிஷபவாகனக்காட்சியை நடத்திவந்தனர். அவருக்குத் திரிசிரபுரத்தில் சின்னக்கடைத்தெருவிற் பல வீடுகள் இருந்தன. அத்தெருவிற்கருகில் அவர்பெயரால் ஒருசந்து இப்பொழுது இருக்கிறது.

அவருக்குச் சுந்தரமுதலியாரென்ற ஒரு புதல்வர் இருந்தனராம். அவர் அக்காலத்தில் பத்திரவிற்பனையாளர் (Stamp-Vendor) ஆக இருந்தனரென்பர்.

## வைத்தியலிங்க மௌனத்தம்பிரான்

இந்நூலாசிரியர்காலத்தில் திரிசிராமலைக்கோயிலின் நிர்வாகத்தை வகித்துவந்தவர், அங்குள்ள ஸ்ரீ மௌனசுவாமிகள்மடத்

தில் 7-ஆம் பட்டத்தில் தலைவராக இருந்த வைத்தியலிங்கமௌனத் தம்பிரானென்பவர். அவரை இந்நூலாசிரியர்,

> ''மோன வயித்திய லிங்கமெய்ஞ் ஞான முனிசெயுமன்
> பான பணிக்கரு ளெம்மான்'' (291)

என்று குறிப்பிக்கின்றார். அவர் அம்மடாலயத்தின் அதிபதியாகச் சாலிவாகனசகாப்தம் 1676 (கி. பி. 1753) வெகுதானியஹு ஐப்பசிமாதமுதல், சகம் 1722 (கி. பி. 1799) துந்துபிஹு புரட்டாசி மாதம் வரையிலுள்ள 46 வருஷகாலம் இருந்தனர். அவருடைய முயற்சியால் சிராமலைக்கோயிலில் பல திருப்பணிகள் செய்யப்பட்டன. மௌனசுவாமிகள்மடத்தைப்பற்றிய குறிப்புக்களடங்கிய பழைய*புத்தகமொன்றில், அவர் தலைமைவகித்தகாலத்தில் திரிசிராப்பள்ளியாலயத்திற்குரிய வருவாய்கள் விரிவாகக் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்துக் காட்டுகையில் அப்புத்தகம்,

> 'நவாபுசாயபு அவர்கள் ராஜரீகத்தில் எ-வது பட்டம் வைத்திலிங்கத்தம்பிரானவர்கள் நாளையில் உண்டாகிய ஊதிபம் காட்டாம்பட்டிக்கிராமம், க-கோமங்கலம் கிராமம், க-இடையப்பட்டி கிராமம், க-வெண்ணமங்கலம் கிராமம், க-பொத்தம்பட்டி கிராமம், க-கொழுப்பட்டியில் புஞ்சையில் 27800 குழிநிலமும், தொண்டைமானார் பாதிகாவற்பொறுப்புப்பணமும், தில்லன்பட்டிக்கிராமமும், கறிச்சான்பட்டிக் கிராமமும், கத்தலூர்பட்டவர்த்தியும். இந்த ஊதிபங்களெல்லாம் வைத்திலிங்கத்தம்பிரானவர்கள்நாளையில் உண்டாகிய ஊதிபங்கள்'

என்று தெரிவிக்கின்றது.

அவர் பலசெல்வர்களையும் ஜமீன்தார்களையும்கொண்டு, அன்னசத்திரம் முதலிய தருமங்களைச் செய்வித்தனர்; சுவாமிக்குப் பெரிய வெள்ளிரிஷபவாகனம், வெள்ளிக்குடை, கமலவாகனம், கற்பக விருக்ஷவாகனம், கிளிவாகனம், அன்னவாகனம், மயில்வாகனமென்பன செய்தளித்தார். சாலிவாகனசகாப்தம் 1708 (கி. பி.

---

* இது 'செந்தமிழ்ச்செல்வி' என்ற பத்திரிகையின் பன்னிரண்டாப் தொகுதியில், 'திருச்சிமலைக்கோவில்' என்னும் தலைப்பின்கீழ் வெளியிடப் பட்டுள்ளது; இச்செய்திகளை அறிவதற்கு இஃது ஒருதவியாக இருந்தது.

1785) பராபவஞு வைகாசிமீ" சுவாமிக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும், மண்டலாபிஷேகமும் தம்முடைய மடாலய வரும்படியிலிருந்து செய்வித்தார்.

## நூலாசிரியர் குணவிசேடங்கள்

மேலே கூறிய வைத்தியலிங்கமுனிவரிடத்தில் இந்நூலாசிரியர் பக்தியுடையவர்; இறைவன் திருப்பணியில் ஈடுபட்டவர்களைப் பாராட்டும் இயல்பினர்.

இவர் சிராமலையப்பரைப் பாடுவதில் இன்பமும் பெருமையும் அடைபவர்;

"நதியா டரவணி யெம்மான் சிராமலை நாதனன்பர்
துதியா வெனது சிறுமொழிப் பாடற் றொடையுங்கொண்டு
கதியா னுறவருள் செய்தோன்" (77)

என்பதிலும்,

"ஆட வெடுத்தபொற் பாதத்தை நாடி யனுதினமும்
பாட நமக்கருள் பெம்மான்" (111)

என்பதிலும் சிவபெருமானைப் பாடும்பொழுது இவருக்கு உண்டாகும் உள்ளநிறைவு வெளிப்படுகின்றது.

இவரது வாழ்க்கைவரலாற்றைத் தெளிவாக நாம் அறிய முடியாவிடினும், இவரது புகழை நமக்குத் தெரிவிக்கும் இக்கோவை இவருடைய புலமையையும் இயல்பையும் எடுத்துக்காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றது. இதன்பின் உள்ள 'நூலாராய்ச்சி' என்ற பகுதியினால் இவரது புலமையின்விரிவை ஒருவாறு அறியலாகும்.

# நூலாராய்ச்சி

## தலச்செய்திகள்

இந்நூலின்கண் பாட்டுடைத்தலைவராகிய தாயுமானவருடைய சிறப்புக்கள் பலபடியாகப் பாராட்டப்படுகின்றன. காப்புச் செய்யுளில் மட்டுவார்குழலம்மை, தாயுமானவர், செவ்வந்தி விநாயக ரென்னும் மூவர் திருநாமங்களும் வந்துள்ளன. தலத்தின் பெயர்களாகிய சிராமலை, தென்கயிலை யென்பன விரவிப் பயின்றுள்ளன. சிவபெருமான் செவ்வந்திமலரை அணிந்துகொண்டதை முதற்பாட்டிலே இந்நூலாசிரியர்,

"செவ்வந்தியொ டேய்ந்த கொன்றைத் தார்கொண்ட வேணியர்"

என்று குறிக்கின்றார். தலத்திற்குரிய சிறப்புமலராதல்குறித்து அம்மலரை முற்கூறி, உயர்பின்வழித்தாகிய ஒடுவை அதற்குக் கொடுத்து, அடையாளமாலையாகிய கொன்றையைப் பிற்கூறுதல் கவனிக்கத்தக்கது. அம்மலரைச் சாரமாமுனிவர் சிவபெருமானுக்கு அணிந்தனரென்பதை 409-ஆம் செய்யுளில்,

"சார தபோதனர் சாத்துசெவ் வந்தியின் றாரணியும், சீரர்"

என்று கூறுகின்றார். சிராப்பள்ளிநாதர் ஒரு வணிகப்பெண்ணுக்கு அன்னையாகிவந்த செய்தியை,

"மதிமுக மாகுமோர் பேதைக் கனையாய் வருங்கருணை நிதி" (5)

"அனைவடிவான சிராமலையார்" (16)

"தாயாகி வந்தொரு பேதையைக் காத்த தனிமுதல்வோன்" (74)

"தாயே யெனமகிழ்ந் தாண்டோன்" (100)

"தாய்க்கு நிகரென வந்தோன்" (355)

"தாயான வீசர்" (414)

என எடுத்தமைக்கின்றார்.

"அன்னையு மத்தனு மாகுஞ் சிராமலையார்" (116)

"அன்னையு மத்தனு மாவோன்" (339)

"தாயனையான்" (361)

என்பவற்றிலும் அச்செய்தி குறிப்பாக வெளிப்படுகின்றது. தலைவி மகப்பொறைகூர்ந்தவண்ணத்தைத் தோழி தலைவனுக்குரைப்பதாக உள்ள செய்யுள்,

"சேயா ரிதழ்வெளுத் தாகம் பசந்து சிகரிநிக
ராயார் முலைக்கண் கறுத்துச் சிராமலை யாயிழைக்குத்
தாயா மமல னருளாற் கருப்பந் தரிக்கவிசைத்
தூயா யெழில்பெறத் தோன்று விடைவந்து தோன்றியதே" (417)

என்பது. இதில், ஒரு மகள் கருவுயிர்த்தற்குத் துணைசெய்தருளிய தாயுமானவர் ஒருமகள் கருத்தரிப்பதற்கும் அருளினரெனக் கூறியது மிக்க பொருத்தமுடையது.

"கடலைப் பருகிய மாமுனி போற்றக் கருணைசெய்தோன்" (442)

என அகத்தியர் வழிபட்டதும்,

"நன்னாக கன்னியர் போற்றுஞ் சிராமலை" (408)

என நாககன்னியர் வழிபட்டதும் சொல்லப்படுகின்றன.

இத்தலத்து அம்பிகையின் திருநாமம், 23, 270, 456, 458-ஆம் செய்யுட்களில் வந்துள்ளது.

இத்தலத்திற்குரிய தீர்த்தங்களுள், காவிரி பல இடங்களிற் (110, 117, 151, 317) கூறப்படுகின்றது. நன்றுடையான், தீயதிலானென்பன,

"நன்றுடை யானையுந் தீயதி லானையு நற்றிருத்தம்
என்றுடை யானைச் சிராமலை யானை" (172)

என்பதில் அமைந்துள்ளன.

"விஞ்சை பலவரும் பாவலர் பணியெம்மான்" (121)

"நாவலர் போற்றும் பிரான்" (230)

என்று இறைவனை இந்நூலாசிரியர் பாராட்டுதல் பலபுலவர்கள் சிராமலையீசரைப் பாடிய செய்யுட்களை நினைந்தேயென்று தோற்றுகின்றது.

"பூவா முளிசண்பை யாண்டகை யார்முனம் போற்றிசெய்த
தேவார மோதுஞ் சிவன்வாழ் சிராமலை" (85)

என்பது இத்தலத்தில் ஞானசம்பந்தர் வந்து வழிபட்டுத் தேவாரப் பதிகம் அருளிச்செய்ததைப் புலப்படுத்துகின்றது.

## புராணச் செய்திகள்

திருஞானசம்பந்தர் என்பைப் பெண்ணாக்கியதும் (434) சுந்தரமூர்த்திநாயனார் இறைவனைப் பரவைநாச்சியாரிடத்துத் தூதுவிடுத்ததும் (203) சண்டீசர் தம் தந்தையின் தாளைத் தடிந்ததும் (114) கண்ணப்பர் வேடர்குலத் துதித்ததும் (133) ஆகிய பெரியபுராணச்செய்திகளும், கரிக்குருவிக்கு முத்தியளித்தது (174) மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து இறைவன் தமிழாராய்ந்தது (427) ஆகிய திருவிளையாடற்புராணச்செய்திகளும், காசிப முனிவர் மாயையை விரும்பியதாகிய (48) கந்தபுராணச்செய்தியும் இதிற் காணப்படும்.

சிவபெருமான் திருமன்றுள் நடித்தருளியதாகிய (219, 401) தில்லைச்செய்தியும், தியாகப்பெருமானென்னும் திருநாமமுடையவரென்ற (377) திருவாரூர்ச்செய்தியும் இக்கோவையில் வந்துள்ளன.

## சைவநூற் கருத்துக்கள்

சைவசாஸ்திரக்கருத்துக்கள் பல ஏற்புடைய இடங்களில் அழகாகப் பொருத்தப்பெற்றிருக்கின்றன. அப்பகுதிகள் சுருங்கச் சொல்லியிருப்பினும் விரிந்தபொருளை யுடையன.

## புலவர்களைப்பற்றிய செய்திகள்

புலவர்களைப்பற்றி இக்கோவையாசிரியர் கூறியுள்ள கருத்துக்கள் மிகவும் அரியன. நற்பாவலர், சொல்லும் செயலும் இனியார்பாற் பழகுவரென்பர்;

"கொடுத்தலு மின்சொலு முள்ளவர் பாலன்பு கொண்டுசென்றங்
கடுத்தினி தேகுநற் பாவலர்" (28)

கற்றதனாலாய பயன் இறைவனைப் பணிதலேயாதலின், புலமை பெற்றதனாலாய பயன் சிவபெருமானைப் பாடுதலேயன்றிப் பிறரைப் பாராட்டுதலன்றென்பது இவர் கொள்கை;

> "......... கவிஞர் தமிழ்த்தொடையைக்
> கந்தார் களிற்றுரி யார்தென் கயிலைக் கருத்தர்க்கன்றிப்
> .........பிறர்க்காக்கும் பரிசெனவே" (395)

தமிழில் அறிவுவாய்ந்தவர்கள் பிறமொழிகளைக் கற்றதனாற் குறையொன்று மில்லையென்பர்;

> "................. தமிழாய்ப்புலவோர்
> தேர்தரு மேனை மொழியுங்கற் றற்று." (427)

## முதலும் முடிவும்

இக்கோவையின் முதற்செய்யுளில் ஐந்துதிணைக்கும் உரியமலர்கள் கூறப்படுகின்றன. இம்முறை திருச்சிற்றம்பலக்கோவையாரைப் பின்பற்றியது; அந்நூலின் முதற்செய்யுளுரையிற் பேராசிரியர்,

> 'பலநிலங்கட்குமுரிய பூக்களைக் கூறியவதனால், நிலமயக்கங்கூறிய வாறாயிற்று. ஆகவே, பலநிலங்களினுஞ் சென்று துய்க்கும் இன்ப மெல்லாம் தில்லையின் வாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்பரென்பது போதரும்'

என்று எழுதினர். இக்கருத்தை ஈண்டுச் சிராமலைவாழ்வார்க்கும் கொள்க.

கோவைநூல்களிற் பெரும்பாலனவற்றின் இறுதியில் 'தலைமகளைக் கலந்திருந்த தலைமகன் முகிலொடு மகிழ்ந்து கூறல்' என ஒருதுறை காணப்படும். அஃது இதன்கண் இல்லை. 'தலைவன் வந்துழி மகிழ்ச்சி' என்னும் பாங்கிகூற்றோடு முடிகின்றது.

## குறட்சொற்பொருளாட்சி

"தாம்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்பதற்கேற்ப நுண்ணறிவுடைய இந்நூலாசிரியர் பலபழைய நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்; திருக்குறளில் ஈடுபட்டு அதன் சொல்லையும் பொருளையும் பலவிடங்களில் எடுத்தாண்டுள்ளார்:

* "நுண்மா ணுழைபுல மில்லாரிற் சால நுவன்றனனே" (58)
என்பது குறளிலுள்ள சொற்றொடரை எடுத்தமைத்தது.

"..............பைந் தொடி யெம்
மெய்வாய் விழிசெவி மூக்கு மூவந்துடன் மேவியுண்ண
உய்வாம் படியணைந் தூட்டினள்" (40)

"கண்டாலு மோவின்பங் கேட்டாலு மோவின்பங் காதலிதழ்
உண்டாலு மோவின் புயிர்த்தாலு மோவின்ப மூங்கணைத்துக்
கொண்டாலு மோவின்பம்" (147)

"தன்னைப் புரந்து தலைவனைப் பேணித் தகைபெறுசொல்
மன்னப் புரந்து விருந்தோம்பி" (388)

"தூய கடவுள் கொழுநனென் றேத்தித் தொழுதெழுந்து" (389)

"எண்ணு மெழுத்தும் விழியாமெனின்" (436)

என்பவை குறளிலிருந்து அள்ளிக்கொண்ட கருத்துக்கள்.

"பேறு களிற்பெரி தாமைந்தர்ப் பேறெனப் பேறுடையோர்
கூறு மொழிப்பொருண் மெய்யே" (429)

என்றது குறளை மேற்கோள்காட்டியது.

## பிறநூற் கருத்துக்கள்

"பெரியவர் கேண்மை வளர்பிறை யாமெனும் பெற்றியொத்தே" (430)
என்பது நாலடியிலிருந்து கொண்டது.

"பொன்னே யெழிற்சடை யெம்மான் சிராமலை போற்றுமித்தாய்
இன்னே யிருவ ருமைநிகர் வாரிவ ணெய்தினரோ
முன்னே யெனவுரை யாடினள் கண்டனன் மொய்ம்பனையான்
மின்னே யனையென்கொல் சொல்லிய வாறு விளம்புகவே" (362)

என்பது திருக்கோவையாரிலுள்ள செய்யுளைப் பெயர்த்தமைத்தது.

"கண்ணினு நாடுங் கருத்தினு நீயன்றிக் கண்டிலனே" (61)

என்ற பாங்கிகூற்று, கம்பராமாயணத்திலுள்ள,

"கண்ணினு முளைநீ தையல் கருத்தினு முளைநீ"

என்ற அநுமன்கூற்றின் நினைவில் எழுந்தது.

---

* இவற்றிற்கு நேரான நூற்செய்யுட்கள் குறிப்புரையிற் காட்டப் பட்டுள்ளன.

"தேடு பொருட்குத் தகச்சுக மீந்து" (410)

என்று பரத்தையரைக் கூறும் கருத்து,

"அழிபவர் பொருள்கொண் டெள்ளுக்
கெண்ணெய்போ லளந்து காட்டிப்
பழிபடு போகம் விற்பார்"

என்னும் திருவிளையாடற் செய்யுட் பகுதியை நினைவுறுத்துகின்றது.

"பாவார் தருசிங்க நோக்கப் பொருளிப் படியென நூல்
ஈவா ரறிவிப்ப தொப்ப"

என்றவிடத்துச் சூத்திரநிலையுள் ஒன்றன் பெயரையும்,

"துணைக், காரணமின்றி முதலு நிமித்தமுங் காரியத்தைப்
பூரண மாக்க லுரு"

என்புழித் தருக்கநூற்கருத்தையும் காணலாம்.

## பழமொழிகள்

அங்கங்கே பழமொழிகளை யமைத்துள்ள பகுதிகள் வருமாறு:—

"மருவுபுண்ணில், வேலைச் செருகுவ துண்டோ" (50)
"உமிகுத்திய பேரின்" (101)
"புண்ணுருடலைவெங் கோலிற் றுளைப்பதுபோல்" (126)
"அத்தியாரும் விளங்கனி மான" (230)
"காந்த மெதிர்வச மாகு மயமென" (247)
"உலைவாய் மெழுகாகி யினைந்து" (280)
"அழலினெய் யூற்றுவ தாகும்." (413)

## தோனி

"பாவிய லாருநற் காரிகை யோதியின் பாலமர்ந்தும்
மேவிய லாருநன் னூலிடை யாயா விதமதென்னே" (9)

என்பதில் காரிகை நன்னூலென்னும் இலக்கணநூற்பெயர்கள் தொனிக்கின்றன; காரிகைக்குமுன் நன்னூல் படிக்கவேண்டுமென்ற முறையும் இதனால் உய்த்துணரப்படுகின்றது.

"திருவாசகத்தினி லாசையுற் றேற்கு" (84)

என்பதில் திருவாசகமென்னுந் திருமுறைப்பெயர் தொனிக்கின்றது.

"..........................தாழ்குழற்கு
வேற்றுமை யாவதன் றல்வழி கண்டிவண் மேவிடினே" (251)

என்பதில் வேற்றுமை அல்வழியென்னும் சந்திகளின் பெயர்களும்,

"அவ்வீ ரடியன்பர் நேரடி யாகு மணிதிகழும்
இவ்வீ ரடிவஞ்சி தன்னடி யாகும்" (360)

என்பதில் நேரடி, வஞ்சியடி யென்னும் செய்யுளடிகளின் பெயர்களும் ஒலிக்கின்றன.

"தேசம் புகழுங் கலிங்கமுங் காஞ்சியுஞ் சேரக்கட்டி" (23)

என்பதில் கலிங்கதேசத்தின் பெயரும் காஞ்சிமாநகரத்தின் பெயரும் தோற்றுகின்றன.

"வேதாந்த வாக்கியஞ் சித்தாந்த மென்று விளம்புநெஞ்சே" (34)

என்பதில் வேதாந்தமென்பதனோடு இனம்பற்றிய பெயராகிய சித்தாந்தமென்பது வேறுபொருளில் ஒருங்கு வந்தது. நாயன்மாருள் ஒருவராகிய கண்ணப்பரைப்பற்றிக் கூறிய ஆசிரியர் வேறொரு நாயனாராகிய சம்பந்தரின் பெயரும் உடன்தோற்றும்படி வேறுபொருள் பட,

"தாராரும் வேலவர் சம்பந்தர் கண்ணப்பர் சாதியர்நாம்" (133)

என்று அமைக்கின்றார். 356-ஆம் செய்யுளில் ஒன்றுமுதல் ஆறு எண்களின் பெயர்களிற் சில உரியபொருளோடும் சில வேறுபொருள்களோடும் ஒருங்கு வந்துள்ளன.

## ஒருபொருளிருசொற்கள்

ஒரேபொருளையுடைய இரண்டுசொற்களை வேறுவேறு பொருளில் வைத்துப் பாடுவார்:

"மலர் பூமேற் பயின்றன" (4)

"தன்றே சிலையெனக் கொண்டோன்" (205)

"உயிர் நமக் காவியி லீந்து" (269)

"அரவே பணியென வாழ்வோன்." (359)

### மயக்கம்

"பொன்னூரஞ்சேர் தேவாதி தேவன்" (4)

என்று ஓரிடத்தில் இறைவனைக் குறிக்கின்றார். இத்தொடர் முதலிற் பொன் உரஞ்சேர்ந்த சிவபெருமான் என்னும் பொருளைத் தோற்றச் செய்து மயக்கத்தை உண்டாக்கிப் பின் ஊன்றிநோக்குகையில், பொன் உரஞ்சேர் தேவுக்கு ஆதிதேவன் என்னும் பொருளைத் தருகின்றது. இப்படியே "பூமகள்சேய் நாமகள்" (435) என்னும் தொடர் முதலில் திருமகளின் சேயாகிய நாமகளென்ற மயக்கப் பொருளைத் தோற்றுவித்துப் பின் பூமகளுடைய சேயினது நாவி லுள்ள மகளென்ற மெய்ப்பொருளை ஊன்றியறியச்செய்கின்றது.

### குறிப்பு

**வே**ங்கைமரத்தின்மேல் தலைவன் ஆம்பற்பூவை வைத்துச் சென்றனனென்பதைப் பரியாயக்குறிப்பினால்,

"சீரார் தருபுலி மேல்யானை வாழ்ந்திடச் செய்தனரே" (209)

என்பர். பாதிரிமரத்திற் காவிமலர்மாலையை வைத்தனனென் பதை எழுத்துக்குறிப்பினால்,

"காவாதி யாய்முத லில்லாத வாவிக் கடிமலர்த்தார்
பாவாதி யாய்முத லில்லா வெதிரி படைத்ததுவே" (210)

என்பர்.

### வெளிப்படை

வேங்கைமரத்தைப் பாயாதவேங்கை யென்றும் (74), பிள்ளை யை, "தேடத்தகாத பொருள்" (428) என்றும் வெளிப்படை நிலையாற் குறிப்பர்.

### அணிகள் முதலியன

பொருளணிகளுள் உவமை, உருவகம், சிலேடை, நிரனிறை, தற்குறிப்பு, பின்வருநிலை, இலேசம், வேற்றுமை, பரிவருத்தனை முதலியவைகளும், சொல்லணிகளுள் மடக்கு முதலியனவும், யமகம், திரிபு, எதுகைநயம், முரண் முதலியனவும் இந்நூலில்

வந்துள்ளன. அவை முற்றும் எடுத்துக்காட்டின் விரியுமாதலின் சிலவற்றின் எண்கள்மட்டும் பின்னே காட்டப்படுகின்றன:

1. உவமை : இல்பொருளுவமை, 25.

2. உருவகம் : 12.

3. சிலேடை : 6, 13, 14, 65, 85, 146, 167, 195, 214, 236, 242, 438.

4. நிரனிறை : 161, 163, 179, 195, 253, 383, 434.

5. தற்குறிப்பு : 11, 65.

6. பின்வருநிலை : 241.

7. இலேசம் : 224.

8. வேற்றுமை : 19.

9. பரிவருத்தனை : 158.

மடக்கு : 63, 91, 96, 114, 119, 128, 165, 182, 187, 235, 341, 349, 410, 412.

யமகம் : 79.

திரிபு : 90, 112, 377.

எதுகைநயம் : 63, 127, 141, 169, 180, 185, 226, 244, 287, 289.

முரண் : 81, 188, 409.

அரும்பதங்கள்

இதிற் காணப்படும் அரும்பதங்களிற் சில வருமாறு:

| | |
|---|---|
| ஆரியர்—ஆரியக்கூத்தர். | பாந்தம்—இசைபு. |
| சேலன்—மன்மதன் | பாரியர்—கனவான்கள். |
| சொற்பனம்—கனவு. | வச்சிரம்—கள்ளி. |
| தயவு—தயை. | வாளாது—சும்மா. |

வாறு—விதம்.

உ

கணபதி துணை.

# சிராமலைக் கோவை.

காப்பு.

(கட்டளைக்கலித்துறை)

1. சீர்பூத்த தார்மட்டு வார்குழல் பாகர் சிராமலைவாழ்
தார்பூத்த கொன்றை யணிதாயு மானவர் தந்திருத்தாட்
கேர்பூத்த கோவைத் தமிழ்மாலை பாட வெனக்கருளும்
கார்பூத்த மும்மதச் செவ்வந்தி யானை கருத்துவந்தே.

## நூல்.

### க. கைக்கிளை.

காட்சி.

2. சீர்கொண்ட தாமரை நீலந் தளவு செழுங்குமிழ்கோங்
கேர்கொண்ட காந்தண் மணந்துசெவ் வந்தியொ டேய்ந்தகொன்றைத்
தார்கொண்ட வேணியர் வாழுஞ் சிராமலைச் சாரலின்பாற்
கார்கொண்டசோலையின்வாயொருவல்லியென்கண்ணுற்றதே.

---

## குறிப்புரை.

(காப்பு) 1. மட்டுவார்குழல்: இத்தலத்து அம்பிகையின் திருநாமம். செவ்வந்திவிநாயகரென்பது தலவிநாயகரின் திருநாமம்.

2. இந்நூல் ஐந்திணைக்கோவையாதலின், மருதநிலத்துக்குரிய தாமரைப்பூவும், நெய்தலுக்குரிய நீலமும், முல்லைக்குரிய தளவும் குமிழும், பாலைக்குரிய கோங்கும், குறிஞ்சிக்குரிய காந்தளுமாகிய ஐந்திணைமலர்களும் இச்செய்யுளிற் கூறப்பட்டுள்ளன; தளவு—முல்லை. வல்லி—கொடி.

## ஐயம்.

3. வானக மோபணி வாழுல கோமரு வார்மலரோ
மேனக மோபுன லாரக மோவன்றி மேதினியோ
தானக மாவது பெம்மான் சிராமலைச் சாரலின்வாய்
மீனக மார்கொடி வேடுணை போனிற்கு மெல்லியற்கே. (௨)

## துணிவு.

4. வாவா வெனக்கண் ணிமைத்தே யழைத்தன வாழிநெஞ்சே
தாவா வடிமலர் பூமேற் பயின்றன தாழ்குழன்மேற்
பூவா டிடமண் டினவண் டணங்கலள் பொன்னுரஞ்சேர்
தேவாதி தேவன் சிராமலை மேவுமிச் சேயிழையே. (௩)

---

3. வானகம்—தேவலோகம். பணிவாழுலகு—நாகருலகு. மரு—மணம். மலர்—தாமரைமலர். நகம்—மலை. புனலார் அகமோ—கடலோ. மீன் அகம் ஆர் கொடி—மீனைத் தன்னிடத்திலே பெற்ற கொடி. வேள்—மன்மதன். வேள்துணைபோல் நிற்கும் மெல்லியல்: "அனங்கன் றுணையோ" (திருச்சிற். 2.) மெல்லியற்குத் தானகமாவது வானகம் முதலியவற்றுள் எதுவோ என்க. இப்பெண் தெய்வப்பெண்ணோ, நாககன்னிகையோ, திருமகளோ, வரையரமகளோ, நீரரமகளோ, மானிடமகளோ என ஐயுற்றவன் அவர்கட்குரிய இடங்களைக் கூறினன்.

4. கண் அழைத்தன: "நீலவுண்கண், கையா லழைப்பன போலிமையாநிற்குங் காரிகைக்கே" (தஞ்சை. 3.) மலர் பூமேற் பயின்றன வென்பது ஒருநயம். அணங்கு - தெய்வமகள். பொன் உரம் சேர் தேவு - திருமகள் மார்பிற் சேரப்பெற்ற திருமாலுக்கு. தேவாதிதேவன்: "தேவாதி தேவன்" சீவக. 1.

கண் இமைத்தலும் அடிகள் நிலத்திற் பொருந்தலும் பூ வாடுதலும் வண்டுகள் அதில் மொய்த்தலும் தெய்வமகளிருக்கு இன்மையின் 'அணங்கல்லள்; மானிடமகளே' எனத் தெளிந்தான்.

குறிப்பறிதல்.

5. மதிமுக மாகுமோர் பேதைக் கணையாய் வருங்கருணை
நிதிமுக மோரைந் துடையான் சிராமலை நீள்பொழில்வாய்
எதிர்முக மாகுமிம் மான்மரு ளோடரு ளேய்ந்தெழிலால்
துதிமுகநோக்கென் றுயர்க்கோர்மருந்தெனத்தோன்றியதே.

## உ. இயற்கைப் புணர்ச்சி.

இரந்துபின்னிற்றற்கு எண்ணல்.

6. மெய்யரன் பால்வரம் வேண்ட வுவந்தருள் வேட்கைகொண்டோர்
வையகந் தேரென வூர்ந்தோர் சிராமலை வாழுமிம்மான்
செய்யபைம் பூந்தளிர்க் கற்பகம் போறலிற் சென்றிரந்தால்
உய்யவிங் கேசொர்க்க முற்றின்ப நாமுண வூட்டுநெஞ்சே. (க)

இரந்து பின்னிற்றல்.

7. சீராரு மீசர் சிராமலை யாரருள் சேரலர்போற்
போராரு நீல விழிக்கணை யென்னிடைப் போக்கிநெஞ்சத்
தேராரு மாவி வருத்தி யெதிரறி யாரினின்றால்
நீராரு ஞாலத்தி னீதழ கோவுரை நேரிழையே. (உ)

---

5. பேதை யென்றது ஒரு வணிகப்பெண்ணை; 16, 74; இவ்வரலாறு செவ்வந்திப்புராணத்துள்ள தாயானசருக்கத்தால் விளங்கும். எதிர்முகம்—முன்னிலை. விழியைப்பற்றிச் சொல்லப்புக்கவனாதலின் அதற்கேற்பத் தலைவியை மானென்றான். நோக்கின் மருளென்றது பொதுப்பார்வையை; அருளென்றது சிறப்புப்பார்வையை; "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" குறள், 1091.

6. மெய்யர் வேண்ட. சொர்க்கமென்பது சிலேடை; சொர்க்கலோகம், ஸ்தனம்; "ஒருசுவர்க்கங் கைக்கொண் டுவந்தயி ராணி, இருசுவர்க்கம் வைகு மிறையும்" (திருவிடைமருதூருலா, 221.) இம்மான் இன்பம் ஊட்டும்.

7. விழிக்கணையை என்னிடை நெஞ்சத்துப் போக்கி. எதிர் - நேரே. அறியாரின் - ஒன்றும் தெரியாதவரைப்போல. நீர் - கடல்; ஆகுபெயர்.

### முன்னிலை யாக்கல்.

8. பொன்னார் புரிசடை யெம்மான் சிராமலைப் பூண்முலையீர்
என்னா ரியர்பயி லாயத்தி னீங்கியிங் கேதனியே
மின்னா ரிடைதுவண் டெய்த்திட மோன மிருந்துபவம்
மன்னா ரெனநிற்ப தோதுமி னுந்திரு வாய்மலர்ந்தே. (ந)

### வண்டோச்சி மருங்கணைதல்.

9. சேவிய லார்கொடி யெம்மான் சிராமலைத் தேமலரார்
காவிய லாரு மளிகா ணுமக்குக் கழறுவதென்
பாவிய லாருநற் காரிகை யோதியின் பாலமர்ந்தும்
மேவிய லாகுநன் னூலிடை யாயா விதமதென்னே. (ச)

### மெய்தொட்டுப் பயிறல்.

10. நதிகொண்ட செஞ்சடை யெம்மான் சிராமலை நன்னுதலாய்
மதிகொண்ட வுன்முக வேர்வை துடைக்க வளையணியப்
பதிகொண்ட பாதம் வருடவண் டோச்சப் படைத்தவென்கை
கதிகொண்ட நீயு மெனைப்பணி கொண்டருள் காண்டகவே.

---

8. எல் நாரியர் - ஒளியையுடைய பெண்கள். மின் ஆர் இடை - மின்னற்கொடிபோன்ற இடை. எய்த்திட - இளைக்க. பவமன்னாரென - முனிவரைப்போல; பவம் - பிறவி; "யாதிவர் மாதவ மம்பலத் தான்மலை யெய்துதற்கே" திருச்சிற். 40.

9. சே - இடபம். கா - சோலையின்கண். அளிகாள் - வண்டுகளே. பா இயல் ஆரும்-பரவிய அழகு ஆர்ந்த. காரிகை ஓதியின்பால் அமர்ந்தும் - தலைவியின் கூந்தலிடத்தே தங்கியும். நன்னூல் இடை ஆயாவிதம்-நல்ல நூல் போன்ற இடையின் தன்மையை ஆராயாதவிதம். பாக்களின் இலக்கணம் ஆர்ந்த யாப்பருங்கலக்காரிகையைப் படித்து இன்பத்தோடு தங்கியும் யாரும் விரும்பும் இலக்கணமாகிய நன்னூலை இடையில் ஆராயாத தன்மை என்ன வென்பது வேறுபொருள்.

நன்னூலும் காரிகையும்: "எமர் பாலிப் புலவரெலாம், நன்னூ லிடை யெழிற் காரிகை கேட்க நணுகினரே" தேரடிச்சூரக். 241.

10. என்கைகள் உன்முகத்தின் வேர்வையைத் துடைத்தல் முதலிய வற்றைச் செய்யும் பேற்றைப் பெற்றன. படைத்த: வினைமுற்று. காண் தக- அழகுபொருந்த.

## பொய் பாராட்டல்.

11. தென்முக வேந்தை யுதைத்தோன் சிராமலைத் தேமொழியாய்
தன்முக மாருங் குறைகறை யாவுந் தணந்துனது
பொன்முகம் வாய்ப்பப் புவிசூழ்ந் திரவினைப் பூண்டுமதி
பன்முக மாநதி யார்கட லாளும் படிந்திடுமே. (சு)

## இடம்பெற்றுத் தழால்

12. துடைத்துப் படைத்தளித் தாள்வோன் சிராமலைத் தோகைமயல்
படைத்துக் கிளைத்த விரக விடாய்க்குப் பணைத்திளகிப்
புடைத்துத்தடித்தெழுபொற்கிரியார்ந்துபின்பூஞ்சுனைக்கீழ்க்
கிடைத்துப் படிந்துசெவ் வாய்த்தேன் பருகற் கிடமிதுவே. ()

## வழிபாடு மறுத்தல்.

13. பணியு மதியு மணிந்தோன் சிராமலைப் பைம்பொழில்வாய்
அணியு மளியுந் திகழ்மா தவியென் னருந்துயர்நோய்
தணியும் வகையிடந் தந்தெனைக் காக்கிற் றரணியினீ
திணியு மசோகத் துறுவா யெனுஞ்சொற்குச் சீருறுமே. (அ)

---

11. தென்முக வேந்தை - யமனை. குறை - குறைதல். கறை - களங்கம். முகம் வாய்ப்ப - முகத்தின் அழகைப் பெறுதற்கு. இரவு - இராத்திரி, யாசித்தல். மதி - சந்திரன்; எழுவாய். பல தீவினைகளைப் போக்கிக்கொள்வதற்குக் கடல்நீராடுதல் மரபு; பட்டினப். 99.

12. கிடைத்து - கிட்டி.

13. அணி - அழகு. மாதவி - குருக்கத்திக்கொடியே; அசோகமரத்திற் படர்ந்திருக்கும் மாதவிக்கொடியை விளித்துக் கூறியது. அசோகம்-ஒரு மரம்; சோகமின்மை; "ஆருத சோகமு மாற்றுதல் வேண்டு மசோகமெய்தி, மாறாத தண்ணளி கூர்மலர் வாண்முக மாதவியே" தஞ்சை. 11.

## முன்னிலை யாக்கல்.

8. பொன்னார் புரிசடை யெம்மான் சிராமலைப் பூண்முலையீர்
என்னா ரியர்பயி லாயத்தி னீங்கியிங் கேதனியே
மின்னா ரிடைதுவண் டெய்த்திட மோன மிகுந்துபவம்
மன்னா ரெனநிற்ப தோதுமி னுந்திரு வாய்மலர்ந்தே. (அ)

## வண்டோச்சி மருங்கணைதல்.

9. சேவிய லார்கொடி யெம்மான் சிராமலைத் தேமலரார்
காவிய லாரு மளிகா ளுமக்குக் கழறுவதென்
பாவிய லாருநற் காரிகை யோதியின் பாலமர்ந்தும்
மேவிய லாருநன் னூலிடை யாயா விதமதென்னே. (சு)

## மெய்தொட்டுப் பயிறல்.

10. நதிகொண்ட செஞ்சடை யெம்மான் சிராமலை நன்னுதலாய்
மதிகொண்ட வுன்முக வேர்வை துடைக்க வளையணியப்
பதிகொண்ட பாதம் வருடவண் டோச்சப் படைத்தவென்கை
கதிகொண்ட நீயு மெனைப்பணி கொண்டருள் காண்டகவே.

---

8. எல் நாரியர் - ஒளியையுடைய பெண்கள். மின் ஆர் இடை - மின்னற்கொடிபோன்ற இடை. எய்த்திட - இளைக்க. பவமன்னாரென - முனிவரைப்போல; பவம் - பிறவி; "யாதிவர் மாதவ மம்பலத் தான்மலை யெய்துதற்கே" திருச்சிற். 40.

9. சே - இடபம். கா - சோலையின்கண். அளிகாள் - வண்டுகளே. பா இயல் ஆரும்-பாவிய அழகு ஆர்ந்த. காரிகை ஓதியின்பால் அமர்ந்தும் - தலைவியின் கூந்தலிடத்தே தங்கியும். நன்னூல் இடை ஆயாவிதம்-நல்ல நூல் போன்ற இடையின் தன்மையை ஆராயாதவிதம். பாக்களின் இலக்கணம் ஆர்ந்த யாப்பருங்கலக்காரிகையைப் படித்து இன்பத்தோடு தங்கியும் யாரும் விரும்பும் இலக்கணமாகிய நன்னூலை இடையில் ஆராயாத தன்மை என்ன வென்பது வேறுபொருள்.

நன்னூலும் காரிகையும்: "எமர் பாவிப் புலவரெலாம், நன்னூ லிடை யெழிற் காரிகை கேட்க நணுகினரே" கோடீச்சுரக். 241.

10. என்கைகள் உன்முகத்தின் வேர்வையைத் துடைத்தல் முதலிய வற்றைச் செய்யும் பேற்றைப் பெற்றன. படைத்த: வினைமுற்று. காண் தக- அழகுபொருந்த.

### பொய் பாராட்டல்.

11. தென்முக வேந்தை யுதைத்தோன் சிராமலைத் தேமொழியாய்
தன்முக மாருங் குறைகறை யாவுந் தணந்துனது
பொன்முகம் வாய்ப்பப் புவிசூழ்ந் திரவினைப் பூண்டுமதி
பன்முக மாநதி யார்கட னாளும் படிந்திடுமே. (சூ)

### இடம்பெற்றுத் தழால்

12. துடைத்துப் படைத்தளித் தாள்வோன் சிராமலைத் தோகைமயல்
படைத்துக் கிளைத்த விரக விடாய்க்குப் பணைத்திளகிப்
புடைத்துத்தடித்தெழுபொற்கிரியார்ந்துபின்பூஞ்சுனைக்கீழ்க்
கிடைத்துப் படிந்துசெவ் வாய்த்தேன் பருகற் கிடமிதுவே. ()

### வழிபாடு மறுத்தல்.

13. பணியு மதியு மணிந்தோன் சிராமலைப் பைம்பொழில்வாய்
அணியு மளியுந் திகழ்மா தவியென் னருந்துயர்நோய்
தணியும் வகையிடந் தந்தெனைக் காக்கிற் றாணியினீ
திணியு மசோகத் துறுவா யெனுஞ்சொற்குச் சீருறுமே. (அ)

---

11. தென்முக வேந்தை - யமனை. குறை - குறைதல். கறை - களங்கம். முகம் வாய்ப்ப - முகத்தின் அழகைப் பெறுதற்கு. இரவு - இராத்திரி, யாசித்தல். மதி - சந்திரன்; எழுவாய். பல தீவினைகளைப் போக்கிக்கொள்வதற்குக் கடல்நீராடுதல் மரபு; பட்டினப். 99.

12. கிடைத்து - கிட்டி.

13. அணி - அழகு. மாதவி - குருக்கத்திக்கொடியே; அசோகமரத்திற் படர்ந்திருக்கும் மாதவிக்கொடியை விளித்துக் கூறியது. அசோகம்-ஒரு மரம்; சோகமின்மை; "ஆருத சோகமு மாற்றுதல் வேண்டு மசோகமெய்தி, மாருத தண்ணளி கூர்மலர் வாண்முக மாதவியே" தஞ்சை. 11.

### இடையூறு கிளத்தல்.

14. கோளா டரவணி யெம்மான் சிராமலைக் கோதைநல்லாய்
கேளாய் பெரிய தனம்பொருந் தாமற் கிளந்தபுகழ்த்
தாளாள ராயினும் வேதியர் மாமலர் தானெடுத்து
வேளாளர் கான்மலர் மேற்பூசை செய்வது மேன்மையன்றே.

### நீடுநினைந்திரங்கல்.

15. பொன்னாள் கணவனுங் காணாத சேவடிப் போதருளி
எந்நாளு மென்னுள நீங்காச் சிராமலை யீசனருள்
அன்னாள் கனியித ழூரமு தூட்டியன் பாய்மருவித்
தன்னா ளிவனென வாள்வதென் றோமனந் தான்மகிழ்ந்தே. ()

### மறுத்தெதிர்கோடல்.

16. அனைவடி வான சிராமலை யார்கழற் கன்பர்செய்மால்
முனைவடி வான வடவா முகவங்கி மூண்டுவரின்
இனைவடி வானவென் னாண்வேலி நிற்கு மியல்புமுண்டோ
தினைவடி வேனுந் தவஞ்செய்தி லேனென்ன செய்குவனே. ()

---

14. பெரியதனம் - பெரியகொங்கை; பெருந்தன்மை; சிலேடை; 85. தாளாளர் - முயற்சியுடையவர். வேதியர் மாமலர் - வேதியருக்குரிய அடையாளப்பூவாகிய தாமரைமலர்; என்றது கைகளை. வேளாளர் கான்மலர் - வேளாளருக்குரிய வாசனையையுடைய குவளைமலர்; என்றது கண்களை. கைகளால் தனங்களை மறைத்துக்கொள்ளாமல் கண்களை மறைத்தல் சிறப்பன்றென்றபடி.

அந்தணர்கள் பெருந்தன்மை பொருந்தாமல் வேளாளர்களுடைய கால்களில் மலர்தூவிப் பூசைசெய்தல் சிறப்பன்றென்பது வேறுபொருள்; கான்மலர் - காலாகிய மலர்.

15. பொன்னாள் - திருமகள். தன் ஆள் இவன் என; ஆள் - அடிமை.

16. அன்பர் செய் மால்-அன்பரால் உண்டாக்கப்பட்ட காமமயக்கம். மாலாகிய வடவைத்தீ மூண்டுவரின் என் நாணமாகிய வேலி நில்லாது என்றபடி; நாண்வேலி: குறள், 1016. தவஞ்செய்திலேன்: "பொறையார் தவஞ்செய்தி லேனெஞ்ச மேயென் புகல்வதுவே" தஞ்சை. 14.

### இதுவுமது.

17\. உடலு முயிரு மெனவாழ் சிராமலை யொண்பொருள்வந்
துடலு முயிரு மிதுவென்று காட்ட வுணர்ந்தவன்பர்க்
குடலு முயிரு முறவறல் போலன்ப ரொண்மயலால்
உடலு முயிரு மெனுநானு நாணு முறவிலமே. (கஎ)

### வறிது நகை தோற்றல்.

18\. ஆலந் திகழு மிடற்றூர் சிராமலை யன்னமின்னாள்
நீலந் திகழும் விழியார் கமல நிகர்வதனம்
கோலந் திகழுந் தளவெனப் புன்னகை கூர்ந்ததிந்நாட்
சீலந் திகழு மனத்தன்பி னுரெண்ணஞ் சித்திக்கவே. (கஅ)

### முறுவற்குறிப்புணர்தல்.

19\. முன்னாள் சிராமலை யீசர் நகைபுர மூன்றையட்ட
திந்நா ளெமது மதன விகார மெழிற்றளவம்
தன்னா ணெனுமிவை மூன்றையு மட்டதித் தாமரைவாழ்
பொன்னாள் பவளச்செவ் வாயொளி யார்ந்திடு புன்னகையே.

---

17\. தலைவிக்கு உடலும் நாணுக்கு உயிரும் உவமை; நிரனிறை; "உயிரி னுஞ் சிறந்தன்று நாணே" தொல். களவு. சூ. 22.

18\. நீலம் - கருங்குவளைமலர். விழி ஆர்ந்த. தளவு - முல்லை. வதனம் புன்னகை கூர்ந்தது. அன்பினுரென்றது தலைவனை.

இது கவியின்கூற்று.

19\. சிராமலைநாதர்புன்னகை மூன்றுபுரங்களையும் அட்டது; அது போல இவள்புன்னகை எமது காமவிகாரம், முல்லை, நாணமென்னும் மூன் றையும் அட்டது. தளவம் - முல்லை. தன்னென்றது தலைவியை.

"அடியார் குறித்த தருள்காழி நாதர்வெள் ளானுயர்த்த, கொடியார் புரிந்த குறுநகை முப்புரங் கொன்றதிடைத், துடியார் புரிந்த குறுநகை யென்னையென் றெல்குலத்து, நெடியார் பலரை யுயச்செய்த தீது நிக ரரிதே" சீகாழிக். 19.

### முயங்குத லுறுத்தல்.

20. வானவர் மாலய னிந்திரன் மாதவ மாமுனிவர்
தானவர் போற்றும் பிரான்வாழ் சிராமலை சார்ந்தினிதா
மானவர் பாற்கட லாரமு தெண்மையின் வாய்ந்ததெனக்
கானவர் மாதினை யான்பெற்ற வாறிந்தக் காவகத்தே. (கரு)

### புணர்ச்சியின் மகிழ்தல்.

21. நானென தென்னுஞ் செருக்கற்ற ஞானமெய் நற்றவரைத்
தானென வாக்கிச் சிராமலை நாதன் றருமருட்செந்
தேனென வானுறு தெள்ளமு தென்னச் சிறந்ததிந்த
மானெனை மேவி யருளிய பேரின்ப வாழ்விதுவே. (கசு)

### புகழ்தல்.

22. பாருந் திசையுந் திரிந்துவெங் காலைப் பரிந்தருந்தி
ஊரும் பணியினங் காணீர் தவங்க ளுஞற்றிடினும்
நீரும் பிறையு மணிவோன் சிராமலை நேரிழைசீர்
ஆருந் திகழிடை போற்பொலி வார்த லரிதுமக்கே. (கஎ)

### ஏற்புற வணிதல்.

23. வாசம் பெறுமட்டு வார்குழல் பாக மகிழ்ந்துறையும்
ஈசன் சிராமலைச் சாரலின் வாழு மிளங்கொடியே
தேசம் புகழுங் கலிங்கமுங் காஞ்சியுஞ் சேரக்கட்டி
நேசந் தரப்பணி யாவுந் திருத்தின னேர்பெறவே. (கஅ)

---

20. தானவர் - வித்தியாதரர். மானவர் - மனிதர். எண்மையின் - எளிதாக. பெற்றவாறு என்ன வியப்பு என ஒருசொல் வருவிக்க.

21. செருக்கு - மயக்கம். நானென தென்னுஞ் செருக்கு: "யானென தென்னுஞ் செருக்கு" (குறள், 346.) நானென...ஆக்கி: "தன்னைப் பரமென யானுணர்ந் துய்ந்திடத் தானருளால், என்னைச் சிவமெனச் செய்தோன்", "தன்னை யுணர்த்தித்தன் போலெனைச் செய்து" (297, 328)என்பர்பின்னும்.

22. காலை - காற்றை. பணி - பாம்பு. பி-ம். 'திகழல்குல்போற்'

23. கலிங்கம் - உடை. காஞ்சி - ஒருவகை மேகலை. கலிங்கமென்னும் தேசப்பெயரும் காஞ்சியென்னும் நகரப்பெயரும் இதில் தோற்றுதல் ஒருநயம்; "காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த கலவி மடவீர்" (கலிங்கத். 60.) பணி - ஆபரணங்கள்.

## ௩. வன்புறை.

### அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல்.

24. தோடுங் கலையுந் தொடியுமுத் தாரமுஞ் சூழ்ந்தளிகள்
பாடுந் தொடையு முனதுயி ராகுநற் பாங்கியர்போல்
நாடும் படியன்பி னுன்றரித் தேனஞ்சி நாணமுறேல்
நீடுஞ் சிராமலை யீச ரருளென்னு நேரிழையே. (௧)

### பெருநயப்புரைத்தல்.

25. மானார் தருமங்கை யெம்மான் சிராமலை மான்முகம்போல்
தேனார் தருமலர் தேரளி காள்சொலுஞ் செங்கமலம்
தானார் தருங்கமு குண்டோ வனசந் தனிற்கமழும்
கானார் தருங்குமி ழுண்டோ பணையிலுங் காவிலுமே. (௨)

### தெய்வத்திறம் பேசல்.

26. பண்ணார் மொழியுமை பாகர் சிராமலைப் பாண்டரங்கர்
கண்ணார் நுதலின ராரருள் கூட்டிடக் காதலினும்
தண்ணார் பொழிலிடை மேவு மணத்தைத் தடுப்பவர்யார்
பெண்ணா ரமுத மனையா யெவனைந்து பேதுறலே. (௩)

---

24. தோடு - காதணி. கலை - ஆடை. தொடி - வளை. அளிகள் சூழ்ந்து பாடும் தொடை; தொடை - மாலை. நாணமுறேல் - நாணுதே.

பி-ம். 'நாணல்வளம்'

25. மான் ஆர் தரும் அங்கை; அங்கை - அகங்கை. அளிகாள் - வண்டுகளே. சொலும்: முன்னிலையேவற்பன்மை. கமலம் முகத்துக்கும் கமுகு கழுத்துக்கும் உவமைகள். வனசம் - தாமரைமலர். குமிழம்பூ மூக்குக் குவமை. பணை - மருதநிலம். கா - சோலை.

26. பாண்டரங்கர் - பாண்டரங்கமென்னும் கூத்தையுடையவர்; "பண்டரங்க மாடுங்கால்" (கலி. க.) எவன் - என்னகாரணம். நைந்து பேதுறல் - வருந்தி மயங்குதல்.

பிரியேனென்றல்.

27. தணியா மிகுபிணி யுற்றோ ரமிர்தசஞ் சீவினிபெற்
றணியா வுயிர்பெற் றெனவுனைப் பெற்றன னன்பர்விழி
மணியார் சிராமலை மானே வருந்தலொர் மாத்திரையாம்
கணியார் பொழுதும் பிரிந்துய்வ னோவென் கவல்வதுவே. ()

பிரிந்துவருகென்றல்.

28. கொடுத்தலுமின்சொலுமுள்ளவர்பாலன்புகொண்டுசென்றங்
கடுத்தினி தேகுநற் பாவலர் போலங் ககன்றுமிங்ஙன்
தடுத்தலொன்றின்றிவருவேனின்னையத்தைச்சார்ந்தருள்வாய்
கடுத்தழை கண்டர் சிராமலை வாழுங் கனிமொழியே. (ரு)

இடமணித்தென்றல்.

29. பொருமித் திரண்டுமுத் தார்ந்திறு மாந்து புடைத்துவிம்மிப்
பருமித்த பூண்முலை யாயஞ்சன் மாதொரு பாகர்மன்னும்
திருமிக் குயர்தென் சிராமலை யாருஞ் செறிகறியென்
மருமிக்க சோலையின் மேவிப் படர்ந்து வளர்ந்திடுமே. (சு)

---

27. அமிர்த சஞ்சீவினி - உயிரைத்தருவதொரு மூலிகை. அன்பர் விழி மணியார்-சிவபெருமான்; "கண்ணே கண்ணிற் கருமணியே" (தேவாரம்.) கணி ஆர் - கணித்தல் ஆர்ந்த.

28. கொடுத்தலும்......பாவலர்போல்: "கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய, சுற்றத்தாற் சுற்றப் படும்" (குறள், 525); "வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி ..................வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை" (புறநா. சஎ: 1 - 6.) கடு - விடம்.

29. பொருமி - வீங்கி. பருமித்த - அலங்கரிக்கப்பெற்ற. அஞ்சல் - அஞ்சாதே. கறி - மிளகின்கொடி.

## ச. தெளிவு.

30. இனம்பிரி மானென நின்றல மந்திடு மென்னையன்பால்
மனம்பிரி யாவகை தேற்றின ரங்கு மறந்துறையார்
தினம்பிரி யாமற் சுரும்பளி சேருந் தெரியலணி
கனம்பிரி யாத களத்தார் சிராமலைக் காவலரே. (க)

## ரு. பிரிவுழி மகிழ்ச்சி.

### செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தோடு சொல்லல்.

31. சீரா ரடிமலர் கன்றிடு மென்று சிலம்பிரங்கக்
காரார் குழல்வண் டிறுமிடை யென்று கழறமெல்ல
வாரார் முலைகொண் டெனதா ருயிருரு வாய்ந்துநெஞ்சே
ஏரார் சிராமலை யீச ரருளினங் கேகிடுமே. (க)

### பாகனேடு சொல்லல்.

32. பாவார் தருசிங்க நோக்கப் பொருளிப் படியெனநூல்
ஈவா ரறிவிப்ப தொப்பச் சிராமலை யீசரருள்
ஆவார் குழன்முக முன்புபின் பாகவன் பால்வலவா
காவார் தருவண்ட லாடிடத் தேகுதல் காண்குவையே. (உ)

---

30. இனம்பிரிமான்: "நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த, புன்கண் மடமான்" (நுறுந். உஎஉ.) அலமந்திடும் - சுழலும். சுரும்பும் அளியும் வண்டின் சாதிகள். கனம் - மேகத்தின் கரியநிறம்; ஆகுபெயர்.

31. இடை இறுமென்று. உயிரென்றது தலைவியை. உயிர் உரு வாய்ந்து ஏகிடுமென்க.

32. சிங்கநோக்கமென்பது ஒருவகைச் சூத்திரநிலை; முன்னும் பின்னும் நோக்கல் அதன் இலக்கணம். நூல் - இலக்கணநூலை. குழலும் முகமும் தனித்தனியே முன்பும் பின்புமாக. வண்டல் - விளையாட்டு.

## ரு. பிரிவுழிக் கலங்கல்.

ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென்றல்.

33. கணியார் தருதென் சிராமலை யீசர் கருணையன்னார்
மணியார் தரும்பணி நாப்பணன் மாணிக்க மன்னுதல்போல்
பணியார் தருமுலை யார்தொழ வாரும் பரிசதுன்னின்
அணியார் தருபுணர்ப் பிந்திர சாலங்கொ லாய்ந்திடினே. (க)

வாயில்பெற்றுய்தல்.

34. நாதாந்த மீது நடிப்போர் சிராமலை நங்கைவிழிப்
போதாந்த வாநய நோக்கெழிற் கூந்தற் புயன்முதலாப்
பாதாந்த நாடி யிவளுயி ரென்னுயிர்ப் பண்புரைக்கின்
வேதாந்த வாக்கியஞ் சித்தாந்த மென்று விளம்புநெஞ்சே. ()

பண்புபாராட்டல்.

35. ஆடிய சேவடி யெம்மான் சிராமலை யாயிழைசீர்
நாடிய கிள்ளையு மன்னமுந் தோகையு நாணிநித்த
நீடிய காடுங் கடனு மலையு நிலைமையவாய்
ஓடிய வென்னெனிற் சாய னடைமொழிக் கொல்கியன்றே. ()

---

33. கணி - வேங்கைமரம்; கணித்தலுமாம். பணி - ஆபரணம். மாணிக்கம் தலைவிக்குவமை. பாங்கியர் தொழத் தலைவி இருக்கும்பரிசு. புணர்ப்பு- புணர்ச்சி.

34. விழிப்போது ஆம் - கண்ணாகிய குவளைமலரில் உண்டாகும். நோக்கு: எழுவாய். கூந்தற்புயல் பாதாந்தமென்பன தோழியின் உறுப்புக்களை. இவளுயிருக்கும் என் உயிருக்கும் உள்ள பண்பை. வேதாந்த வாக்கிய மென்றது 'அது நானனேன்' என்பது. சிந்தாந்தம் - முடிபு. என் உயிரும் இவளுயிரும் ஒன்றேயென்பது முடிவாகுமென்று கருத்து. நோக்கு விளம்புமெனக் கூட்டுக.

35. சாயலுக்குத் தோகையும் நடைக்கு அன்னமும் மொழிக்குக் கிள்ளையும் தோற்றன; தோகை - மயில். ஓடிய: முற்று. ஒல்கி - தளர்ந்து. எதிர்நிரல்நிறை.

### பயந்தோர்ப் பழிச்சல்.

36. தண்ணாருங் கற்பகம் பூமாலை யீன்றெனச் சார்ந்தெனக்குப்
பண்ணாருஞ் சின்மொழிப் பாவையைத் தந்தவர் பாரினெற்றிக்
கண்ணாருந் தேவர் சிராமலை யீசர் கருணையென
விண்ணாரும் போற்றிட வெந்நாளும் வாழி விசயமுற்றே. (ச)

### கண்படைபெறாது கங்குனோதல்.

37. ஆரண முற்ற சிராமலை நாத ரருளனைய
வாரண முற்ற தனத்தார் மணந்து தணந்தபின்பு
பூரண முற்ற மதியும்பர் கண்களைப் போன்றவென்கண்
காரண முற்றதென் காரிரு ணீட்டிப்பக் காசினிக்கே. (ரு)

## எ. இடந்தலைப்பாடு.

### தந்த தெய்வம் தருமெனச் சேறல்.

38. தொண்டரைவேண்டிப்பரவைதன்பாலன்பிற்றாதுசென்றோர்
அண்டரை யாளுஞ் சிராமலை நாத ரருள்வர்முன்போல்
விண்டரை மாதர் பணியுங் குவிமுலை மின்பயிலும்
வண்டரை யாண்மலர்க் காவினிற் சேறும் வருதிநெஞ்சே. (க)

---

36. தண் - தண்மை; "தண்ணார் தமிழளிக்கும்." (திருவாசகம்.) ஈன்றென - ஈன்றாற்போல. தலைவிக்கு மாலை உவமை; "திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக், குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண் டோங்குதெய்வ, மருவளர் மாலை" திருச்சிற். 1.

37. வாரணம் - யானையின் மத்தகத்தை அல்லது கொம்பை; ஆகுபெயர். பூரணமதி - நிறைந்த அறிவையுடைய. என்கண் உம்பர் கண்களைப் போன்ற-என்னுடைய கண்கள் தேவர்களுடைய கண்களைப் போல மூடாமல் இருந்தன. இருள் நீட்டிப்ப என் காரணம் உற்றது?

38. விண்மாதரும் தரைமாதரும் பணியும். மின்னென்றது தலைவியை. வண்டரை - வண்டுகளை. பயிலும் காவினில். சேறும் - செல்வோம்.

### முந்துறக் காண்டல்.

39. துடியொன்று பாணிச் சிராமலை யாசரு டோன்றவென்னைப்
பிடியொன்று வேழம் புணர்ந்தெனக் கூடிப் பிரிந்தபின்பின்
கொடியொன்று செவ்விள நீரிரண் டேந்திக் குழைவிறெடும்
கடியொன்று சோலையி னின்றிட நானின்று கண்டனனே. (௨)

### முயங்கல்.

40. பொய்வாழ் வரிவையர்க் கூடுமின் பென்பது பொய்யெனவே
பைவா ழரவணி யீசர் சிராமலைப் பைந்தொடியெம்
மெய்வாய் விழிசெவி மூக்கு முவந்துடன் மேவியுண்ண
உய்வாம் படியணைந் தூட்டினள் பேரின்ப முற்றிடவே. (௩)

### புகழ்தல்.

41. பன்னு டவங்க ளொருதாளி னீர்நின்று பங்கயங்காள்
மின்னார் சடையெம் பிரான்வாழ் சிராமலை மேன்மையருட்
பொன்னார் முகமொப்ப வேண்டி யியற்றிடிற் பொன்முகமோ
எந்நாளுங் கான்மலர்ப் போதுமொவ் வீர்தவ மென்சொலுமே.

---

39. துடி - உடுக்கை. பாணி - கை. வேழம் - இங்கே களிறு. என்னைக்கூடி. கொடி இடைக்கும் செவ்விளநீர் தனங்களுக்கும் உவமை. கடி - மணம்.

40. அரிவையர்க்கூடும் - பெண்களைச் சேரும். இன்பு பொய்வாழ்வு. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" (குறள், 1101.) என்பதன் கருத்தை இச் செய்யுளின் பிற்பகுதி தழுவி வந்தது.

41. தாள் - தண்டு, பாதம். தவஞ் செய்வோர் ஒருதாளில் நிற்றல் இயல்பு. தவங்கள் இயற்றிடின். என் - எதன்பொருட்டு. "புனலழுவம் புக்குடைந்தோர் தாளூன்றி நின்று, வனசங்காள் செய்தவநீர் வாழியரோ வாழி, பொருவிடையோன் றெய்வப் புலியூரை யொப்பாள், திருமுகத்துக் கொப்பச் செயின்" சிதம்பரச் செய்யுட்கோவை, 12.

பி-ம். 'தாண்மலர்ப்'

### ஆயத்துய்த்தல்.

42. தீராத தீவினை தீர்க்குஞ் சிராமலைச் சின்மயர்தம்
ஆராத வாரரு ளாலெனைக் கூடிய வன்னமன்ன
நீராத வன்புணர் கஞ்சங்கள் போறபண்ணை நீடச்செல்வீர்
பேராத வென்னிரு கண்ணுங் கருத்துமுன் பின்வரவே. ()

## அ. பாங்கற் கூட்டம்.

### தலைவன் பாங்கனைச் சார்தல்.

43. சித்தியைக் காட்டு மவர்சூழ் சிராமலைச் சின்மயர்சீர்
முத்தியைச் சேர்பவர் பாசத்தை நீக்கிட முந்துமருட்
சத்தியைப் போலத் தடைநீக்கி மாதர் தமையுதவ
உத்தியைத் தேறிய பாங்கனை யாங்கண் டுரைக்குதுமே. (க)

### பாங்கன் தலைவனை உற்றதுவினுதல்.

44. காமம் வெகுளி மயக்கங்க ணீக்கிக் கமழிதழித்
தாம மணியுஞ் சிராமலை நாதர் தமையுணர்ந்தோர்
ஏம விரதத் தடங்கி யொடுங்கு மியற்கையென
வாம மருவு புயம்வாடப் பெற்றதென் மன்னவனே. (உ)

---

42. சின்மயர் - ஞானமயர். ஆராத - தெவிட்டாத. கூடிய நீர். ஆதவன் - சூரியன். கஞ்சங்கள் - தாமரைகள். பண்ணை - மகளிர்கூட்டம் தாமரைகள் தோழியருக்கும் ஆதவன் தலைவிக்கும் உவமைகள். கண் முன்னும் கருத்துப் பின்னும் வர.

43. சித்தி - அட்டமாசித்திகள். பாங்கனுக்கு அருட்சத்தி உவமை; இங்ஙனமே அருட்சத்தியைப் பாங்கிக்கு உவமைகூறுவர் துறைசைக் கோவையுடையார்: "முத்தியென் னப்படு மங்கையைச் சேர முயல்பவரும், சத்தியென் னப்படு மீச னருளின்றிச் சார்தலுண்டோ, சுத்திபெற் றூர் தொழுஞ் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற், சித்திர தீபத் துயிர்ப் பாங்கி யாற்சுகஞ் சேருதுமே" 80.

பி-ம். 'பார்ப்பானை யாங்கண்டு'

44. இதழித்தாமம் - கொன்றைமாலை. ஏமவிரதத்து - காத்தற்குரிய விரதங்களினால்; "காப்பது விரதம்" (ஆத்திசூடி.) விரதத்து ஒடுங்கும் இயற்கை: "சுஙிர்த, விரதந் தனிவிளைத்த மேனி" (தனிப்பாடல்); "கொண்ட நல் விரதத் திளைக்கும் யாக்கையும்" சோணசைலமாலை, 20.

### இதுவுமது.

45. நீரார் தருசடை யெம்மான் சிராமலை நேரமதென்னச்
சீரார் தருமிறை வாநீ பகையைத் தெறநினைந்தோ
காரார் தருநெடு மாலுற் றவர்மனக் காட்சியெனத்
தாரார் தருபுயங் குன்றிய மாண்பெவன் சாற்றுவையே. (௫)

### தலைவன் பாங்கற்கு உற்றதுரைத்தல்.

46. அல்லேந்து கண்டர் சிராமலை நாத ரடியிணையைச்
சொல்லேந்து வேதங்க ளாலே துதித்திடுந் தோழவிரு
வில்லேந்தி யம்பிரண் டேந்தி யிடையிற விம்முமிரு
வல்லேந்தி வந்தொரு மானெனை வாட்டிட வாடினனே. (௪)

### கழற்றெதிர் மறுத்தல்.

47. தானே தனக்கு நிகராஞ் சிராமலைச் சங்கரனை
ஊனே யுருக வுயிரிடை நோக்கி யுணருமதி
மானே கலைக ளனைத்துமுன் னுமுன் மருவவுமெம்
கோனே யொருமட மானுன் மெலிவது கொள்கையன்றே. ()

---

45. மால் - மயக்கம்.

46. வேதங்களாலே துதித்திடுந் தோழவென்றதனால் இருவகைப் பாங்கர்களுள் இவன் பார்ப்பனப்பாங்கனென்பது பெறப்படுகின்றது. இருவில்லென்றது புருவங்களை. அம்பிரண்டென்றது கண்களை. வல் - சூதாடு கருவி; என்றது தனங்களை.

47. மதிமானே - புத்திமானே. கலைகள் - சாஸ்திரங்கள்; ஆண்மான்களென்பது வேறுபொருள். உன்னுமுன் - நினைத்தற்குமுன்னம். மடமான் - மடமையையுடைய தலைவி; பேதைமையையுடையமானென்பது வேறு பொருள்.

மதியையுடைய மானாகிய நீ மடத்தையுடைய மானுக்கு மெலிவது நன்றன்றென வேறொருபொருள் தொனிக்கின்றது.

## கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

48. வானைப் புணருஞ் சிராமலை நாதரை வாழ்த்துமெளி
யேனைப் புணர்மொழி யாலே கழறு மியலைநண்பா
தேனைப் புணரும் பொதும்பரிற் காசிபர் சென்றசுர
மானைப் புணரும் பொழுதாங் குணர்த்திட வந்திலையே. (சு)

## கிழவோற் பழித்தல்.

49. பண்ணிய றேர்ந்தவர் வாழுஞ் சிராமலைப் பாலினுமை
நண்ணிய பாகரை யேத்துமன் பாமய னுட்டமுடன்
அண்ணிய மானுனை வாட்டிட வாடிடி னுவதெவன்
றண்ணிய நூலொன்றி னுன்மத யானையு னோவுறுமே. (எ)

## கிழவோன் வேட்கை தாங்கற்கு அருமை சாற்றல்.

50. சேலைப் பொருவிழி யாளிடப் பாகர் சிராமலையின்
மாலைக் குழற்கொடி கண்ணம்பு பாய்ந்த மருவுபுண்ணில்
வேலைச் செருகுவ துண்டோ செவியிடை வெங்கனலார்
கோலைச் செருகுத லாம்பாங்க நீசொல் கொடுமொழியே. (அ)

---

48. வானைப்புணருமென்பது சிராமலைக்கு அடை. புணர்மொழி யாலே - நட்பிற்குரிய சொற்களாலே. கழறும் - இடித்துரைக்கும். அசுரமா னென்றது மாயையை. இதனை, கந்தபுராணம், காசிபன் புலம்புறுபடலத்தா லுணர்க.

49. பண் இயல் - இசைத்தமிழையும் இயற்றமிழையும்; பண்களின் இலக்கண மெனலுமாம். நூலால் யானை கட்டுண்ணுதலைப்போல்: "வெந் தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின், தந்துவினுற் கட்டச் சமைவதொக் கும்"(நள. அவையடக்கம்); "சூரார் சிலம்பிற் சிலம்பிமென் னூல்கொண்டு சுற்றவெற்றிப், போரார் களிறு புலம்பிநைந் தாங்கு" தஞ்சை. 44.

50. புண்ணில் வேலைச் செருகுவது: "வெந்தபுண் வேலெறிந் தற்று" (கலி. அச); "கலங்கியளி பசும்புண்ணிற் செவ்வேல்பட் டெனவழுங்கிக் கழறு கின்றாள்" (பிரபுலிங்கலீலை, மாயைகோலா. 75); கனலார் கோல் - தீயிற் காய்ச்சிய இருப்பு நாராசத்தை.

### பாங்கன் தன்மனத்தழுங்கல்.

51. மின்னார் சடைமுடி யெம்மான் சிராமலை மேவுமயில்
அன்னார் முலையிரண் டாமேரு வாரரு ளாருமன்பர்
பொன்னா ரகமெனு மாழி கலங்கப் பொராலரிதோ
முன்னா ளொருமலை யாழி கலங்க முயங்கிடினே. (கூ)

### பாங்கன் தலைவனோடழுங்கல்.

52. எல்லா மறிந்தவர் வாழுஞ் சிராமலை யீசரன்பா
வல்லா ரிளமுலை மானனின் மாட்சிமை மாழ்கிற்றென்றாற்
செல்லா ரிமயமு மேருவு மாசிறு தென்றலினாற்
கல்லா ருளங்கிக ராகத் துளங்குமிக் காசினிக்கே. (க0)

### எவ்விடத் தேவ்வியற்றென்றல்.

53. தேறினர் யாரும் புகழுனை யானென் றெருட்டுவன்சே
ஏறினர் வாழுஞ் சிராமலை மேவு மிறைவபுயம்
வீறின பூண்முலை மானென்று பாய மெலிந்ததெனக்
கூறின மானிட மெவ்விட மெவ்வியல் கூறுகவே. (கக)

### இவ்விடத் திவ்வியற்றென்றல்.

54. அயிலொன்று சூலப் படையார் சிராமலை யாமிடமென்
மயிலொன்று சாய லனமொன்று மென்னடை மாம்பொழில்வாழ்
குயிலொன்று தேமொழி கொம்பொன்று நுண்ணிடை கொண்டவியல்
பயிலொன்றுமாருயிராய்த்தோன்றியாண்டவென்பைந்தொடிக்கே. ()

---

51. அகமெனும் ஆழி - மனமாகிய கடல். ஒருமலை யென்றது மந்தரத்தை; ஒருமலையாலே ஒருகடல் கலங்கியதென்றால் இரண்டுமேருவால் ஓர் ஆழி கலங்குதல் அரிதன்றென்றபடி. பி-ம். 'கலங்கமுயன்றிடினே'.

52. வல்லார் - சூதாடுகருவியை ஒத்த. மாழ்கிற்று - கலங்கியது. செல் - மேகம். ஆ: வியப்பின்கட் குறிப்பு. துளங்கும் - நடுங்கும்.

53. என் தெருட்டுவன் - என்னகூறித் தெளிவிப்பேன். சே - இடபம். புயம் மெலிந்தது.

54. அயில் - கூர்மை. மென்மயில். கொண்ட இயல் மயிலொன்று சாயல் முதலியன.

### இறைவனைத் தேற்றல்.

55. மங்கையைப் பாகத்தில் வைத்தோன் சிராமலை மன்னமகிழ்
கொங்கையைத்தாங்குமின்னொப்பார்பொற்பாதங்குறித்தபணி
தங்கையைக் கொண்டவர் தாஞ்செய வண்ட றனையிழைக்கும்
நங்கையைக் கண்டிவ ணனிமைப் போதினி னண்ணுவனே. ()

### பாங்கன் குறிவழிச் சேறல்.

56. அடியாரை யாளுஞ் சிராமலை நாத ரருளனைய
பிடியாரை யன்பனை வாட்டிய வாள்விழிப் பேரணங்காம்
கொடியாரை வார்முலைக் குன்றுரை யான்செயுங் கோதிறவம்
படியாரையேயொப்பமுன்னின்றுகாட்டுங்கொல்பார்த்திடவே.

### பாங்கன் தலைவியைக் காண்டல்.

57. பிறையார் சடைமுடி யெம்மான் சிராமலைப் பிஞ்ஞகன்சீர்
அறையார் மனமெனக் கூந்தல்செந் தாமரை யாமுகங்கண்
நறையார் குவளை மலரென மன்ன னமக்குரைத்த
முறையார் தலினிவ ரேயவர் காவுமிம் மொய்பொழிலே. (௫௭)

### இகழ்ந்ததற் கிரங்கல்.

58. பெண்மா னனைய திருவினர் போற்றுமிப் பேரணங்கின்
கண்மான் மருட்ட வருந்தி யிளைத்துருக் காணவந்த
ஒண்மா னுறுகைச் சிராமலை யாரரு ளுள்ளவனை
நுண்மா ணுழைபுல மில்லாரிற் சால நுவன்றனனே. (௫௮)

---

55. மின் ஒப்பார் - தோழியர். பொற் பாதம் குறித்தபணி தம் கையைக் கொண்டு அவர் தாம் செய - தான் காலா லிட்ட வேலையைத் தம்கையால் தோழியர் செய்ய. வண்டல் - விளையாட்டு. இவண் நான் நண்ணுவன்.

56. தவம்: எழுவாய். படியாரையே ஒப்ப - பூமியிலுள்ள மகளிரைப் போலவே. தவம் பார்த்திடக் காட்டுங்கொலென்க.

57. கூந்தல் மனமெனவும் முகம் தாமரையாகவும் கண் குவளைமலரெனவும் மன்னன் உரைத்த முறையே ஆர்தலின். நறை - தேன். அவர் - தலைவனாற் குறிக்கப்பட்டவள்.

58. கண்மான் - கண்ணாகிய மான். மருட்ட - மயக்க. உரு காண வந்த - தன் உருவத்தை யான் காணும்படி வந்த. நுண்மாணுழைபுலம்: "நுண்மா ணுழைபுல மில்லான்" குறள், 407.

### பாங்கன் தலைவனை வியத்தல்.

59. கருமால் பணிகழ லெம்மான் சிராமலைக் காரிகையார்
இருமால் செறிகணை யேவ மெலிந்த விணைப்புயத்திற்
பெருமா லருண்முலை யானைகள் பாயப் பிழைத்துவந்த
திருமா லனமன்ன னேமன்னர் யார்க்குஞ் செயதுங்கனே. ()

### தலைவியை வியத்தல்.

60. சேலான கண்ணுமை பாகன் சிராமலைச் சேயிழையார்
மாலான காவலர் மார்பிற்பொன் னாகுவர் வாய்ந்தொளியின்
பாலான மாமணி யாகுவர் தேறல் படர்துளப
மேலான வாசநன் மாலையு மாகுவர் மேவுறவே. (கஅ)

### தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறல்.

61. விண்ணினர் மேவுஞ் சிராமலை யீசர்தம் மெய்ம்மையன்பா
பண்ணினு நேர்மொழி யார்தமை நீசொல் பரிசிற்கண்டேன்
எண்ணினு மோரிடை யுண்டெனக் கண்டில னேந்திழையார்
**கண்**ணினு நாடுங் கருத்தினு நீயன்றிக் கண்டிலனே. (கசு)

---

59. கணை ஏவ - கண்களை ஏவ; அம்பை யேவ என்பது மற்றொரு பொருள்; "பொருகணை தொடுத்தான் சென்று புரஞ்சுடு கணையினானும், ஒருகணை விடுத்தான்" (அருணசல. திருவவதார. 58) என்பதில் கணையென்பவை இப்பொருள்களுடையனவாய்நிற்றல் காண்க. செயதுங்கன் - வெற்றியில் மேம்பட்டவன்.

60. தலைவனைத் திருமாலாகப் பாவித்துச் சொன்னபடி. பொன் - திருமகள். மணி - கௌஸ்துபமணி. தேறல் - தேன்; தேறல் படர் துளபம்: "கமழ்குரற் றுழாய்" (பதிற். ௩௧: 8) என்பது போன்றது இது.

61. மேவும் - விரும்பியடையும். பண்ணைக்காட்டிலும் திருந்திய மொழி. எண்ணினும் - என்ன ஆராய்ந்தாலும். கண்ணினும்...... கண்டிலன்: "கண்ணினு முளைநீ தையல் கருத்தினு முளைநீ" கம்ப. திருவடி. 63.

### தலைவன் சேறல்.

62. மதிகொண்ட செம்பொற் கொடியொன் றிரண்டு மலையெடுத்து
நுதிகொண்ட வில்லிரண் டேந்திக் கணையிணை நோன்மைகொண்டு
துதிகொண்ட மாதவர் போற்றுஞ் சிராமலைச் சோதியருள்
பதிகொண்ட வாகண்ட துண்டேலென் னுவிநண் பாவதுவே.

### தலைவியைக் காண்டல்.

63. பூவியை மாவியை மார்பின னன்பிற் புகழ்ந்துதொழும்
தேவியையாகத் தமைத்தோன்சிராமலைத் தேம்பொழில்வாய்க்
காவியை யாம்பலைக் கஞ்சத்தை யோர்கொடி காட்டவருள்
ஆவியை யானென தாவியென் றேகண் டறிந்தனனே. (உக)

### கலவியின் மகிழ்தல்.

64. வாம்பெற்ற மூருஞ் சிராமலை யீசர் மலரடிகள்
தாம்பெற்ற மாதவர் பேறே நிகரெனிற் றுன்றகுமுன்
தேம்பெற்ற சேயித ழாரமு துண்டு திளைத்ததனால்
நாம்பெற்ற பேரின்ப மென்னுயி ராகிய நன்னுதலே. (உஉ)

---

62. வில் இரண்டு : புருவங்கள். கணையிணை : இரண்டு கண்கள். நோன்மை - வலிமை. அருளென்றது தலைவியை. பதிகொண்டவா - பதிதல்கொண்டவிதத்தை. பி-ம். 'வில்லேந்துங்கணை'

63. பூ இயை மா - திருமகள். மார்பினன் : திருமால். காவியென்றது கண்களை. ஆம்பல்: வாய். கஞ்சம்: முகம். கொடி: இடை. ஆவியை - ஒரு வாவியை; என்றது தலைவியை; "கார்கொண்ட காவி னிடையிலொ ராவிநங் கண்ணுற்றதே" கோடீச். 1.

64. வாம் பெற்றம் - பாயும் இடபத்தை. தேம் - தேன். பேரின்பம் பேறே நிகர்.

### புகழ்தல்.

65. விடையுற்ற பாகர் மருவுஞ் சிராமலை மேவுமின்னுன்
துடையுற்ற பேரணி கண்டிங்கு வாழை துனிமருவித்
தடையுற்ற தாகிக் குலையுற்றுச் சாய்ந்து தலைகுனிந்து
கடையுற்ற கன்று நிலங்கிளைத் தாங்குக்கீழ்க் கண்ணிட்டதே.

### தலைவியைப் பாங்கியோடு வருகெனப் பகர்தல்.

66. படிவான மேத்துஞ் சிராமலை நாதர் பகர்ந்தமறை
முடிவான பேரரு ளாலெனைக் கூடு முகிழ்முலையீர்
கடிவான தின்றிநற் போகம் பெறநங் கவின்றவமோர்
வடிவான தோழி யுடனுளை யீங்கு மருவுகவே. (௨௪)

### பாங்கிற் கூட்டல்.

67. மருவளர் கொன்றைய னெம்மான் சிராமலை வாழ்மயிலே
திருவளர் தாமரை காவிக ளாம்பல் சிறந்தலரும்
உருவளர் பூந்தட மாகுமுன் னுயத்தி னுட்படிந்து
குருவளர் வெற்பெதிர் கூய்விளை யாடிக் குலாவுகவே. (௨௫)

---

65. மின்: அண்மைவிளி. அணி - அழகு. துனி - துன்பம். தடை - வேலி. குலை - காய்க்குலை. கடையுற்று - வாயிலை அடைந்து. நிலங் கிளைத்து - நிலத்தைப் பறித்து. கீழ்க்கண் - கீழே; கண் - கன்றென்பதன் மரூஉவுமாம். வாழை, துடையின் படைவகுப்பைக் கண்டு துன்புற்றுத் தடையையடைந்து குலைதலைப்பெற்றுத் தோற்றுத் தலைகுனிந்து இழிவுற்று நீங்கிப் பூமியை நாணத்தாற் கிண்டிக் கீழ்நோக்கியது என்பது மற்றொரு பொருள்.

66. படியும் வானமும்; படி - பூமி. கடிவு - நீக்கம்.

67. திருவளர்...... காவிகள்: "திருவளர் தாமரை சீர்வளர் காவி கள்." (திருச்சிற். 1.) வெற்பெதிர் கூவல் - வரையெதிர்கூவலென்னும் விளை யாட்டு.

## ௩. பாங்கி மதியுடம்பாடு.

### நாற்றம் முதலிய ஏழானும் ஐயமுற்றோர்தல்.

68. பெம்மான் சிராமலை யெம்மான் பதமலர் பெற்றவர்போல்
அம்மா மணமுடன் றோற்றமுஞ் சீலமு மற்பவுண
வும்மா வடக்க நடைபயில் வியாவு முடனினிதாய்
இம்மா னுறவந்த தெம்மான் மதிக்க வியைந்ததின்றே. (௧)

### அவ்வகைதம்மால் ஐயந்தீர்தல்.

69. பாச மகற்றி யடியரை யாளும் பராபரனெம்
ஈச னருட்சுட ராயென துள்ளத் தினில்விளங்கும்
நேச னிருக்குஞ் சிராமலை வாழ்மயி னீள்குழலின்
வாச மிவட்கோர் மணமுள தென்று மணக்கின்றதே. (௨)

### பிறை தொழுகென்றல்.

70. சீரார் சிராமலை யெம்மான் சடையினிற் சேர்த்ததென்று
நீரார் தருசுனை கஞ்சக்கை கூப்ப நிகர்குமுதப்
பேரார் மலரளி வாய்திறந் தேத்திடப் பெற்றதென்றால்
வாரா ரிளமுலை மானே தொழத்தகும் வான்பிறையே. (௩)

---

68. அற்ப உணவும். ஐயந்தீர்தலுக்கு ஏதுவாகிய நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினைமறைப்பு, செலவு, பயில்வு என்பவை முறையே இதிற் சொல்லப்பட்டிருக்கின்றன. வந்தது - வந்தமை. "பூங்கேச மன்றல் புனையா வெழில்வெண் புதுமதிகண், டாங்கே யிகழ்த லருகிய வுண்டி யருஞ் செலவு, நீங்கே கரத்த லொருவயி னேசென்று சென்றுநிற்றல், தாங்கே வலமல்ல வந்ததென் னேவிந்தத் தையலுக்கே." அம்பிகாபதி கோவை, 74.

69. மணம் - தலைவன் தொடர்பு; காந்தர்வ விவாகம்.

70. கஞ்சக் கை - தாமரையாகிய கை. அளி - வண்டு.

### சுனைவியந் துரைத்தல்.

71. மூவாத கோங்கரும் பாயெழில் காட்டு முகிழ்முலையாய்
கோவாத முத்துன் னுடற்கணி யாகக் கொடுத்துமுகம்
பூவாத செங்கழு நீரையும் பூப்பப் புரிந்ததுவோ
தாவாத பேரின்ப நாதன் சிராமலைத் தண்சுனையே. (௪)

### சுனைநயந் துரைத்தல்.

72. மையார் குவளை சிவந்திடச் செய்ய மணிப்பவளம்
மொய்யார் தரளம தாக வெமக்கு முதிர்விக்குமோ
பையார் பணியணி யெம்மான் சிராமலைப் பான்மொழியாய்
மெய்யார் தரவுரை நீகுடைந் தாடும் வியன்சுனையே. (௫)

### தகையணங் குறுத்தல்.

73. உன்கண் ணிரண்டு மிரண்டுசெந் தாமரை யொக்குமவள்
தன்கண் ணிரண்டு மிருகரு நெய்த றகுந்தழருன்
மன்கண் ணுதலினர் மேவுஞ் சிராமலை வாழணங்கிங்
கென்கண் ணனையவ ளேகுவள் கண்டங் கெழுந்தருளே. (௬)

---

71. கோவாத முத்தென்றது வேர்வையை. பூவாத செங்கழுநீரென்றது கண்களை; கண்கள் சிவந்ததைக் குறிப்பித்தபடி; "கழுநீர் மலர்க்கண்ணாய் காண்" திணைமொழி, 50.

72. குவளையென்றது கண்ணையும், பவளமென்றது கீழுதட்டையும். எமக்கும் முதிர்விக்குமோ.

73. கருநெய்தல் தகும் - கருங்குவளையை ஒக்கும். தழல் தான் மன்னிய கண்; தான்: அசைநிலை. அணங்கு - தெய்வப்பெண்ணே. என் கண் அனையவளென்றது தலைவியை. அங்கு - உன் இருப்பிடத்திற்கு.

### நடுங்க நாட்டம்.

74. தாயாகி வந்தொரு பேதையைக் காத்த தனிமுதலோன்
வேயான தோளுமை பாகன் சிராமலை மேவிவளர்
பாயாத வேங்கை பயிலும் புனத்துப் பவளவுரு
வாயாகும் வேங்கையைக் கண்டேன்வண் டேன்முரல் வார்குழலே. ()

### பெட்டவாயில் பெற்றுச் சேறல்.

75. அனக்கே தனத்தனு மாலு மறிய வரியபொற்றாள்
எனக்கே யருளிய வெம்மான் சிராமலை யேந்திழைதான்
தனக்கே யுயிரெனக் காட்டிய தோழியைச் சாரினெஞ்சே
உனக்கே யெளிதி னுறுங்கனி வாயமு துண்டிடலே. (அ)

### இரவு வலியுறுத்தல்.

76. பொருந்தா வுலோகம் பொருந்திட வாசு பொருத்துதல்போல்
முருந்தா மிளநகை மாதரும் யானு முயங்கச்செயும்
திருந்தா தவர்புர மட்டோன் சிராமலைச் செம்மணியார்
இருந்தா ரணிமுலைப் பாங்கியை யாங்கண் டிரந்திடினே. (கூ)

---

74. பாயாத வேங்கை - வேங்கைமரம்; வேங்கைமரத்தை இங்ஙனங் கூறியது வெளிப்படையென்னும் இலக்கணத்தின்பாற்படும். பவள உரு வாய் என்றது இரத்தம் படிந்த வாயை. தலைவனைக் களவி வேங்கையின் வாய் சிவந்ததோ, வேறொன்றினைக் களவிச் சிவந்ததோவென்று தலைவி ஐயங்கொண்டு நடுங்கும்படி இங்ஙனம் கூறினள். பி-ம். வாயாரும்.

75. அனக்கேதனத்தன் - பிரமன்; கேதனம் - கொடி. காட்டிய - முன்னமே கண்களால் தெரிவித்த. தெரிவித்ததை, "நாதாந்தமீது" (34) என்னும் செய்யுளால் அறிக. உண்டிடல் உனக்கே உறும்.

76. பொருந்தா உலோகம் - சேராத பித்தளை முதலியன. ஆசு - பற்றாசு; உலோகத்தைப் பொருத்துவது; இது பாங்கிக்கு உவமை. முருந்து - மயிலிறகின் அடிக்குருத்து. செம்மணி ஆர்ந்த முலை; பெரியமாலையை அணிந்த முலை. இரந்திடின் முயங்கச்செய்யும்.

ஊர் வினுதல்.

77. நதியா டரவணி யெம்மான் சிராமலை நாதனன்பர்
துதியா வெனது சிறுமொழிப் பாடற் றொடையுங்கொண்டு
கதியா னுறவருள் செய்தோ னருளன காரிகையீர்
பதியா துமக்குரை செய்வீ ரெமக்கிப் பதியெனவே. (௧0)

பேர் வினுதல்.

78. கண்ணு ரொளியென வென்னைமுன் காட்டிக் கறைமிடற்றோன்
பண்ணு ரிசையென வாழுஞ் சிராமலைப் பைந்தொடியீர்
தண்ணர் புனத்தும தூர்கூ றிடிற்பழி சாருமெனின்
எண்ணார் தரவுங்கள் பேரேனுந் தோன்ற வியம்புமினே. (௧௧)

வேழம் வினுதல்.

79. மாதங்க வோங்க லனமுலை யீர்தம் வடிவொருபால்
மாதங்க நாதர் சிராமலைச் சாரலின் மன்னியெண்ணில்
மாதங்க நாலினர்க் காகா முயல்வின் மகிழ்வினெய்தேன்
மாதங்க மேவுற்று மேவிய தோசொலும் வாய்திறந்தே. (௧௨)

மரை வினுதல்.

80. பரையொன்று பாக ரெனைத்தடுத் தாண்டவர் பாண்டரங்கர்
விரையொன்று கொன்றையர் வாழுஞ் சிராமலை மின்னனையீர்
உரையொன்று கூர்ங்கணை யானேவச் சோரி யுடல்சொரிய
மரையொன்று தானிவண் வந்ததுண் டோசொலும் வாய்மலர்ந்தே.

---

77. அன்பர் துதியா - மெய்யன்பர்களுடைய துதியை ஒப்ப. பாடற் றொடை - பாமாலை. இப்பதி - இன்ன ஊர்.

78. கறை - நஞ்சையுடைய. புனத்திலுள்ள உமது ஊர். எண் ஆர் தர - எண்ணத்திற் பொருந்தும்படி.

79. மா தங்க ஓங்கல் - பெரிய மேருவை. மாது அங்க நாதர் - மாதின் அங்கத்தையுடைய நாதர். எண்ணில் மாதம் கம் நாலினர்க்கு ஆகா முயல்வின் - எண்ணில்லாத பல மாதங்கள் முயன்றாலும் பிரமதேவனாலும் செய்தற்கரிய முயற்சியினால்; கம் - தலை. மாதங்கம் - யானை. ஏ உற்று - அம்பு தைக்கப்பெற்று. பி-ம். 'சாரலின் வாய்மருவி', 'காகா தடவு'

80. பரை - உமாதேவியார். விரை - நறுமணம். சோரி - இரத்தம். மரை - ஒருவகை மிருகம்.

### பன்றி வினுதல்.

81. மருங்கோல மென்றிடைக் கோலிட மேகலை வண்டல்புரி
பெருங்கோலமாரருட்பெம்மான்சிராமலைப்பெண்ணனங்காள்
இருங்கோல மாரநின் றேவச்செங் கோல வெழில்படைத்துக்
கருங்கோலமெய்நிடக்கண்டதுண்டோசொலுங்காண்பதற்கே

### மானேடு மனம் வினுதல்.

82. தேனேடி வந்தமர் கொன்றையர் வாழுஞ் சிராமலைவாய்
யானேடி வந்தமை யென்னெனின் மென்கொடி யாமடவீர்
மானேடி வந்ததம் மானினைத் தேடி மறுகிமனம்
தானேடி வந்தது கானேடி வந்திடுந் தண்பொழிற்கே. (கரு)

### வழி வினுதல்.

83. மண்ணும் பரமனல் கான்மதி யென்றிய மானனென்ன
எண்ணும் படிவத்த னெம்மான் சிராமலை யேந்திழையீர்
பண்ணும் பணியுங் கனிவாய் திறந்தருட் பான்மையினுல்
நண்ணும் படிநும் பதிசாரக் கூறுமி னல்வழியே. (கசா)

---

81. மருங்கு - பக்கத்தில். ஒலிட - முழங்க. இடைக்கு ஓலமென்று மேகலை ஒலிட. வண்டல் - மகளிர் விளையாட்டு. கோலமார் பெண்ணன்னங்காள். இருங் கோல் அம் ஆர-பெரிய அம்பை அழகுபொருந்த. செங்கோலம் - இரத்தத்தினுற் சிவந்தகாட்சி. கருங்கோலம் - கரியபன்றி. பி-ம். 'வண்டலிழை.'

82. தேன் - வண்டு. மறுகி - சுழன்று. கான் - வாசனை.

83. மண் - பூமி. உம்பர் - ஆகாயம். அம் - நீர். அனல் - அக்கினி. கால் - காற்று. மதி - சந்திரன். என்று - சூரியன். இயமானன் - வேள்வித் தலைவன். படிவம் - உருவம். பண்ணும் - இசைகளும்.

### மொழியாமை வினுதல்.

84. மருவாச மாருங் குழலீர் சிராமலை வாசரன்பர்
தருவாச யோகிகள் போனீவிர் மோனந் தரித்துறினும்
திருவாச கத்தினி லாசையுற் றேற்குச் சிறந்திடவிங்
கொருவாச கஞ்சொலப் பக்குவம் பார்ப்ப துசிதமன்றே. (கஎ)

### இடை வினுதல்.

85. பூவா ழளிசண்பை யாண்டகை யார்முனம் போற்றிசெய்த
தேவார மோதுஞ் சிவன்வாழ் சிராமலைச் சேயிழையீர்
தாவா நடுப்பணி தாங்கார் பெரிய தனஞ்சமையார்
ஆவா நடுவுண்டு தேற்றியிப் போதெனை யாளுமினே. (கஅ)

### யாரே இவர்மனத் தெண்ணம் யாதெனத் தேறல்.

86. மையிற் றிகழு மிடற்றூர் சிராமலை வாய்ந்தவர்தாம்
கையிற் றழைகண்ணி கொண்டுமொர் பித்தர்தங் கட்டுரைபோல்
மெய்யிற் கணைபட்டு மான்வந்த தோவென்பர் மெய்யொன்றின்றிப்
பொய்யிற் பெரிய ரிவர்யார்கொ லெண்ணம் புணர்ந்ததென்னே.

---

84. மருவின் வாசம்; மரு - ஒரு வாசனைமூலிகை; "மருவுக்கு வாசனை போல் வந்ததால்" (திருவெங்கைக் கோவை.) அன்பராகிய யோகிகள்; மரத்தடியில் வாழும் யோகிகள்; தருவாசம் - மரவுரியாகிய ஆடையுமாம்; வாசம் - ஆடை. திருவாசகத்தினில் - உங்களுடைய அழகிய வாய்மொழியினில். உசிதம் - தகுதி.

85. அளி - வண்டு. சண்பை - சீகாழி. ஆண்டகையார் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர். அளி ஓதுமென்க. பணி - பாம்பு, வேலை. தனம் - கொங்கை, தன்மை. நடு - இடை, நடுநிலை. பி-ம். 'தனம்படையார்.'

86. தழையையும் கண்ணியையும் கொண்டு.

### எண்ணந் தெளிதல்.

87. பதியா துரைமின் பெயரெவன் வேழம் படர்ந்ததெங்ஙன்
கதியா துரைமி னெனவிவர் பேசிய கள்ளமெல்லாம்
மதியார் சடைமுடி யெம்மான் சிராமலை வாணுதல்வாள்
நுதியார் விழிமய லாலன்றி வேறிலை நோக்கிடினே. (உ0)

### இருவரு முள்வழி யொருமையிற் போதல்.

88. விண்ணும் பரவுஞ் சிவன்வாழ் சிராமலை மீதினிலெம்
கண்ணுங் கருத்துந் திருவுருக் கொண்டுறை காட்சியென
நண்ணுங் குவிமுலை மின்னா ரிருவரு நன்கிருந்தார்
எண்ணும் பதமிது வாங்காதல் யாமிங் கியம்புதற்கே. (உக)

### கையுறை யேந்திநின் றவ்வகை வினுதல்.

89. தானென் றிரண்டன்றி நின்றெனை யாண்டவன் றுயனையான்
கானென்ற கொன்றைய னெம்மான் சிராமலைக் காரிகையீர்
ஊனென்ற கூர்ங்கணை யோடிவ ணேடி யுகண்டுகலை
மானென்றபோந்திடக்கண்டதுண்டோ நும்வரைப்புனத்தே.

### எதிர்மொழி கொடுத்தல்.

90. முன்னூற் கலையெனும் வேதாக மங்கண் மொழிந்ததிசைப்
பொன்னூற் கலையர் சிராமலை வாழும் புரவலர்நீர்
நன்னூற் கலையக நீங்கா திருப்பவென் னடிவந்தீர்
மென்னூற் கலையிடை யெம்பாற் புனக்கலை மேவிலதே. (உரு)

---

87. பதி - ஊர். கதி - வழி. வாள் நுதல் - ஒளியையுடைய நெற்றி. வாள் நுதியார் - வாளின் முனையைப்போன்ற.

88. பதம் - சமயம். இயம்புதற்குப் பதம் இதுவாம்.

89. கான் - நறுமணம். உகண்டு - துள்ளி. பி-ம். தேனென்று...... தேமொழியீர்'

90. முன் நூல்-பழைய நூல். திசையாகிய பொற்கலையையுடையவர். நல் நூற் கலை-நல்ல நூல்களாகிய சாஸ்திரங்கள். அகம்-மனத்தை. மெல் நூற்கலை; கலை - ஆடை. புனக் கலை - புனத்திலுள்ள மான்.

### இறைவனை நகுதல்.

91. மூவிலை வாய்ந்தவை வேலர் சிராமலை மொய்குழலாய்
மாவிலை வாய்ந்த தொடையிலர் பூந்தொடை மாவிலையார்
காவிலை வாய்ந்த கரத்தார் கலையெய்த காரணமப்
பூவிலை வாய்ந்தபைங் கண்ணிக்கும் வாய்த்தன புன்னகையே.

### மதியின் அவரவர் மனக்கருத்துணர்தல்.

92. நண்ணார் புரமெரித் தோர்வாழ் சிராமலை நாடுமிவள்
கண்ணா மிருபிணை மானிவ ரங்கையிற் கண்ணியுற
எண்ணாள் புனத்தினைக் காத்திடக் காவலர்க் கேயினிதாய்ப்
பண்ணார் மொழிநம் மிளம்பிடி வேட்டை பலித்ததுவே. (உரு)

## க௦. பாங்கியிற் கூட்டம்.

### தலைவன் உட்கோள் சாற்றல்.

93. அணிகோ மலர்கள் கிளியோப்பு கோபர ணைந்தமைக்கோ
மணிகோல் வளைக ளிடுகோ பதமென் மலர்பிடிக்கோ
துணிகோ நுமதைய ரேவல் புரியத் துதித்திடுகோ
பணிகோ வருள்வீ ரமலன் சிராமலைப் பாவையரே. (க)

---

91. வை - கூர்மை. மா வில்லை வாய்ந்த தொடை - பெரியவில்லிற் பொருந்திய அம்பைத்தொடுத்தல். பூந்தொடை மாவிலையார் - பூமாலையையும் மாமரத்தின் இலையையும் உடையவர். கா விலை வாய்ந்த - கற்பகத்தை விலைக்கு வாங்கிய. பூவும் இலையும் வாய்ந்த மாலைக்கும் புன்னகை வாய்த்தன; புன்னகை - புன்சிரிப்பு, சிறிய அரும்பு. எய்த காரணத்தால் புன்னகை வாய்த்தன.

92. கண்ணி - மாலை; குறுவலையென்பது வேறுபொருள். கண்ணாகிய மான் குறுவலையில் உற என்பது ஒரு நயம். உறுதலிற் காத்திட எண்ணாள். இளம்பிடிவேட்டையென்றது தலைவன் தலைவியைக் கருதிவந்தமையைக் குறித்தது. பலித்தது - பயனுற்றது. பி-ம். 'கலைமான்'

93. அணிகோ - அணிவேனோ. ஓப்புகோ - ஓட்டுவேனோ. மணி கோல் வளைகள் - இரத்தினங்கள் கோலப்பெற்ற வளைகள். ஏவல்புரியத் துணிகோ.

### பாங்கி குலமுறை கிளத்தல்.

94. ஊனார் புழுக்கலு மீயலுந் தின்றிங் குழலும்வெற்பர்
மானா ளிவளனம் பாலுண்ணு மாநகர் மன்னவர்நீர்
தேனார் சிராமலை யெம்மான் றிருவடி சேருமன்பர்
கானார் சிறுதெய்வ நச்சுவ ரோபுவி காவலரே. (உ)

### தலைவன் தலைவிதன்னை உயர்த்தல்.

95. தெள்ளித் தெளித்த வமுதனை யாளைச் சிராமலைவாழ்
வெள்ளிக் கிரியண்ண லாரருள் போல்வளர் மெல்லியலை
வள்ளிக் குலக்கொடி மாதரென் கூறினிர் வாய்மையன்றே
கள்ளிக் ககின்மக வென்றால கோர்கள் கழறுவதே. (ங)

### பாங்கி அறியாள்போன்று வினவுதல்.

96. நூலாகு நுண்ணிடை யொல்கப்பந் தாடுபன் னூற்றின்மிக்க
பாலாகு மென்மொழி யாரினுண் மாலொடு பங்கயற்கு
மேலாக நின்றரு ளெம்மான் சிராமலை வேந்தவெவள்
மாலாக நின்றனை மாலாகச் செய்த மடவரலே. (ச)

---

94. ஊனார் புழுக்கல் - தசையிட்டுப் புழுக்கிய உணவு. ஈயல் - ஈசல். வெற்பர் மானாள் - குறத்தி. அன்னத்தையும் பாலையும் உண்ணும் மன்னவர். கானார் சிறுதெய்வம் - காட்டுத் தெய்வங்களை. அன்பர் நச்சுவரோ.

95. மாதர்: விளி. "கள்ளி வயிற்றி னகில்பிறக்கும்" (நான்மணிக் கடிகை, 4); "கள்ளியின் றாய்பிளந் துக்ககா ரகில்களும்" கம்ப. தாடகை வதைப். 8.

96. ஒல்க - தளர. பங்கயன் - பிரமன். மால் ஆகம் நின்று - பெருமை யுடைய நெஞ்சில் நின்று. மாலாக - மயக்கமுற. பெருமையை யுடைய மார்பில் நின்று உன்னைத் திருமாலாகச் செய்த மடவரல் என வேறு பொருள் தோற்றுதல் ஒருநயம்.

இறையோன் இறைவிதன்மை யியம்பல்.

97. செந்தா மரைமலர் சேவடி யல்குல்பொற் றேரிடைமின்
பந்தா முலைமுக மாமதி கண்ணயில் பான்மொழிகார்
கொந்தார்குழலெனையிவ்வணம்வாட்டியகோதைக்குண்டால்
இந்தார் சடைமுடி யெம்மான் சிராமலை யேந்திழையே. (ரு)

பாங்கி தலைவியருமை சாற்றல்.

98. துதிவழி யேவழி யாகவென் னுளியுட் டோன்றிமுத்தி
கதிவழி யேதந்த வெம்மான் சிராமலைக் கண்ணுதலோன்
விதிவழி யேய்மதி யொத்திட யான்மின் விதித்தசெய்வேன்
மதிவழி யேவிதி நிற்பதுண் டோபுவி மன்னவரே. (சு)

தலைவன் இன்றியமையாமை கூறல்.

99. கல்லா மெனது மனங்கனி வாகக் கருணைசெய்த
சொல்லார் பொருள்வடி வாகுஞ் சிராமலைச் சோதியருள்
இல்லார் பிறவித் துயரக லார்நின் னிலங்கிழையாள்
அல்லா தெனக்கிங் கருதுமின் னேயிவ் வருந்துயரே. (எ)

பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றல்.

100. தாயே யெனமகிழ்ந் தாண்டோன் சிராமலைத் தாணுவரு
ளாயே வளர்முலை யாட்கிவை யான்சொல லாவதன்றே
சேயே யனைய திறன்மன்ன னேயங்குச் சென்றுநின்று
நீயே நினதுறு காதல்கள் யாவு நிகழ்த்துவையே. (அ)

---

97. கண் அயில்; அயில் - வேல்.

98. கதிக்கின்ற வழி. ஏய் - பொருந்திய. ஒத்திட - ஒப்ப. மின் - விதியும் பாங்கிக்கு மதியும் உவமைகள்.

99. கல்லார்........கருணைசெய்த: "கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண் டென்னை யுன்கழற் கன்ப னாக்கினாய்" (திருவாசகம்.) சொல்லார் பொருள் வடிவாம்........சோதி: "சொற்பொரு ளாயவுன்னை" (திருவிளை. இடைக்காடன்.) துயர் அறாது. பி-ம். எனக்கு மறாது.

100. அருளாயே - அருளாகவே. சேய் - முருகக்கடவுள்.

### பாங்கியைத் தலைவன் பழித்தல்.

101. சேணே மருவுஞ் சிவன்வாழ் சிராமலைச் சேயிழைக்குப்
பாணேர் மொழிமயி லேயென தாசை பகர்வையென்று
வீணே யுரைத்துமி குத்திய பேரின் மிகமெலிந்தேன்
காணே னிரக்க முமிப்போ லுடையரிக் காசினிக்கே. (௯)

### பேதைமையூட்டல்.

102. மகத்தைப் புரியு மவர்வாழ் சிராமலை வள்ளலன்பாற்
சகத்தைப் புரக்குந் திறலாய் குறவர்முன் சார்ந்துபுகர்
முகத்தைத் தடிந்த விடத்தார் மருப்புதிர் முத்ததனாற்
சுகத்தைக் கடியு மவளோ தருவள் சுகமுனக்கே. (௧௦)

### காதலன் மூதறிவுடைமை மொழிதல்.

103. குன்றேசிலையெனக்கொண்டோன்சிராமலைக்கோற்றொடிமான்
கன்றே யனைய விழியறி யாளெனல் கட்டுரையே
நன்றே தனித்தெனை யாயத்தி னீங்கி நயந்தணைந்த
அன்றே முதுக்குறை வுற்றதன் றேவவட் காயிழையே. (௧௧)

---

101. 'உமி குத்தினவர்போல' என்பது ஒரு பழமொழி; "நெற்குத் துண்ணு துமிக்குத்திக் கைவருந்தி" (சேக்கிழார்புராணம், 20), "சுவைபடு மவனீத் துமியுணுக்கொள்ளுந் தொழுத்தையேன்" (திருப்பெருந்துறைப். உபதேசப். 75.) இரக்கம் உமிப்போலுடையரென்றது இரக்கமில்லா யென்பதைக் குறிப்பித்தபடி.

102. மகம் - யாகம். புகர்முகத்தை - யானையை. தடிந்த - கொன்ற. சுகத்தைக் கடியுமவள் - கிளியை ஓட்டுபவள். சுகத்தை வெறுப்பவளா உனக்குச் சுகந்தருவாளென்பது ஒருநயம்.

103. மான்கன்று அனைய விழி - தலைவி. கட்டுரையே - கற்பித்து உரைக்கும் பொய்யே. முதுக்குறைவு - பேரறிவு.

முன்னுறுபுணர்ச்சி முறையுறக்கூறல்.

104. பண்பா லுயிர்பரி பாக முறுவது பார்த்துவந்து
நண்பா லருளுஞ் சிராமலை யாரன்ப நன்னுதலாம்
பெண்பான் முனமின்பம் பெற்றது போலினம் பெற்றிடுக
கண்பா லொளியினர் கோல்பிடித் தேகல் கருதிலரே. (கஉ)

தன்னிலை தலைவன் சாற்றல்.

105. காந்தமு மூசியுந் தாமே புணர்வது காண்பதுண்டோ
பாந்தம தாவெற் கருள்வோன் சிராமலைப் பைந்தொடியான்
சாந்தமு மாலையு மார்முலை மாதைத் தழுவிச்செவ்வாய்
வாய்ந்தமு தார்ந்திட நீயே துணையன்றி மற்றிலையே. (கரு)

உலகியல் உரைத்தல்.

106. நங்கையொர் பாகத்தர் வாழுஞ் சிராமலை நண்ணுமெம்பாற்
சங்கைக ளார்புறத் தாருங் களவுக டாம்பொருந்தார்
நங்கையி னீரெமர் தங்கையி னேற்றுப்பின் னூலணிந்து
மங்கையை மேவிச் சுகம்பெற்று வாழ்காம் மன்னவரே. (கச)

தலைவன் மறுத்தல்.

107. வருத்தும் பசியினர்க் கேரிகண் டீண்டு வயறிருத்தி
எருத்துன் றிடவிட்டுச் சாலி விளைத்துண்ணு மென்றலொத்தென்
கருத்துங் களிப்ப நடிப்போன் சிராமலைக் காரிகையைத்
திருத்தும் விதிமுறை மின்னே புணர்கென்று செப்பனன்றே.

---

104. பெண்பால் - பெண்ணினிடத்தே. கண்பால் ஒளியினர் - கண்ணில் ஒளியையுடையவர்கள். பி-ம். 'ஒளியினர் வேண்டார் துணைகதிர் காண்பதற்கே.'

105. பாந்தமதா - பொருத்தமாக; "பாந்தமாய்ச், சொன்னநிலத் தோர்களுக்காத் தூதுசென்ற தம்பி" (திரு இலஞ்சி முருகன் உலா, 113-4.) பைந்தொடி: விளி. வாய்ந்த அமுது: விகாரம்.

106. சங்கைகள் - ஐயங்கள். எமர்தம் கையின் நீரை நும் கையின் ஏற்று. நூல் - மாங்கலியம்.

107. எருவைத் துன்றிட இட்டு. சாலி - நெல். விதிமுறை - விதிப்படி. மணந்துகொள்ளென்றபடி.

பாங்கி தலைவனை யச்சுறுத்தல்.

108. அடியார்க்கு நல்லன் சிராமலை யான்விழி யாம்பகலோன்
படியார்க்கு மாலுற மேல்கடன் மூழ்கினன் பைம்புனத்திங்
கிடியார்க்கும் வாயெம ரெய்துவ ரூர்க்கினி யேகுதும்யாம்
கடியார்க்கு மாநகர்க் கேருக வல்லையெங் காவலனே. (௧௬)

தலைவன் கையுறைபுகழ்தல்.

109. வளந்திகழ் சீருங் கவினும் வழங்கு மலர்த்திருப்பேர்
உளந்திகழ் வாயரு ளித்தழை நும்வடி வொக்குமன்பாற்
குளந்திகழ் பான்மொழி யீர்நீ ரணிந்து கொளத்தகுங்கார்க்
களந்திகழ் வானவ னெம்மான் சிராமலைக் காவகத்தே. (௧௭)

பாங்கி கையுறைமறுத்தல்.

110. பொன்னி வளந்திக ழெம்மான் சிராமலைப் பொன்னனைய
கன்னி யகலல்குன் மேலனை யித்தழை காணினயிர்த்
துன்னி யெனையழைத் தேதென்பள் கானவ ரோகொடியர்
பன்னி யுரைப்பதென் வாங்கேம் பசுந்தழை பார்மன்னனே.

---

108. பகலோன் - சூரியன். படியார்க்கும் - பூமியிலுள்ள யாவருக்கும். மால் - மயக்கம். இடி ஆர்க்கும் - இடியைப்போலச் சத்திக்கும். கடி ஆர்க்கும் - மணவொலி முழங்குகின்ற.

109. சீர் - செல்வம். வழங்கும் திருவெனக் கூட்டுக. திருவின் உள்ளத்தில் திகழ்பவளே. அருள் - அருள்செய்வாயாக. குளம் - வெல்லம். அன்பாற் கொள்ளத்தகும்.

110. வளந்திகழ் சிராமலை. பொன் - திருமகள்; தங்கமுமாம். ஓ கொடியர் - மிகக்கொடியர்; ஓ: சிறப்புப்பொருளைத்தருவதோ ரிடைச்சொல். பன்னி - ஆராய்ந்து.

ஆற்றுநெஞ்சினோ டவன் புலத்தல்.

111. ஆட வெடுத்தபொற் பாதத்தை நாடி யனுதினமும்
பாட நமக்கருள் பெம்மான் சிராமலைப் பைந்தொடியைக்
கூட நினைத்துழ னெஞ்சேநம் போலக் கொழுந்தழையும்
வாட நினைத்து விதித்தன னோசொன் மலரவனே. (கக)

பாங்கி ஆற்றுவித்தல்.

112. சங்கைக் குழையெனக் கொண்டோன் சிராமலை தன்னி லுமை
பங்கைக் குழைய மகிழ்ந்தணை வோனருட் பார்வையன்ன
மங்கைக் குழையன கண்ணிக்கு நாளை வரினுரைத்துன்
அங்கைக் குழையவள் செங்கைக் குழையென வாக்குவனே.

இதுவுமது.

113. கறையார் மிடற்றின னெம்மான் சிராமலைக் காவலநான்
பிறையார் நுதலெம் பிராட்டிக்குன் வாய்மைகள் பேசியன்பாய்
நிறையார் திருவுள நின்பா லிரங்க நிறுத்துவனீ
நறையார் தழையுட னின்றேகி நாளை நணுகுகவே. (உக)

---

111. ஆடவெடுத்த பொற்பாதம்: "ஆட வெடுத்திட்ட பாதமன்றோநமை யாட்கொண்டதே" (தே.) நெஞ்சே சொல்.

112. குழையென - காதணியாக. உமைபங்கை அணைவோன். அருட் பார்வையன்ன - இடக்கண்ணாகிய சந்திரனையொத்த; "எண்வடிவத் தொரு வடிவாய் முக்கணிலோ ரருட்கண்ணா யியைதேர்க் காலாய்ப், பண்மருவு பலகலையிற் றலைக்கலையாய் விளங்கும்யாம் பால மேற்ற, கண்மருவு தழலவிர்தான் குடையாத விழிவென்று கருதி வட்டத், தண்மதிய முடிமீது நிழற்ற லென வெண்கவிகை தயங்கா நிற்க" சூதசங்கிதை, விமலன், 19.

பி-ம். 'மகிழ்ந்தணைவோனைப் பணியு மன்னா', 'னருட்பாவையன்ன'.

113. கறை - விடம்; கறுப்பும் ஆம்; கறையை ஆர்ந்த மிடறெனலுமாம்; ஆர்ந்த - உண்ட. வாய்மைகள் - சொற்களை. நான் பேசி. நிறை - நெஞ்சைக் கற்பினெறியில் நிறுத்தல்; "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" (குறள், 57.) நறை - வாசனை.

### இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்.

114. தாதைதன் றாளிணை வீட்டிய பாலரைத் தானெனச்செய்
பேதைதன் பாகத்த னெம்மான் சிராமலைப் பேரணங்காம்
கோதைதன் னாசைக்குக் கோதைதன் கோதைக் குரகதமேல்
மேதைதன் னாவினி மேற்கொண்டு செல்வது மேன்மையதே.

### பாங்கிக்கு உலகின்மேல்வைத்துரைத்தல்.

115. மையார் விழிமட மானே யுலகினின் மாதர்மணிப்
பையா ரரவல்குற் றேர்முலை யானைப் படைக்குடைந்தோர்
மெய்யார் சிரகிரி யார்நீ றெருக்கென்பு மேலணிந்து
கையார் கிழியுட னூர்வார் பனைமடற் கந்துகமே. (௨௬)

---

114. பாலர் - சண்டேசநாயனார். தானெனச்செய் - சிவசாரூபம் பெறச்செய்த. பேதைதன்பாகத்தனென்பது சிவனென்னும்பொருட்டாய் நின்றது. கோதைதன் ஆசைக்கு - தலைவியின்பாற்கொண்ட காதலைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு. கோதைதன் கோதைக் குரகதமேல் - சேரனுடைய மாலையாகிய பனையின்மடலாற் செய்யப்பட்ட குதிரையின்மேல்; கோதை - சேரன், மாலை. மேதை - அறிவு. மேற்கொண்டு - அக்குதிரையின்மேற்கொண்டு. கோதையென்னுஞ்சொல் பலகால் வந்தது சொற்பின் வருநிலையென்னும் அணி. "ஆருடை யானினும் வேம்புடை யானினு மைய பனைத், தாருடை யானல னேமதி மானெனச் சாற்றினரே" திருவெங்கைக். 128.

115. தேர்ப் படைக்கும் யானைப்படைக்கும் உடைந்தோர்; உடைந்தோர் - தோற்ற ஆடவர்கள். நீற்றைப் பூசிக்கொண்டும் எருக்கு, எலும்பாலாகிய மாலைகளையணிந்துகொண்டும் பனைமடற்குதிரையி லேறிச்செல்லுவர்; "கொம்மைப் பணைமுலை கூடும் பரிசு கொடியிடையார், தம்மைப் பெறாதவர் தாலப் புரவியு மாலையென்பும், வெம்மைச் சுடலையி னீறுமென் பூளையும் வெள்ளெருக்கும், இம்மைக்கு நாடி மறுமைக்கு மானதென் றெண்ணுவதே" (அம்பிகாபதிகோவை, 109.) "காசியின் மேன்மைக் கலைசைத் தியாகர் மெய்க் காட்சியைப்போல், பூசிவெண் ணீறெருக் கம்பூ வணிந்தென்பு பூண்டுநல்லாய், பாசிழை யார்வடி வார்படங் காட்டிப் பனைமடலாம், வாசியை நாளையுன் னூர்வயி னூர்ந்து வருகுவனே" (கலைசைக். 116.) கிழி - தலைவன் தலைவியர் உருவெழுதிய படம்; 116-ஆம் பாடலைப்பார்க்க. கந்துகம்-குதிரை.

பி-ம். 'மானே மதிமுக வாணுதலார்'

மடலேற்றினைத் தலைவன் தன்மேல்வைத்துச் சாற்றல்.

116. அன்னையு மத்தனு மாகுஞ் சிராமலை யாரருளால்
என்னையு மென்னுயி ராமட மாஞெ டெழுதுபடம்
தன்னையு மென்போ டெருக்கையுந் தாங்கியொண் டார்மடன்மேல்
மின்னையு நுண்ணிடை யீர்நாளை நும்பதி மேவுவனே. (உச)

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்.

117. திரையார் தருபொன்னி வாளைக டாவச்செந் தேனெழும்பூ
விரையார் பொழிறிக ழெம்மான் சிராமலை வீரசெந்தா
மரையார் கயலிணை வள்ளையிற் ருவு மலர்த்திருவின்
உரையா ரிடையுரு வன்றே யெழுத லுனக்கரிதே. (உரு)

தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்.

118. காளி யொடுநடஞ் செய்தோன் சிராமலைக் காரிகையீர்
வாளி விழியு மதிமா முகமும் வளர்முலையும்
தாளி னிணையுடன் யாவையுந் தீட்டியெற் சார்ந்துபொரும்
வேளி னுருவிடை யாதலிற் றீட்ட விரும்பிலனே. (உசா)

---

116. "அம்மையு மாவதன்றி யத்தனுந்தா னையபிரான்" (திரிசிரகிரி யுலா.) தார் - குதிரையின்கழுத்திற் பூட்டும் கிண்கிணிமாலை. மின் னையும்.

117. வாளைகள் தாவ. செந்தாமரை யென்றது முகத்தை. கயலிணை-கண்கள். வள்ளை - காதுகள். உரையும் இடையும் உருவமுடையன அல்ல; ஆதலால் எழுதுதல் அரிது. "மந்தாகினியணி" (வெங்கைக்கோவை. 107) என்னும் செய்யுளாலும் இக்கருத்து விளங்கும்.

118. வாளி - அம்பு. வேளின் உரு- மன்மதனுடைய உருவம்; என்றது அருவத்தை. என்னோடு பொரும் பகைவனாகிய மன்மதனது உருவத்தைத் தீட்டேனென்று தன் இயலாமையைப் புலப்படுத்தாமற் சதுரப்பாட்டால் விடைகூறினான்.

### அருளியல்கிளத்தல்.

119. சின்மய ஞனுஞ் சிராமலை யானருள் சேர்ந்தமன்ன
வன்மையர் போற்பெண்ணை வேட்டொரு பெண்ணை வருந்தவெட்டின்
நன்மைய தோவண்டம் விண்டிடு மன்றி னலிவுறுமால்
அன்மைய தேயென வூரார் மடல்கலை யாய்ந்தவரே. (உஎ)

### பாங்கி கோண்டுநிலை கூறல்.

120. தோடுறு காதின னெம்மான் சிராமலைத் தோகைக்குநான்
நீடுறு நும்மயல் கூற மறுத்திடி னீரதன்பின்
ஏடுக ளேந்தியும் வாசித்து மாலவர்க் கேற்றமருள்
பீடுக ளேய்ந்திடு பெண்ணை மரீஇமணம் பெற்றிடுமே. (உஅ)

### தலைவி யிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல்.

121. அரும்பா முலையினைப் பாவைக் கருத்தி யனைமகிழக்
கரும்பா மொழிகொடு தாலாட்டும்பேதைக்குக் காமஞ்சற்றும்
விரும்பா விளங்குயி லாட்கெவன் கூறுவன் விஞ்சைபல
வரும்பா வலர்பணி யெம்மான் சிராமலை வாழ்மன்னனே. (உகூ)

---

119. சின்மயன் - அறிவுருவமாயவன். ஆளும் சிராமலையான் - சிராமலையை ஆள்பவனென விகுதிபிரித்துக்கூட்டுக. பெண்ணைவேட்டு - தலைவியை விரும்பி; பெண்ணைவெட்டின் - பனைமரத்தைவெட்டினல்; "கூறெரு பெண்ணையே கூட வேண்டுவோர், வேறெரு பெண்ணையே வெட்டு வார் கொலோ" (திருவருணைக்கலம்பகம்.) அண்டம் விண்டிடும் - முட்டை உடையும்; பதினன்கு உலகத்தையும் தன்னுட்கொண்ட அண்டமே விண்டிடு மென்பது மற்றெரு பொருள். அன்றிற்பறவை நலிவுறும். அன்மையதே - செய்யத்தகாததே. கலையாய்ந்தவர் மடல் ஊரார்; கலை-ஆண்மான், நூல்கள்.

120. ஏடுகள்-பனையேடுகள்; பூவிதழ். வாசித்து-படித்து; மணம்வீசி. மாலவர் - காமமயக்கமுடையவர். பீடுகள் ஏய்ந்திடு - பெருமையுள்ள கள்ளுப் பொருந்திய; பெருமைகள் பொருந்திய வென்பது மற்றெரு பொருள். பெண்ணை-பனையை; நங்கையை யென்பது வேறு பொருள். இந்தத் தோகை மறுத்தால் படித்த மற்றெரு பெண்ணை மணஞ்செய்துகொள்ளென்பது கருத்து.

121. பாவைக்கு - மரப்பாவைக்கு. குயிலாட்கு - குயில்போன்ற மொழியையுடைய தலைவிக்கு. விஞ்சை பல வரும் - பலவகைக் கலைகள் தேர்ந்த.

### தலைவன் தலைவிவருத்தியவண்ண முரைத்தல்.

122. தனைமகிழ் கேள்வ னயிர்ப்பத்தன் னீர்மை தனதுநிழ
வினையிகழ் மாவைப் பிறந்திடும் போதரி யீடழிக்கும்
வினைதிக ழோவியத் தாற்றெளித் தாளும் வியப்பவெனைப்
புனையிழை வாட்டின ளெம்மான் சிராமலைப் பூங்கொடியே. ()

### பாங்கி தலைவிசேவ்வியருமைசேப்பல்.

123. இந்தாடு வேணிச் சிராமலை யீசரை யேத்துமன்பா
பந்தாடு வாளவ ளெம்பெரு மாட்டி பரிந்துசிற்றில்
வந்தாடு வாளவ ளூசலம் மானை மகிழ்வெனக்குத்
தந்தாடு வாளவ ளெங்ஙனம் யான்சென்று சாற்றுவனே. ()

### தலைவன் சேவ்வியேளிமைசேப்பல்.

124. கயலார் விழியுமை பாகன் சிராமலைக் கார்மயிலே
புயலார் குழலிக்கு நீயென் வரவு புகலுமுனம்
மயலார் தரவங் கெழுவா டழுவி மனமகிழ்வாள்
செயலார் பணிக ளருள்வா ளுனக்கவள் சீர்பெறவே. (௩௨)

---

122. அயிர்ப்ப - சந்தேகிப்ப. மாவை - யானையை. அரி - சிங்கம். வினை - செயல். தன்னீர்மையை ஓவியத்தால் தெளித்தவள் சீவகன் தேவி மார்களுள் ஒருத்தி; புனையிழை - தலைவி. புணர்ச்சிவிசேடத்தை அறிந்து தன்மீது சீவகனுக்கு உண்டாகிய ஐயத்தை, பிறக்கும்போதே சிங்கக்குட்டி ஒன்று யானைமத்தகத்தைப் பிளத்தலைத்தெரிவிக்கும் ஓவியமொன்றை எழுதிச் சீவகன் தேவிமார்களுள் ஒருத்தி தீர்த்தாளென்பது பண்டைவரலாறு. இது, "சீவகனுக் கன்றொருபெண் சிங்கமொரு கன்றீனும், பாவனைபோ லேயெழுதிப் பக்கத்தில் - ஓவியமாக், காரானை யொன்றெழுதிக் காட்டவரிக் கன்றுதுள்ளிப், போராடிப் பாய்ந்தகதை பொய்யலவே" (**கூளப்பநாயகன் விறலிவிடுதூது, 203-4**) என்பதனாலும் விளங்கும்.

123. இந்து - பிறை.

124. பணிகள் - ஆபரணங்களை.

### பாங்கி யென்னைமறைப்பின் எளிதென நகுதல்.

125. ஆரண மேத்துஞ் சிராமலை நாதர்த மன்பதுணைக்
காரண மின்றி முதலு நிமித்தமுங் காரியத்தைப்
பூரண மாக்க வுருவெங் திருவைப் புணர்ந்திடநீ
நாரண னேனு மெனக்கு மறைத்திடி னன்மையன்றே. (௩௩)

### அங்நகைபொரு தவன் புலம்பல்.

126. பெண்ணார் தருமிடப் பாலோன் சிராமலைப் பேரணங்கின்
கண்ணார் விடமது தீண்ட மயங்கிக் கலங்குமென்பால்
பண்ணார் மொழியஞ்ச லென்று தெனையிப் படிநகைத்தல்
புண்ணு ருடலைவெங் கோலிற் றுளைப்பது போலொக்குமே. ()

### பாங்கி தலைவனைத் தேற்றல்.

127. தனக்கே யுயிர்நிகர் சேடியர் கோடியர் தம்முளன்பால்
உனக்கே யுயிரென வாழெம் பிராட்டி யுயிர்க்குயிர்யான்
எனக்கே தரிய திலையாற் சிராமலை யீசரன்பா
நினக்கே தினியெண்ணம் வாடலை யானுன் னெறிநிற்பனே. ()

### பாங்கி கையுறையேற்றல்.

128. காவியி னார்மணி கண்டர் சிராமலைக் காவன்மன்னு
ஆவியி லாவியை வாவியென் னாவிக் களித்திலையேல்
மேவியி ராவண வாரண முன்புற்று வீட்டிலையேல்
கூவியி நாளயர் நின்பா லருந்தழை கொண்டிலமே. (௩௬)

---

125. முதலும் நிமித்தமும் - முதற்காரணமும் நிமித்தகாரணமும்.

126. பண்ணார்மொழி: விளி. வெங்கோல் - நாராசம்; அம்புமாம்.

127. கோடியர் தம்முள் - கோடிப்பேர்களுள். எனக்கு அரியது எது; இல்லையால். எண்ணம் - கவலை. யான் உன் நெறியில் நிற்பன்.

128. ஆவியில் - தடாகத்தில். ஆவியை - உயிரை. வாவி - தாவி. என் ஆவிக்கு - என் உயிர்போன்ற தலைவிக்கு. ஆவியில் வாவி என் ஆவிக்கு ஆவியை அளித்திலையேல்; இங்கே குறிப்பித்தது புனறருபுணர்ச்சியை. இராவணவாரணம் - இருளைப்போலக் கரிய வண்ணத்தையுடைய யானையை. வீட்டிலையேல் - அழியாவிட்டால்; இங்கே குறிப்பித்தது களிறுதருபுணர்ச்சியை. இந்நாள்வாய்க் கூவி.

### தலைவன் ஆற்றல்.

129. மெய்யுமை யீசர் சிராமலைக் காவயன் மேவுகின்ற
செய்யுறை நீல மலர்ந்திட வாணகை செய்தருளான்
மையுறை வாள்விழி யாளெனைத் தேற்றி மகிழ்வுதந்தென்
கையுறை வாங்கின ளாலெனக் கேதினிக் கையறவே. (௩௭)

### இறைவன்றனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன்குறை யுணர்த்தல்.

130. மாதோர் மருங்கினர் வாழுஞ் சிராமலை வாயொருவர்
காதோ டிகலும் விழியாய் மவுனவிற் காமனெனப்
போதோ டிளந்தளி ரேந்திநம் மூசலைப் போன்றுழல்வார்
ஏதோ வவர்க்கினி யான்செய்ய வேண்டுவ தீண்டுரையே. ()

### தலைவி அறியாள்போன்று குறியாள் கூறியது.

131. குன்றினை யேந்து நிரைகாக்கு மாழி கொடுமறைக்கும்
என்றினை வேதன் றனையீனு நாகத்தி னிற்றுயிலும்
கன்றினை யோச்சிக் கனியுதிர் விக்குங் கருணையினால்
மன்றினு ளாடுஞ் சிராமலை நாதர்தம் வாகனமே. (௩௯)

### பாங்கி இறையோற்கண்டமை பகர்தல்.

132. மானை வினவியு மாந்தழை யோடிவண் வந்துமுனம்
யானை வினவியு மேகினர் தாமின்றிங் கெய்தக்கண்டேன்
கானை வினவு மளிபோ லுயிர்களைக் காக்கமலைத்
தேனை வினவுஞ் சிவன்வாழ் சிராமலைச் சேயிழையே. (௪௰)

---

129. கா - சோலையில். செய் - வயல். நீலம் மலர்ந்திட - நீலமலர் போன்ற கண்கள் விளங்க. அருளாற் கையுறை வாங்கினள். கையறவு - செயலறுதற்குக் காரணமாகிய கவலை.

130. போதோடிளந்தளிரேந்தி: 135. ஒருவர் ஏந்தி உழல்வார்.

131. குன்றினை - கோவர்த்தனகிரியை. ஏந்தும்: முற்று. காக்கும், மறைக்கும், ஈனும், துயிலும், உதிர்விக்குமென்பனவற்றையும் இப்படியே கொள்க. நிரை - பசுக்களை. என்றினை ஆழிகொடு மறைக்கும் - சூரியனைச் சக்கரத்தால் மறைக்கும். ஓச்சி - வீசி. கனி - விளங்கனியை. வாகனம் - இடபமாகிய திருமால். வாகனம் ஏந்துதல் முதலியவற்றைச் செய்யும்.

132. கானை-வாசனையை. அளி-வண்டு. மலைத்தேன்-உமாதேவியார்.

### பாங்கியைத் தலைவி மறைத்தல்.

133. தாராரும் வேலவர் சம்பந்தர் கண்ணப்பர் சாதியர்நாம்
ஏராரு மானங் கவரியைப் போன்றுள மேற்றமிக்கோம்
சீராரு நந்தக வோரா தமலன் சிராமலைவாழ்
காராரு மோதியொ ரூரார் பொருட்டென் கழறுவதே. (௪௧)

### என்னை மறைப்ப தென்னெனத் தழாஅல்.

134. சுடரான்றி நீடொளி யுண்டோ வுலகினிற் றெல்லுயிர்கட்
குடரான்றி யேயுணர் வுண்டோ வெனக்கிங் கொளித்ததென்னீ
விடரொன்று நாக மதியா றணிந்து மிளிர்நகையால்
படரொன்று மூவெயி லட்டோன் சிராமலைப் பான்மொழியே.

### பாங்கி கையுறைபுகழ்தல்.

135. பாருந் திசையும் புகழுமெய்க் காவலர் பாங்கிற்றந்த
தாருந் தழையு நினக்கே தரிக்கத் தகுமடியார்
சீருந் திருவும் பெறவரு ளீசன் சிராமலைவாழ்
வாருந் திதலையு மார்முலை யாயணி வாய்மகிழ்ந்தே. (௪௫)

---

133. வேலவர் சம்பந்தர் - முருகக்கடவுளுடைய சம்பந்தத்தையுடையவராகிய. மானங் கவரியைப் போன்றுளம் - மானத்தாற் கவரிமானைப் போன்றுள்ளேம் யாம். நம் தகவினை. ஊரார் - மருதநிலத்தினர்.

134. சுடர் - சூரியன். உலகினில் ஒளியுண்டோ. உடர் - உடல்; "உடரெலா முயிரிலா வெனத்தோன்றும்" (கம்ப. குகப்.) என் நீ. விடர் - வெடிப்பு; வளை. விடரொன்று நாகமென்றது சாதியடை; "புற்றுடரவார்த்த புனிதன்" (தே) என்புழிப்போல. படர் - படர்தல்; செல்லுதல்.

135. பாங்கின் - உரிமையால். தரிக்க - அணிய. தகும்: தேற்றவினை: திதலை - தேமல்.

### தோழி கிழவோன் துயர்நிலைகிளத்தல்.

136. இரும்பா மனமன லார்மெழு காக வெனைத்தடுத்தாள்
கரும்பா மொழியுமை பாகன் சிராமலைக் காவலர்தார்ச்
சுரும்பா ரளியுறல் பார்த்தெனைப் பார்த்துத் துயரமுற்றூர்
அரும்பா முலைமட வாய்காணி னீசற்று மாற்றலையே. (சச)

### மறுத்தற்கருமை மாட்டல்.

137. தழைகொண்டு நாளு முழன்றிடு மன்னவர் தாமகிழ்ந்து
விழைகொண் டிடத்தமி யேன்சொலும் பொய்யினி மேலிலையால்
குழைகொண்ட காதின ரெம்மான் சிராமலைக் கோதைநல்லாய்
இழைகொண்ட நின்னிடை போலவர் வாடி யிளைத்தனரே. (சரு)

### பாங்கி தலைவன்குறிப்புவேறாக நேறிப்படக்கூறல்.

138. என்பணி கொண்டெனை யாளுஞ் சிராமலை யீசரென
என்பணி கொண்டெருக் கேந்தியோர் பெண்ணை யிடத்தினுற்றிங்
கென்பணி யாதெனக் கேட்பதற் கோவன்றி யாதுகொலோ
என்பணி யாவு மகிழுமின் னேமன்ன ரெண்ணுவதே. (சசு)

### பாங்கி தலைவியை முனிதல்.

139. எனக்கே யுயிரென யானினைந் தோதுசொல் லீண்டுபொறுத்
தனக்கே யுயிரன பாங்கிய ரின்மொழி யோர்ந்துசெய்மா
றனக்கே யரிய பதத்தா ரடியர் தமக்கெளியார்
கனக்கே நிகர்களத் தார்தஞ் சிராமலைக் காரிகையே. (சஎ)

---

136. தார் - மாலையில். சுரும்பு - ஆண்வண்டு; அளி - பெண்வண்டு; "புணர்துணையோடாடும்" (சிலப்). "நீ கண்டனையெனின்" (திருச்சிற்.)என்பவற்றை இச்செய்யுள் நினைப்பிக்கின்றது. நீ காணின்.

137. விழை - விரும்புதலை. இழைகொண்ட - நூலிழையை ஒத்த.

138. என்பணி-என் புணிவிடைகளை. என்பு அணிகொண்டு. பெண்ணை யிடத்தினுற்று - பனைமடலினிடத்தே உற்று; பெண்ணினை இடப்பாகத்தில் உற்றென்பது வேறுபொருள். இதுகாறும் சிலேடை. என் பணியாது - என்னுடைய வேலை யாது? மன்னர் எண்ணுவது கேட்பதற்கோ அன்றி யாதுகொலோ?

139. மால் தனக்கு. கனக்கு - மேகத்துக்கு.

### தலைவி பாங்கியை முனிதல்.

140. பொன்னார் புரிசடை யெம்மான் சிராமலைப் பூவைநல்லாய்
என்னா ருயிரனை யாயெனைக் காக்கு மியல்புடையாய்
நின்னார் மொழிநெறி யன்றி யெனக்கோர் நெறியுமுண்டோ
துன்னா ரெனவெதிர் நின்றெனைப் பார்த்தெவன் சொற்றனையே. (சஅ)

### தலைவி கையுறையேற்றல்.

141. பன்னாளும் வேண்டி யிரந்தாரை வேண்டிப் பரிந்தெனக்கிங்
கென்னாளு நன்குற வெம்மான் சிராமலை யேய்ந்துவளர்
பொன்னா ளனமட மாதே மகிழ்ந்து புகழ்ந்துதரு
மின்னார் தருதழை யென்னன் மறுத்திடன் மேன்மையன்றே.

### தலைவி கையுறையேற்றமை பாங்கி தலைவற்குணர்த்தல்.

142. கண்டா டழையினைச் செங்கையின் வாங்கிக் களிப்புமிகக்
கொண்டா டலைமிசைக் கொண்டா ளிருகண் குளிரவொற்றிச்
செண்டார் முலையுறச் சேர்த்தா ளெனதுயிர்ச் சேயிழையாள்
வண்டா ரிதழிச் சடையார் சிராமலை வாழ்மன்னனே. (ருo)

### பாங்கி குறியிடங்கூறல்.

143. சுகமன்னு சாதியுஞ் சந்து மசோகமுஞ் சூடிமலர்
அகமன்னு வண்டினம் பாட மயிலின மாடமணி
மிகமன்னு பாறையுள் யாநன் பகல்பயில் வேறிடமாம்
தகமன்னு மீசன் சிராமலைச் சாரலிற் றூர்மன்னனே. (ருக)

---

140. புரி - முறுக்கிய. பூவை - நாகணவாய்ப்பறவை. மொழிநெறி யன்றி - மொழியாற் சுட்டப்படும் வழியில் நடத்தலையன்றி. துன்னார் - பகைவர்.

141. இரந்தாரை - யாசித்த தலைவரை. பொன்னாள் - திருமகளை. தழையை மறுத்திடல்.

142. செண்டார் - பூம்பந்தைப்போன்ற. இதழி - கொன்றை.

143. சுகம் மன்னு சாதி - கிளிகள் தங்கும் சாதிமரம்: சூடி மணி மிக மன்னு பாறை. மலர் அகம் மன்னு - மலருகின்ற இடத்திலுள்ள.

பி-ம். "அகமன்னு மாரளி பாட"

### குறியிடத்து இறைவியைக் கொண்டுசேறல்.

144. தேனார் மொழியுமை பாகன் சிராமலைச் சேயிழையாம்
வானார் பொழிலிடை மான்பிணை தேடி மயங்கல்கண்டு
கானார் மலர்கொய்து வெற்பெதிர் கூவிக் கமழ்மலர்மேன்
மீனார் தருசுனை யாடியிங் கேகுது மேவுகவே. (நுஉ)

### குறியிடத் துய்த்துநீங்கல்.

145. முலைகண்டு வேழ நடுங்க மடங்கன் முடங்கியிடை
நிலைகண்டு நாண வமலன் சிராமலை நேரிழையிம்
மலைகண்டு கூவி விளையாடி நில்லிவண் மாமலர்காத்
தலைகண்டு யான்கொய்து மேவுவன் வேண்டுவ சார்ந்துனக்கே.

### இறையோ னிடத்தெதிர்ப்படுதல்.

146. வாட்டுங் கொடிய கொடுங்கோ லுளமத மன்னனென்னை
ஆட்டுங் கலியைத் தவிர்த்திங்ங ணுண்டின் பருளுதற்கோ
ஈட்டும் பெரிய தனந்தான் சிராமலை யீசரருள்
கூட்டுங் கதியெனக் கொண்டுவந் தீர்மலர்க் கோதையரே. (நுச)

---

144. சேயிழை: விளி. மான் - இங்கே ஆண்மான். பிணை - பெண் மான். பிணையைத்தேடி மான் மயங்குதலை.

145. மடங்கல் - சிங்கம். மடங்கல் இடைநிலைகண்டு முடங்கி நாண. தலைவியின் இடைக்குச் சிங்கத்தின் இடை உவமை. நேரிழை: விளி. மலை கண்டு கூவி - வரையெதிர்கூவி. இவண் நில். மலர் - மலரை. காத்தலை - சோலையினிடத்தே. சார்ந்து உனக்கு வேண்டுவ கொய்து மேவுவன்.

146. கொடுங்கோல் - கொடிய அம்பு, கொடுங்கோன்மை. கலி - துயர், வறுமை. தனம் - கொங்கை, செல்வம். கதி - வழி.

பி-ம். 'ஆட்டுந் துயரை.'

### புணர்ச்சியின்மகிழ்தல்.

147. கண்டாலு மோவின்பங் கேட்டாலு மோவின்பங் காதலிதழ்
உண்டாலு மோவின் புயிர்த்தாலு மோவின்ப மூங்கணைத்துக்
கொண்டாலு மோவின்ப மெம்மான் சிராமலைக் கோமளமாம்
வண்டாலு மோதி தருமின்பை யானெவன் வாழ்த்துவனே.

### புகழ்தல்.

148. நீங்கரும் பாசந் தவிர்த்தெனை யாண்ட நிமலனுமை
பாங்கரும் பாகத்த னெம்மான் சிராமலைப் பைம்பொழில்வாய்க்
கோங்கரும் பாமுலைக் கோதைநல் லாண்மொழி கோதினெஞ்சே
தீங்கரும் பாமெனிற் கோதுறு மாதலிற் றீஞ்சுதையே. (ருசு)

### தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

149. துன்பார் வினைப்பவந் தீர்த்தரு ளாநந்தந் தோன்றிடவென்
முன்பார் தரவெதிர்ந் தாண்டோன் சிராமலை மொய்பொழில்வாய்
அன்பார் துணையுடனா ரணங்கோர் தொழு தார்வமெய்தும்
இன்பார் தருசசி யென்னவுன் னையத் தெழுந்தருளே. (ருஎ)

---

147. உயிர்த்தாலும் - மோந்தாலும். வண்டு ஆலும் ஓதி. இச் செய்யுள், "கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" (குறள்) என்பதைப் பின்பற்றி வந்தது.

பி-ம். 'உண்டாலு மோவின்ப மோந்தாலு மோவின்ப.'

148. பாங்கில் அரும்பிய ஆகத்தை யுடையவர். கோது உறும் - அக் கரும்பு சக்கையை உடையதாகும்; கரும்பை உவமைகூறுதல் குற்றத்தை அடையுமென்பது மற்றொருபொருள். சுதை - அமுதம்.

பி-ம். 'கோதுறு மோதிற் செழுஞ்சுதையே.'

149. என் முன்பு ஆர்தர. துணையுடன் - பாங்கியுடன். ஆரணங்கோர் - தெய்வமகளிர். சசி - இந்திராணி; "வண்டில தால்விரைச் செண்பகப் பூம்பொழில் வான்றருவாக், கண்டிட நின்சசி மார்தெய்வ தப்பெண்களிற்களுலத், தொண்டெனைக் கொண்டவர் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற், றெண்டிரைத் தெள்ளமு தேநீ சசியிற் சிவணுகவே" (திருவாவடுதுறைக். 46), "அண்டர்தம் மாதர் நடுவிந்தி ராணியி னையத்துறாஉம்" கோடீச்சுரக். 34.

### பாங்கி தலைவியைச்சார்ந்து கையுறைகாட்டல்.

150. பண்ணார் மொழியுமை பாகன் சிராமலைப் பான்மொழியுன்
கண்ணார் மலரு முகமா மலருங் கவின்வடிவாந்
தண்ணார் தளிருநற் றளாந் தளிருந் தரித்தருள
எண்ணார் தரக்கொடு வந்தே னினக்கிங் கெழில்பெறவே.

### பாங்கி தலைவியைப் பாங்கிற்கூட்டல்.

151. கோவா மணிமுத்தம் பொன்னி யறலிற் கொழித்திடல்போன்
மாவார் குழலிற் றரித்தேன் மலர்கண் மகிழ்வுடன்யான்
தேவாதி தேவ னமல னிராமயன் றென்கயிலை
ஏவார் விழிநம தாயத்தின் மெல்ல வெழுந்தருளே. (ருகூ)

### பாங்கி தலைவற்கு ஓம்படைசாற்றல்.

152. நிறையாரு மின்பொருட் டானீ யுழன்றது நின்பொருட்டியான்
மறையாருங் கூடலைக் கூட்டிய வாறு மதித்திவளைப்
பொறையாரு மாரியப் பேந்திரன் வாய்மையைப் போற்றுதல்போல்
கறையாருங் கண்டர் சிராமலை வாழ்மன்ன காத்தருளே. (சு௦)

---

150. பான்மொழி: அண்மைவிளி. கண்ணார் மலரும் - கண்ணை ஒத்த மலர்களையும்; ஆர்: உவமஉருபு. வடிவை ஒத்த. கருங்குவளைமலர் தாமரை மலர் மாந்தளிர் அசோகந்தளிர்களாகிய இவற்றைக் கொணர்ந்தேன்.

151. அறலில் - கருமணலில். மா - வண்டு; கருமை: குழலில் தரித்தேன். தேவாதிதேவன் - தேவர்களுக்கு ஆதியாகிய தேவனுவான். "தேவ தேவன் திருப்பெய ராகவும்", 'தேவர்கோ வறியாத தேவதேவன்' (திருவா. சதகம், 30). தென்கயிலை - சிராமலை.

152. நிறை - மனத்தை ஒருவழியே நிறுத்தல்; "நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை" (கலி. 133). மறை - இரகசியம். மறையாருங்கூடல் - களவொழுக்கம். மாரியப்பேந்திரன் - மாரியப்பமுதலியார்; இவர் ஓர் உப காரி. கறை - விடம்.

### இதுவுமது.

153. குளங்காட்டு கண்ணர் சிராமலை நாதர் குவளையந்தார்
விளங்காட்டு மாநகர் வாழ்மாரி யப்பனை மெய்யருளால்
வளங்காட்டு வண்செல்வ மீந்தென்றுங் காப்பது மானமன்னு
தளங்காட்டு பூங்குழ லாளைப் புரக்கத் தகுமுனக்கே. (சுக)

### விருந்துவிலக்கல்.

154. கானூர் கிழங்குசெந் தேன்றினை மாவுங் கலந்துவள்ளி
மானு டாவுண் குகன்போ லிரவுண்டு வைகியெம்மூர்
தானூர் குடிலின் வெறியாட்டுங் கண்டுபின் சார்கநின்னூர்
தேனூர் கடுக்கைச் சிராமலை யானருள் சேரண்ணலே. (சுஉ)

### விருந்திறைவிரும்பல்.

155. செப்பார் முலையுமை பாகன் சிராமலைச் சேயிழையீர்
இப்பா ரினிலுமக் கொப்பா ரெவரெனக் கீண்டரிய
துப்பா மமுதென நீரன்பி னூட்டுவ துய்த்திரவுற்
றப்பா லிரவி யெழுமுன மெம்மூர்க் ககலுவனே. (சுரு)

## கக. பகற்குறி.

### கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண் டிரங்கல்.

156. கலர்மாலை யேபொரு ளாகக்கொள் வாரவர் கண்ணினெஞ்சில்
இலர்மாலை யேறென வூர்வோர் சிராமலை யீசர்க்கன்பர்
மலர்மாலை தந்தெனக் கெல்லுட னேகி மறையச்செவ்வான்
அலர்மாலை வந்தெனை வாட்டிய தென்செய்வ னாயிழையே. ()

---

153. குளம் - நெற்றி. குவளை அம் தார் - கருங்குவளைமாலை; இது வேளாளர்க்குரியது. விளங்காடு: தொண்டைநாட்டின்கண்ணதாகிய ஓரூர். சிராமலைநாதர் மாரியப்பனைக் காப்பது மான. தளம் - பூவிதழ்.

154. கான் - காடு. வள்ளிமானுள் - வள்ளிநாயகி. உண் குகன் போல் - உண்ட முருகக்கடவுளைப் போல. எம்மூர் வைகி - நீ எம்மூரில் தங்கி. குடில் - குடிசை. கடுக்கை - கொன்றை.

155. ஈண்டு - இவ்விடத்து. துப்பு - தூய்மை. ஊட்டுவனவற்றை.

156. கலர் - கீழ்மக்கள். மாலையே - மயக்கத்தையே. அவர் - கீழ் மக்களும் கொள்வாருமாகிய அவர்களுடைய. மாலை ஏறென; மால் - திருமால். மலர்மாலை - பூமாலையை. எல்லுடன் - சூரியனுடன். அன்பர் மறைய. செவ்வான் - சிவந்த அந்திவானம்.

### பாங்கி புலம்பல்.

157. பாலாழி பாலகற் கீந்தோன் சிராமலைப் பாவைக்கென்னும்
மாலாழி மேவ வவர்சென் றகன்றிட மால்விடுதீக்
காலாழி பாயக் கராவுடன் மேலெழக் கக்குசெந்நீர்
போலாழி மீதினன் பாயுமுன் மாலை புறப்பட்டதே. (உ)

### தலைவன் நீடத் தலைவி வருந்தல்.

158. மனமு நிறையுந் துயிலுங் கவர்ந்து வளர்பசிய
தனமு மயலுந் துனியு மெனக்கிங்ஙன் றந்துசென்ற
இனமு மரிதெரி யார்தென் கயிலையி னேந்தற்கின்பார்
அனமும் பெடையு மெனது துயருரை யாமையென்னே. (ங)

### தலைவியைப் பாங்கி கழறல்.

159. அன்றே கணவர் மடவாரைக் கூடி யகன்றிடலை
நன்றே யெனப்படைத் தானய னுதலி னஞ்செயலோ
மன்றே யெனவென் னுளம்வாழ் சிராமலை வள்ளல்சிலைக்
குன்றே யனமுலை யாயென் கலுழ்தல் குணமதன்றே. (௪)

---

157. பாலாழி பாலகற் கீந்தோன்: "பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்தபிரான்" (திருப்பல்லாண்டு); பாலகற்கு - உபமன்யு முனிவருக்கு. மால் ஆழி மேவ - மயக்கமாகிய கடலில் நாம் பொருந்தும்படி. மால் - திருமால். தீ கால் ஆழி - நெருப்பைக்கக்குகின்ற சக்கரம். கரா - முதலை. செந்நீர் - இரத்தம். இனன் - சூரியன். கராவுக்குக் கடலும், ஆழிக்குச் சூரியனும், செந்நீருக்குச் செவ்வானமும் உவமைகள்.

பி-ம். 'அவராங் ககன்றிட'.

158. பசியதனம் - பசலை தோற்றிய தனம். துனி - துன்பம். இன்னமும் அரியால் தெரியப்படாதவர். சென்ற ஏந்தற்கு. முதலிரண்டடி பரிவருத்தனையணி. இது, "சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு, நோயும் பசலையுந் தந்து" (குறள். 1183) என்பதை ஒத்தது.

159. மன்று - பொன்னம்பலம். சிலைக்குன்று - வில்லாகியமலை; மேருமலை.

தலைவி முன்னிலைப்புறமொழி மொழிதல்.

160. பிடிதா னிகர்நடை மான்மன்னு பாகர் பிரசமலர்
அடிதா னடியார்க் கருள்வோர் சிராமலை யார்ந்தவடி
துடிதா னுறுபிணி கேசரிக் கோதுந் தொடர்பொக்குமால்
படிதா னுறுபிணி யோரா தவர்க்குப் பகர்வதுவே. (ரு)

தலைவி பாங்கியோடு பகர்தல்.

161. இன்பரைத் துன்பரைத் தேரி னுலகினி லேய்ந்ததங்கள்
அன்பரைக் கூடினர் நீங்கின ராவ ரமரர்தொழு
முன்பரைத் தென்கயி லாயரை யேத்தி முயலகில்லா
வன்பரைப் போலகன் றூர்மேவ லென்றுகொல் வாணுதலே.

தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல்.

162. பிறையார் சடையர் சிராமலை யேத்தும் பெருந்தகையைச்
சிறையார் கிளிபுன மேய்ந்திட நீசிந்தை செய்தல்கண்டால்
நிறையார் தினைப்புனக் காவலை மாற்றி நினையகத்துள்
முறையார் தரவருங் காவலு ளாக்கு முனிந்தனையே. (எ)

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.

163. இருவினை தீர்த்தெனை யாடென் கயிலை யிறைவர்வெற்பிற்
றிருவினை மானு மயிலே கணவரைச் சேர்ந்தபின்பு
பிரிவினை யோர்ந்துமை செந்திரு வாணி பிரிவதின்றி
மருவினர் பாகமு மாகமு நாவு மகிழ்ந்தென்றுமே. (அ)

---

160. பிரசம் - தேன். துடியடியென மொழிமாற்றி யானைக்கன் றென்று பொருள்கொள்க. கேசரி - சிங்கம். படி - பூமியின்கண். பகர்வது தொடர்பை ஒக்கும்.

161. அன்பரைக் கூடினர் இன்பர்; நீங்கினர் துன்பர்; நிரனிறை. தென் கயிலாயம்-திரிசிராமலை. அகன்றூர் மேவல்-அகன்ற தலைவர் மீண்டுவருதல்.

162. பெருந்தகையை - தலைவனை. தலைவனை நீ சிந்தைசெய்தலைக் கண்டால். கண்டால் - அறிந்தால். அகத்துள் - வீட்டில். கண்டால் அன்னை காவலுள் ஆக்குவாள்.

163. பிரிவினை ஓர்ந்து - பிரிதலை அறிந்து. ஆகம் - மார்பு. உமை பாகத்தையும், திரு ஆகத்தையும், வாணி நாவையும் மருவினர்: "பாகத்து ளொருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னை, ஆகத்து ளொருவன் வைத்தா னந்தண னாவில் வைத்தான், மேகத்தின் மின்னை முன்னே வென்ற நுண் ணிடையை நீயும், மாகத்தோள் வீர பெற்றா லெங்ஙனம் வைத்து வாழ்தி" கம்ப. மாரீசன்வதை. 76.

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்.

164. காரார் மணிகண்டத் தெம்மான் சிராமலைக் கண்விழவில்
ஏரார் மணிமுழ வார்ப்பது போல வெழில்கொண்மன்னர்
தேரார் மணிக ளொலித்தன வானந் தினைப்புனத்தில்
வாரார் மணிமுலை யாய்சேவை காண்டும் வருகவின்னே. (௯)

தோழி சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறுத்தல்.

165. உழையு முழையு முயலின்றி வாடுமிங் கூரர்கொய்யார்
தழையுந் தழையும் பிரான்றென் கயிலையிற் சார்கணியார்
குழையுங் குழையும் படிகிழித் தோடுங்கண் கூர்ந்தலர்ந்தார்
விழையும் விழையுந் தினைப்புனக் காவல் விடவனையே. (௧0)

தலைவிக்குத் தோழி முன்னிலைப்புறமொழி மொழிந்து
இற்செறிப்புணர்த்தல்.

166. தீதாருந் தீவினை தீர்த்தடி யாருய்யச் செய்தருளும்
மாதாரும் பாகர் சிராமலை வேந்தர் மறந்திடினும்
போதாருங் காரளி காள்கிளி காளிசைப் பூங்குயில்காள்
தாதாருஞ் சோலை மயில்காண் மறக்கலிர் தையலையே. (௧௧)

பாங்கி தலைவன்முன்னின்று இற்செறிப்பு அறிவுறுத்தல்.

167. ஆடு மமலர் சிராமலை யீசர்த மன்பவெம்மூர்
நீடு மலைப்புறத் தாரூ ரினிப்புன நீங்குதும்யாம்
ஏடு மவிழ்த்து மலர்வாய் திறந்தின்றைக் கேகணியார்
நாடு மெமர்தினை கொய்திடு நாளு நவின்றனரே. (௧௨)

---

164. கார் ஆர் - மேகத்தை ஒத்த; "காரென்ன வாருங் கறைமிடற் றம்பலவன்" (திருச்சிற். 56.) சேவை - காட்சி.

165. உழை - மான். முழை - குகை. உயல் இன்றி - பிழைத்த லின்றி. வரையெதிர்கூவலில்லாமையால் முழை வாடுமென்றாள். கணியார்- வேங்கைமரம். கணியார் அலர்ந்தார். குழையும்-காதணியும். கண்-கண்ணை யுடையாய்; விளி. அன்னை காவலை விட விழைவாள்.

167. எம்மூர் மலைப்புறத்தில் ஆர்ந்த ஊர். ஏடு - பூவிதழ், பனை யோலையாகிய புத்தகம்; கணியார் - வேங்கைமரம், சோதிடர்; சிலேடை. கணியார் நவின்றனர். சோதிடர் ஏட்டையவிழ்த்துத் தினைகொய்யும்நாளைத் தெரிவித்தனரென்பது வேறுபொருள். வேங்கைமரம் மலரும் காலம் குறிஞ்சி நிலமக்கள் தினைகொய்தற்கு உரிய பருவமாகும்.

### பாங்கி தலைவன்முன்னின்று இற்செறிப்புணர்த்தி ஓம்படைசாற்றல்.

168. பொன்னார் சடைமுடி யெம்மான் சிராமலை போற்றுகின்ற
மன்னா புனங்கள் சுகங்கட் களித்து மறுகமனம்
மின்னா ரிடையென வாடிக் குறிச்சியின் மேவுகின்ற
வென்னா ருயிரனை யாட்குயிர் நீயெனக் கெண்ணமென்னே. ()

### தலைவன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தல்.

169. சேலையும் வேலையும் போல்விழி கொண்டு தினைப்புனத்தைக்
காலையு மாலையுங் காத்தெனைக் காத்த களிசெலப்பால்
வாலையு மாலையும் வைத்தோன் சிராமலை வாழ்த்தலர்போல்
பாலையு மாலையு நோவாம னேவதென் பான்மைநெஞ்சே. (கச)

## கஉ. பகற்குறி இடையீடு.

### இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

170. இந்தினை வார்சடை வைத்தோன் சிராமலை யெங்குலத்தார்
செந்தினை வார்குரல் கொய்திட வெய்துவர் சென்றுபல்கால்
பந்தினை மானு முலையனை மேவும் பரிவினெம்பால்
கந்தினை வீட்டுங் களிற்றண்ணல் யாம்புனங் காப்பதின்றே. ()

---

168. புனங்களைச் சுகங்கட்கு அளித்து; சுகம் - கிளி. மனம் மறுக. மின்னாரிடை - மின்னலை ஒத்த இடை. மின்னார் இடை யென வாடி: "மென்ம ருங்குல்போல் வேறுள வங்கமு மெலிந்தாள்" (கம்ப. காட்சிப்.) உயிர் அனையாட்கு - தலைவிக்கு. தலைவியை மறத்தல் கூடாது. இற்செறித்தபின்பும் வந்து அருள்செய்யவேண்டுமென்பது குறிப்பு.

169. களி - கள்ளி; கள்வி. பால் - பக்கத்தில். வாலை = பாலை - உமாதேவியார். மாலையும் - திருமாலையும். பாலையும் - விதியையும். மாலையும் - மயக்கத்தையும். என் பான்மை - என்ன தன்மை.

170. இந்தினை - சந்திரனை. எம்பால் அன்னை மேவுவாள். கந்து - கட்டுத்தறி. யாம் புனம் காப்பது இன்று; இன்று - இல்லையாகும்.

### இறைவியைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

171. வெவ்விட மாரு மிடற்றூர் சிராமலை மேற்சுலவும்
செவ்விட நாட்டமும் வேட்டமும் வேற்றுமை சேர்ந்துமணம்
வவ்விடு மாகமு மோர்ந்தனை யென்னை மதித்துயிர்த்தாள்
இவ்விட நாமினி யாடு மிடமல்ல வேந்திழையே. (உ)

### இறைவி ஆடிடம் நோக்கி அழிதல்.

172. நன்றுடை யானையுந் தீயதில் லானையு நற்றிருத்தம்
என்றுடை யானைச் சிராமலை யானை யிறைஞ்சலர்போல்
குன்றுடை யார்சுனை யார்க்கு மருவி குளிர்மலர்க்காத்
துன்றுடை யார்புன நீங்கலின் மாய்தல் சுகமுடைத்தே. (௩)

### பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல்.

173. கனத்தினை மானு மிடற்றூர் சிராமலைக் கார்மயில்காள்
புனத்தினை நாடுங் கிளிகாளெம் மூர்க்கினிப் போகுதும்யாம்
தனத்தினை யேந்தி விழிநீர் பொழியத் தளர்ந்துசென்றூர்
மனத்தினை நும்மிடை யேவியென் றோதும் வரினிறையே. (௪)

### பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென் றிரங்கல்.

174. கயவாய் கதிபெறச் செய்தோன் சிராமலைக் கார்ப்பொழில்வாய்
இயவாய் மயிலினங் காள்கிளி காள்பண் ணிசைக்குயில்காள்
உயவா யிழைமட வார்செலும் போதிங் குவந்தெனக்குத்
தயவா யருளும் பணியே துளதெனிற் சாற்றுகவே. (௫)

---

171. செவ் விட நாட்டம் - கடை சிவந்து விடம்போன்ற கண்கள். வேட்டம் - விருப்பம். மணம் - நறுமணம். அனை - தாய். அனை உயிர்த்தாள்.

172. நன்றுடையான், தீயதிலான் என்பன முறையே இத்தலத்தி லுள்ள இரண்டு தீர்த்தங்களின் திருநாமங்கள்; "நன்றுடையானைத் தீயதி லானை......குளிருமே" (தேவாரம்.) திருத்தம் - தீர்த்தம். சுனை, அருவி, கா இவைகள் துன்றுதலையுடைய புனத்தை. ஆர் புனம் - நிறைந்த புனம்.

173. கனம் - மேகம். இறை வரின் - தலைவன் வந்தால். இறை வரின் ஓதும்.

174. கயவாய் - கரிக்குருவி. அதற்கு முத்தியளித்ததை, திருவிளை யாடல் கரிக்குருவிக்கு உபதேசித்தபடலத்தா லுணர்க. இயவாய் - வாத்தி யம்போன்ற வாயினையுடைய. உய - உய்யும்படி. தயவு - தயை; "தய வொடு பிரத்தியாகாரமும்" பிரபோதசந்திரோதயம்.

### வறுங்களம் நாடி மறுகல்.

175. சீரிய ரேதொழு மெம்மான் சிராமலை சேர்ந்ததன
பாரிய ரேகிய தெங்ஙனங் கூறுமன் பாய்மதவேள்
நாரிய ரேயவன் வாசிய ரேயெழி னல்லிசைகூர்
ஆரிய ரேநல் லரிவைய ரேயுல காய்பவரே. (சுு)

### தலைவிவாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்.

176. ஞானம் பெறவெனக் கீவோன் சிராமலை நங்கையர்வாழ்
தானம் பெறுபதி தானது கானவர் தாம்பயில்வார்
யானங் கவரை மருவநெஞ் சேயெண்ணி யாவதென்பார்
மானம் புலியுறு மானை யவாவுறும் வாறெப்பவே. (எ)

## கஅ. இரவுக்குறி.

### இறையோன் இருட்குறி வேண்டல்.

177. முருந்தா முறுவ லுமைபாகன் பாச முதிர்பிணிக்கோர்
மருந்தா யெனைத்தடுத் தாண்டோன் சிராமலை வாய்மழைதான்
பொருந்தா ரெனக்கறுத் தார்த்தம்பு பெய்திடப் போந்தனன்யான்
விருந்தா யுமதுசிற் றூர்க்கண் ணிராவிடை மெல்லியரே. (க)

---

175. தன பாரியர் - கொங்கைப் பாரத்தையுடையவர். மதவேள் நாரியரே - வண்டே; நாரி - நாணி. அவன் வாசியரே - கிளிகளே; அவன் - மன்மதன்; வாசி - குதிரை. மதவேள் ஆர் இயரே - குயிலே; இயம் - வாத்தியம். கேழ்வரகை ஆரியமென்பது கொங்குநாட்டு வழக்காதலின் ஆரியரே என்பதற்குக் கேழ்வரகேயென்று கொள்ளினும் பொருந்தும். அரிவையரே - தினையரிதாளே; அரிந்த வை. உலகு ஆய் பவரே - உலகத்தாரால் ஆராயப்படுகிற கொடிகளே; பவர் - கொடி. இச்செய்யுளில் 'நாரியர்', 'வாசியர்', 'ஆரியர்', 'அரிவையர்' என்னும் வேறுபொருள் தோற்றுதல் காண்க.

176. தானம் - இடம். கானவர் - வேடர்கள். ஆவது என் - ஆகும் காரியம் யாது. பார்மான் - பூமியிலுள்ள ஒரு மான். அம்புலியுறும் மானை - சந்திரனிடத்துள்ள மானை. வாறு - விதம்; "வல்லோ னுலாவந்த வாறென்ன" (சொக்கநாதநுலா.) எண்ணி ஆவது என்.

177. முருந்து - மயிலிறகின் அடிக்குருத்து. பாசமாகிய நோய். பொருந்தாரென - பகைவர்போல. மழை கறுத்து; அம்பு - நீர். மழை கோபித்து முழங்கிப் பாணத்தைப் பொழிய வென்பது வேறுபொருள். யான் இராவிடைச் சிற்றூர்க்கண் விருந்தாய்ப் போந்தனன்.

### பாங்கி நெறியினது அருமை கூறல்.

178. நதியைச் சடையிடை வைத்தோன் சிராமலை நன்முடிதோய்
மதியைப் பிளந்தன கோடிரண் டேந்து மதமலையின்
கதியைத் தடிந்தரி யார்க்குங் கடத்திந்தக் கங்குலினெம்
பதியைப் பெறலரி தண்டர்க்கு மேகுன் பதிக்கண்ணலே. (உ)

### தலைவன் நெறியினது எளிமை கூறல்.

179. கரவு மிகுமிரும் பார்மனந் தீமெழு காயுருகப்
பரவு நெறியெனக் கீந்தோன் சிராமலைப் பைந்தொடியாய்
இரவு மதமலை நாக மிவற்றினை யென்னுயிரின்
விரவு முகமிடை சாயலி னால்வென்று மேவுவனே. (௩)

### பாங்கி அவன்நாட்டு அணியியல் வினுதல்.

180. தோடிடுங் காதின னெம்மான் சிராமலைச் சோதியருள்
நாடிடுங் கண்ணநின் னாட்டமர் மாதர்க ணண்ணிவிளை
யாடிடுந் தானமும் பாடிடுங் கானமு மார்குழலில்
சூடிடும் பூவையும் பூசிடு மியாவையுஞ் சொல்லுகவே. (௪)

---

178. பிளந்தன - பிளந்தாலொத்த. மதமலையின் - யானையின். அரி - சிங்கம். கடம் - காடு. அண்டர்க்கும் அரிது. அண்ணலே உன்பதிக்கு ஏகு.

179. மனம் மெழுகா யுருக. நெறியை. மதமலை - யானை. நாகம் - பாம்பு. என்னுயிரென்றது தலைவியை. தலைவியின் முகமாகிய மதியால் இரவையும், இடையாகிய சிங்கத்தால் யானையையும், சாயலாகிய மயிலால் நாகத்தையும் வென்று.

180. அருளை நாடிடும். கண்ண - கருத்தையுடையவனே. மாதர்கள்: எழுவாய். தானம் - இடம். கானம் - இசை. குழல் - கூந்தல். தானத்தையும் கானத்தையுமென இரண்டனுருபு விரிக்க. இசைப்பாட்டென்னும் பொருளுடைய கானமென்னும் சொல்லோடு இசைப்பாட்டின் தொடர்புடைய பொருளைத்தோற்றுவிக்கும் தானம், குழலென்னும் சொற்களை முறையே முன்னும் பின்னும் அமைத்தது ஒரு நயம்; தானம் - தானவரிசை; குழல் - புல்லாங்குழல்.

### தலைவன் அவள்நாட்டு அணியியல் வினுதல்.

181. பொன்னுட் டவர்பணி யெம்மான் சிராமலைப் பூங்கொடியென்
றன்னுட் டணியியல் யானுனக் கோதினென் சார்வதுநீ
நின்னுட் டணியிழை யார்பயில் காவலர் நேரிசைபா
மின்னுட் டணிசந்த மியாவு மெனக்கு விளம்புகவே. (ரு)

### தன்நாட் டணியியல் பாங்கி சாற்றல்.

182. தேடு வராகமுங் காணுச் சிராமலைத் தேவர்க்கன்பா
கூடுவர் கூடியெம் மூர்பயின் மாதர் குறிஞ்சியிசை
பாடுவர் பானலஞ் சூடுவர் பாநலம் பாவைவிளை
யாடுவர் காவினின் றாடுவர் காவிநின் றூர்சுனையே. (சு)

### இறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தல்.

183. மாணு ரிடத்தினர் தென்கயி லாய வரையகத்தில்
பாணு ளுனது குழலென மேகம் பயிலிருளில்
ஆனு தரிகரி தேருங் கடங்கடந் தன்பர்வரத்
தேனுர் மொழியெனை வேண்டினர் யாதுன் றிருவுளமே. (எ)

### நேராது இறைவி நெஞ்சோடு கிளத்தல்.

184. முன்னு ருளமுற முன்னுர் சிராமலை மொய்த்தகடத்
தொன்னு ரெனக்கட நாகங்கள் சீய முறுபுலிகள்
மின்னுர் மணித்தலை நாகங்க ளாரிருண் மேவியிவண்
என்னு ருயிரனை யார்வரு வாரென் றியம்பனன்றே. (அ)

---

181. என்றன் நாட்டின் அழகிய இயலை. என் சார்வது - என்ன பயனுளதாகும். விளையாடுகின்ற காவையும் அலரையும் நேரே இசைக்கின்ற பாட்டுக்களையும் சந்தத்தையும் நீ விளம்புக; சந்தம் - சந்தனம்.

182. வராகம் - பன்றி. மாதர் ஒன்றுகூடுவர். குறிஞ்சியிசை - குறிஞ்சிப் பண். பானலம் - கருங்குவளைமலர்; அம்: சாரியை. பா நலம் பாவை - பரவிய நலத்தையுடைய பாவைகளை; நலப்பாவை: மெலித்தல். காவில் - சோலையில். காவி நின்று ஆர்ந்த; காவி - கருங்குவளைமலர். சுனையில் ஆடுவர்.

183. பால் நாள் - பாதியிரவு. ஆனுது - அமையாமல். அரி - சிங்கமானது. கரியைத்தேரும்; அரிகரி: இத்தொடர் ஓர் இரக்கக்குறிப்புப்போலவும் நின்றது; "அரிகரி, எற்பற்றிய நோ யெவ்வளவு" என்றார் ஒருவர். கடம் - காடு.

184. முன்னுர் உளம் - தம்மைக் கருதாதவர்களுடைய உள்ளத்தை. கடத்து - காட்டில். ஒன்னுரென - பகைவரைப் போல. கட நாகம் - யானை. சீயம் - சிங்கம். மணித்தலை நாகம் - பாம்பு. நன்றே - நன்றாகுமா?

நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்.

185. ஒட்டார் புரமுன மட்டார் சிராமலை யொண்ணுதலாய்
கட்டார் நிறமுற மட்டார் சுனையினிற் கட்டியெடுத்
திட்டா ரெனையொளி விட்டார் பகழி யிபந்தொலையத்
தொட்டா ரிரவுற விட்டா ருனையெனிற் சொல்லலென்னே. ()

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தல்.

186. பணிந்தும் புகழ்ந்து மிரந்தே னிரவினிற் பான்மொழிதான்
துணிந்துன் பணியினி னின்றிட நாடொறுந் தூயமலர்
அணிந்துந் துதிசெய்து மன்பருட் கூடி யமரரன்பால்
தணிந்துந் தொழவரு ளெம்மான் சிராமலைத் தார்மன்னனே.

தலைவனைப் பாங்கி குறியிடைநிறுத்தித் தாய்துயிலறிதல்.

187. பாகத்தை மாதுக் களித்தோன் சிராமலைப் பாசிழையாய்
மாகத்தை மேவும் பொழிலிற் றுயிலின்றி மல்கிருள்வாய்
நாகத்தை நாக மலைத்திட நாக நடுங்கவதன்
ஆகத்தை நூறு மயில்கட்சி மேலெழுந் தார்க்கின்றதே. (கக)

---

185. ஒட்டார் புரம் - பகைவருடைய ஊர்களை. கள் தார் நிறம் உற- கள்ளையுடைய மாலையை அணிந்த தம்முடைய மார்பை நான் அடையும்படி. மட்டு - வாசனை. நிறமுறக் கட்டி யெடுத்திட்டார். ஒளியை வீசி ஆர்ந்த பாணத்தை இபம் தொலையத் தொட்டார்; இபம் - யானை. இரவில் என்னை அடைதற்கு உன்னைத் தூதுவிட்டா ரென்றால். உடன்பட்டேதீரவேண்டு மென்றபடி.

186. பால்மொழி - தலைவியானவள். பான்மொழி உன்பணியில் நின்றிட இரந்தேன். அன்பருட் கூடியவர் அமரர். மன்னனே! இரந்தேன்.

187. மாகம் - ஆகாயம். நாகத்தை - சுரபுன்னையை. நாகம் அலைத்திட - யானை அலைப்ப. நாகம் நடுங்க - பாம்பு நடுங்க. அதன் ஆகத்தை - அப் பாம்பின் உடலை. நூறும் - அழிக்கும். கட்சி - கூடு. மயில் ஆர்க்கின்றது.

இறைவிக்கு இறையோன் வரவறிவுறுத்தல்.

188. கணையொன்று கூர்விழி மாதே சிராமலைக் கண்ணுதலோன்
இணையொன்று பாத மலர்நா டலரென வெண்ணமுற்றுப்
பணையொன்று காவி லசோகத்திற் சோகம் படர்ந்துடற்றத்
துணையொன்று மின்றிநம் மன்னவர் வாடலென் சொல்லுவதே.

குறியிடத்து இறைவியைக் கொண்டுசேறல்.

189. அளிதங்கு கானிணைக் கார்பொழி கங்குலி னங்கைகொண்ட
ஒளிதங்கு வேல்வழி காட்டக் கடந்திங்ங னுற்றனர்தேன்
துளிதங்கு தாரின ரெம்மான் சிராமலைத் தூமொழிவா
களிதங்கு மோகை யவர்பெற யாஞ்சென்று காண்பதற்கே. ()

இறைவியைப் பாங்கி குறியிடத்து உய்த்து நீங்கல்.

190. கங்கையும் பாம்பு மிலைந்தோன் சிராமலைக் காவினின்சீர்ச்
செங்கையும்பார்வையுங்கொங்கையும்வாயுந்தெரித்திடல்போல்
கொங்கையுந் தேனையு மார்மலர் வாவியிற் கொண்டுசெல்வேன்
இங்கையுங் காதலு மேவநிற் பாய்கண மேந்திழையே. (கச)

தலைவன் குறியிடத்து எதிர்ப்படுதல்.

191. மூலா கமப்பொரு ளானோன் சிராமலை மொய்பொழில்வாய்ச்
சேலார் கயத்தம் புயத்திடை நின்றுஞ் செறியிருளின்
மாலாகு மென்றனைக் காத்தென தாகத்தில் வாழ்ந்திடவோ
பாலாகு மின்சொற் றிருநீ யிவண்வரு பான்மையதே. (கரு)

---

188. கணை ஒன்று - அம்பை ஒத்த. இணை - இரண்டு. காவில் - சோலையில். சோகம் படர்ந்து - சோகமானது பரவி; சோகம் - மன்மதனுடைய பாவ பாணம் ஐந்தனுள் ஒன்று. சோகம் உடற்ற. அசோகத்தினிற் சோகம் படர்ந்து என்பது ஒரு நயம். என் சொல்லுவது - யாதுசொல்லுவது.

189. அளி - வண்டு. கான் - காடு. கானிணைக் கடந்து. தூமொழி: விளி. ஓகையை அவர் பெற. காண்பதற்கு வா.

190. மிலைந்தோன் - சூடியவன். செங்கை, பார்வை, கொங்கை, வாய் ஆகிய இவற்றை உனக்குத் தெரிவிப்பதுபோலத் தாமரைமலர், கருங்குவளை மலர், தாமரையரும்பு, செவ்வாம்பல் இவற்றைப் பறித்துக்கொண்டு வருவேன். ஐயும் - அழகும், தலைவனும். கணம் நிற்பாய்; கணம் - க்ஷணம்.

191. மாலாகும் - மயக்கமுடையேனாகிய, திருமாலாகிய. ஆகம் - மார்பு. திரு நீ - திருமகளாகிய நீ. நீ இவண் வரு பான்மை வாழ்ந்திடவோ? தலைமகளைத் திருமகளாகப் பாவித்துக் கூறியது இது.

### தலைவி நெறியினதருமைநினைந் திரங்கல்.

192. மையா ரிருட்பிழம் பெங்கு மருவ மழைபொழியும்
மொய்யா ரிரவிடைக் கான்யாறுங் கானு முழைவரையும்
பையார் பணியணி தென்கயி லாயர் பதம்பரவும்
மெய்யா ருளத்தண்ண லெவ்வா றிகந்திங்கு மேவியதே. (கசூ)

### தலைவன் தலைவியைத் தேற்றல்.

193. நீதந்த காமக் கனலிரு ணுங்கிட நின்விழியாம்
ஏதந்த மாபல நூறிட வேதங்க ளின்றிவந்தேன்
தாதந்த தாவென வென்னுள மீதென்றுந் தானடிக்கும்
வேதந்த ணர்கழ லெம்மான் சிராமலை மெல்லியலே. (கஎ)

### புணர்ச்சியின் மகிழ்தல்.

194. மாயா விகாரத்தி னலறி வின்றி மயங்குமெற்குத்
தாயா யருள்புரிந் தாள்வோன் சிராமலைச் சாரலினின்
சேயா ரிதழமு துண்டிவ ணன்பெற்ற சீர்கொளின்பம்
வேயார் வளையணி தோளிவிண் ணோர்க்கும் விளைவதின்றே. ()

---

192. இருட்பிழம்பு - இருளின் திரட்சி. மொய் - மொய்த்தல். முழை - குகை. பை - படம். தென்கயிலாயர் - சிரகிரிநாதருடைய. அண்ணல்: விளி. கான்யாறு முதலியவற்றைக் கடந்து மேவியது எவ்வாறு?

193. காமக் கனல் இருளை நுங்கிட; நுங்கல் - உண்ணல். விழியாம் ஏ - கண்களாகிய பாணங்கள். தந்தம் மா - யானை. நின் விழியாகிய பாணம் யானைகள் பலவற்றை நூறிட. ஏதங்கள் இன்றி - துன்பங்களில்லாமல். தாதந்த தா: இது தாளக் குனிப்பு. தன் ஆர்கழலை வேதமாகவுடைய எம்மான்.

194. எற்கு - எனக்கு. சேய் ஆர் - செம்மை பொருந்திய. இவண் நான் பெற்ற. வேயார் தோளி: விளி. இன்பம் விளைவதின்று.

### புகழ்தல்.

195. புயமுற்ற பாரகங் காளர் சிராமலைப் பூங்கொடிநின்
நயமுற்ற வானனங் கண்வா யிவைகளை நாணியென்றும்
கயமுற்ற தாமரை காவிசெவ் வாம்பல்கள் கள்ளம்பட்டுப்
பயமுற்ற மாபங்க முற்றநன் னீருட் படிந்தனவே. (கசு)

### தலைவனைத் தலைவி குறிவரல் விலக்கல்.

196. மணிமிக வாருஞ் சிராமலை நாதரை வாழ்த்தலர்போல்
கணிமிக வாருங் கடத்திடை யாளி களிறுபுலி
பணிமிக வாரும் புரவல நின்னிரு பங்கயமாம்
அணிமிக வாரும் பதம்வாட நீவர லாவதன்றே. (உ0)

### தலைவன் தலைவியை இல்வயின் விடுத்தல்.

197. குருவே யெனவெனை யாண்டென் சிரத்தினிற் கோகனக
உருவே நிகர்பதம் வைத்தோன் சிராமலை யொண்ணுதலார்
திருவே கமல மலருனைத் தேடியென் செய்யுங்கொலோ
மருவே யலர்கொய்வ தென்செல்க நீகண் வளர்ந்திடவே. ()

---

195. கங்காளர் - முழு எலும்பை அணிந்தவர். பூங்கொடி: அண்மை விளி. ஆனனம் - முகம். கயம் - தடாகம், கீழ்மை. கள்ளம் - திருட்டுத் தன்மை, கள்ளாகிய நீர். பயம் - அச்சம், நீர். பங்கம் - பழுது, சேறு. தாமரை முதலியவைகள் நீருட் படிந்தன. இச்செய்யுளில் நிரல்நிறை, சிலேடை என்னும் அணிகள் அமைந்துள்ளன.

பி-ம். 'நாடியென்றும்'

196. ஆரும் - நிரம்பிய. கணி - வேங்கைமரம். கடம் - காடு. யாளி - அத்தியாளியென்னும் மிருகம். பணி - பாம்பு. கடத்திடை யாளிமுதலியவைகள் மிக ஆரும். பங்கயமாம் பதம்.

197. சிரத்தினில் பதம் வைத்தோன். சிராமலையிலுள்ள திருவே! நுதல் ஆர்ந்த திருவே! என்செய்யுங் கொலோ - என்ன செய்கின்றதோ; திருமகளாகப் பாவித்து இங்ஙனங் கூறினன். மரு எய் மலர் - மணம் பொருந்திய பூக்களை. கொய்வது என் - பறித்தல் என்ன பயனைக் கருதி. கண் வளர்ந்திட நீ செல்க.

பாங்கி இறைவியையெய்திக் கையுறை காட்டல்.

198. பானேர் மொழியுமை பாகன் றனைப்பணி பத்தருளத்
தேனே யனையவ னெம்மான் சிராமலைத் தேமொழியார்
மானே யுனைத்தனி விட்டேகி னேனெனு வாட்டமென்னோ
கானே யலர்கொய்து வந்தே னணிக கவின்பெறவே. (உஉ)

பாங்கி தலைவியை இற்கொண்டேகல்.

199. தம்மனை வாழிடப் பாகர் சிராமலை தன்னினமர்
தெம்மனை வீட்டிடல் போன்மலர் கொய்தனஞ் சென்றிருளில்
அம்மனை நீல விழியம் புயங்கள் அலருமுன்னம்
நம்மனை மேவித் துயிலுவம் போதி நளினமின்னே. (உ௩)

பாங்கி இறைவனை வரவு விலக்கல்.

200. தந்தியைச் சீயந் தடிவனத் தேகித் தனித்தடவி
உந்தியைத் தாவி யிரவிடை நீயிவ ணுற்றிடிற்செவ்
வந்தியைப் போல்வடி வானேன் சிராமலை யன்னமன்னோ
கந்தியைப் போன்மிடற் றெம்பெரு மாட்டி கலங்கிடுமே. ()

---

198. பால் நேர். பத்தர் உளத்தேனே அனையவன்; "கருதுவாரிதயத்துக் கமலத் தூறும், தேனவன்காண்"(தே. திருநா. சிவபுரம்.) மொழி ஆர் - சொற்கள் ஆர்ந்த. வாட்டம் என்னோ - வாடுதல் யாதோ. கான் ஏய்- வாசனை பொருந்திய. கவின்பெற மலர்களை அணிக.

199. தம் மனை - தம்முடைய தேவியார். நமர் - நம்மவராகிய வேடர். தெவ் மனை வீட்டிடல் போல் - பகைவர் மனைகளை அழித்தல் போல. அம் மனை - தாய். தாய் விழித்துக்கொள்ளும்முன்னம் நாம் மேவித் துயிலுவம். போதி - வருவாய்.

200. சீயம் - சிங்கம். அடவி உந்தியை - காட்டினிடத்தே உள்ள ஆற்றை. செவ்வந்தியை - செவ்வானத்தை. சிராமலை தலைவனுக்கு உவமை. கந்தி - கமுகு. நீ இரவிடை இங்கே உற்றிடின் கலங்கிடும்.

### தலைவன் மயங்கல்.

201. நாலா ரணங்தொழு தேத்துஞ் சிராமலை நன்னுதனீ
கோலார் வளையை யெனக்குயி ராகக் கொடுத்தமுதாம்
பாலார வூட்டினர் தாமே விடத்தைப் பரிந்தவர்க்கு
மாலார வூட்டுதல் போன்ற திராவரன் மாற்றியதே. (உரு)

### தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்.

202. வம்பார் முலையுமை பாகன் சிராமலை வாழ்த்துமன்பா
அம்பார் தனுவுட னீயாளி வேழ மடுவனத்தைப்
பம்பா ரிருளிற் றணந்துநின் னூர்செல் பரிசுணர்த்துன்
கொம்பார் தருமொழி கேட்டா லுயுமெங் குலக்கொடியே. ()

### திருமகட் புணர்ந்தவன் சேறல்.

203. பரவை மனையி லிரவினி லேகிப் பரிந்துநம்பி
வரவை யுணர்த்திய வெம்மான் சிராமலை வாணுதலாய்
இரவை யெனதுயி ரன்னுண் முகமதி யேயகற்றும்
அரவை யவளியல் வெல்லும் பதிசெல வஞ்சலனே. (உஎ)

## கச. இரவுக்குறி இடையீடு.

### இறைவிக்கு இகுளை இறைவரவு உணர்த்தல்.

204. கோதாரும் பாசந் தவிர்த்தெனை யாண்டவன் கோமளமாம்
சூதாரும் பூண்முலை பாகன் சிராமலைச் சூழலின்வாய்ப்
போதாரும் பான்மொழி மாதே யனமிருட் போதுமுற்றும்
தாதாரும் புன்னையிற் றுஞ்சா தரற்றின சார்ந்ததென்னே. ()

---

201. நன்னுதல்: விளி. கோல் ஆர் வளையை - தலைவியை; கோல் - திரட்சி. பாலை ஆர ஊட்டினர்தாமே - பாலை நிரம்ப ஊட்டியவர்களே. அவர்க்கு விடத்தை ஊட்டியது போன்றது. மால் - மயக்கம். நீ கொடுத்து இராவரல் மாற்றியது விடத்தை ஊட்டுதலைப் போன்றது.

202. வம்பு - கச்சு. அத்தியாளி யானையை அடுகின்ற. பம்பு ஆர் - பரவுதல் ஆர்ந்த. ஊர்சென்ற பரிசை உணர்த்துவாயாக. கொம்பு - ஒரு வகை வாத்தியம். குலக்கொடி கேட்டால் உய்வாள். கொம்பின் மொழியைக்கேட்டு அதிற்படரும் கொடி உய்யுமென்பது ஒரு நயம்.

203. பரவை - பரவைநாச்சியார். நம்பி - சுந்தரமூர்த்திநாயனூர். இரவை - இராத்திரியில் உள்ள இருட்டை. அரவை - பாம்பை. அவள் இயல் - அவளுடைய சாயலாகிய மயில்.

204. சூது - சொக்கட்டான்காய். போது - தாமரைப்பூவில். அன்னம் - அன்னப்பறவைகள். தாது - பூந்தாது. அன்னங்கள் அரற்றின.

### தலைவி குறிமருண்டமை பாங்கிக் குணர்த்தல்.

205. குன்றே சிலையெனக் கொண்டோன் சிராமலைக் கோல்வளையாய்
நன்றேயெனதெண்ணம்புள்ளொலிகேட்டன்பர்நன்மணித்தேர்
என்றே யெழுந்து மகிழ்ந்து பொழிலிடை யெங்கணும்யான்
சென்றே யுழன்றிங்கு மீண்டே னடியிணை சேப்புறவே. (உ)

### பாங்கி தலைவன் தீங்கெடுத் தியம்பல்.

206. ஒன்று யளவி லுயிர்க்குயி ராயன்ப ருள்ளமலர்
மன்று நடம்புரி யெம்மான் சிராமலை வாழ்த்தலர்போல்
குன்றுய் வளர்முலை யாலிடை யொல்கக் கொடியவன்பர்
நின்றுள் வருந்த வியற்றினர் பொய்க்குறி நேரிழையே. (௩)

### புலந்தவன் போதல்.

207. நெஞ்சே யெனக்கென்று நீயே துணையென நின்னைநம்ப
அஞ்சே லெனுதெனைக் கானிலம் மின்பொருட் டாலலைத்து
நஞ்சே யமுதென வுண்டோன் சிராமலை நாதனருட்
செஞ்சே வடிநினை யாரெனச் செய்தது சீரியதே. (௪)

### புலர்ந்தபின் வறுங்களம் தலைவிகண் டிரங்கல்.

208. எண்ணார் புரமட்ட வெம்மான் சிராமலை யேத்துமன்பர்
நண்ணு விரவிடை நண்ணின ரோவெழி னற்குவளை
கண்ணு வலர்கழி காள்புன்னை காள்கண்டல் காளுரையீர்
தண்ணார் பொழிலிடை யான்வந்து நாடித் தணந்தபின்னே. ()

---

205. எனதெண்ணம் நன்று; இகழ்ச்சிக் குறிப்பு. சேப்பு - சிவப்பு. சேப்புற மீண்டேன். "அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட, மணியரவ மென்றெழுந்து போந்தேன் - கணிவிரும்பும், புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழாய், உள்ளுருகு நெஞ்சினே னாய்" (ஐந். ஐம். 50) என் பதை நினைப்பிக்கின்றது இச்செய்யுள்.

206. உள்ளமாகிய மலரை மன்றுகக்கொண்டு. வாழ்த்தலர்போல் இடை ஒல்க. அன்பர் பொய்க்குறியை இயற்றினர்.

207. நம்ப-யான் நம்பியிருப்ப. அ மின் பொருட்டு - அந்த மின்னல் போல்பவளாகிய தலைவியின்பொருட்டு; அம் - அழகுமாம். ஆல்: அசை.

208. எண்ணார் - பகைவருடைய. அன்பர் - தலைவர். கண்டல்காள் - தாழைகளே. யான் நாடித் தணந்தபின் அன்பர் இரவிடை நண்ணினரோ.

### தலைவி தன்றுணைக்கு உணர்த்தல்.

209. வாரார் முலையுமை பாகன் சிராமலை மானனையாய்
காரார் தருபுய லென்ன மகிழ்ந்து கவிஞர்புகழ்
நேரார் தருமன்பர் வந்த தெமக்கு நிகழ்த்தவிங்குச்
சீரார் தருபுலி மேல்யானை வாழ்ந்திடச் செய்தனரே. (சு)

### தலைமகள் அவலம் பாங்கி தணிவித்தல்.

210. தேவா திபர்தொழு மெம்மான் சிராமலைத் தேமொழிகைம்
மாவாதி வென்றவர் பொய்யார் குறிமொழி வாடலைநீ
காவாதி யாய்முத லில்லாத வாவிக் கடிமலர்த்தார்
பாவாதி யாய்முத லில்லா வெதிரி படைத்ததுவே. (எ)

### இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல்.

211. கருவா யுருதெமைக் காப்போன் சிராமலைக் காவிடையெம்
பெருவாழ் வனவன்ப ரேயல்லி னுங்குறி பேணியிங்ஙன்
ஒருவா வவாவொடும் வந்தேமுன் கண்டில மும்மைவர
வருவா முமதூர்க் கினியா முரையீர் வழியெமக்கே. (அ)

---

209. கார் - கருமை. வந்தது - தாம் வந்ததை. புலி - வேங்கை யென்னும் மிருகம், வேங்கைமரம். யானை - ஒரு மிருகம், ஆம்பல். வேங்கை மரத்தின்மேல் ஆம்பற்பூவை வைத்துச் சென்றனரென்பது கருத்து.

210. தேமொழி : அண்மைவிளி. கைம்மா ஆதி - யானை முதலிய வற்றை. குறிமொழி பொய்யார். நீ வாடலை. கா என்பதை ஆதியாகக் கொண்டு முதலில்லாத வாவிமலர்த்தார் - காவி மலர்மாலையை. பா ஆதி யாய் முதலில்லா வெதிரி - பாதிரி. பாதிரிமரமானது காவிமலர்மாலையைப் பெற்றிருக்கின்றது. தலைவியை அணிதற்குத் தான் கொணர்ந்த கருங்குவளை மாலையை அவள் அங்கு இல்லாமையால் அங்கு நின்ற பாதிரிமரத்தின் மேலே தலைவன் போட்டுவிட்டுச் சென்றான்.

211. கரு - பிறவி. வாழ்வு அன்ன - வாழ்வையொத்த. அல்லில் - இருளில். அவாவொடும் - ஆசையோடும். உம்மை வரக் கண்டிலம். வழியை உரையீர்.

இறைவிமேல் இறைவன் குறிபிழைப் பேற்றல்.

212. அறந்தா னுகைத்திடு மெம்மான் சிராமலை யார்முகில்போல்
புறந்தாழ் குழலி யெனைமறந் தாலும் புனையிழையாய்
மறந்தா லெனதுயிர் வாழா துடலிடை வாழ்தலினேர்
சிறந்தா டனையென்றும் யான்மற வாமை தெரிந்துகொள்ளே.

தலைவி குறிமருண்டமை தலைவற் குணர்த்தல்.

213. சோலையின் மீதன்னம் பேடையைத் தேடிச் சுழன்றரற்றும்
வேலையி னேரொலி கேட்டுன் குறியென மென்றுளப
மாலையி னன்பணி யெம்மான் சிராமலை மான்மருண்டற்
காலையி னேகியு மீண்டும் வருந்தினள் காவலனே. (௰)

அவன் மொழிக் கொடுமை சென்று அவள் அவட் கியம்பல்.

214. சேலாய்த் திகழும் விழியுமை பாகர் சிராமலையில்
நூலாய்த் துவண்டு நுணுகிடை யாய்பத நோவவல்லில்
மாலாய்க் கனிக ளுகுத்துக் குருகினம் வாயரற்ற
மேலாய்த் தருவை யசைத்தோமென் றூரிங்கு வேந்தர்வந்தே.

என் பிழைப் பன்றேென்று இறைவி நோதல்.

215. அற்பா லுமைதொழ வானந்த மாநட மாடிமன்றுள்
பொற்பார் தரமன்னு மெம்மான் சிராமலைப் பூம்பொழில்வாய்க்
கற்பா ருகுசெங் கனித்தொனி கேட்டெங் கணவர்வந்து
நிற்பா ரெனவெய்தி நேடினன் கண்டில னேரிழையே. (௧௨)

---

212. அறம் - தருமமாகிய இடபத்தை. தான்: அசைநிலை. ஆர்ந்த முகில். குழலி - தலைவி. மறந்தால் - யான் மறந்தால், உடலிடைஎனதுயிர் வாழாது. வாழ்தலின் - என்னுடைய உடலில் உயிர்வாழ்ந்திருத்தலால்.

213. அன்னம் - அன்னப் பறவை. வேலையின் - காலத்தில். சிரா மலைமான் - தலைவி. அல் காலையின் - இருட்காலத்தில்.

214. அல்லில் - இருளில். மாலாய் - மயக்கமுடையவனாகி, திருமா லாகி. குருகு - பறவை, சங்கு; "குருகை விடுத்தா ளெனக்குருகே கூறாய்" (காசிக். 92.) தரு - மரம், கற்பகம். பின் இரண்டடியும் திருமாலுக்கும் தலைவனுக்கும் சிலேடை.

215. அற்பால் - அன்பினால். ஆனந்த மாநடம் - பரமானந்த தாண்டவத்தை, கற்பார் - கல்லையுடைய பூமியில். தொனி - ஒலி.

தாய் துஞ்சாமை.

216\. உன்னா ருளங்களின் மன்னார் சிராமலை யொண்ணுதலாய்
என்னா ருயிரனை யார்வந்தும் யாமவ ணெய்தலின்றி
இன்னா ளலமந் திரங்கச்செய் தீவினை யின்பயனாத்
துன்னா ரெனவனை யின்னா ளிரவினுந் துஞ்சிலளே. (கரு)

நாய் துஞ்சாமை.

217\. நீரார் சடைமுடி யெம்மான் சிராமலை நேரிழையாய்
தாரார் துணைப்புயத் தன்பர்நம் மூசலிற் றுஞ்சுழலப்
பேரா ரனைதுஞ் சினுந்துயி லாது பொருகடல்போல்
கூரா ரிருளினி லோயாமன் ஞாளி குரைக்கின்றதே. (கச)

ஊர் துஞ்சாமை.

218\. கற்றார் கவிகள் புனையுமெண் டோளினர் கந்தர்தமைப்
பெற்றார் சிராமலை நங்காய்நம் மன்பர்ப் பெருமையினால்
பற்றார் விரக வழலெங்கு மாகிப் படர்ந்ததுவோ
உற்றா ரொடுநம தூரார் துயிலற் றுழல்வதற்கே. (கரு)

காவலர் கடுகுதல்.

219\. பொடிப்பா ருடலிரு மாமுனி வோரன்று போற்றமன்றுள்
நடிப்பா ரெனைப்புரந் தாள்வார் சிராமலை நன்னுதலாய்
கடிப்பார் பறையொலி கங்குலி னாழியிற் காவலர்கள்
அடிப்பா ரடிக்கென தாவி யிடிக்கர வாகியதே. (கசு)

---

216\. ஆருயிரனையார் - தலைவர். அலமந்து - சுழன்று. துன்னாரென - பகைவரைப்போல.

217\. ஊசலின் - ஊசலைப்போல. அனை - தாய். ஞாளி - நாய். ஞாளி துயிலாது குரைக்கின்றது.

218\. அன்பர்ப் பெருமையினால் - தலைவரைப் பெருமையினாலே. விரகம் - பிரிவு. உற்றார் - உறவினர். உழலும்பொருட்டு அழல் பரந்ததுவோ.

219\. பொடிப்பு - மயிர்முகிழ்த்தல். இருமாமுனிவோர் - பதஞ்சலி வியாக்கிரபாதர். கடிப்பு - குறுந்தடி. ஆழியின் - கடலொலிபோல. அடிப்பு ஆர் - அடித்தல் ஆர்ந்த. என் ஆவி இடிக்கு அஞ்சும் அரவாகியது.

நிலவு வெளிப்படுதல்.

220. திக்கும் புலியி னதளு முடுத்துத் திகழரவும்
அக்கும் புனையும் பிரான்றன் சிராமலை யன்பர்வர
வொக்கும் படியன்றிக் காயு மதியினை யோர்ந்துரகம்
கக்கும் படியன்றி நுங்கமின் னேதவங் கண்டிலமே. (கஎ)

கூகை குழறல்.

221. ஓகை யொடுந்தமை யுள்ளுநர் தம்முளத் துள்ளுறையும்
பாகை நிகர்மொழி பாகர் சிராமலை பாடலர்போல்
தோகை யனமட மாதிவ ணுமஞ்சச் சூழ்பொழில்வாய்க்
கூகை யிரவிற் குழறுமொலி தென்றிசைக் கூற்றொலியே. (கஅ)

கோழி குரற்காட்டல்.

222. மாலா யுதம்பெறச் சாத்துகண் ணாரு மலர்ப்பதத்தார்
சூலா யுதங்கொண்ட கையார் சிராமலைத் தூமொழியாய்
வேலா யுதங்கொண்டு மேவன்பர் தம்மையவ் வேளெனவோ
காலா யுதமெதிர்ந் தோவாது கூவுமிக் கங்குலிலே. (கக)

## கரு. வரைதல் வேட்கை.

தலைவியைப் பாங்கி பருவரல் வினுதல்.

223. காவைப் பொருந்திக் கடிமது வார்ந்து கமழுமுல்லைப்
பூவைப் பறித்திடத் தைத்ததுவோமுகை பொற்கரத்தில்
சேவைப் பரியென வூர்வோன் சிராமலை சேரலர்போல்
ஏவைப் பொருவிழி யாயென்னை நீதுய ரெய்தியதே. (க)

---

220. திசையையும் புலித்தோலையும். காயும் - எறிக்கின்ற, சுடுகின்ற. நுங்க - விழுங்க. கண்டிலம் - செய்திலம். நுங்குதற்குத் தவஞ் செய்திலம்; நுங்கினுல் அன்பர் வருவரென்றபடி.

221. பாகை நிகர் மொழி - உமாதேவியார். தோகை அன - மயிலை ஒத்த. மாதென்றது பாங்கியைநோக்கி. இவண் நாம் அஞ்ச. கூகை - கோட்டான். ஒலி யமன் ஒலியைப்போல் உயிரைக் கவர்கின்றது.

222. ஆயுதம் பெற - சக்கராயுதத்தைப் பெறும்பொருட்டு. கண் ஆரும் - கண் பொருந்திய. தலைவரை முருகக் கடவுளென்று எண்ணியோ. காலாயுதம் - கோழி.

223. ஆர்ந்து - நிரம்பி. நின்னுடைய பொற்கரத்தில் முல்லை அரும்பு தைத்ததுவோ. முகை - அரும்பு. சேவை - இடபத்தை. ஏவைப் பொரு - அம்பை ஒத்த.

### அருமறை செவிலி அறிந்தமை கூறல்.

224. மதிபூத்த வேணிப் பிரான்றன் சிராமலை மன்னரென்றன்
நிதிபூத்த பூண்முலை தோய்ந்தகன் றிட்டபின் னேரிழையாய்
நுதிபூத்த வேற்கண் சிவந்ததென் னென்றன ணோக்கிச்சிற்றிற்
றுதிபூத்த முத்த மிடறுஞ் சிவப்பெனச் சொற்றனனே. (உ)

### தலைவி தலைவன் வருந்தோழிற்கு அருமை சாற்றல்.

225. தாயு ஞமலியு மூரொடு காவலர் தாமுமெல்போற்
காயு மதியமுங் கூகையுங் கோழியுங் காரிருடீர்
வாயு முறங்கிடக் காண்கில மெங்ஙன் வருவரன்பர்
ஏயு மதியணி யெம்மான் சிராமலை யேந்திழையே. (ஙூ)

### தலைவி தலைமகனூர்க்குச் செல்ல ஒருப்படுதல்.

226. பெம்மா னெமக்கரு ளம்மான் சிராமலை பேணலர்போல்
விம்மா வெழுமுலை தம்மா லுறநமை விட்டகன்ற
இம்மா நிலம்புக ழெம்மாவி யார்நகர்க் கெய்துவமோ
அம்மா வினித்துனி நம்மாற் பொறுப்ப தரிதணங்கே. (ச)

### பாங்கி இறைவனைப் பழித்தல்.

227. மருவார் புரநகைத் தட்டார் சிராமலை வாழ்த்தலர்போல்
ஒருவா ரெனவெண்ணு முண்மை மறந்தங் குறைந்தனராற்
செருவா ரயிற்கண்ணி யன்னமும் பேடையுஞ் சேரும்புன்னைத்
தருவார் துறைபவர் போலிலை யன்பினர் தாரணிக்கே. (ரு)

---

224. நிதி - பொன்; என்றது பசலையை. நேரிழை - பாங்கியே. யாய் - தாய்; எழுவாய். சிவந்தது என் - சிவந்ததற்குக் காரணம் யாது. நோக்கி என்னென்றனள். முத்தம் - முத்து. இடறும் சிவப்பு - இடறுதலால் உண்டாகிய சிவப்பு.

225. ஞமலி - நாய். எல் - சூரியன். இருள் தீர்வாயும் - இருள் தீர்ந்தபொழுதும்.

226. எழுமுலை: விளி. தம்மால்-தம் திறத்திலுண்டாகிய மயக்கத்தை. எம் ஆவியார் - எம்முயிர்போன்ற தலைவர். பி-ம். 'சிராமலை பேசலர் போல்'

227. புரத்தை அட்டாரது. எண்ணும் - யாம் எண்ணும். அன்பின ரென்பது இகழ்ச்சிக்குறிப்பு.

### தலைவி இயற்பட மொழிதல்.

228. நனையார் குழலுமை பாகர் சிராமலை நாடலர்போற்
கனையார் கடற்கரைக் கைதையங் கானலிற் கான்செய்புன்னைச்
சினையா ரனமணங் கண்டுநங் காவலர் சித்தநம்மை
நினையா தொழிவது வேறிலை நம்வினை நேரிழையே. (சு)

### தலைமகள் கனவு நலிபு உரைத்தல்.

229. விற்பனர் மேவும் பிரான்றன் சிராமலை மேவுமன்பர்
வெற்பன பூண்முலை கையால் வருடி விழைந்திதழுண்
டற்பன நன்னடை மாதே கலவி யடைவிற்செயும்
சொற்பன மெய்யெனக் கண்டு விழித்திடர் தோய்ந்தனனே.

### கவினழிபு உரைத்தல்.

230. காவலர் காத லுறுமென் னெழினலங் கால்பசப்பால்
மாவல ரூரத்தி யாரும் விளங்கனி மாணைவேன்
கோவலர் போனிரை காத்தோன் பணியுங் குழைக்கழலோன்
நாவலர் போற்றும் பிரான்றன் சிராமலை நன்னுதலே. (அ)

### தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்.

231. மின்பூத்த வேணிப் பிரான்வாழ் சிராமலை மெல்லியலாய்
வன்பூத்த நெஞ்சினர் போலங் குறையு மகிழ்நர்க்கன்பாற்
பொன்பூத்த மேனியெற் கானமை சென்று புகல்பவர்க்கு
மன்பூத்த சீர்த்தி மிகுமென தாவியும் வாழ்ந்திடுமே. (கூ)

---

228. கைதை - தாழை. கான் - நறுமணம். அனமணம் - அன்னப் பறவைகளின் மணத்தை.

229. அற்பு - அன்பு.

230. கால் பசப்பால் - தோன்றிய பசலையால். மாவலர் ஊர்: அத் திக்கு அடை. அத்தியாரும் விளங்கனி - வேழமென்னும் நோயாலுண்ணப் பட்ட விளாம்பழம்; அந்நோயுண்டாயின் விளாம்பழத்தில் உள்ளீடில்லாமற் போகும்; "தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்" (சீவக.) எழில் நலம் பசப்பால் அழிந்தது என்பது கருத்து. நிரைகாத் தோன் - கண்ணபிரான்; நிரை - பசுக்கூட்டம்.

231. வன்பூத்த - வன்மை பொருந்திய. பொன் - பசலை. மகிழ்நர்க்குப் புகல்பவர்க்கு என இயைக்க.

நின்குறை நீயே சென்று உரையென்றல்.

232. மறியார் தருகரத் தெம்மான் சிராமலை மாம்பொழில்வாய்
வெறியார் தருமுறி கொண்டன்று மேவிய மெய்ம்மையன்பர்
நெறியார் தருகுழ லாயுன் னுறுதுயர் நீர்மையெல்லாம்
அறியா தவரல்ல ரெவ்வாறி யான்சென் றறிவிப்பதே. (க0)

அலர்பார்த்துற்ற அச்சக் கிளவி.

233. இரும்பா கியவுள மன்பா யுருக வெனைப்புரக்கும்
கரும்பா கியமொழி பாகன் சிராமலைக் காதலரால்
அரும்பா கியவம்ப லுனல ராகி யலரமின்னே
துரும்பா கியவுட லானேன்மெய் யாவி துயருறவே. (கக)

ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி.

234. சிங்க நிரைநிரை யாகநின் றுார்த்துச் சினந்தடுமா
தங்க மிரிந்திட வேட்டஞ்செய் கானிற் றனித்திருளில்
அங்க மணியும் பிரான்வாழ் சிராமலை யாய்கிலர்போற்
றுங்க மருவு குணத்தன்பர் தாம்வரல் சூழ்ச்சியன்றே. (கஉ)

காம மிக்க கழிபடர் கிளவி.

235. சுரக்குங் கருணைப் பிரான்வாழ் சிராமலை தோன்றுமன்பர்
திரக்குங் குமப்புயம் யானீங்க வார்துயர் தேர்ந்துநெய்தற்
பரக்குங் குருகீ ரெனக்குரு கீரிப் படிக்குடையாய்ப்
புரக்குங் கடலீர் கனைத்தங் கடலீர் புரிதிரன்பே. (கங)

---

232. மறி - மான்குட்டி. வெறி - மணம். முறி - தளிர். நெறி - நெளிவு.

233. அம்பல் - சிலரறியும் பழிமொழி.
பி-ம். 'காதன்மன்னு............யலரமின்னள்...........வுடலானுள்'

234. மாதங்கம் இரிந்திட - யானைகள் கெட்டோட. அங்கம் - என்பு.
பி-ம். 'சிராமலையார்கிலர்', 'அன்ப நீவரல்'.

235. அன்பருடைய. திரம் - ஸ்திரம். குங்குமம் - குங்குமச்சாந்து. குருகீர் - நாரைகளே. எனக்கு உருகீர். இப்படிக்கு உடையாய் - இந்தப் பூமிக்கு ஆடையாகி. அடலீர் - வருத்தம் செய்யாதீர். அன்பினைப் புரிதிர்.

### தலைவி தன்னுட் கையாறெய்திடு கிளவி.

236. துங்கன் சிரகிரி யெம்மா னுணவிடந் தோய்பரவாய்
சங்கஞ் சொரிதரக் கண்ணின்முத் தாரச் சலமிகவுற்
றங்கம் பசந்திடத் திங்கள்கண் டேங்கி யாற்றியென்போற்
பங்கஞ் செறிய நினக்குமுண் டோபிரி பண்பினரே. (கச)

### தலைமகள் நெறிவிலக்குவித்தல்.

237. அனமே நமரொடு மூரலர் தூற்ற வறிந்தனையால்
மனமே லருள்கொடு வாரணங் கேசரி வாழ்வனத்திற்
கனமே யனமிடற் றூர்தஞ் சிராமலைக் காதலரைத்
தினமே வருவது போல்வார லீரெனச் செப்புகவே. (கரு)

### தலைமகள் குறிவிலக்குவித்தல்.

238. முப்புரம் வேவ நகைத்தார் சிராமலை மொய்ம்பர்வந்தாற்
செப்புர மாமுலை யாய்நந் திருவினைச் சேர்ந்தனையூர்க்
கப்புற மேவி யிதைப்புனங் காக்கவென் றூக்கினளாங்
கிப்புற மார்புனத் தெல்லிடை யேகிலென் னென்றுரையே. ( )

### வெறி விலக்குவித்தல்.

239. கால னழியமுன் காய்ந்தோன் சிராமலைக் காவலராற்
சேல னடுகணை தந்தவென் னோயறி சேயிழையாய்
வேல னிவருடை யாவியுண் டாடும் வெறிவிலக்கென்
றூல நிறைவிழி யாய்நன் குணர வறிவிப்பையே. (கஎ)

---

236. உண - உண்ணும்படி. பரவாய் - கடலே. சங்கம் - சங்கு, வளையல். கண்ணின் முத்து - கண்ணுக்கு இனியமுத்து, கண்ணீர்த்துளி. சலம் - நீர், மனக்கலக்கம். பசந்திட - பச்சைநிறத்தையடைய, பசலையை யடைய. பங்கம் - சேறு, பழுது.

237. வாரணம் கேசரி - யானையும் சிங்கமும். கனம் - மேகம். மன மேல் அருள்கொடு வாரலீர் என இயைக்க. அனமே செப்புக.

238. செப்பு உரமாம் - செப்பினது வன்மையையுடையனவாகிய. அனை சேர்ந்து; அனை - அன்னை. இதைப்புனம் - புதுக்கொல்லை. எல் - பகல். ஏகில் என் என்று - வந்தால் என்ன குறை உள்ளதென்று. தோழி, தினைப் புனத்திற்கு எல்லிடை வருகவென்று தலைவனுக்குச் சொல்லுவாயாக.

239. சேலன்-மீனக்கொடியையுடைய மன்மதன். கணையால் உண்டாக் கப்பட்ட. காவலரால் உண்டான நோய், கணைதந்த நோயென்க. இ வருடை - இந்த ஆட்டினது; இவருடைய உயிரென்பது வேறுபொருள். விழியையுடைய யாய்; யாய் - தாய்.

### பிறர் விலக்குவித்தல்.

240. விடைக்குன் றுகைத்தவர் தென்கயி லாயர்தம் மெய்யருளாற்
படைக்குந் தொறுமய னென்னையு மென்னன் பரையுமின்பம்
கிடைக்கும் படிக்குப் படைத்திடப் பெற்றனன் கேடில்வரம்
தொடைக்குன் றனமுலை வந்தெவன் போயெவன் றூதுகளே.

### குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்.

241. தண்ணார் கயத்திற் றழுவி யெடுத்துத் தகவில்சிறு
கண்ணார் கயத்தைக் கடிந்தநம் மன்பர் கடிவரவைப்
பெண்ணார் தருமிடப் பாலர் சிராமலைப் பேரமுதாம்
பண்ணார்மொழிநங்குரவோரெதிர்கொளும்பான்மைசெய்யே.

## கசு. வரைவுகடாதல்.

### வினவிய சேவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

242. மன்று ணடம்புரி யெம்மான் சிராமலை வாழ்த்துமன்பா
துன்று மலர்க்குழ லன்னைமின் னுளையிச் சூழ்பொழில்வாய்
நின்று வருந்துவ தேதென மாதரை நேடியிவண்
என்று மெனக்கரு ளன்பனை யானெய்த வென்றனளே. (க)

---

240. அயன்படைத்திட வரத்தைப் பெற்றனன். தூதுகள் வந்தெவன் போயெவன்; பயனில்லையென்றபடி.

241. கயத்தில் - நீர்நிலையில். கயத்தை - யானையை. புனறருபுணர்ச்சியையும் களிறுதருபுணர்ச்சியையும் குறிப்பித்தபடி. கடிவரவு - மணஞ்செய்து கொள்ளுதற்குவருதல். வரவை எதிர்கொள்ளுமாறு செய்.

242. என - என்று செவிலி கேட்க. மாதரை - ஆயமகளிரை. என்றும் எனக்கு அருள் அன்னையே. மாதரை நேடி யான் அன்பு எய்தநின்று வருந்தினேனென ஒருசொல் வருவிக்க. தோழியைத் தேடி அவள் வாயிலாக என்றும் எனக்கு அருள்புரியும் தலைவனையடைவதற்கென்பது வேறொருபொருள்; அன்பனை - தலைவனை.

### அலர் அறிவுறுத்தல்.

243. அடியா ருளத்தென்று மாடுஞ் சிராமலை யண்ணலருட்
கடியார் கழன்மலர் போற்றுமன் பால்வளர் காவன்மன்னு
துடியா ரிடைவஞ்சி யோர்கொழு கொம்பெனச் சூழ்ந்துபடா
கொடியார் தரவலர் பூத்தன வான்மணங் கொண்டருளே. (உ)

### தாய் அறிவுறுத்தல்.

244. ஆட்டமு நாட்டமு மூன்றேன் சிராமலை யார்மடமான்
தேட்டமு நாட்டமுந் தேமலர்க் கூந்தற் செறிமணத்தின்
ஈட்டமும் வேட்டமும் பூண்முலைத் தேமலு மேயுமனக்
கோட்டமும் வாட்டமுங் கண்டா யுயிர்த்தனள் கொற்றவனே.

### வெறி அச்சுறுத்தல்.

245. பொன்னை மருவு நிறத்தாற் கரியதன் பூங்கழறந்
தென்னை யெனக்கரு ளெம்மான் சிராமலை யேத்துமன்னு
மின்னை நிகரிடை மான்பொருட் டாக வெறியயர்ந்தே
அன்னைநின் னுறும் வெங்நோ யகற்ற வடுமையையே. (ச)

### பிறர் வரைவுணர்த்தல்.

246. வாரித் திரைவளை முத்தங் கொழித்திடும் வண்டுறைவா
காரிற் றிகழ்மணி கண்டர் சிராமலைக் காரிகையின்
பூரித் தெழுமணிப் பூண்முலை வேட்டுப் புரவலர்கள்
பாரித் தனர்நிதி வேண்டுவ நீயெவன் பாணிப்பதே. (ரு)

---

243. கொடியார் - கொடிபோன்றவர், கொடுமையையுடையார்; அலர் - மலர், பழிமொழி; மணம் - நறுமணம், கலியாணம்; சிலேடை; "மணமேபின் னும்பெறத் தானல ரேமுன் வரப்பெற்றதே." குலோத்துங்க சோழன் கோவை, 419.

244. ஆட்டம் மூன்றுவன: கொடுகொட்டி, பாண்டரங்கம், காபால மென்பன; கலித்தொகைக் கடவுள் வணக்கத்தைப் பார்க்க. தேட்டம் - தேடுதல். வேட்டம் - விருப்பம். கண்டு ஆய் உயிர்த்தனள்; ஆய் - தாய்.

245. பொன் - திருமகள். நிறத்தான் - திருமால்; நிறம் - மார்பு. மையை அடும் - ஆட்டைக் கொல்வாள்.

246. வேண்டுவனவாகிய நிதியைப் பாரித்தனர்; பாரித்தல் - மிகச் சொரிதல். எவன் பாணிப்பது - தாமதிப்பதற்குக் காரணம் யாது?

### வரைவெதிர்வுணர்த்தல்.

247. சாந்த மணிமுலை பாகன் சிராமலை தானிகராம்
வேந்த விவணெம் பிராட்டியை நீமணம் வேட்டுவந்தாற்
பாந்த மொடுமெமர் வந்தெதிர் கொண்டு பரிவுசெய்வார்
காந்த மெதிர்வச மாகு மயமெனக் காதலுற்றே. (சு)

### வரையுநாள் உணர்த்தல்.

248. பணிகொண்ட வார்சடை யெம்மான் சிராமலைப்பைந்தொடியாள்
மணிகொண்ட வார்முலைபொன்பூத் தெனமணம் வாய்ப்பமன்னு
கணிகொண்டவேங்கைகள்பூத்தன வான்கதிர் காட்டியெங்கும்
அணிகொண்ட தண்பரி வேடத்துட் டோன்றிய தம்புலியே.

### தலைமகள் அறிவுறுத்தல்.

249. தனத்தார் பசப்பும் வளைகலை சோர்வதுந் தாயயலார்
இனத்தா ரொடுமெனைச் சேர்த்து மறைத்தன ளீங்கெளியேன்
சினத்தா ரெனவுன் பழிமொழிவேனெனத் தேர்ந்துகொல்லோ
வனத்தா ரிதழிச் சடையார் சிராமலை மன்னமின்னே. (அ)

### குறிபெயர்த்திடுதல்.

250. தண்ணார் மதிமுடி யெம்மான் சிராமலைத் தார்ப்புயத்தாய்
நண்ணா ரெனநம ரிம்மா தவிநிழ னண்ணுவரால்
விண்ணா ருறவள ரம்மா தவிப்பொழில் வெற்பதொன்றிற்
கண்ணார் மணியெனு மெம்மானை மேவிக் களித்தருளே. (கூ)

---

247. பாந்தம் - பொருத்தம்; "பாந்தமதாயெற்கருள்வோன்" (சிராமலைக்கோவை, 105); "பாந்தமாச், சொன்னநிலத் தோர்களுக்காத் தூது சென்ற" (இலஞ்சியுலா, 113-4.) அயம் - இரும்பு.

248. கணி கொண்ட - சோதிடனது தன்மையைக்கொண்ட. வான் கதிர்-வெண்மையான கிரணங்கள். வேங்கை பூத்தலும் சந்திரன் பரிவேடம் கொள்ளுதலும் மணஞ்செய்தற்குரிய நாளென்பது குறிஞ்சிநிலத்தார் கொள்கை; "வேங்கையு மொள்ளிணர் விரிந்தன, நெடுவெண் டிங்களு மூர் கொண் டன்றே" அகநா. உ.

249. வளையும் ஆடையும். தாயொடும் அயலாரினத்தொடும். எளியேன் பழியை மொழிவேனென. மன்ன: விளி. மின் மறைத்தனள்.

250. நண்ணாரென - பகைவரைப்போல. நண்ணாரென நண்ணுவ ரென்றது முரண். மாதவி - குருக்கத்தி. விண் ஆருற - விண்ணுலகத்தைப் பொருந்த. மானை - தலைவியை.

பகல் வருவானை இரவு வருகென்றல்.

251. மாற்றுமை யார்பொழில் வாய்ப்பக னீவரல் வாய்மைமன்னு
பேர்ற்றுமை யார்வடி வானயன் காணரும் போர்விடையான்
சாற்றுமை யாளிடப் பாகன் சிராமலைத் தாழ்குழற்கு
வேற்றுமை யாவதன் றல்வழி கண்டிவண் மேவிடினே. (௧0)

இரவு வருவானைப் பகல் வருகென்றல்.

252. மன்று ணடித்தெமை யாள்வோன் சிராமலை மன்னமுத்தம்
ஒன்று நகைக்கொடி யுன்பொருட் டாக வுவந்துகதிர்
துன்று தினைப்புனங் காக்கும்வை வேலொடு தோளிணையும்
என்று முனக்குத் துணையாக நீயிர வெய்தலையே. (௧௧)

பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்.

253. பண்ணார் கிளிமொழி பாகன் சிராமலைப் பார்த்திபநீ
தண்ணார் பொழிலிடை யல்லும் பகலுமென் றாழ்குழலின்
கண்ணா னனமெனுங் காவிசெந் தாமரை கண்மலர
விண்ணார் மதியினன் போலிவண் மேவ விரும்புகவே. (௧௨)

---

251. பகலில் நீ வருதலை மாற்று. மையார்வடிவான் - மேகத்தைப் போன்ற திருவுருவத்தையுடைய திருமால். சாற்று உமையாள். வேற்றுமை யாவது அன்று-வேறுபாடு அன்று; உடன்பாடே என்றபடி. அல் வழிகண்டு-இரவில் வழியைப்பார்த்து. இதில் வேற்றுமை அல்வழியென்னும் சந்தி வகைகளின் பெயர்கள் தொனிக்கின்றன; கோடீச். 208.

252. மன்ன: விளி. கொடி - தலைவி. என்றும் - எக்காலத்தும். இரவு எய்தலை - இரவில் வாராதே. தலைவி தினைப்புனங்காப்பாள்; ஆதலின் இரவில் வாராமற் பகலிலே வருக.

253. கண்ணெனுங் காவி மலர மதியைப்போலவும் ஆனனமெனும் தாமரை மலர இனனைப்போலவும் வருக; இனன் - சூரியன்.

பகலினும் இரவினும் அகலிவ ணேன்றல்.

254. பிறவாத வாழ்வு தனையா னெனதறப் பெற்றவன்பர்க்
கிறவாத வண்ண மருள்வோன் சிராமலை யீசற்கன்ப
நறவார் பொழிற்கண் ணலராம் பகல்வரி னள்ளிருள்வாய்
மறவா தரிகரி தேடும் வரேலெம் வயினினியே. (கங)

உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்.

255. ஆடு நடனத்த னெம்மான் சிராமலை யன்பவுன்றன்
நாடு நகர்குலம் வாய்மை மரபொடு நற்புகழ்சீர்
நீடு மிவையன்றி யெம்பெரு மாட்டி நிகரிலிபக்
கோடு நிகர்முலைக் கொவ்வா விலையிக் குவலையமே. (கச)

ஆறுபார்த் துற்ற அச்சங் கூறல்.

256. பத்தா னனனிசை கேட்டுயிர் முன்னம் பரிந்தளித்த
சித்தான வீசன் சிராமலை வாழுந் திறற்புயநீ
முத்தான வெற்படு மாளி பயில்கட முற்றுமிகந்
தித்தான நாடி வருதற் கிரங்கு மிளங்கொடியே. (கரு)

---

254. யான் எனது அற - அகங்கார மமகாரங்கள் கெட. இறவாத வண்ணம் - தன்னைவிட்டு நீங்காதபடி. பகல் வரின் அலர் ஆம். பொழிற் கண் அலராமென்றது ஒரு நயம். அரி கரி தேடும் - சிங்கம் யானையைத் தேடும். எம்வயின் வரேல்.

255. இவள் நகிலுக்கு உலகம் முழுவதும் கொடுப்பினும் விலை யாகாது; ஆதலால் உன்னுடைய பரிசம் வேண்டுவதன்று. இவள் உன்குலம் முதலியவற்றிற்கு ஏற்றவளாதலின் நீ மணஞ்செய்துகொள்க. "வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க், கோடாது நீர்கொடுப்பி னல்லது - கோடா, எழிலு முலையு மிரண்டிற்கு முந்நீர்ப், பொழிலும் விலையாமோ போந்து" (திணை மா. 15) என்னும் செய்யுள் இதனோடு ஒருவாறு ஒத்துளது.

256. பத்து ஆனனன் - இராவணன். சித்து - அறிவு. முத் தான வெற்பு - மூன்று மதங்களையுடைய யானை. கடம் - காடு. இத்தானம் - இவ் விடத்தை.

### ஆற்றுத் தன்மை ஆற்றக் கூறல்.

257. காமக் கடுங்கன லானுள மாழ்கக் கரும்பினலர்
நாமக் கொடுங்கணை பாயக் கலைவளை நாணலைச்
சேமப் பொருளன வெம்மான் சிராமலைச் செந்திருவாம்
தாமக் குழலி தளர்ந்தன ளீயளி தந்தருளே. (கசு)

### காவல் மிகவுரைத்தல்.

258. வேத மயன்றிரு மால்பணிந் தேத்த விமலைக்கன்பாய்
நாத முடிவினின் றாடுஞ் சிராமலை நாதர்க்கன்பா
நீத நகர்புரப் போரா லிரவி னிகழ்பறைக்கு
மாத சுணமென மாழ்கிக்கண் ணீரை வழங்கிடுமே. (கஎ)

### காம மிகவுரைத்தல்.

259. நீரம் புலிதரித் தாடுஞ் சிராமலை நித்தர்க்கன்பா
கூரம் பநங்கன் றொடவுறு காமக் கொடியகனல்
ஊரம் படிவத் தொடுநெஞ்ச மார்வெப் பொடுங்குதற்குன்
சீரம் புயத்தட மன்றியுண் டோமலர்ச் சேயிழைக்கே. (கஅ)

---

257. கரும்பின் - மன்மதனுடைய கருப்புவில்லில் தொடுக்கப்படுகிற. அலர் நாமக் கொடுங்கணை - மலராகிய அச்சத்தைத் தரும் கொடிய அம்பு. கலை - ஆடை. அளி - அன்பு.

258. வேதம் - வேதபுருடன். நீதம் - நீதி. நகர் புரப்போர் - ஊர் காவலர். அசுணம் - இசையறிவதொரு விலங்கு. இது பறையோசையைக் கேட்டால் வருந்தும்; "யாழ், நறையடுத்த வசுணநன் மாச்செவிப், பறை யடுத்தது போலுமென் பாவரோ" கம்ப. பாயிரம்.

259. கூர் அம்பு - கூரிய அம்பை. தொட - தொடுக்க. படிவம் - உருவம். அம்புயத்தடம் - அழகிய தோட்பரப்பு; தாமரைத்தடாகமென் பது மற்றொருபொருள். வெப்பம் ஒடுங்குதற்குத் தாமரைத்தடாகம் வேண்டு மென்பது ஒரு நயம்.

### கனவு நலிபுரைத்தல்.

260. மையார் விழியுமை பாகன் சிராமலை மானிரவில்
எய்யாம னீதனக் கோங்கம் வருடி யிதழமுதம்
பொய்யா தருந்தி மகிழுங் கனவின் புணர்ப்பைமன்னு
மெய்யா மெனவிழித் திட்டாண் முலைக்கு விழுமுத்தமே. ()

### கவின் அழிபுரைத்தல்.

261. சேலாகி நீளும் விழியுமை பாகன் சிறந்தெவர்க்கு
மேலான வாழ்வரு ளெம்மான் சிராமலை மேவுமன்பா
பாலாகி யின்பம் பயின்மொழி யாணின் பணைப்புயந்தோய்
மாலாகி மாமலர் மான்வண்ண மாகி மயங்கினளே. (உ0)

## கஎ. ஒருவழித் தணத்தல்.

### தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்.

262. கரும்பார் தரள நிறைவயல் சூழுங் கடிநகர்வாய்ச்
சுரும்பார்குழல்வஞ்சியானின்றுபோயென்றுதோன்றுமுன்னம்
விரும்பார் புரநகைத் தட்டோன் சிராமலை மேவுவன்கோங்
கரும்பா முலைமட மான்மரு ளாவண்ண மாற்றுகவே. (க)

---

260. மான் - தலைவி ; எழுவாய். எய்யாமல் - அறியாமல். புணர்ப்பை - மாயச்செய்கையை. என - என்று கருதி. முத்தம் - கண்ணீர்த்துளி.

261. மாலாகி - மயக்கமுடையவளாகி. மாமலர்மான் - திருமகள் ; அவள்வண்ணம் - பொன்னிறம் ; என்றது பசலைநிறத்தை. திருமாலாகிப் பின் திருமகளுமானுளென்பது மற்றொருபொருள்.

262. முத்துப் பிறக்கும் இடங்களுட் கரும்பும் ஒன்று. வஞ்சி: விளி. இன்றுபோய், என்று - சூரியன்,

### மென்சொற் பாங்கி விலக்கல்.

263. துறந்தார் வினை தவிர்த் தாள்வோன் சிராமலைத் தூமொழியார்
மறந்தார் பிரிந்தன ரென்னுமுற் காதை வழுத்தமன்னு
புறந்தாழ் குழனங்கை வாடுவ ணீநின் புகழ்ப்பதிக்குச்
சிறந்தார் தரச்செலி னெங்ஙனம் வாழுவள் சேயிழையே. (உ)

### தலைவன் நீங்கல் வேண்டல்.

264. ஆண்டே தனையெனக் கீந்தோன் சிராமலை யாயிழைநெஞ்
சீண்டே தடுக்கவு மூழ்வினை யாண்டெனை யீர்ப்பமனம்
பூண்டே னெனது நகர்க்கேகி நாளைப் புலருமுனம்
மீண்டே யிவணுற மேவுவன் மாழ்குதல் வீடுகவே. (௩)

### தலைவனைப் பாங்கி விடுத்தல்.

265. இமையா சலக்கொடி பாகன் சிராமலை யேந்திழையின்
கமையாருயிர்க்குயிர் நீயா தலினந்தக் கன்னிக்கின்றி
யமையா வியல்குறித் தின்றேகி நாளை யணையிற்றந்தி
குமையா முனமுயிர் காத்ததிற் கோடி குணமன்னனே. (௪)

---

263. மறந்தார் - கணவர் தம் மனைவியரை மறந்தார். பிரிந்தனர் - அவர் தம் மனைவியரைப் பிரிந்தனர். முற்காதை வழுத்த - பண்டைக்காலத்துக் கதைகளைச் சொல்ல. வழுத்த நங்கை வாடுவள். ஆர் தர-பொருந்தியிருக்க. மறந்தவர் கதைகளையும் பிரிந்தவர் கதைகளையும் சொன்னாலே வாடுபவள் நீபிரிந்தால் வாழ்தலரிது.

பி-ம். 'துறந்தார் கதைகளை யெம்மான் சிராமலைத் தூமொழியார்
மறந்தாகி லுஞ்சொலின் வாடுவ ணீசெல மன்னவுன்னிற்
புறந்தாழ் கரிய மலர்ப்பூங் குழலெழிற் பொன்னினுயிர்
சிறந்தார் தாவிங்கு வாழ்ந்திட யானென் றெருட்டுவனே.'

264. ஆண்டு - என்னை ஆட்கொண்டு. ஆயிழை: விளி. புலருமுனம் - விடிவதற்குமுன்பு.

265. கமை - க்ஷமை. இன்றியமையாத இயல்பை எண்ணி. தந்தி குமையாமுனம் உயிர்காத்ததென்றது களிறுதருபுணர்ச்சியை நினைவுறுத்திய படி. கோடி குணம் - கோடியளவு குணமுள்ளதாகும்.

பாங்கி தலைவிக்குத் தலைவன் செலவுணர்த்தல்.

266. அருவா யருவுரு வாயுரு வாகிய வண்ணல்வைகும்
திருவார் புயல்வண்ண னேத்துஞ் சிராமலைச் சேயிழையாய்
ஒருவா நமதன்பர் தம்பதிக் கேகவொ ரேதுவுண்டாய்
வருவாம் விரைந்திங்ங ஞான்றையென் றேகினர் வாடலையே. (ரு)

தலைவி நெஞ்சோடு கிளத்தல்.

267. நந்தியை யூர்தரு மெம்மான் சிராமலை நாடுமன்பர்
தந்தியை வீட்டிய வன்றுசெய் வஞ்சினந் தாமறந்தென்
புந்தியை மாழ்குவித் தேகச்செய் யூழின் புணர்ப்புணரா
தந்தியை யைங்கணை வேளைநெஞ் சேநொந்திங் காவதென்னே.

காமம் மிக்க கழிபடர் கிளவி.

268. அளையா ரரவக் குழையார் சிராமலை யன்னமன்னர்
வளையார் திரைக்கரத் தான்முத்தம் வாருபு வண்டலிட்டு
விளையா டிடுங்கட லேயெனைக் கூடி விழைந்தணைந்து
திளையா தவணகல் போதென் புகன்றனர் செப்புகவே. (எ)

---

266. அருவாய்......அண்ணல்: "அருவ ருருவ ரருவுரு வாள ரவிர்புக வித், திருவர்" (சீகாழிக்கோவை, 156.) வைகும் சிராமலை; ஏத்தும் சிராமலை. ஏது - காரணம். உண்டாய் - உண்டாகப்பெற்று. வாடலை - வாடாதே.

267. வஞ்சினம் - பிரியேனென்ற உறுதிமொழி. ஊழின் புணர்ப்பு - ஊழ்வினையின் செய்கையை. அந்தியை - மாலைக்காலத்தை.

268. அளை - புற்று; இங்கே சாதியடை. வளை - சங்கு, வளையல். வண்டல் - மண்வண்டல், மகளிர்விளையாட்டு. கடல் ஒருமகளாக உருவகம் செய்யப்பெற்றது. திளையாது - இன்புறாமல். மன்னர் என் புகன்றனர்?

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்.

269. அருளா லெனைத்தடுத் தாள்வோன் சிராமலை யாயிழையாய்
மருளா வுயிர்நமக் காவியி லீந்து மகிழ்ந்தணைந்தார்
பொருளார் புகழும் புயமாலை வாசம் புணர்ந்ததிங்குத்
தெருளார் தரவினித் தேரோதை கேட்குஞ் செவிகளுக்கே.()

பாங்கி தலைவிக்கு இறையோன் வந்தமை உணர்த்தல்.

270. திருவே மகிழ்மட்டு வார்குழல் பாகன் சிராமலையிற்
றருவே யென்முன்பு வந்தின்பு தந்து தணந்தவர்தாம்
உருவே ளெனவந்து தோன்றினர் தேரிவ ணூர்ந்துருவம்
அருவே யெனுமத வேளுநின் மாலு மகன்றிடவே. (கூ)

வந்தோன்றன்னோடு நொந்து வினாதல்.

271. ஆடு நிமலன் சிராமலை வாழுன் னணியிழைமான்
நீடு நினது பிரிவினின் வாடி நெடிதுயிர்த்துத்
தேடு மெனது முகநோக்கி விம்மிடுந் தேம்பியழும்
வாடு மிவைகண்டும் வாளா திருந்தனன் மன்னவனே. (கo)

---

269. மருளா - நம்பால் மயங்கி. உயிரை ஆவியில் ஈந்து: இது புனருபுணர்ச்சியைச் சுட்டியது; ஆவி - குளம், உயிர். உயிரை ஆவியிலீந்தென்றது ஒரு நயம்; "முன்னு ணமக்குயி ராவியி லீந்த முதல்வர்" (கோடீச். 180.) பொருளார் புகழ் - உண்மைப் புகழ்; "இறைவன், பொருள்சேர் புகழ்" (குறள், 5.) அம்புயமாலை - அழகிய தோளிலுள்ள மாலை; தாமரை மாலையென்பது வேறொருபொருள். தலைவன் வருதலை அவனது தோள்மாலையின் நறுமணம் வந்து குறிப்பித்தது; "கார்வாழுங்கண்டர்" (கலைசைக். 270) என்னும் செய்யுளைப்பார்க்க. தெருள் - தெளிவு.

பி-ம். 'அருளா லெனைப்புகுந் தாள்வோன்'

270. திருவே: விளி. மகிழ் - மகிழ்வாயாக. மட்டுவார்குழல் : திரிசிராமலையம்பிகையின் திருநாமம். உரு வேள் என - உருவத்தையுடைய மன்மதனைப்போல. தேர் ஊர்ந்து தோன்றினர். உருவம் அருவேயெனும் - தன் உருவம் அருவமே என்னும். மால் - மயக்கம்.

271. மானென்றது தலைவியை. தேடும் - தேடுவாள். வாளாது இருந்தனன் - சும்மா இருந்தேன்.

பி-ம். 'வாடா திருந்தனன்'

தலைவன் பாங்கியோடு நொந்து வினுதல்.

272. கார்க்குன் றுரித்தவ னெம்மான் சிராமலைக் காரிகையீர்
வார்க்குன் றனப்படை யோனலர் வாளியு மாமணங்தேன்
போர்க்குங் குழற்கொடி யார்வா யலரும் பொறுத்தனிரோ
ஆர்க்குந்தெளிப்பருமால்கொளென்போலிங்கயர்ந்திடைந்தே.

பாங்கி ஆற்றுவித்திருந்த அருமை கூறல்.

273. கார்காட்டி யார்மணி கண்டர் சிராமலைக் காவலவுன்
ஊர்காட்டி யூர்சென் னெறிகாட்டி யாங்குள வொண்பொழிலின்
சீர்காட்டி நீசொன் மொழிதே றுமென் னுரைத்தெப்பமின்கண்
நீர்காட்டி யாரிடர் வாரியை நீந்து நிலைசெய்ததே. (கஉ)

## கஅ. வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

என்பொருட் பிரிவுணர்த்து ஏந்திழைக்கேன்றல்.

274. என்னுசை நீக்கி யெனக்கோர் மொழியினி னின்புதந்த
மன்னுசை யாடைய னெம்மான் சிராமலை மானனையாய்
பொன்னுசை தீரக் கொடுப்பா னுமர்க்குப் பொருட்கசன்று
மின்னுசை யைப்பெற்று மீள்வேன் புகலந்த மெல்லியற்கே. ()

---

272. கார்க்குன்று - யானை. வார்க்குன்று - தனங்கள்; அவற்றை உடைய அன்னங்கள், மகளிர்; அவரைப் படையாக வுடையவன் மன்மதன். பெரிய மணத்தையும் தேனையும் போர்க்கும்; தேன் - வண்டு. கொடியார் - கொடியைப்போன்றவர்; கொடுமையையுடையோர். இடைந்து - பின்னிட்டு. இடைந்து பொறுத்தனிரோ ?

273. ஊர், நெறி, பொழிலின்சீர் என்பவற்றைத் தலைவன் காட்டியது, பாங்கிக்கு. காட்டிச் சொல்லும் மொழியெனக் கூட்டுக. நீரைக்காட்டிப் பொருந்திய இடர். என் உரையாகிய தெப்பம் இடராகிய வாரியை நீந்தும் நிலையைச் செய்தது.

274. ஆசை நீக்கி - குற்றத்தை நீக்கி. ஆசை ஆடையன் - திக்கை ஆடையாகவுடையவன். நுமர்க்குப் பொன்னை ஆசைதீரக் கொடுக்கும் பொருட்டு. மின் ஆசையை - மின்னுகின்ற பொன்னை.

பி-ம். 'மின்னுசையிற்பெற்று'

நின்பொருட் பிரிவுரை நீ அவட்கென்றல்.

275. பொழியுங் கருணைப் பிரான்வாழ் சிராமலை போற்றியென்றும்
பழியும் புகழு மறிந்தல காண்டருள் பார்த்திபநீ
மொழியுஞ் செலவினை நீயே யவட்கு மொழிந்துபிரிந்
தழியுந் துயரற வாற்றியங் கேகி னதுவழக்கே. (உ)

நீடேனென்றவன் நீங்கல்.

276. பாதி மதியணி யெம்மான் சிராமலைப் பாவையையான்
நீதி யொடுமணஞ் செய்யவல் லேநிதி நேயவனு
பூதி யுடையர் பெறும்பே றெனப்பெற்றுப் போதகமேல்
வீதி தொறு நுமர் கண்டிங்கு வாழ்த்திட மேவுவனே. (ங)

பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தல்.

277. மாதே நமர்கண் மகிழ்ந்திட வான்பொருள் வாரணங்கள்
மீதே கொடுவந் துனைநாளை வேட்டிட வேண்டியிது
போதே யமலன் சிராமலை வாழ்த்தலர் போற்கடத்திற்
றூதே யலர்மலர்த் தாரன்ப ரேகினர் தாம்விரைந்தே. (ச)

தலைமகள் இரங்கல்.

278. உரியேனெனவெனைத் தன்னடி யாரொடுமுய்யக்கொண்டோன்
அரியே யறிவருந் தாளோன் சிராமலை யாண்டகையார்
பிரியே னெனவுண்மை தந்தும் பிரிந்தனர் பேதைமின்னே
தரியே னினியுயிர் தாங்கே னெனக்கென்ன சாற்றுதியே. (ரு)

---

275. அழியும் - மிகும். அற ஆற்றி - முற்றும் ஆறச்செய்து. வழக்கு - பெரியோர் செல்லும் வழி.

276. வல்லே - விரைவில். நிதியைப் பெற்று. போதகம் - யானை.

277. வாரணங்கள் மீதே - யானைகளின்மேல். வேட்டிட - மணம் செய்துகொள்ள. கடத்தில் - பாலைநிலத்தில். தாது - பூந்தாது.

278. உரியேனென - ஆட்கொள்ளுதற் குரியேனென்று.

### பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

279. மின்னே நிகர்வடி வேலினர் நின்மணம் வேண்டிநிதி
கொன்னே கொடுவர மேவின ராதலிற் கோகனகப்
பொன்னே யமலன் சிராமலை வாழ்த்தலர் போற்கலுழ்ந்தால்
என்னே யிவட்கிவ ணுற்றதென் றியாவரு மெண்ணுவரே. ()

### தலைவி கொடுஞ்சொற் சொல்லல்.

280. மின்னார் சடையிடை யார்பிறை யஞ்சிட வெவ்வரவைப்
பொன்னா ரணியெனக் கொள்வோன் சிராமலை போற்றுமன்பர்
என்னா ருயிருலை வாய்மெழு காகி யினைந்துமின்னே
பன்னா ளலமரச் சென்றா ரவரருட் பான்மைநன்றே. (எ)

### வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்.

281. வேலை விடமுண் மிடற்றார் சிராமலை மேவுமன்பர்
சேலை நிகர்விழி யாய்மீள்வர் மாழ்கலை செந்தழலார்
பாலை யினிற்பெடை மேவப் புறவு பரிந்திறகாற்
சால வணைத்தணைத் தார்வது காணிற் றரிக்கிலரே. (அ)

### பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

282. அலர்தரு கொன்றையின் கீழலர் பூவை யருட்பரமன்
மலரடி போற்றிசெய் மாலென வாய்ந்திட வந்ததுகார்
பலரடி யார்பணி யெம்மான் சிராமலைப் பாவைவர
விலர்பொருட் காகவங் கேகிய காதல ரின்னமுமே. (கூ)

---

279. கொன் - பெருமை. உற்றது என்னேயென்று எண்ணுவர்.

280. சடையிடத்தே ஆர்ந்த. உலைவாய் மெழுகு - உலையின்கண்ணே வைத்த மெழுகு. அலமர - சுழல.

281. மாழ்கலை - மயங்காதே. பெடை மேவ - பெண்புறவு விரும்ப. புறவு - புறா. பரிந்து - அன்புற்று. ஆர்வது - இன்புறுவதை.

282. பூவை - காயாமரம். கொன்றை சிவபெருமானுக்கும் பூவை திருமாலுக்கும் உவமை. கார் - கார்ப்பருவம். அடியார் பலர். பாவை: விளி. இன்னமும் வரவிலர். இன்னம்: "இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே" (தே. திருநா.); "அயிலா னின்னமுமே துயிலா ளின்னமுமே" மதுரைக் கலம். 59.

### இதுவுமது.

283. பந்தப் பவந்தொலைத் தாள்வோன் சிராமலை பாடினர்க்குத்
தந்தச் சிவிகை தருமாரி யப்பன் றடக்கைநிதி
முந்தச் சொரிவ தெனநீர் சொரிந்திங்கு மொய்த்ததுகார்
கந்தக் கருங்குழ லாயினம் வந்திலர் காவலரே. (கo)

### இகுளை வம்பென்றல்.

284. பண்பான் மறையவ ரூட்டுஞ்செந் தீயவிப் பாகத்தினல்
விண்பான் மருவிய வம்பாகு மேகத்தை மெய்யதென்றே
நண்பா னமைத்தடுத் தாள்வோன் சிராமலை நன்னுதலாய்
பெண்பான் மதியின் மயங்கினை காலத்தின் பெற்றியன்றே. ()

### இதுவுமது.

285. நீடு மிராய வருணு சலன்மநு நீதியினல்
நாடு மதிதொறும் பெய்வது போலிற்றை நாளுமுகில்
பீடு பெறவம்பு பெய்திட வந்தது பேதுறன்மால்
தேடு மலர்ப்பதத் தெம்மான் சிராமலைச் சேயிழையே. (கஉ)

### இறைமகள் மறுத்தல்.

286. கானஞ் செறிகுழல் பாகன் சிராமலைக் கார்மயிலாம்
நானஞ் செறிகுழ லாயன்பர் வாய்மையி னண்ணுமுன்சொல்
வானஞ் செறிமுகில் வம்பாகிற் றீப்பொறி மானமிக்கித்
தானஞ் செறிந்துபல் கோபம் படர்வதென் சாற்றுகவே. ()

---

283. சிவிகை - ஒருவகைப் பல்லக்கு. கந்தம் - நறுமணம்.

284. வம்பாகுமேகம் - காலமல்லாத காலத்திற் பெய்யு மேகம்; "வம்பார்குன்றம்" (தே. திருக்குற்றாலம்.) பெண்பான்மதி - பெண்புத்தி.

285. அருணசலராயன் செலுத்தும் மநுநீதியினல். அம்பு பெய்திட - மழை பெய்திட; வம்பென்னும் பொருளும் தொனிக்கின்றது. பேதுறல் - மயங்காதே.

286. காட்டைப்போலச் செறிந்த குழல்; "குழற், காடுஞ் சுமக்குங் கரும்பே" (சகலகலாவல்லிமாலை, 2.) நானம் - கஸ்தூரி. நண்ணுதற்கு முன்பு. இத்தானம் - இவ்விடத்தில். கோபம் - இந்திரகோபப்பூச்சி; இது மழைக் காலத்திற் றோன்றுவது. மானம் மிகுந்து கோபம் உண்டாவதென்பது வேறொரு பொருள்.

அவர்தூதாகி வந்தடைந்தது இப்போழுதேனத் துணைவி சாற்றல்.

287. நின்றே கவன்றயர் வொன்றேல் சிராமலை நேயர்க்கன்பர்
குன்றே யெனுமிப மொன்றே பலநிதி கொண்டுவர
நன்றே கனிமொழி யின்றே வருகுவர் நாமுணர
என்றே முனமுகில் சென்றே யியம்பவிங் கெய்தியதே. (கச)

தலைமகள் ஆற்றல்.

288. ஒன்றே யுனக்கு மெனக்கு முயிரென் றுரைத்தணைந்தார்
சென்றே யுறினவர் சீரருட் கென்னை சிறப்பெனுளம்
மன்றே யெனவுறைந் தாள்வோன் சிராமலை வாழ்முகில்கள்
இன்றே யெனையவர் மேவுந் திறஞ்சொல வெய்தனன்றே. ()

அவன் அவட் புலம்பல்.

289. தண்ணார் புனல்சடைக் கண்ணார் சிராமலைத் தாழ்குழலாள்
கண்ணார் தருபுனல் விண்ணா றெனவருங் காதலெழ
எண்ணார் தருபிரி வெண்ணாைநந் தேங்கியங் கென்செயுமோ
புண்ணார் தரவுள நண்ணாரி னேகும் புயலுமன்றே. (கரு)

---

287. அயர்வு ஒன்றேல் - சோர்வை அடையாதே. இபம் - யானை. கனிமொழி: விளி. சென்றே - வந்தே.

288. சென்றே உறின் - சென்று அவ்விடத்திலேயே தங்கியிருந்தால். அவர் சீர் அருட்குச் சிறப்பு என்னை? தங்காரென்பதீ கருத்து. என் உள்ளத்தை. என் உளம் மன்றே யென வுறைந்து: "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும், உறைவான்" (திருச்சிற். 20) என்பதை இப்பகுதி நினைப்பிக்கின்றது.

289. விண்ணாறு - கங்கை. எண்ணத்தின்கண் ஆர்ந்த பிரிவை நினைந்து. உளம் புண்ணார்தர. நண்ணாரின் - பகைவரைப்போல.

### பாகனொடு சொல்லல்.

290. பெண்பா லிடத்தமர் பெம்மான் சிராமலைப் பேதைமலர்க்
கண்பாய் தருபுனல் கூடலை மாற்றக் கவன்றயர்வாள்
நண்பா கிலரை யடவன் றிரத நடத்துதல்போற்
பண்பா நடத்தவ ணம்மன வேகம் பயந்திடவே. (கஎ)

### மேகத்தோடு சொல்லல்.

291. மோன வயித்திய லிங்கமெய்ஞ் ஞான முனிசெயுமன்
பான பணிக்கரு ளெம்மான் சிராமலை யார்முகில்காள்
நான மலர்க்குழ லாட்குரை யாடுமி னுங்கணத்திற்
றான மலைக்குல மேனிதி கொண்டவட் சார்துமென்றே. ()

---

290. இடப்பாகத்தின்கண் பெண்பால் அமரப்பெற்ற. கூடல்-கூடற் சுழியை; தலைவரைப் பிரிந்த மகளிர் அவர் வரவை எதிர்நோக்கிப் பார்க்கும் நிமித்தங்களுள் இஃது ஒன்று; மணலிற் சுழியைச் சுழித்துப் பார்க்கையில் அது முதலும் கடையும் கூடுமாயின் வருவரென்றும் கூடாதாயின் வாரா ரென்றும் கொள்ளுதல் மரபு. இது, "நீடு நெஞ்சு ணினைந்துக ணீர்மல்கும், ஓடு மாலினொ டொண்டொடி மாதராள், மாட நீண்மரு கற்பெரு மான் வரிற், கூடு நீயென்று கூட லிழைக்குமே" (தே. திருநா.); "தாழ்கடற் சேர்ப் பன் றூரகல நல்குமேல், ஆழியாற் காணுமோ யாம்" (ஐந். ஐம். 43); "அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண, இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பே, ரருவி மணிவரன்றி வந்திழிய யானை, வெருவி யரவொடுங்கும் வெற்பு" (நான்முகன்றிருவந். 39) என்பவற்றாலும், நாச்சியார்திருமொழி, 4-ஆந் திருமொழிப் பாசுரங்களின் இறுதியடிகளாலும் விளங்கும்; கூடற் சுழிகளை எண்ணிப்பார்த்தலும் உண்டு; இது, "ஆழி திருத்திச் சுழிக்கணக் கோதினை யாமலைய, வாழி திருத்தித் தரக்கிற்றி யோவுள்ளம் வள்ளலையே" (திருச்சிற். 186); 'கூடற்சுழியாவது: வட்டமாகக் கோட்டைக் கீறி அதற் குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ் சுழித்து இவ்விரண்டுசுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டாற் கூடுகை; ஒற்றைப்பட்டாற் கூடாமை யென்று சங்கே தம்' (நாச்சியார்திருமொழி வியாக்யானம்) என்பவற்றாலும் விளங்கும். "கூட லிழைத்திழைத் தங்குலி தேய" (443) என்பர் பின். நண்பாகிலரை - பகைவர்களை. அவண் நடத்து.

291. மோனம் - மௌனம். வைத்தியலிங்க முனிவரென்பவர் மலைக்கோட்டையில் மௌனசுவாமி மடத்தில் முன்பு இருந்து ஸ்ரீதாயுமான வர் திருக்கோயிற் கட்டளையதிகாரியாக விளங்கிப் புகழ்பெற்றவர். நானம் - வாசனை. தானமலை - யானை; தானம் - மதம்.

பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல்.

292. பந்தன மாமுலை யாயுள மாழ்கிப் பதைப்பதென்னீ
இந்தனல் கங்கையி னேந்துஞ் சிராமலை யீசர்க்கன்பர்
சந்தன நேர்ந்துன் மனங்குளிர்ந் தாரத் தனங்கொணர்ந்து
வந்தனர் வந்தன ரென்றே யொலித்த வலம்புரியே. (௧௯)

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.

293. நம்பு மவர்க்கருள் செய்வோர் சிராமலை நாதரொளி
பம்பு மருளென நாளும் விளங்குக பாரிலிவண்
வெம்பு மெனதுயிர் காத்திட வேண்டி விரைந்தணைவார்
தம்புகழ் போலவர் தேர்முன மார்க்குந் தனிச்சங்கமே. (௨௦)

தலைவனைப் பாங்கி நினைத்தமை வினுதல்.

294. இனத்தா மரைமலர் மேலன முட்டை யெனவளையை
நினைத்தா தரவு புரிபுன லூரிடை நீரொருநாட்
சினத்தால் வருநஞ்ச முண்டோன் சிராமலைத் தேனையன்பால்
மனத்தா மரையுற வைத்ததுண் டோசொலு மன்னவரே. ()

---

292. பந்து அன்ன - பந்தை ஒத்த. இந்து அனல் கம் கையின் ஏந்தும் - சந்திரனையும் கனலையும் முறையே தலையிலும் கையிலும் தாங்குகின்ற; நிரனிறை; கம் - தலை. சந்தனம் நேர்ந்து - சந்தனத்தை ஒத்து. வலம்புரி ஒலித்த; ஒலித்த - ஒலித்தது; தொகுத்தல்விகாரம்.

293. பம்பும் - பரவிய. பாரிற் சங்கம் விளங்குக.

294. அனம் - அன்னப்பறவை. வளை - சங்கம். வளையை முட்டையென்றுநினைத்து. சினத்தால் - கோபத்தோடு. தேனென்றது தலைவியை. மலைத்தேனைத் தாமரைமலரில் வைத்ததுண்டோவென்பது ஒரு நயம்.

### தலைமகன் நினைத்தமை செப்பல்.

295. விறப்பு மிகுமலர்க் காவினுங் கானினு மெல்லியலாள்
சிறப்பு மிகவென துள்ளத்து ளார்தலிற் சேயிழையாய்
பிறப்பு மிறப்பு மிகந்தோன் சிராமலை பேணினர்போல்
மறப்பு நினைப்பு மிகந்தவ ளாயென்று மன்னுவனே. (உஉ)

### பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமைகூறல்.

296. தேடிய மாலயன் காணா தயரவென் சிந்தையுள்ளே
ஆடிய கூத்துடை யெம்மான் சிராமலை யன்பவனைக்
கூடிய காவுமுன் னாடிய வாவியுங் கூறிமின்னாள்
வாடிய வாட்டந் தவிர்த்தே னினதருள் வாய்மைகொண்டே.

## கக. வரைவுமலிவு.

### காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல்.

297. கலவா நமைத்தடுத் தாண்டோன் சிராமலைக் காரளிபோற்
சுலவா வொளிர்விழி யாயுன் முலைவிலை சொல்லவன்பர்
உலவா நிதிமக மேருவென் றிம்பரி லும்பரெண்ணப்
பலவா ரணங்களின் மேற்கொண் டிறுத்தனர் பார்த்தருளே.

---

295. விறப்பு - செறிவு. பிறப்பும் இறப்பும் இகந்தோன்: "எல்லா முடையா னிறத்தல் பிறத்தலிவை, இல்லானென் றெல்லாரு மேத்தெடுப் பான்" (திருவிடைமருதூருலா, 461.) இச்செய்யுள், "புறந்தாழ் குழலுமை பங்காளர்வெங்கைபுரத்தரயன், பறந்தாலு மென்னென் றிருக்கின்ற வேணிப் பரமர் தமைத், துறந்தார் மனமென வேங்கொடுங் காட்டுச் சுரத்திடை நான், மறந்தா னினைத்தலு முண்டுபொன் னேயுங்கள் வஞ்சியையே" (திரு வேங்கைக்கோவை, 282) என்பதோடு ஒத்த பொருளுடையது.

296. தேடிய...எம்மான்: "தேடு மரியயற் கெட்டா திருந்துஞ்சிற் றம்பலத்தே, ஆடும் பரமர்" (ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்பாடல்.) கா - சோலை. முன் ஆடிய.

297. சுலவா - சுற்றி. இம்பர் - இவ்விடத்தில்; இம்பரில் இறுத்தனர்.

காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல்.

298. தன்னைப் பரமென யானுணர்ந் துய்ந்திடத் தானருளால்
என்னைச் சிவமெனச் செய்தோன் சிராமலை யேத்துமன்பர்
பொன்னைப் புயலிற் பொழிந்திடி னாளைப் புணர்ப்பர்மணம்
அன்னைக் குளங்குளிர் வாகு மினியின்ப மார்தரவே. (௨)

பாங்கி தமர் வரைவெதிர்ந்தமை காதலிக் குணர்த்தல்.

299. பூதங் கரணம் பொறிபுல னீயன்று போதனென்றே
பேதந் தவிர்த்தெனை யாண்டோன் சிராமலைப் பெண்ணமுதே
நாதந் தருகடல் போலெதிர்ந் தார்நமர் நம்மிறையை
வேதந் தருமுறை யானின் மணஞ்செயும் வேட்கையுற்றே. ()

தலைமகள் உவகையாற்றாது உளத்தொடு கிளத்தல்.

300. துடியா ரிடையுமை பாகன் சிராமலைத் தோன்றனம்மைக்
கடியார் தரவியம் வாரியி னார்த்துக் கறங்கக்கண்டு
கொடியா ரலரு மதனலர் வாளியுங் கூர்பசப்பும்
இடியார் நமதனை வெஞ்சொலு மின்றுட னேகுநெஞ்சே. (௪)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

301. பொன்னியல் வார்சடை யெம்மான் சிராமலை போற்றுமன்னா
பன்னிய மாண்கலை யாய்ந்துணர் நீயும் பரிவுடனெம்
மின்னிய லாரிடை யாளுமெந் நாளும் விளங்குருவம்
மன்னிய வேளு மிரதியும் போலிங்கு வாழியவே. (௫)

---

298. புணர்ப்பர் தமரென ஒருசொல் வருவிக்க. ஆர்தரக் குளிர் வாகும்.

299. அன்று: பன்மைக்கும் வரும். (நேமி. வினைமரபு, 7.) போதன்- அறிவுமயமாக உள்ளோன். நாதம்-ஒலி. நமர் வேட்கையுற்று நம் இறையை எதிர்ந்தார்; எதிர்ந்தார் - ஏற்றுக்கொண்டார்.

300. துடி - உடுக்கை. கடி - கலியாணம். இயம் - வாத்தியம். கொடியார் அலரும் - கொடுமையையுடைய அயல்மகளிர் கூறும் பழிமொழியும். கூர் பசப்பும் - மிக்க பசலையும். இடி ஆர் - இடியை ஒத்த.

301. உருவம் மன்னிய வேள்-உருவம் நிலைபெற்ற காமன்; "உருவளர் காமன்" திருச்சிற். 1.

மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்.

302. பொன்மண வாளனும் வேதனுந் தேவரும் போற்றவருள்
நன்மண மார்மலர்த் தாளோன் சிராமலை நாடுநண்பா
நின்மன நாடிநின் றன்மண வாட்டி நெடிதணங்கைப்
பன்மண மார்மலர் தூவும் பராநிலை பார்த்தருளே. (சு)

பராநிலை கண்ட தலைவன் மகிழ்தல்.

303. பன்ன வரும்புக ழெம்மான் சிராமலைப் பாலணங்கை
அன்ன நடைமயி லாண்மணம் வேண்டி யருளுளத்து
மன்ன மலர்பலி தூவிநின் றேத்தி வணங்கக்கண்டேன்
என்ன வதிசயஞ் சொல்வே னகமகிழ் வெய்தியதே. (எ)

## உ0. அறத்தொடுநிற்றல்.

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.

304. வாரித் திரைமுத்தின் வண்டலம் பாவையை மாற்றியவோ
வேரிக் குழலனை தானுனைச் சீறி வெகுண்டனளோ
காரிக் கொருபுற மீந்தோன் சிராமலை நன்னுதலாய்
பூரித் திடுமுலைக் காரங்கண் ணுலெவன் பூட்டுவதே. (க)

தலைமகள் கலுழ்தற்குக் காரணங் கூறல்.

305. புயங்கா பரணத்த னெம்மான் சிராமலைப் பூங்குழலாய்
நயங்கா தலித்தன்று வேழமட் டாவியை நல்கியென்னை
முயங்கா தரவன்பர் தாமென் றுயிலினை முற்றுமொழித்
துயங்கா தகன்றத னல்விழி நீர்வெள்ள மோங்கியதே. (உ)

---

302. பொன் - திருமகள். மணவாட்டியென்றார் முன்னமே காந்தருவ மணம் நிகழ்ந்தமைபற்றி. அணங்கை - துர்க்காதேவியை. பராம் நிலை - வழி படும் நிலைமையை.

303. பன்ன அரும்புகழ். உளம் - அணங்கின் உள்ளம். மலரையும் பலியையும் தூவி. அகம் - என் மனம்.

304. முத்தின் வண்டலம் பாவை - விளையாட்டுக்குரிய முத்தாலாகிய பாவை. திரை மாற்றியவோ. ஆரம் - முத்தமாலை; கண்ணீர்த்துளியின் தொடரை ஆரமென்றார். ஏன் அழுகின்றாயென்பது கருத்து.

305. புயங்கம் - பாம்பு. முயங்கிய ஆதரவையுடைய அன்பர். உயங் காது - என்னைப் பிரிதலால் தாம் வருந்தாமல்.

தலைமகன் தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல்.

306. அணங்கிற் கிடங்கொடுத் தோன்வாழ் சிராமலை யாயிழைமுன்
வணங்கிக் கழிக்கரை வாழு மணங்கினை வாழ்த்தியன்பர்
இணங்கித் தெளித்த தெளிவா லகல்கில ரென்றிருந்தேன்
பிணங்கிப் பொழிகண்ணி னீராற தாக்கிப் பிரிந்தனரே. (௩)

தலைவன் இகந்தமை இயம்பல்.

307. கையார் மழுப்படை யெம்மான் சிராமலைக் காதலர்முன்
செய்யா தனசெய்து தேற்றிய யாவருந் தேர்கிலரென்
றெய்யா தகன்றன ராற்பெரி யோர்க ளியம்புமொழி
மெய்யா வினியெண்ண லாமோ வுலகினின் மெல்லியலே. (௪)

பாங்கி இயற்பழித் துரைத்தல்.

308. செல்லே னினையொரு போதும் பிரிந்தென்று தேற்றியசூள்
அல்லேய் குழலுமை பாகன் சிராமலை யாருமெழில்
வல்லேய் முகிழ்முலை யாய்நீ வருந்த மறந்துமனம்
கல்லே யெனவகன் றாரவர் போலெவர் காதலரே. (௫)

தலைமகள் இயற்பட மொழிதல்.

309. தண்ணா ரமுத கிரண மருந்து சகோரமொன்றை
எண்ணா தருந்த வெனக்குந் தணந்த விறைவர்புயக்
கண்ணார் தருமின்ப மன்றியொன் றின்று கருதினென்றும்
பண்ணார் தருமொழி பாகன் சிராமலைப் பான்மொழியே. (௬)

---

306. ஆயிழை: விளி. கழிக்கரை வாழும் அணங்கு - கடற்றெய்வம்; "கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம்" (அகநா. 110: 4); "கடற்றெய்வங் காட்டிக்காட்டி" சிலப். கானல். 7.

307. பிறர் செய்யாத சபதங்களைச் சொல்லித் தேற்றியவற்றை. எய்யாது - அறியாமல்.

308. பிரிந்து செல்லேனென்று. வல் - சூதாடுகருவி. மனம் கல்லே யென்று கூறும்படி அகன்றார்; "கணவரவர் நெஞ்சது கருங்கலல வோவென், புணர்முலையில் வந்துவிளை பொன்னையுரை யீரே" அழகர் கலம்பகம், 65.

309. சகோரப்பறவை நிலவையன்றி வேறொன்றை அருந்த எண்ணாது; அதுபோல எனக்கும் இறைவர் தரும் இன்பமன்றி வேறொன்றும் இல்லை; இஃது எடுத்துக்காட்டுவமையணி.

### தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல்.

310. நீளுங் கயல்விழி பாகன் சிராமலை நேயரெம்பால்
நாளுந் தவறு புரிந்திலர் நீங்கலி னல்வெகுளேல்
ஆளுங் குலதெய்வ மேயென்று போற்றி யருளவர்பால்
மூளும் படிபலி தூவுது மேவுது மொய்குழலே. (எ)

### தலைவி இல்வயிற்செறித்தமை சொல்லல்.

311. ஆனே றுயர்த்தவ னெம்மான் சிராமலை யாயிழையாய்
மானே நொதுமலர் தூற்று மலரை மதித்துடலம்
தானே பசந்த பசப்பையு நோக்கித் தளர்ந்தனையென்
தேனே யினிப்புறம் போகலென் றுளென்ன செய்குதுமே. ()

### செவிலி கனையிருள் அவன் வரக் கண்டமை கூறல்.

312. இரவிற் குறியிடை யன்பர்வந் தெய்திட வெம்மனை தான்
கரவிற் கொளித்தொரு கள்வனின் றுனென்று காய்ந்துரைத்தாள்
அரவிற் றுயின்முகில் போற்றுஞ் சிராமலை யண்ணல்பொற்றுள்
பரவித் தொழுது பணிந்தென்று மேத்தும் பணிமொழியே. ()

### செவிலி எறிவளை வேற்றுமைக்கு ஏது வினுதல்.

313. ஆனஞ் சுகந்தரு ளெம்மான் சிராமலை யாயிழைக்குப்
பானஞ் செனத்தனம் பீர்பூப்ப நீர்கண் பரிந்தளிப்ப
மோனஞ் செறிந்தயர் வாரவென் காரண மோமறலிக்
கோனஞ் சயில்விழி மின்னே மறைவிட்டுக் கூறுகவே. (க0)

---

310. புரிந்திலராய் நீங்கினமையின். அவர்பால் அருள் மூளும்படி. பலிதூவல்: "காவன் மன்னர் கடைமுகத் துகுக்கும், போகுபலி வெண்சோறு போலத், தூவவும் வல்லனவன் றூவுங் காலே" புறநா. 331: 11-3.

311. ஆயிழையாயென்றதும் மானே யென்றதும் தோழியை; அடுக்கிய விளிகளாற் காதற்சிறப்பு விளங்கும் (திருச்சிற். 47, பேர்.) அனே-செவிலி. அனை புறம்போகாதே என்றுள்.

312. எம்மனை - தாய். காவிற்கு - திருட்டிற்கு. முகில் - திருமால்.

313. ஆன் அஞ்சு - பஞ்சகவ்வியத்தை. பால் நஞ்சென. பீர் - பசலை. அயர்வு ஆர - அயர்ச்சியை அடைதற்கு. மறலிக்கோன் அஞ்சுதற்குரிய.

### வெறி விலக்கல்.

314. தகரக் குழன்மொழி மான்மாற் றிடுமென்று தக்கபலி
நகரக் குறுகிக் குறிபல நாடிமின் ஞேய்தவிர்ப்பான்
மகரக் குழைமங்கை பாகன் சிராமலை வாழ்முருகா
பகரக் குவலயத் தெங்ஙன மேகிப் படித்தனையே. (கக)

### வெறி விலக்கியவழிச் செவிலி தோழியை வினுதல்.

315. நமக்குக் குலதெய்வ மாகிய வேலனை நாடுமவர்
தமக்குத் தனித்துணை யாங்கும ரேசனைத் தாழ்ந்துதொழா
துமக்குத் தகாதென வெம்மான் சிராமலை யுன்னலர்போல்
எமக்குத் தருங்குறி யீண்டெவ னீக்கிய தேந்திழையே. (கஉ)

### பூத்தரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்.

316. எளியார் துதிக்கரு ளெம்மான் சிராமலை யேந்திழைதேன்
துளியார் மலர்களின் மேலாய் மணமிகச் சூழுமுன்றன்
ஒளியார் விழிமலர் போலுமென் ருேரிறை யுற்பலமொன்
றளியார் தரநின் மகட்களித் தானன்பி னன்றனையே. (கரு)

### புனறரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்.

317. காரா ரறல்குழ லெக்கர் நிதம்பங் கலைநுரைகை
வாரா ரலைமுலை புற்புத மார்சுழி வாய்ந்தவுந்தி
ஏரார் தருபொன்னி பொன்னியை யீர்ப்ப வெடுத்தளித்தான்
சீரா ரனைநென்ன லெம்மான் சிராமலைத் திண்புயனே. (கச)

---

314. தகர் - ஆடு. அக்குழன்மொழி மால் - தலைவியின் மயக்கத்தை. பகர - சொல்லுதற்கு.

315. எவன் - யாதுகாரணம்பற்றி. தகாதென நீக்கியது எவன்?

316. சூழும்: முற்று. உற்பலம் - நீலோற்பல மலர். அன்பின் அன்று அளித்தான்; அன்று தொடங்கி அவனையே நினைந்து வருந்துகின்றாளென்பது எச்சம்.

317. அறல் - கருமணல். கை அலை. புற்புதம் - நீர்க்குமிழி. பொன்னி- காவிரி. காவிரிநதி ஒரு பெண்ணாக உருவகம் செய்யப்பட்டது. பொன்னியை- பொன்போன்றவளாகிய தலைவியை. அனை - அன்னையே. திண்புயன் அளித்தான்.

களிறுதரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்.

318. தந்தி யடர்த்துப் புனமுற வோரிறை சார்ந்ததனைச்
சிந்தி யிடுமுனஞ் சேர்ந்தணைத் தாணந் திருவவனை
அந்தி மதியணி தென்கயி லாய ரருள்குகனை
முந்தி யவண்வள்ளி சென்றே தழுவு முறையினன்னே. (கரு)

தலைவியின் மெய்வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினவல்.

319. யானென்ன செய்குவ னென்னு ரமுதனை யாள்வெருண்டு
மானென்ன நோக்கவும் பீர்முலை பூப்பவு மான்மிகவும்
தானென்ன வுற்ற துரையா யெனக்கின்று சங்கையறத்
தேனென்ன வார்மொழி பாகன் சிராமலைச் சேயிழையே. (கசு)

செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தோடு நிற்றல்.

320. தேனார் குதலைத் திருந்தா மொழிநின் றிருவனைய
மானு ளரும்பு மலர்வாச முற்றென மையன்மிக
ஆனு முதுக்குறை வுற்றா ளொருவனை யாதரித்துக்
கூனார் பிறையணி யெம்மான் சிராமலைக் கோமளமே. (கஎ)

## உக. உடன்போக்கு

பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்.

321. மெய்ய ருளநிறை யெம்மான் சிராமலை மேவுமெமர்
பொய்ய ருளநிக ராங்குழ லாளிணைப் பூண்முலைக்கு
வைய முழுதும் விலையாக நல்கினும் வாங்கலரால்
ஐய வணங்கைநின் னூர்க்கன்பி னூற்கொண் டகன்றருளே.

---

318. தந்தி-யானை. தந்தி புனத்தில் அடர்த்து உற. ஓரிறை அதனைச் சிந்தியிடுமுன்னம் நம் திரு அவனைச் சேர்ந்து அணைத்தாள். அவண்-வள்ளி மலையின்கண். முறையின் அணைத்தாளென்க; "அவ்வேலையில் வள்ளி"(கந்த. வள்ளியம்மைதிருமணப். 112) என்னும் செய்யுளைப் பார்க்க. அன்னே - அன்னையே.

319. அமுதனையாளென்றது தலைவியை. மால் - மயக்கம். தான்: அசைநிலை. என்ன உற்றது - என்ன துன்பம் உற்றது. எனக்கு இன்று சங்கை அற உரையாய்.

320. குதலையையும் மொழியையுமுடைய மானுளென்றது தலைவியை. அரும்பு மலர் வாசம் உற்றென - அரும்பு, மலருக்குரிய வாசனையைப் பொருந்தினாற்போல. முதுக்குறைவு - பேரறிவு. ஒருவனை ஆதரித்து முதுக்குறைவு உற்றாள்.

321. எமர் வாங்கலரால்.

### தலைவன் மறுத்தல்.

322. என்னு ருயிர்க்குயி ராயெனை யாளு மெழின்மலர்வாழ்
பொன்னு ரடிதளிர் பூண்முலை மேரு பொருவிலிடை
மின்னு ரழற்கடத் தேக லரிதெம் வியனகர்சேய்த்
தொன்னூர் புரமட்ட வெம்மான் சிராமலை யொண்ணுதலே. ()

### பாங்கி தலைவனை உடன்படுத்தல்.

323. பொற்புக் கொருவரு மொவ்வாத வாரணி பூண்முலையாள்
கற்புத் தழற்கழற் பாலைசெந் தாமரைக் கான்மலராம்
அற்புத் தளையுறு மெம்மான் சிராமலை யார்கனக
வெற்புப் பொரும்புய னேயவ ணின்னொடு மேவிடினே. (௩)

### தலைவன் போக்கு உடன்படுதல்.

324. நஞ்சார் தருமிடற் றெம்மான் சிராமலை நன்னுதலாய்
நெஞ்சா னினைக்கிற் சுடுங்கொடும் பாலையி னேரியசெம்
பஞ்சா ரடிமட மானைத்தம் மாவியிற் பற்றிலர்போல்
அஞ்சா தவட்கொடு போக நினைப்பது மற்புதமே. (௪)

### பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்.

325. அம்பஞ் சனைவென்ற வெம்மான் சிராமலை யன்பரிந்நாள்
வம்பஞ்ச வீறு முலையணங் கேநின் மலர்ப்பதங்கள்
செம்பஞ் சுறநொந்து வாடுமந் நீர்மையுந் தீத்திரளாற்
பம்புஞ் செறிபரற் பாலையு நாடிப் பதைத்தனரே. (௫)

---

322. பொன்னூர் - திருமகள்போன்ற தலைவியினுடைய. பொரு இல் - ஒப்பில்லாத. மின் - மின்னல். ஆர் அழல் கடத்து - பொறுத்தற்கரிய வெப்பத்தையுடைய பாலைநிலத்தில். சேய்த்து - நெடுந்தூரத்தில் உள்ளது.

323. கற்புத்தீக்குப் பாலையானது செந்தாமரைமலரைப்போலக் குளிர்ச்சியுடையதாகும். அற்புத் தளை - அன்பாகிய தளை. சிராமலை ஆர்-சிராமலையில் உள்ள. மேவிடிற் செந்தாமரைமலராம்.

324. நெஞ்சால் நினைக்கிற் சுடும் பாலை: "உன்னு முளத்தையுந் தீக்குஞ் சுரம்" (343.) பாலையிற் கொடுபோக நினைப்பது.

325. அம்பு அஞ்சனை - ஐந்து அம்புகளையுடைய மன்மதனை. வம்பு - கச்சு. செம்பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. பம்பும் - பரவிய.

### தலைவி நாணழிபு இரங்கல்.

326. மறவாத காத லொடுமன்பர் பின்பு மறந்துமென்றும்
துறவாத நாணந் துறந்தவ ணேகத் துணிந்தவென்போல்
இறவாத வெம்பழி யெய்தப் பிறந்தவர் யாருலகிற்
பிறவாத வாழ்வு தருவோன் சிராமலைப் பெண்ணமுதே. (௬)

### பாங்கி தலைவிக்குக் கற்புமேம்பாடு புகறல்.

327. பாணினுஞ்சொல்லினியோர்க்கணிநாணெனப்பன்னுவதென்
பூணினும் பொற்றிரு மங்கல நாண்மிகப் பொற்புறல்போல்
நாணினுங் கற்புச் சிறந்ததன் றேவிங்கு நாடரிய
சேணினுஞ் சிற்பர னெம்மான் சிராமலைச் சேயிழையே. (௭)

### தலைவி ஒருப்பட்டெழுதல்.

328. நாளு மெனக்குத் துணையாகத் தோன்றிய நாண்வரம்பு
நீளு மலர்ச்சடை யெம்மான் சிராமலை நேயரன்பு
மூளு மயற்கட லெற்றிடப் போயது மொய்க்குமெழில்
ஆளு மலர்த்திரு வன்னபொன் னேயென் னதிசயமே. (௮)

### பாங்கி சுரத்தியல்பு உரைத்துழித் தலைமகள் சொல்லல்.

329. தன்னை யுணர்த்தித் தனைப்போ லெனைச்செய்து தன்வசத்தே
என்னை நிறுத்திய வெம்மான் சிராமலை யேந்திழையாய்
அன்னை சினத்தினு மூரா ரலரினு மாகொடிதோ
மின்னை யுயிர்க்குந் தழற்பிழம் பாமந்த வெஞ்சுரமே. (௯)

---

326. அவண் - அப்பாலைநிலத்தில். அன்பர் பின்பு ஏக. என்போற் பிறந்தவர் யார்?

327. பாண் - இசை. சொல் இனியோர்க்கு - மகளிர்க்கு. பூணினும் - எல்லா ஆபரணங்களுள்ளும்; நாணிற் கற்புச் சிறந்தது; "உயிரினுஞ் சிறந் தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல். களவு. சூ. 22); "தாயிற் சிறந்தன்று நாண்டைய லாருக்கந் நாண்டகைசால், வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்று" (திருச்சிற். 204.) இங்கும் - இவ்வுலகத்தும். இங்கும் சேணினும் கற்புச் சிறந்ததன்றோ?

328. நாணுகிய வரம்பு மயற்கடல் எற்றிடப் போயது.

329. வெஞ்சுரம் கொடிதோ?

### பாங்கி கையடை கொடுத்தல்.

330. சேடார் தருமுகில் போலொளி வாய்ந்தளி செவ்வழிதேர்
ஏடார் குழல்பெய் தொழிமுகில் போனிற மேய்ந்திடினும்
தோடார் தருசெவி யெம்மான் சிராமலைத் தோகையைச்சீர்
நீடார் தாவின்று போலென்றுங் காத்தரு ணீமன்னனே. (க0)

### வைகிருள் விடுத்தல்.

331. மின்னு ரலரன்னை யூரிடர் தீரும் விதமுரைத்துன்
பின்னுக வெய்துவன் யாவருந் துஞ்சுமிப் பேரிருள்வாய்
மன்னு மகிழ்வொடு மெம்மான் சிராமலை வாழ்ந்தருளும்
என்னு ரமுதனை யாளையன் பாற்கொண் டெழுந்தருளே. (கக)

### அவன் சுரத்துய்த்தல்.

332. சந்தார் பொழிலுந் தடமலர் வாவியுஞ் சாலைகளும்
பந்தார் முலையுமை பாகன் சிராமலைப் பால்வளரும்
கொந்தார் குழன்மலர்க் கோமள மேகண் குளிரக்கண்டு
செந்தா மரைப்பத நோவாம னீமெல்லச் சென்றருளே. (கஉ)

---

330. சேடு - பெருமை. அளி - வண்டு. அளி செவ்வழியைத் தேருகின்ற குழல்; தேர்தல் - ஆராய்தல். பெய்து ஒழி முகில் - நீர்பெய்து வெளுத்த மேகம். தோடார்தரு செவி: "தோடுடைய செவியன்" (தே.) குழல்........ ஏய்ந்திடினும் என்றது குழல் விளர்த்து முதுமைப் பருவத்தை அடைந்தாலும் என்றபடி. "மாலோன் பதியை யரன்பதி தேடி வரினுமழைக், காலோதி வாணி நிறமே புகினுங் கருத்தொன்றதாய், வேலோ னெனவந்த விக்ரம சோழன் வியன்சிலம்பிற், சேலோடுங் கண்ணியை யென்னாளுங் காக்குந் திறமுனக்கே" (தனிப்பாடல்) என்பதன் கருத்தை இச்செய்யுள் ஒருவாறு தழுவியது.

331. மின்னுருடைய அலரும். அன்னை இடரும் ஊரா ரிடரும். துஞ்சும் - உணர்வு மறந்து தூங்கும். மன்னு: விளி. அன்பால் - அன்புடன்.

332. சந்து - சந்தனமரம். கொந்து - பூங்கொத்து. பொழில் முதலியவற்றைக் கண்டு.

### தலைமகன் தலைமகள் அசைவுகண் டிருத்தல்.

333. காரார் தருமிடற் றெம்மான் சிராமலைக் காரிகைநின்
சீரா ரடிமலர் சேப்புற வாண்முகச் செய்யகஞ்சம்
தாரார் தரள முகிழ்த்தென வேர்த்தது சாலவிந்த
ஏரார் பொழிலிற் சுரமாறு மட்டு மிருந்தருளே. (கங)

### உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந் துரைத்தல்.

334. கான்செய்த கொன்றைய னெம்பெரு மான்றென் கயிலைவளர்
கூன்செய்த வாணுதல் பாதந்தை வந்திக் கொடுஞ்சுரத்தின்
தேன்செய்த மாமலர் கூந்தலிற் சேர்த்தணி செய்தமையால்
யான்செய்த மாதவஞ் செய்தா ருலகினில் யார்நெஞ்சமே. ()

### கண்டோர் அயிர்த்தல்.

335. மாதாரும் பாகத்த னெம்மான் சிராமலை வாழ்பவரோ
போதாரும் பூந்தரு நீழலில் வாழ்ந்திடும் புண்ணியரோ
தாதாருந் தாரணி விஞ்சைய ரோவன்றித் தாமெவரோ
தீதாருந் தீச்சுரத் தேநடந் திவ்வழிச் செல்பவரே. (கரு)

### கண்டோர் காதலின் விலக்கல்.

336. ஒருமா னிடத்துறை யெம்மான் சிராமலை யூரினின்றும்
திருமா லெனவரு வீர்நகர் தானின்னுஞ் சேய்த்திருடீர்
பெருமா னலைகட லாழ்ந்தா னெமது பிறங்கலின்வாய்க்
கருமா வுறுதசை யார்ந்துறை வீரிந்தக் கங்குலிலே. (கசு)

---

333. காரிகை - விளி. சேப்புற - சிவப்ப. சால வேர்த்தது. சுரம் - சுரத்தின் வெம்மை.

334. கான் - நறுமணம். கூன் - வளைவு. தைவந்து - தடவி. மலரைக் கூந்தலிற் சேர்த்து.

335. தாது - பூந்தாது. விஞ்சையர் - வித்தியாதரர்.

336. ஒரு மான் - உமாதேவியார். திரு மாலென - திருவையும் மாலையும் போல. சேய்த்து - நெடுந்தூரத்திலுள்ளது. இருள் தீர்தற்குக் காரணமாகிய பெருமான்-சூரியன். பிறங்கல் - மலை. கருமா-பன்றி; "ஏனமெல்லூன், தீயற் கறியுந் தினைமூ ரலுமெஞ் சிறுகுடில்வாய், நேயத் திவண்மிசைந் தேகினென் னுகு நெடுந்தகையே" திருவெங்கைக். 143.

### கண்டோர் தம்பதி அணிமை சாற்றல்.

337. வேண்டுவ யாவுந் தருவோன் சிராமலை மேவுமன்ப
ஈண்டுறு குன்றினை நீர்கடந் தேகி னிறைப்பொழுதில்
ஆண்டொளிர் சோலையும் வாவியு மாளிகை யார்நகரும்
காண்டொறு மோகையுள் ளத்துறத் தோன்றுநுங் கண்களுக்கே. (கஎ)

### தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தல்.

338. கோங்கரும் பாமுலை பாகன் சிராமலைக் கொம்பனையாய்
தாங்கரும் பாலை தணந்தனந் தேமலர்த் தண்பொழிலும்
பூங்கரும் பாரும் பணைகளும் வாவியும் பொற்பொடுமெய்ப்
பாங்கருஞ் சூழ்தரத் தோன்றுநம் மாணகர் பாரிதுவே. (கஅ)

## உஉ. கற்பொடு புணர்ந்த கவ்வை.

### செவிலி பாங்கியை வினாதல்.

339. அன்னையு மத்தனு மாவோன் சிராமலைக் கன்பிலர்போல்
என்னையும் விட்டிங் கிகுளைய ரேங்கிட வீன்றெடுத்தாள்
தன்னையும் விட்டுயிர் போற்பிரி யாத தனித்துணையாம்
நின்னையும் விட்டெங்ங னேகின ளெம்மனை நேரிழையே. (க)

### பாங்கி செவிலிக் குணர்த்தல்.

340. திருநா மகட்கன்பர் தம்மான் சிராமலைச் சேயிழையாள்
ஒருநா ளிடைவண்ட லாடிடத் தோரிறை யுற்றனைசீர்
மருநாண் மலர்த்தொடை யீந்திட வாங்கி மகிழ்ந்துமைசேர்
இருநாண் மலர்விழி தானிமை யாம விருந்தனளே. (உ)

---

337. வேண்டுவ யாவுந் தருவோன்: "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" (தே.) தலைவியையும் உளப்படுத்திக் கூறினமையின் நீரென்றார். இறை - கையிறையளவு. ஆண்டு - அவ்விடம்.

338. பணைகள் - வயல்கள். நகர் தோன்றும்; இதனைப் பார்.

339. இகுளையர் - தோழிமார்கள். எம்மனையென்றது தலைவியை.

340. திருமகட்கு நாமகட்கு அன்பர் - திருமாலும் பிரமதேவரும். தம்மான் - தலைவர். வண்டல் - விளையாட்டு. அனை: விளி. மை சேர் - அஞ்சனம் சேர்ந்த.

பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவோர்க்கு எதிரழிந்து மொழிதல்.

341. தானே யெனைத்தடுத் தாண்டோன் சிராமலைத் தாழ்குழலீர்
ஊனே யுருகி யுணமுலை யூட்டி யுவந்தளித்த
யானேத முற்று வருந்தவொ ராற்றி லெடுத்தபெரு
மானே துணையென மானேகும் வாறென் வழங்குமினே. (௩)

செவிலி தன் அறிவின்மைதன்னை நொந்துரைத்தல்.

342. கன்ன லனமொழி பாகன் சிராமலைக் காரிகையாள்
நென்ன லெனைமண வண்டலம் பாவையை நீடுவகை
மன்ன வணங்குவித் தூர்க்கனுப் பாயென வாய்மலர்ந்தாள்
இன்ன துணர்கிலன் போய்வர லாமென் றியம்பினனே. (௪)

செவிலி தெய்வம் வாழ்த்தல்.

343. என்னு ளிருந்தரு ளெம்மான் சிராமலை யெய்ந்தெமரைத்
துன்னு மிடர்தவிர்த் தாளணங் கேயொரு தோன்றலின்பின்
உன்னு முளத்தையுந் தீக்குஞ் சுரத்தக லொண்டொடியைப்
பின்னு மெனதிடஞ் சேர்க்கின் மகிழ்பலி பெய்குவனே. (௫)

செவிலி நற்றாய்க்கு அறத்தோடு நிற்றல்.

344. வாமா மறையென வூர்வோன் சிராமலை வாணுதலாய்
தேமா மலர்த்தடம் வீழத் தழுவித் திளைத்தெடுத்த
கோமா னொடுமட மானுள்சென் றேகினள் கூறுநிதி
நாமா தரித்துப் பிறர்மணம் வேட்ட நலனுணர்ந்தே. (௬)

---

341. யான் ஏதமுற்று; ஏதம் - துன்பம். ஓராற்றில் - ஒருநதியில். வாறு - விதம்; "வல்லா னுலாவந்த வாறென்ன" (சொக்கநாதருலா, 168); புனற்றுபுணர்ச்சியைத் தெரிவித்தவாறு. இந்த மான் ஒரு பெருமான் துணையென ஏகினளென்றது ஒரு நயம்.

342. வண்டலம்பாவை - விளையாட்டிற்குரிய பாவை.

343. அணங்கே - தெய்வமே. உன்னும் உளத்தையும் தீக்கும் சுரம்: "நெஞ்சா னினைக்கிற் சுடுங்கொடும் பாலை" (324) என்றார் முன்னும்; "வேனிலே யல்லதோர், இருதுவே றின்மையா லெரிசுடர்க் கடவுளும், கரு தின்வே முள்ளமுங் காணின்வே நயனமும்" கம்ப. தாடகைவதை. 5.

344. மறையை வாமாவென ஊர்வோன்; வாமா - குதிரை. பிறர் மணம்-அயலாருடைய மணத்தை. பிறர் கொடுக்கும் பரிசப்பொருளை விரும்பி அவருக்கு மணம்செய்துகொடுக்க விரும்பியதை உணர்ந்து சென்றாள்.

நற்றாய் பாங்கிதன்னொடு புலம்பல்.

345. வெறியார் கடுக்கைய னெம்மான் சிராமலை மெல்லியலாய்
நெறியார் மணமுன்பு செய்குவ மேயுண்மை நீமொழிந்தாற்
சிறியாள் சுரத்திடை யேக நகைக்கிடஞ் செய்வித்தொன்றும்
அறியா தவளென வெம்முடன் கூடி யயர்வதென்னே. (எ)

நற்றாய் பாங்கியர்தம்மோடு புலம்பல்.

346. மாயா மலந்தவிர்த் தாள்வோன் சிராமலை வாணுதலாள்
சேயா மொருவள்ளல் பின்னே மலரடி சேப்பவன்பால்
ஓயா வருள்பெறு மாயத் துளீரென்ன வோதுவம்யாம்
காயா ரழற்சுரஞ் சென்றா ணமக்கிடர் காட்டியின்றே. (அ)

நற்றாய் அயலார்தம்மோடு புலம்பல்.

347. போற்றார் புரங்கள் பொடித்தார் சிராமலைப் பூண்முலையைக்
கீற்றார் பிறைநுத லாளை யெனது கிளிமொழியை
மாற்றார் வசையுரை மாறிட மீண்டு வருதல்கண்டால்
ஆற்றா வருந்துய ராறு மதுவன்றி யாறுவதே. (கூ)

நற்றாய் தலைமகள் பயிலிடந்தன்னொடு புலம்பல்.

348. ஊனே யுயிர்நிக ரெம்மான் சிராமலை யூடலவு
மானே பசிய கிளியே யியலின் மயிலினமே
கானே மலர்த்தட மேமல ரார்பொழில் காணமது
தேனே நிகர்மொழி யாளென்று மேவுவள் செப்புமினே. (க0)

---

345. வெறி - நறுமணம். உண்மையை நீமொழிந்தால் மணம் முன்பு செய்திருப்பேமே; மணம் - கல்யாணத்தை. "போரில் நெருப்பை வைத்து ஊரிலுங் கூகூவென்றல்" என்னும் பழமொழியை இச்செய்யுள் நினைப்பிக்கின்றது.

346. சேய் - முருகக்கடவுள். அன்பினால் அருளைப் பெறும்; "அருளென்னு மன்பீன் குழவி" (குறள், 757.) காய் ஆர் - கொதித்தல் நிரம்பிய.

347. ஆறுவதே - ஆறுவதற்கு வழியுண்டா?

348. ஊன் ஏய் உயிர். இயலினையுடைய. கானே - காடே. பொழில் காள்.

### நிமித்தம் போற்றல்.

349. பாயச வூனொடு பாயச மாரும் பலியளிப்பேன்
சேய சடாடவி யெம்மான் சிராமலைச் சேய்நிகராய்
நேய சலாபம் புரிந்துடன் மேவு நிருபனொடும்
வாயச மேயிவ ணெம்மகண் மீண்டு வரக்கரையே. (கக)

### நற்றாய் சுரந்தணிவித்தல்.

350. காலையுங் காய்ந்தெழு முச்சியு மேத்திக் கரங்குவித்து
மாலையும் போற்றுவ னெம்மான் சிராமலை மன்னலர்சேர்
பாலையுந் தாமரை யோடையும் வாவியும் பன்மலர்தோய்
சோலையும் போலவென் மானபோம் வழிசெய் சுடரவனே. ()

### நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக் கிரங்கல்.

351. எங்கு நிறைந்தரு ளெம்மான் சிராமலை யேந்திழைசீர்
பொங்கு மலர்ப்பதம் பூமேன் மிதிக்கிற் பொருதயர்வாள்
கங்குலி னும்பகல் போற்றெறு பாலையிற் கல்லழன்மேல்
அங்கு வருந்தி நடந்திட வோதவ மாற்றினனே. (கந)

### நற்றாய் தன்மகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந் திரங்கல்.

352. பெண்பா லமர்ந்தரு ளெம்மான் சிராமலைப் பேதையன்பால்
உண்பா யெனவமு தூட்டவொர் பாவைக் குணமையினுற்
கண்பாய் புனலோ டெனையழைத் தூட்டெனக் காட்டுமவள்
பண்பா யொருவ னுடன்செல வந்ததெப் பான்மையதே. (கச)

---

**349.** பாய் அச ஊனொடு - பாய்ந்துசெல்கின்ற ஆட்டின் தசையோடு. பாயசம்=பாயஸம் - ஒருவகை இனிய உணவு. சேய - சிவந்த. சேய்நிகராய் - முருகக்கடவுளை ஒத்து. சலாபம் - சல்லாபம். வாயசமே - காக்கையே. இவண் - இவ்விடத்தே.

**350.** மன்னலர் - விரும்பித்தங்காதவர். பாலையும் - பாலைநிலத்தையும்; உம்மை, இழிவுசிறப்பு. சுடரவனே - சூரியனே; இவன் பாலைநிலத்திற்கு உரிய தெய்வம். வழிசெய் - வழியைச் செய்வாயாக.

**351.** ஏந்திழை அயர்வாள். கல் - பருக்கைக் கற்கள்.

**352.** ஓர் பாவைக்கு அமுதூட்ட. வந்தது - வந்த விருப்பம். எப்பான்மையது - எத்தன்மையது.

அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்.

353. பற்றே தவிர்த்தெமை யாள்வோன் சிராமலைப் பாவைநல்லாள்
சற்றே யொருவர் நொடித்தாற் பயந்து தளர்ந்தயர்வாள்
உற்றே வனத்திடை மேவிடும் போதங் குறுமதமாச்
சுற்றே முழங்கினென் னுங்கொலென் றென்னுயிர் சோர்கின்றதே. ()

கண்டோர் இரக்கம்.

354. பூதி யணிபுயத் தெம்மான் சிராமலைப் பூங்குழலாள்
சோதி மலர்முகங் காணாது பாங்கியர் துன்பமுறக்
கோதி னவமணி யார்கழங் காதியைக் கூர்ந்துகண்டு
பாதி மதிநுதற் றாய்முகம் வாடிப் பதைத்திடுமே. (கசு)

செவிலி ஆற்றுத்தாயைத் தேற்றல்.

355. சேய்க்கு நிகருமொ ரேந்தல்பின் போகின் றிருமகளைத்
தாய்க்கு நிகரென வந்தோன் சிராமலைத் தாணுவொளிர்
வேய்க்கு நிகர்தரு தோளுமை பாகன் விறல்விடையின்
வாய்க்கு ளடங்கிடம் யாவுந் துருவி வருவிப்பனே. (கஎ)

செவிலி முக்கோற் பகவரை வினாதல்.

356. ஒருகோ லிருநிலத் தூன்றிமுக் கோலொடு முண்மையினாற்
பொருகோ தெனுமைந்தை யாறே டகற்றிய பூசுரர்காள்
பெருகோத மார்கடு வுண்டோன் சிராமலைப் பேதைமின்னேய்
வருகோல மோடொரு காளைமுன் னேயிங்கு வந்ததுண்டே. ()

---

353. நொடித்தால் - கையை நொடித்தால். என்னுங்கொல் - என்ன நிலையை அடைவாளோ?

354. பூதி - திருநீறு. கழங்கு - கழற்சிக்காய்; நவமணிகள் இழைத்த கழங்கு.

355. விடையென்றது திருமாலை; 'வாய்க்குள் அடங்கும் இடம்' என்றது உலகமுழுவதையும்; "உலகமுண்ட பெருவாயா" (திவ்.) திருமகளை வருவிப்பன்.

356. ஒருகோல் - ஊன்று கோலை. முக்கோல் - திரிதண்டம். கோது எனும் ஐந்தை - ஐம்புலங்களை; பஞ்சக்கிலேசங்களெனினுமாம். ஆறு - காமம் முதலிய அறுவகைக் கடும்பகை. பெருகு ஓதம் - கடல். கடு - விடம். மின் ஏய் - மின்னை ஒத்த. பேதை இங்கு வந்ததுண்டே; ஏ: வினா.

### மிக்கோர் ஏதுக்காட்டல்.

357. அல்லார் தருகளத் தெம்மான் சிராமலை யாயிழையாய்
கல்லார் மணியுறு பொன்னார் பணிகள் கவின்மருவ
வல்லார் குவிமுலை மீதேய் வறிந்தும் வருந்துவதென்
வில்லார் நுதற்றிரு மாலா மிறையொடு மேவுதற்கே. (கக)

### எயிற்றியோடு புலம்பல்.

358. அரவ மதியணி யெம்மான் சிராமலை யாயிழைதன்
குரவ ரொடுமெனை யாயத்தை நீத்தோர் குரிசிலன்பு
விரவ நடந்தன ளாலிச் சுரத்திடை மேவினளோ
மரவ மலர்க்குழ லாயுரை யாய்செய்ய வாய்திறந்தே. (உ0)

### குரவோடு புலம்பல்.

359. அரவே பணியென வாழ்வோன் சிராமலைக் கன்பிலர்போற்
கரவே புரிந்தெழின் மானையோர் கள்வன் கவர்ந்துனெதிர்
வரவே கலிரென வன்னவர் முன்னர்நின் வாய்திறவாக்
குரவே யழகிது பாவையை நீபெறுங் கொள்கையதே. (உக)

---

357. கல்லார் மணி - மலையினிடத்தே தோன்றிய மணிகள்; "கற்பா லுமிழ்ந்த மணியும்" (சீவக. 4.) ஏய்வு அறிந்தும் - பொருந்துதலை அறிந்தும். மலையிற் றோன்றிய மணி தான் தோன்றிய இடத்திலே இராமல் பொன்னா பரணத்தோடுகூடி மகளிர்மார்பிற் பொருந்தியதுபோல நும்மாற் பெறப்பட்ட தலைவி நும்மிடத்தே இராமல் தலைவனுடன் சென்றது உலகியல்பேயென்பது கருத்து. திரு - தலைவி. மாலாம் இறையொடு திரு மேவுதற்கு வருந்துவது என்?

பி-ம். 'மீதேயணிந்தும்.'

358. குரிசிலின் அன்பு.

359. பணி - ஆபரணம்; அரவே பணி யென்றது ஒரு நயம். கரவு - திருட்டு. ஏகலிர் - செல்லாதீர்கள். அழகிது: குறிப்பு; அழகன்று என்றபடி. குரவு - குராமரம். குரவம்பூ பாவையைப்பேர் விருத்தலின் பாவை நீபெறும் கொள்கை என்றார்; "தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப, ஈன்றாய் நீ பாவை யிருங்குரவே" (திணைமாலை நூற்றைம்பது, 65); "குரவம் பாவை கொண் டோலுறுத் தாடியும்" பெருங். 2. 14: 19.

சுவடுகண்டிரங்கல்.

360. செவ்வீ ரடியுமை பாகன் சிராமலைச் செந்நெறிவாய்
அவ்வீ ரடியன்பர் நேரடி யாகு மணிதிகழும்
இவ்வீ ரடிவஞ்சி தன்னடி யாகு மிவற்றயலாம்
உவ்வீ ரடிபன் மறவோ ரடியிங் குணர்ந்திடினே. (உஉ)

கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

361. சேயனை யானொடு மேவுமின் னேயன்பர் தேறவருள்
தாயனை யானனை யாள்வோன் சிராமலைத் தாழ்குழன்மா
லேயனை யானொடு சென்றன ளோசுரத் தேயெனைப்போல்
ஆயனை யான்பிரி கன்றென வாடி யரற்றிடவே. (உஙு)

கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்.

362. பொன்னே யெழிற்சடை யெம்மான் சிராமலை போற்றுமித்தாய்
இன்னே யிருவ ருமைநிகர் வாரிவ ணெய்தினரோ
முன்னே யெனவுரை யாடினள் கண்டனன் மொய்ம்பனையான்
மின்னே யனையென்கொல் சொல்லிய வாறு விளம்புகவே.(உச)

---

360. பாலைநிலம் செந்நிறமாயிருத்தல்பற்றிச் செந்நெறி யென்றார்; "செம்புருக்கி, வார்த்தா லனைய வழிநெடும் பாலை" (தஞ்சை. 267); "அழல் வாய்க்குகையிற், செம்புருக் கிச்சொரிந் தாலன்ன பாலை" (நெல்லைவருக்கக் கோவை, 15.) உ என்பது இடையிலுள்ளவற்றை உணர்த்தும் இடைச்சொல். செய்யுட்குரிய அடிகளுட் சிலவாகிய நேரடி, வஞ்சியடியென்பன இதில் தொனிக்கின்றன.

பி-ம். 'வஞ்சி சீறடி'.

361. மாலே யனையானொடு - திருமாலை ஒத்த ஒரு தலைவனோடு. எனைப்போல் ஆய் - என்னைப்போல ஆராயும். அனே - நற்றாய். ஆன் பிரிகன் றென. அனை அரற்றிட.

362. பொன் ஏய்-பொன்னை ஒத்த. இத்தாயானவள் உரையாடினள். யான் மொய்ம்பனைக் கண்டனன். மின்னேயென்றது தன் மனைவியை. அனை சொல்லியவாறு என்கொல். "மீண்டா ரெனவுவந் தேனும்மைக் கண்டிந்த மேதகவே, பூண்டா ரிருவர்முன் போயின ரோபுலி யூரெனைநின், றாண்டா னருவரை யாளியன் னானைக்கண் டேனயலே, தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல்லியதே" (திருச்சிற். 244) என்பதைப் பின்பற்றி வந்தது இச்செய்யுள்.

புதல்வியைக் காணாது கவலை கூர்தல்.

363. தன்னை நினைப்பவர் தம்மான் சிராமலைச் சாரலில்வாழ்
மின்னை யழற்சுரத் தெங்கணுங் காண்கிலன் மீளினன்னை
என்னை யினித்தனி காணி னிறந்திடு மேங்கியந்த
அன்னை யிறப்பதன் முன்யா னிறப்ப தறனுடைத்தே. (உரு)

## உகூ. மீட்சி.

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

364. மாதார் தருமிடப் பாகன் சிராமலை வாணுதலைத்
தீதார் தருவினை யேனெங்குங் காண்கிலன் றேடியன்னே
போதார் தருதொடை வேயுமொர் வேலவன் பூந்தடந்தேன்
தாதார் தருபொழில் சூழ்தன் னகர்கொண்டு சார்ந்தனனே.(க)

தலைவன் தம்மூர் சார்ந்தமை தலைவிக்குச் சாற்றல்.

365. பின்னுஞ் சடைக்கற்றை யெம்மான் சிராமலைப் பேதைகடம்
துன்னும் பொழுதிளைப் பாறிய காவது தூநெறியே
உன்னுந் தபோதன ராசி யுரைத்த வுழியதுநாம்
மன்னுந் திளைப்புன மீதுநின் செல்வ மனையதுவே. (உ)

தலைவி முன்செல்வோர்தம்மொடு தாம்வரல்
பாங்கியர்க்கு உணர்த்திவிடுத்தல்.

366. ஆறணி செஞ்சடை யெம்மான் சிராமலைக் கார்வமிகும்
நீறணி வேதியர் காளனை நேடி நெடிதயரும்
வீறணி பூண்முலைப் பாங்கியர் தாமகிழ் மேவவரி
ஏறனை யானொடு மெய்தின னீர்சென் றியம்பிடுமே. (ந.)

---

363. நினைப்பவர் தம்மான்-நினைப்பவரைப் புரப்பவன். தனி காணின்-தலைவியில்லாமல் என்னைக் கண்டால். இறந்திடும் - இறந்திடுவாள்.

364. தேடிக் காண்கிலன். தேன் தாது ஆர் தரும் - வண்டுகள் தாதை உண்ணுகின்ற. வேலவன் சார்ந்தனன்.

365. பேதை: விளி. கடம் துன்னும்பொழுது - பாலைநிலத்திற் சென்ற காலத்தில். தூநெறியே - நல்லவழியையே. உழி - இடம்.

366. வீறு அணி - வீற்றுத்தெய்வத்தை அணிந்த; 'திரு - முலைமேற் றோன்றும் வீற்றுத்தெய்வம்' (சிலப். 2: 69, அடியார்.); "ஆமணங்கு குடியிருந் தஞ்சுணங்கு பரந்தனவே" (சீவக. 171, ந.) அரியேறு அனையான் - தலைவன்.

### முன்செல்வோர் பாங்கியர்க் குணர்த்தல்.

367. அன்றே யெமைத்தடுத் தாண்டோன் சிராமலை யாயமின்காள்
நன்றே மகளிர்க்குக் கற்பெனும் வாய்மை நயந்திருதோள்
குன்றே யனையவொர் காளைபின் போமயில் கூர்ந்தருளால்
இன்றே வருமந்த வேந்துட னீர்நைந் திரங்கலிரே. (ச)

### பாங்கியர் கேட்டு நற்றாய்க் குணர்த்தல்.

368. நந்தார் கரன்றொழு நம்மான் சிராமலை நான்மறையோர்
வந்தா னுமது திருமுனங் கானிடை வாரணத்தைச்
சிந்தா வணைத்தருள் சிங்கமொ டிங்கெனச் சென்றுரைத்தார்
எந்தா யுனது தவமெங்கள் பாக்கிய மீதெனவே. (ரு)

### நற்றாய் உளங்கோள் வேலனை வினுதல்.

369. நாலா ரணந்தொழு நம்மான் சிராமலை நாடிவரும்
மாலா மவனென் றிருவொடு மென்மனை வைகிடுமோ
சேலார் விழியினைத் தன்மனைக் கேகொண்டு சென்றிடுமோ
வேலா வெனதுளந் தேற வருள்செய வேண்டுவனே. (சா)

## உச. தன்மனை வரைதல்.

### பணிமொழிநற்றாய் மணனயர்வேட்கையிற் சேவிலியை வினுதல்.

370. நம்மனை யேயவர் நாடிவந் தெய்தினு நாமிறைவர்
தம்மனை மேவி மகிழ்வுறு மன்னையர் தாம்வரவிங்
கெம்மனை மாமணஞ் செய்வ தியல்பதற் கேய்வனசெய்
அம்மனை யாளிடம் வாழ்வோன் சிராமலை யாயிழையே. (க)

---

367. ஆயமின்காள் - ஆயமகளிரே; மின் - மின்போன்ற மகளிர். வாய்மையை நயந்து. வரும் - வருவாள். அந்த வேந்துடன் - அந்தத் தலைவனுடன்.

368. நும்முடைய திரு வந்தாள். சிந்தா - சிந்தி. சிங்கமென்றது தலைவனை. நான்மறையோர் உரைத்தார். எம் தாய் - எம்முடைய தாயே. சிங்கமொடு நும்முடைய திரு வந்தாள் என நான்மறையோர் உரைத்தார்.

369. வைகிடுமோ - தங்குவாளோ.

370. அன்னையர் - தலைவனுடைய தாய்மார். ஏய்வன - பொருந்துவன. அம்மனையாள் - அத் தேவி. இடம் வாழ்வோன் - இடப்புறத்தே வாழப் பெற்றவன்.

வரைந்தமை செவிலிக்கு இகுளை உணர்த்தல்.

371. யானே தியம்புவ திவ்வன்னைக் கன்னை யியன்முறையால்
மானே நிகர்விழி பாகன் சிராமலை வாழ்மயிலைத்
தேனே யலர்மண மாலிகை வேய்ந்துதன் சீர்நகர்வாய்க்
கோனே மணந்தன னென்றுவந் தோர்சிலர் கூறினரே. (உ)

வரைந்தமை செவிலி நற்றாய்க் குரைத்தல்.

372. இந்தமர் வேணிய ரெம்மான் சிராமலை யேத்துமன்பர்
தந்தமர் சூழ்ந்திடத் தம்பதி வாய்மணந் தாம்புரிந்து
பந்தமர் பூண்முலை யாளொடு மீண்டுப் படருமுறை
நந்தமர் போற்றிடு மன்னேமுன் றாதர் நவின்றனரே. (ந)

தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு
இயம்பு சென்றேன்றல்.

373. வேதியர் வாழ்த்தி யவியெரிக் கூட்ட விளங்கிழையை
நீதிய தாமணஞ் செய்துவந் தோமிந்த நீர்மையுமை
பாதியர் மேவுஞ் சிராமலை மீதுன் பயில்கிளைஞர்
ஆதியர் யாவரு மோர்ந்திடக் கூறுக வாயிழையே. (ச)

தான் அது முன்னே சாற்றினன் என்றல்.

374. நாகம் புனைந்தரு ளெம்மான் சிராமலை நன்னுதலைப்
பூகந் தரளம் பொழிபுன லூர்கொடு போய்க்கிளைமுன்
யாகம் புரிந்தவ ணீமணஞ் செய்தமை யாவுமுனம்
மேகந் திகழ்குழற் றாயர்க்கும் யார்க்கும் விளம்பினனே. (ரு)

---

371. யான் ஏது இயம்புவது - யான் என்ன சொல்லுவது. இவ்வன்னைக்கென்றது நற்றாயை. அன்னையென்றது தன்தாயாகிய செவிலியை. தேன் ஏய். கோன் மணந்தனன்; ஏ: அசைநிலை.

372. இந்து - சந்திரன். அன்பர் படரும் முறையை நவின்றனர்; படர்தல் - செல்லுதல்.

373. அவி - தேவருணவை. இந்த நீர்மையைக் கூறுக.

374. பூகம்-கமுகமரம். யாகம் புரிந்து-அக்கினிகாரியங்களைச் செய்து. அவண் - அவ்விடத்தில்.

## உரு. உடன்போக்கிடையீடு.

### நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செலவு உணர்த்திவிடுத்தல்.

375. ஆடுந் திருநடத் தெம்மான் சிராமலை யாங்குச்செல்வீர்
நீடுங் கதிர்வடி வேற்பெரு மானுட னேயமுற்றிக்
காடுங் கடந்துவெம் பாலையு நீந்தினள் கற்பினெனல்
வாடுங் கொடியிடைப் பாங்கியர் யார்க்கும் வழங்குமினே. (க)

### தலைவி தன்சேலவு ஈன்றாட்கு உணர்த்தி விடுத்தல்.

376. ஓங்கத்த மார்மழு வாளன் சிராமலை யோர்மறையீர்
தாங்கத் தகாவயர் வாலெனைத் தேடித் தளரனைபால்
நீங்கத் தகாவன்பர் தம்முடன் றேர்மிசை நீடிவெப்பம்
வீங்கத்த மார்சுரத் தேகிடு மாறு விளம்புமினே. (உ)

### நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்.

377. முருந்ததி வாலெயிற் றாளொரு வேளொடு மூளுமன்பு
திருந்ததி காரி யெனச்சுரஞ் சென்றனள் சீர்வடமீன்
அருந்ததி யானதுன் மான்பாலின் கற்பினுக் கன்பருளம்
இருந்ததி யாகப் பிரான்றன் சிராமலை யேந்திழையே. (ங)

---

375. பெருமானுடன் - தலைவனுடன். முற்றி - முதிர்ந்து. எனலை வழங்குமின்.

376. ஓங்கு அத்தம் - உயர்ந்த வலத்திருக்கரம். அயர்வால் - வருத் தத்தால். அத்தம் ஆர் - அருநெறிகள் பொருந்திய. ஏகிடும் ஆற்றை அனைபால் விளம்புமின்.

377. முருந்து அதி வால் எயிற்றாள் - மயிலிறகின் அடிக்குருத்தைக் காட்டிலும் மிக வெண்மையான பற்களையுடைய தலைவி; அதியென்பது வட சொல்லுள் மிகுதிப்பொருளதோ ரிடைச்சொல்; "மதிநுட்ப நூலோ டுடை யார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பவை" (குறள், 636.) அதிகாரியென - அதிகாரத்தையுடையவளென்று சொல்லும்படி. சீர் - ஒப்பு. அருந்ததி ஆகிய வடமீன் உன் மான்பாலின் கற்பினுக்கு ஒப்பானது.

### தமர் பின்சேறலைத் தலைவி கண்டுரைத்தல்.

378. வாருறு பூண்முலை பாகன் சிராமலை வாழுமெமர்
சீருறு செங்கதி ரோனெழிற் றேரினைச் சென்றுசுற்றிக்
காருறு மாறெனக் கார்முகத் தாலம்பு காலப்பெய்து
போருறு வானன்பர் தேர்சூழ்ந் தனர்சினம் பொங்கிடவே. (ச)

### தலைவன் தலைவியை விடுத்தல்.

379. வெருவேன் மறவ ரெனினொரு வாளியின் வீட்டியின்பம்
தருவே னினதைய ராமெனி னஞ்சுவன் சார்ந்துவெல்ல
மருவே கமழு மலர்க்குழ லாரளி வாய்ந்தொலிப்பத்
திருவே விரைவுட னெம்மான் சிராமலை சேருகவே. (ரு)

### தமருடன் செல்வோள் அவன்புறம்நோக்கிக் கவன்று அரற்றல்.

380. கான்படர் வேடரைக் காய்ந்தநம் மன்பர்முன் காட்டுமெமர்க்
கூன்படர் வேலொடு பின்காட்டுந் தேர்செல வூர்புரவி
தேன்படர் சோலைச் சிராமலை யீசர் திருவருளால்
வான்படர் பானு மதியுள காலமும் வாழியவே. (சு)

## உசு. வரைதல்.

### தலைவன் வரைந்துழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.

381. குருவே யெனவரு ளாலுரு வாயன்பர் கூட்டமுய்த்துக்
கருவே ரறுத்தெமை யாண்டோன் சிராமலைக் காரிகைதான்
திருவே யிவன்றிரு மாலே யெழின்மணச் சீர்மைகண்டிங்
குருவே யிமையவ ராஞே மிமைப்ப தொழிதலினே. (க)

---

378. சூரியன்தேரை மேகம் அம்பு (நீர்) பெய்து சூழ்ந்தாற்போல எமர் அன்பர் தேரைச் சூழ்ந்தனர்; அம்பு: சிலேடை.

379. மறவரெனின் வெருவேன்; மறவர் - பாலைநிலத்தவர். உன் தமையன்மாராகிய வேடர்களாயிருந்தால் சார்ந்துவெல்ல அஞ்சுவன். குழல் ஆர் அளி - கூந்தலில் ஆர்ந்த வண்டுகள்.

380. வேடரை முன்பு காய்ந்த நம் அன்பர்; இஃது உடன்போக்கின் கண் முன்பு நிகழ்ந்த செய்தி. "உவ்வீ ரடிபன் மறவோ ரடியிங் குணர்ந் திடினே" (359) என்றார் முன்னும். "மன்போரி ணுண்மைக் கிடைந்தோடி ணரடி மாவடியே" (தலோத். கோவை, 395.) புரவிகள் வாழிய.

381. கூட்டம் உய்த்து - கூட்டத்தில் அடியேனைச் செலுத்தி. உரு ஏய் - அழகு பொருந்திய.

## உஎ. இல்வாழ்க்கை.

### தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.

382. மின்னுரு நுண்ணிடை பாகன் சிராமலை மெல்லியலாய்
எந்நாளு நாமிட ரின்றியன் பாக வினியவின்பம்
பொன்னுரு மாலு மெனவுற்று வாழப் புரிந்ததனாற்
பன்னுரு நாஞ்செய் தவப்பய னேயிந்தப் பான்மொழியே. (க)

### தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

383. தன்னம் புயரடி யார்வாழ் சிராமலைச் சங்கரன்பால்
அன்னம் புயனடைக் கூந்தலுற் றோனரு ளாங்குயிற்கு
நின்னம் புயமலர் மாலை யணிந்தனை நீயிவணப்
பொன்னம் புயமனை யாளொடும் வாழி புரவலனே. (உ)

### வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினுதல்.

384. கானக் கடுக்கை யணிந்தபெம் மான்றென் கயிலைவெற்பில்
ஏனற் புனத்தைப் புரப்பது மாற்றிநம் மில்லினமர்
மானச் சிறைசெய்த போதும்பி னன்பர் வரையுமட்டும்
நானக் கருங்குழ லெங்கொளித் தாயின்ப நல்குமன்பே. (ங)

### தலைமகள் வருந்தாதிருந்ததற்குக் காரணங் கூறல்.

385. நஞ்ச மிளிர்களத் தெம்மான் சிராமலை நன்னுதலாய்
அஞ்ச லெனவன்பர் சொன்னசொன் னொடி யருண்மிகுமுன்
தஞ்ச மதுபுனை யாக்கொண் டனுதினந் தானெனது
நெஞ்ச நிலையில தாகு மயற்கட னீந்தினனே. (ச)

---

382. மெல்லியலாயென்றது தலைவியை நோக்கி. பொன்னுரும் - திருமகளும்.

383. தன்னை நம்பிய உயர்ந்த அடியார்கள். பால் - பக்கத்தில். அன்னம்போன்ற நடையையும் புயல்போன்ற கூந்தலையும் உடைய உமா தேவியார் பொருந்தப்பெற்றவர். குயிற்கு - குயில்போன்ற தலைவிக்கு. நின்னுடைய அழகிய புயத்திலுள்ள மலர்மாலையைக் குயிற்கு அணிந்தனை. பொன் அம்புயம் மனையாள் - பொற்றாமரைப்பூவை இடமாக உடைய திருமகளைப்போன்ற தலைவி.

384. கானம் - முல்லைநிலம். மான - நாண; "நாவி மான மணங் கமழ்ந்து" (தக்க. 34, உரை.) அன்பை எங்கு ஒளித்தாய்?

385. களம் - கழுத்து. தஞ்சமது - பற்றுக்கோட்டை; அது : பகுதிப் பொருள்விகுதி. நெஞ்சம் நிலையிலதாதற்குக் காரணமாகிய மயற்கடலை.

தலைவனைப் பாங்கி வரையுநாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினுதல்.

386. அணிதிகழ் பூண்முலை தோளுற நீங்கா தணைத்துமயற்
பிணிதிகழா தின்பம்பெற்றும்வெறுப்பின்றிப்பெட்பமைவாய்
பணிதிகழ் வார்சடை யெம்மான் சிராமலைப் பான்மொழியை
மணிதிகழ் மார்ப வுறுநாண் மயலெங்ஙன் மாற்றினையே. (ரு)

பாங்கி மணமனைச் சென்ற சேவிலிக்கு இருவ ரன்பும் உரைத்தல்.

387. பண்ணு ரிசையெனப் பாலார் சுவையெனப் பாவைதிகழ்
கண்ணு ரொளியெனப் பெம்மான் சிராமலைக் காரிகையும்
தண்ணார் மலர்த்தொடை யண்ண லு மாரத் தழுவியன்னே
விண்ணு ரிமையவ ரின்பமுங் கீழுற மேவினரே. (சு)

இல்வாழ்க்கை நன்றெனப் பாங்கி சேவிலிக் குணர்த்தல்.

388. தன்னைப் புரந்து தலைவனைப் பேணித் தகைபெறுசொல்
மன்னப் புரந்து விருந்தோம்பிச் சோர்வகன் மாண்பமைந்து
பொன்னைப் புரைநின் மகளில் லறநன்கு போற்றலுற்றாள்
என்னைப் புரந்தரு ளெம்மான் சிராமலை யேத்துமன்னே. (எ)

---

386. அணைத்தும். பெட்பு அமைவாய்-விருப்பம் அமைந்த தலைவனே. உறுநாள் - அடையாத காலத்தில்.

387. என இருவரும் ஆரத் தழுவி.

388. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற் காத்துச் சோர்விலாள் பெண்" (குறள், 56) என்பதன் கருத்து இதன் முதலிரண்டடிகளில் அமைந்துள்ளது. பொன்னை - திருமகளை. இல்லறத்தை.

மணமனைச் சென்றுவந்த செவிலி பொற்றேடி கற்பியல் நற்றாய்க் குரைத்தல்.

389. தூய கடவுள் கொழுநனென் றேத்தித் தொழுதெழுந்து
நேய மொடுமுன முண்டபி னுண்டு நினதுமகள்
பாய லிடைத்துயில் கொள்ளத் துயிலுமெய்ப் பண்புபெற்றாள்
மாய னயன்றொழு மெம்மான் சிராமலை வாணுதலே. (அ)

செவிலி நற்றாய்க்குத் தலைவி மனைவாழ்க்கைத்தன்மை உணர்த்தல்.

390. பாக முறவுண வாக்கிமுன் யார்க்கும் பரிந்தளித்து
மாக முறுவள மோங்கவில் வாழ்க்கையின் மாண்புபெற்றாள்
நாக மணிசடை யெம்மான் சிராமலை நாயகிநின்
மோக மகள்வட மீனென யாரு மொழிந்திடவே. (கூ)

செவிலி நற்றாய்க்கு இருவர்காதலும் அறிவித்தல்.

391. பாச மிகந்துயிர் தென்கயி லாச பதியையன்னே
நேச முடனணைந் தானந்த மார்ந்திடு நீர்மையென்ன
வாச மலர்க்குழ லாளு மிறையு மகிழ்ந்தணைந்து
பேச வரிய சுகானந்தத் தென்றும் பிறங்குவரே. (கo)

---

389. கொழுநனே கடவுளென் றேத்தி; "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" (நீதிநெறி. 27.) தொழுதெழுந்து: "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" (குறள், 55); உண்டபின் உண்டு...........பண்புபெற்றாள்: "அடிசிற் கினியாளை யன்புடை யாளைப், படுசொற் பழிநாணு வாளை - அடிவருடிப், பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால், என்றூங்குங் கண்க ளெனக்கு" (தொல். கற்பு. சூ. 12, ந. மேற்.); "சிறுகாலை யட்டில்புக லருத்தியுறச் சமைத்தல்சுவை திருத்தி யூட்டல், மறுகாலை யென்னாது விருந்தமைத்தன் மகப்பெறுதன் மடனாணச்சம், பெறுகாலை யின்புறுதல் முன்னுறங்கப் பின்னுறங்கல் பின்னெழாதல், உறுகாலை தொழுதெழுதல் பன்னிரண்டு மங்கலர்க்கற் புடையோர் செய்கை" திருக்குற்றலப். திருநகரச்.31.

390. பாகம் - பக்குவம். முன் அளித்து. மாகம் உறு வளம் - தேவருலகச் செல்வம். மொழிந்திட மாண்புபெற்றாள்.

391. உயிர் ஆர்ந்திடும் நீர்மையென்ன.

## உ௮. பரத்தையிற் பிரிவு.

காதலன் பிரிவுழிக் காண்போர் புலவிக்கு ஏதுவிதாம் இறைவிக் கேன்றல்.

392. மழுவார் தருகரத் தெம்மான் சிராமலை வாணுதலாட்
கெழுவார் தருபுய மன்னன் பவனிக் கெழுந்தருளச்
செழுவார் சிலைகணை தேர்யானை கொண்டிங்குச் சேரிமின்னார்
குழுவார் தரமகிழ் கோடலி னூடுதல் கூர்தருமே. (க)

தனித்துழி இறைவி துனித்தழு திரங்கல்.

393. யாரொடு நான்சொல்லி யாறுவ னித்துயர் யார்பொறுப்பார்
ஆரொடு மாறணி யெம்மான் சிராமலை யன்னமன்னன்
தேரொடு மேக மதன்கணை மாரி தெறச்சொரிய
ஏரொடு கண்படை நீங்கி மயற்கட லெய்தினனே. (உ)

ஈங்கிது வென்னெனப் பாங்கி வினுதல்.

394. சேற்றார் கமல மலர்வய லூரனைச் சேர்ந்துதவப்
பேற்றா லனுதின நீங்காமற் பேரின்பம் பெற்றிருந்தும்
நீற்றா லிருவினை தீர்ப்போன் சிராமலை நேரிழையாய்
ஆற்றா வருந்துய ரான்மிக வாடி யயர்வதென்னே. (ங)

இறைமகன்புறத்தொழுக்கு இறைவி பாங்கிக் குணர்த்தல்.

395. கொந்தார் குழற்பொது மாதரை வேட்டன்பர் கூருளாற்
றந்தா ரளித்தெனை நீத்தார் கவிஞர் தமிழ்த்தொடையைக்
கந்தார் களிற்றுரி யார்தென் கயிலைக் கருத்தர்க்கன்றிப்
பந்தார் குவிமுலை யாய்பிறர்க் காக்கும் பரிசெனவே. (ச)

---

392. எழு - யானையைத்தடுக்கும் கணையமரம். செழு - செழுமை; "செழுவார் கழல்" (சிற். 142.) பரத்தையர் புருவம் கண் முதலியவைகள் சிலை முதலியனவாக உருவகிக்கப்பட்டன. தலைவன் மகிழ்கோடலின், வாணுதலாட்கு ஊடல் கூர்தரும்; கூர்தரும் - மிகும்.

393. ஆரொடும் - ஆத்திமலருடன். மன்னன் தேரொடும் ஏக. மதன் சொரிய. ஏரொடு கண்படை நீங்கி; ஏர் - அழகு; கண்படை - தூக்கம். மாரி சொரியக் கடல் எய்தினனென்பது ஒரு நயம்.

394. நீ பெற்றிருந்தும்.

395. கொந்து - பூங்கொத்து. வேட்டு - விரும்பி. தம் தார் - தம்முடைய மாலையை. கவிஞர் பிறர்க்கு ஆக்கும் பரிசென்னப் பொது மாதரைவேட்டு நீத்தார் என இயைக்க.

தலைவியைப் பாங்கி கழறல்.

396. திடமார் தருகற்பி ளூற்றம தன்பர் செயலளிபூந்
தடமார் மலரன்றி வச்சிர மேவுமத் தன்மையென்று
வடமார் குவிமுலை யார்மகிழ்ந் தில்லற மாண்பினிற்பார்
விடமார் தருகண்டத் தெம்மான் சிராமலை மெல்லியலே. (ரு)

செவ்வணி யணிந்து சேடியை விடுத்தல்.

397. சேய களபந் துகிர்செந் துகிலுடை செம்மலரால்
ஆய தெரியல் புனைந்தெழில் செய்தோ ரணியிழையை
நேய மொடுசெல வுய்த்தாள் பரத்தையர் நீண்மறுகில்
தூய மறைப்பொரு ளெம்மான் சிராமலைத் தூமொழியே. (சா)

அவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறல்.

398. அவ்வண்ண மாகிய வெம்மான் சிராமலை யாயிழையாள்
செவ்வண்ண முற்றதன் சீர்வண்ணங் காதலர் தேர்ந்துவர
உவ்வண்ண மோர்மட மாதர்க் கணிந்திவ ணுய்த்தனளேல்
இவ்வண்ண மெவ்வண்ண மென்றே பரத்தைய ரேசுவரே. ()

பரத்தையர் கண்டு பழித்தல்.

399. பூமா தெனத்தனை யாவருந் தேர்ந்திடப் பூங்கமல
மாமா தனையகம் மூரன் மனைவி மகிழ்ந்துசிவப்
பாமா றணிந்தொரு சேடியை யேவலென் னற்புதநம்
கோமா னுமையிடம் வாழ்வோன் சிராமலைக் கோதையரே. ()

---

396. அளி - வண்டு. வச்சிரம் - சதுரக்கள்ளி. தலைவர் செயலானது வண்டுகள் தடத்திலுள்ள மலரிலன்றிக் கள்ளிமலரிடத்தும் செல்லுமென்னும் தன்மையைப் போன்றதென்றெண்ணி. தலைவனுக்கு வண்டு உவமை.

397. சேய - சிவந்த. களபம் - கலவைச்சாந்து. துகிர் - பவழம். மறுகில் உய்த்தாள். தூமொழி - தலைவி. தூமொழி உய்த்தாள்.

398. அவ்வண்ணம் - அகரத்தின் இயல்பு; "அகர வுயிர்போ லறிவாகி யெங்கும், நிகரிலிறை நிற்கு நிறைந்து" (திருவருட்பயன், 1.) சீர்வண்ணத்தை. உவ் வண்ணம் - இந்தவிதமாக.

399. பூமாது - பூவின்கண் உள்ள மாது, பூத்தலையுடைய மாது; சிலேடை. என் அற்புதம் - என்ன ஆச்சரியம்.

### பரத்தை உலகியனோக்கிவிடுத்தலின் தலைவன்வரவுகண்டு உவந்து வாயில்கள் மொழிதல்.

400. மையா ரயில்விழி யான்மயல் பூட்டு மயிலனையார்
பொய்யார் புணர்வுறு காதலர் சேடி புதுமைகண்டு
பையா டரவணி யம்மான் சிராமலைப் பான்மொழியாய்
மெய்யா ருலகிய னோக்கியிங் கெய்தலின் மெய்ம்மையரே. ()

### தலைமகன்வரவு பாங்கி தலைமகட்குணர்த்தல்.

401. கன்றார் கரத்துப் பரத்தையர் பாலுளங் காதலித்துச்
சென்றார் விரைந்தின்று நம்மனை வாசற் றெருவின்வந்து
நின்றா ரவரை முனியா தெதிர்கொடு நீகனக
மன்றார் சிராமலை மானே பணிவது மாண்புடைத்தே. (கo)

### தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்.

402. பேராத பேறரு ளெம்மான் சிராமலை பேணுமன்பர்
வராத போதெனை வாட்டும் பசப்பு வரமகிழ்வால்
ஆராத காத லருளி யகன்றிடு மாயின்மின்னே
சோராத நின்மொழி நீப்பதெவ் வாறினிச் சொல்லுகவே. ()

### புணர்ச்சியின் மகிழ்தல்.

403. கார்வளர் சோலைச் சிராமலை யீசர் கழன்மருவிச்
சீர்வளர் பேரரு ளாலின்ப முற்றவர் சீர்மையென
வார்வளர் பூண்முலை மான்மகிழ் வெய்த மருவிமிகக்
கூர்வளர் காதலின் யானின்ப முற்றதென் கூறுவனே. (கஉ)

---

400. புதுமை - செவ்வணியணிந்து வந்தமை. காதலர் இங்கு எய்தலின் மெய்ம்மையர்.

401. கன்று - வளையல். சென்றார் - சென்ற தலைவர். நீ எதிர்கொடு பணிவது மாண்புடைத்து.

402. வர - தலைவர் வர. பசப்பு அகன்றிடுமாயின்.

403. மான் - தலைவி. யான் உற்ற இன்பத்தை யாது கூறுவன்.

### வெள்ளணி யணிந்து விடுத்தல்.

404. திகழ்தரு மாரந் தளவுவெண் டூசுபல் சேடியரோ்
நிகழ்தரு மாறு புனைந்துசென் றூரன்பர் நேருறப்பண்
டிகழ்தரு காலனைக் காய்ந்தோன் சிராமலை யேந்திழையாள்
புகழ்தரு சீர்மக னீன்றாளென் றோகை புகன்றிடவே. (கங)

### தலைவன் வாயில் வேண்டல்.

405. தன்னை நினைப்பவர் தம்மான் சிராமலைத் தாழ்குழலாள்
என்னை யெனது குறைநினை யாம லெதிர்கொளவப்
பொன்னை மருவு புலவி தணியப் புரிந்தருள்வாய்
உன்னை யலதிலை மானே யெனக்கிங் குறு துணையே. (கச)

### தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்.

406. பன்னா ளகன்றமை யாலுள நொந்தனள் பாலனைநீ
முன்னாண் முயன்ற தவத்தா லுயிர்த்துநெய் மூழ்கினளால்
இந்நா ளுமையொரு பாகன் சிராமலை யேந்திழையாள்
மன்னா வமய மிதுவன் றெவனுன் மனக்குறிப்பே. (கரு)

### தலைவன் தன்மனத்து உவகை கூர்தல்.

407. பையா ரரவல்குல் பாகன் சிராமலைப் பைந்தொடியாள்
மையார் விழிமட நோக்கமும் பால்சொரி வார்முலையும்
கையார் குழவியு நெய்யார் படிவமுங் காணமுன்யான்
மெய்யார் தவம்பல வாற்றின னாதலின் மேவியதே. (கசா)

---

404. ஆரம்- முத்து. தளவு - முல்லை. சேடியர் ஆரம் முதலியவற்றைப் புனைந்து, அன்பர் நேருறச் சென்றூர்; புகன்றிடச் சென்றூர். ஓகை-உவகை தரும் செய்தி.

405. என்னை எதிர்கொள. பொன் - தலைமகள்.

406. இந்நாள் நெய்மூழ்கினள். அமயம் - சமயம். மன்னா: விளி. எவன் - யாது.

407. அத் தவப்பயன் மேவியது எனச் சொல்வருவித்து முடிக்க.

### தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்.

408. நன்னாக கன்னியர் போற்றுஞ் சிராமலை நாயகியுன்
தன்னாக மாரும் பசப்பணி காணவுந் தம்மகவைப்
பொன்னாக மாமுலை யூட்டிடல் காணவும் பூபரகம்
முன்னாக மேவிநின் றானன்பி னாலென் மொழிவதுவே. (கஎ)

### தலைவி உணர்ந்து தலைவனோடு புலத்தல்.

409. சார தபோதனர் சாத்துசெவ் வந்தியின் றாரணியும்
சீரார் சிராமலை யன்னமன் னுமையற் சேரிமின்னார்
பார முலைச்சுவ டார்புயத் தென்முலைப் பால்படிநீர்
சோர விழிபதஞ் சேப்பக் கறுப்பர் தொடேலெனையே. (கஅ)

### பாணனை மறுத்தல்.

410. ஆடு மமலன் சிராமலை நேரன்பர்க் காகவென்பால்
நீடு மிசையுறும் யாழ்கொடு பாடுத னீர்மையன்றாற்
றேடு பொருட்குத் தகச்சுக மீந்துபின் றேடகிலாப்
பாடு பெறுநர்முன் பாடு புலைத்தொழிற் பாண்மகனே. (ககூ)

---

408. நாககன்னியர் வழிபட்டதை, செவ்வந்திப்புராணம், சூரவாதித் தச்சருக்கம், 73-ஆம் பாட்டு முதலியவற்றால் உணரலாகும். பூபர் - தலைவர். அகம் முன்னாக - வீட்டின் முன்னிடத்தே. அன்பினால் நின்றார்.

409. சார தபோதனர் - சாரமாமுனிவர். செவ்வந்தி - செவ்வந்திப்பூ. சாரமாமுனிவர் ஸ்ரீ தாயுமானவரைச் செவ்வந்திப்போதால் வழிபட்டதை, செவ்வந்திப்புராணம், சூரவாதித்தச் சருக்கம், 58–9-ஆம் செய்யுட்களால் அறியலாகும். விழியில் நீர் சோர. பதம் சேப்ப என்றது நின்னை உதைப்ப ரென்ற குறிப்புடையது. சேப்பக் கறுப்பரென்றது முரண்.

பி-ம். 'இருவிழி சேந்து வெகுள்வர்.'

410. அன்பர்க்கு - அன்பரை என்னோடு சேர்த்தற்கு. தேடு பொருட்கு.......பெறுநர்-வேசையர்; "நெஞ்சம், அழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போ லளந்து காட்டிப், பழிபடு போகம் விற்பார்" (திருவிளை. நகரப். 46.) பாடுபெறுநர் - பெருமைபெற்ற வேசையர்; இகழ்ச் சிக்குறிப்பு.

வாயின் மறுக்கப்பட்ட பாணன் கூறல்.

411. பொன்னே தருமணிக் கம்மணிக் கேதரும் பொன்னிகராய்த்
தன்னே ரிலாதொளி ரூரனு நீயுஞ் சமைதலினம்
மன்னே விடவரு மென்னை முனிவதென் மாண்பருள்வாய்
மின்னே ரிடையொரு பாகன் சிராமலை மெல்லியலே. (உ0)

விறலி வாயின்மறுப்பு.

412. தேடித் தலைவர் பரத்தையர் சேரியிற் சென்றவன்றே
நாடிப் பொறிபுலன் யாவு மிழந்தன நண்ணியிங்ஙன்
பாடிப் பயனெவ னுமவர் பாங்குறப் பாடினிமன்
ருடிக் குகந்த சிராமலைப் பாடினி யன்புகொண்டே. (உக)

கூத்தன் வாயின்மறுத்தல்.

413. அரியு மறிவருந் தாளோன் சிராமலை யாரியகேள்
புரியு நடன மடந்தையர்க் குன்றிறம் போதநன்ருய்த்
தெரியு மவர்பயில் சேரியி லாடிடச் செல்லெனக்கிங்
கெரியு மழலினெய் யூற்றுவ தாமுன் னெழினடமே. (உஉ)

---

411. மன் ஏவிட; மன்னே விட எனப் பிரித்தலும் ஆம். முனிவது என்ன மாண்பு?

412. பொறி புலன் யாவும் இழந்தனம்: "மாசிலாமணி யார்புகழைக், கேளார் செவியிற் குணம்போன தென்செவி" (திருவாவடுதுறைக்கோவை, 415.) அவர்-பரத்தையர். பாடு இனி-இனிப் பாடுவாயாக; பாடினி: அண்மை விளி; "நண்ணுங் கருணைக் குலோத்துங்க சோழனன் னுட்டில்வஞ்சம், புண்ணும் பரத்தையர் சேரியிற் பாடினி பாடினிப்போய், உண்ணுங் கடுவு மமுதமு நாணவு மொண்கரும்பும், மண்ணும் பசும்பொன்னு மொன்ருக வெண்ணிய மன்னவர்க்கே" (குலோத். கோவை, 456); "மயிலின் புறத்து முருகனைப் போல வருமகிணன், பயிலும் பரத்தையர் பாடியிற் பாடினி பாடினியே" அம்பிகா. 487.

பி-ம். 'பொறிபுலன் யாவு மகிழ்ந்தனம்.'

413. ஆரிய - ஆரியக்கூத்தனே; "ஆரியர் கயிறுடு பறை" (குறுந். 7.) நடனம்புரியும் மடந்தையர்க்கு. போத - மிக.

பாங்கி வாயில் மறை.

414. சேயா னனங்கண்டு செய்வன செய்திலர் செய்யகனி
வாயார் மழலை மகிழ்வுறக் கேட்டிலர் மானனையாய்
தாயான வீசர் சிராமலை வாழுந் தலைவரென்றன்
வேயான தோளிணை சேரவென் றேவின்று மேவினரே. (உ௩)

விருந்தோடு வந்துழிப் பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தல்.

415. பின்னார் தருசடை யெம்மான் சிராமலைப் பேதையுடற்
பொன்னார் பசுமையுந் தீம்பா லொழுகெழிற் பூண்முலையும்
மின்னா ரிடையுஞ் சிசுவுங்கைக் கண்டு விழிகுளிர
என்னார் தவத்தின் பயனெனத் தோன்றிய திவ்விருந்தே. ()

தலைவன் புதல்வனைக் காண்டல்.

416. தேனார் மலர்சுரர்க் காக்கிநெய் வாக்கிச் செழுந்தழல்வாய்த்
தானார வேட்டு மறையவர்க் காநிதி தானளித்து
மானார் கரத்தன் சிராமலை நேரிறை வன்மகவை
ஆனா மகிழ்வி னுடனெடுத் தாகத் தணைத்தனனே. (உ௫)

மகப்போறைகூர்ந்தவண்ணம் உரைத்தல்.

417. சேயா ரிதழ்வெளுத் தாகம் பசந்து சிகரிநிக
ராயார் முலைக்கண் கறுத்துச் சிராமலை யாயிழைக்குத்

---

414. சேய் ஆனனம் - பிள்ளையின் முகத்தை; பிள்ளை பிறந்தவுடன் தந்தை அக்குழந்தையின் முகத்தைக் காணுதல் மரபு; "செறுவர் நோக்கிய கண்டன், சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னவே" (புறநா. 100: 10-11); "கோமகார் திருமுகங் குறுகி நோக்கினன்" கம்ப. திருவவதாரப். 112.

415. பின் - பின்னுதல். கைச்சிசு - கைக்குழந்தை.

416. மலரைச் சுரர்க்காக்கி. செழுந்தழல்வாய் நெய் வாக்கி; வாக்கி - சொரிந்து. இறைவன் - தலைவன்.

417. கருப்பந்தரித்தமையால் தலைவியின் இதழ் முதலியவைகள் அழகிழந்தன வென்பது கருத்து. முன்பு இருந்த நிலையைக் கூறியது;

தாயா மமல னருளாற் கருப்பங் தரிக்கவிசைத்
தூயா யெழில்பெறத் தோன்று விடைவந்து தோன்றியதே.()

பள்ளியின் அழுங்கல்.

418. மின்காட்டி யொல்கிடை பாகன் சிராமலை மெல்லியலாய்
முன்காட்டி வேலினைச் சங்கொலி காட்டி முரண்மதமாப்
பின்காட்டி மாமணித் தேர்காட்டி நீபொரும் பெற்றியின்றி
வென்காட்டி யிந்த வமளியின் மேவுதன் மேன்மையன்றே. ()

---

"சீலங் தகைபெறு சாலியன் ளுள்சிறு வற்றரித்த, காலங் தமது கவினிறம் பெற்றன காலமின்னும், கோலங் தருஞ்செங் குமுதமு நீலமுங் குன்றெடுத்த, பாலன் றுயில்கொண்ட பாயலுங் காலைப் பதுமமுமே" (அம்பிகாபதிகோவை, 461) என்பதனாலும் இது விளங்கும். இச்செய்யுள் பாங்கி கூற்று. 'பிறவு மென்பதனால் மகப்பொறைகூர்ந்தவண்ணமுரைத்தலும்.........வரப்பெறும்' இ-வி. சூ. 555, உரை.

418. வேலினை முன் காட்டி; வேலென்றது கண்களை. சங்கு: கழுத்து. மதமா: தனம். போர்க்கருவிகளாகிய வேல்முதலியவற்றை முன்னே காட்டி முன்பு போர்செய்ததைப் போலன்றி; போர்த்தொடக்கத்தில் சங்கொலித்தல் மரபு; "முன்னெற்றை யிருசங்க முடனூத வெதிர்சென்று முனைவெல்லுமா, மன்னெற்றர்", "மலர்ந்த பற்ப வனநிகர் பைந்துழாய், அலங்கல் வித்தக னேந்தின வாதலால், வலம்பு ரிக்குலம் வாழ்வுபெற் றேமெனச், சலஞ்ச லத்தொடுஞ் சங்கொடு மார்த்தவே" (வி. பா. நிரைமீட்சி. 5, முதற்போர். 19.) வென் - முதுகு. அமளி - படுக்கை; பேராரவாரமென்பது வேறுபொருள். யுத்தத்திற்கு உரிய கருவிகளைப் பெற்றிருந்தும் போர்செய்யாமற் புறங்காட்டுதல் நன்றன்றென்பது கருத்து; "அறந்தந்த பொன்பொலி கூடற் பிரான்வெற்பி லம்பொற்படாம், நிறந்தந்த கும்ப மதயானையுங்நெடுந் தேர்ப்பரப்பும், மறந்தந்த விற்படை வாட்படை யுங்கொண்டு மற்றொருநீ, புறந்தந்த வாவணங் கோனன்று காமவெம் போரினுக்கே" (மதுரைக்கலம். 16); "அறங்காட் டியகரத் தைவே லசதி யணிவரையில், நிறங்காட்டுங் கஞ்சத் திருவனை யீர்முக நீண்டகுமிழ்த், திறங்காட்டும் வேலுஞ் சிலையுங்கொல் யானையுந் தேருங்கொண்டு, புறங்காட்ட லுந்தகு மோசிலைக் காமன்றன் பூசலிலே" (அசதிகோவை); "அறங்காட்டி யென்னைப் புரப்பான் புகலி யனையவரே, நிறங்காட்டி யுங்கண் மதவேள் சினந்து நெடுஞ் சிலையின், மறங்காட்டி நின்று சமராடு கால மதித்தெனக்குப், புறங்காட்டி மெல்லிய லாரெனும் பேரைப் புதுக்கினிரே" சீகாழிக். 494.

சீறேலென்றவள் சீறடி தொழுதல்.

419. மாலையன் றாய்மறை மாதவர் தேட மகிழ்ந்தெனுளம்
ஆலையந் தானெனக் கொண்டோன் சிராமலை யாயிழையுன்
காலையம் போருக மாம்பதம் போற்றுவன் காதலினாற்
சேலையம் பாம்விழி யாலெனைப் பார்த்தருள் சீறலையே. (உஅ)

ஈதெங்கையர் காணின் நன்றன் றென்றல்.

420. ஈதென காரண நீயெனைப் போற்றி யிறைஞ்சலில்லம்
போதெண் வாழயன் மால்பணிந் தேத்தப் புரமெரித்து
மாதென வோர்புற மானோன் சிராமலை மானுமன்னா
சூதென வார்முலை யெங்கையர் காணிற் றுரிசுறுமே. (உகூ)

நின்னல தங்கவர் யாரையும் அறியேனென்றல்.

421. வானேய் மதியமு துண்ணுஞ் சகோர மறந்துமொன்றைத்
தானேய முற்றுண வுன்னிடு மோவென் றவப்பயனும்
தேனே யினிய கனியே யமலன் சிராமலைவாழ்
மானே யுனையன்றி யானறி யேனொரு மானையுமே. (௩0)

காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

422. ஆதி நடுவந்த மானோன் சிராமலை யன்னமன்னா
வீதி யிடையுன் மகன்விளை யாட வியந்தெடுத்துச்
சோதி முகமுத்த முண்டுச்சி மோப்பநின் றோன்றலெங்காய்
நீதி யுறுமுன தில்லீ தெனவெள்கி நீங்கினளே. (௩க)

---

419. காலை அம்போருகம்-மலர்ந்த தாமரை. உன்பதத்தைக் காதலி னாற் போற்றுவன். சேல் ஐ அம்பு ஆம் விழி - சேலும் அழகிய அம்பும் ஒப்பாகும் விழி; ஐயம்பு - பஞ்சபாணமுமாம்; "அஞ்சம்பையு மையன்றன தலகம்பையு மளவா, நஞ்சங்களை வெலவாகிய நயனங்களை யுடையாள்" கம்ப. கங்கைப். 3.

420. ஈது - இங்ஙனம் வணங்குதல். என்ன காரணம். இறைஞ்சல்- வணங்காதே. போதை இல்லமெனக்கொண்டு வாழும் அயன். எங்கைய ரென்றது பரத்தையரை.

421. சகோரம்-சந்திரகிரணத்தை உண்பதொரு பறவை. தான் நேய முற்று. உண - உண்ணுதற்கு.

422. ஒருமங்கை எடுத்து முத்தமுண்டு மோப்பவென ஒருசொல் வருவிக்க. 'நின்தோன்றல்' முதலியன காமக்கிழத்தியை நோக்கித் தலைவி கூறியவை.

தலைமகளைப் பாங்கி புலவி தணித்தல்.

423. நனவி னுடனுறு மாவி நயந்தொரு நாடனுகிக்
கனவி லருந்திவந் தாங்ககன் றுற்றனர் காந்தரென்று
நினைவி னுணர்ந்தரு ளெம்மான் சிராமலை நேரிழையாய்
மனைவி மகிழ்நன் குறைநினைந் தாற்கற்பின் மாண்பெவனே. ()

தலைமகள் தணியாளாகத் தலைமகன் ஊடல்.

424. பண்டுறு மார்வத் தெனைப்பொரு ளாகப் பரிந்துநெஞ்சிற்
கொண்டுறு சேடிய ராயத்தி னீங்கிக் கொதிக்குமழல்
மண்டுறு பாலை வனந்தனி லெய்திய மங்கையன்றே
வண்டுறு மோதி யிடத்தார் சிராமலை மாதிவளே. (ருரு)

பாங்கி அன்பிலை கொடியையென் றிணர்த்தார்மார்பனை இகழ்தல்.

425. பெண்பான் மகிழும் பிரான்றன் சிராமலைப் பெண்ணமுதை
நண்பான் மருவி நலமுட னீரிந்த நாளில்விலைப்
பண்பார் பரத்தையர் மாலினன் ஞரைப் பணிவதற்காப்
புண்பாவை நெஞ்சுறச் சீறலிர் போமிடைப் போதுகவே. (ருச)

---

423. உடல் - ஸ்தூல சரீரம். ஆவியென்றது சூக்ஷ்மசரீரத்தை. காந்தர் அகன்று உற்றனர்.

424. இவள், பண்டு பரிந்து நீங்கி எய்திய மங்கையன்றென்க. இது, "தழங்கார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றனதருள்போற், பழங்காத லெண்ணலென் பைதனெஞ் சேயிவள் பண்டுபைம்பொற், கழங்கா டிடமுங் கடிமலர்க் காவுங் கடந்துபுள்ளும், வழங்கா வழிநமக் கோர்துணை யாய்வந்த மானல்லளே" (தஞ்சை. 412) என்னும் செய்யுட்கருத்தைத் தழுவிவந்தது.

425. முன்னம் நண்பால் நலமுடன் மருவி என ஒருசொல் வருவிக்க. பாவைநெஞ்சு புண்ணுற. போம் இடை - போகும் இடத்திற்கு; பரத்தையர் வீட்டிற்கென்பது குறிப்பு.

### காமக்கிழத்தி வாயில்வேண்டல்.

426. அன்போ டுறுகற்பி னூர்தங் கொழுந ரகமகிழப்
பொன்போன் மருவி யவர்குற்றம் யாவும் பொறுப்பரன்றே
மின்போ லிடையுமை பாகன் சிராமலை மெல்லியலாய்
என்போ லியர்க ளெனவூட லின்னுளத் தேய்வதன்றே. (௩௫)

### பாங்கி வாயினேர்வித்தல்.

427. கார்தரு சோலைச் சிராமலை யீசர் கவின்மதுரை
ஆர்தரு சங்கத் திருந்தன்று தேர்தமி ழாய்புலவோர்
தேர்தரு மேனை மொழியுங்கற் றற்றன்பர் சீர்மையின்னே
வார்தரு பூண்முலை பீர்பூப்ப வாடுதன் மாண்பதன்றே. (௩௬)

### ஆயிழை மைந்தனும் ஆற்றுமையும் வாயிலாக வரவெதிர்கோடல்.

428. தேடத் தகாத பொருளாகு நம்மிளஞ் சேயைக்கண்டு
வாடத் தகாவுளம் வாடலென் னென்றுகை வாய்ந்துவந்தார்
கூடத் தகாருடன் கூடின ரென்று கொழுநரைநீ
ஊடத் தகாதினி யெம்மான் சிராமலை யொண்ணுதலே. (௩௭)

---

426. அன்போடுறு......பொறுப்பரன்றே: "அன்புடைக் கணவ ரழிதகச் செயினும், பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை" (பெருங். ச. 14: 98-9.) ஏய்வது அன்று - பொருந்துவது அன்று.

427. கார்-கருமையை; கார்தருசோலை - மேகத்தை ஒத்த சோலை; "தடங்கார் தருபெரு வான்பொழில்" (சிற். 31, பேர்.) சிவபெருமான் சங்கத்திருந்து தமிழாய்ந்தது, இறையனாரகப்பொருளுரை, திருவிளையாடற் புராணங்கள் முதலியவற்றால் அறியலாகும். கற்றற்று - கற்றாற்போல்வது. பீர் - பசலை. அன்பர் சீர்மை கற்றற்று என்க.

428. பொருளாகும் சேய்: "தம்பொரு ளென்பதம் மக்கள்" (குறள், 63.) கைவாய்ந்து - கையிலேந்தி.

### தலைவன் புணர்ந்து நீங்கியபின் வந்த பாங்கியோடு தன்மகனைப் புகழ்தல்.

429. பேறு களிற்பெரி தாமைந்தர்ப் பேறெனப் பேறுடையோர்
கூறு மொழிப்பொருண் மெய்யே யெனது குமரனன்பர்
ஏறு மிரதத் தொடும்வரச் செய்தின்ப மீந்ததனாற்
சீறு மரவைத் தரித்தோன் சிராமலைச் சேயிழையே. (௩அ)

### தலைவி தலைவனைப் புகழ்தல்.

430. கரியவ ராரண ரிந்திர ராயினர் காணவென்றும்
அரியவர் வாழுஞ் சிராமலை மானுமென் னுருயிராம்
உரியவர் கேண்மை யிடையூறின் றுய்வளர்ந் தோங்கியதாற்
பெரியவர் கேண்மை வளர்பிறை யாமெனும் பெற்றியொத்தே.

### பாங்கி தலைவியைப் புகழ்தல்.

431. அணங்கொரு பாகர் சிராமலை மானனை யாய்கொழுநன்
தணந்தய லாரைத் தழுவும் பிழைநெஞ்சிற் றுன்மறந்து
குணங்கொடு போற்றிப் பணிந்தில் லறம்புரி கொள்கையினால்
மணம்புரி மாத ரருந்ததி நீயென வந்திப்பரே. (௪0)

---

429. எனது குமரன் ஈந்ததனால். பேறுகளில்........................ மெய்யே: "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" (குறள், 61); "இம்மை யுலகத் திசையொடும் விளங்கி, மறுமை யுலகமு மறுவின் றெய்துப, செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச், சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப், பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம், வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி" அகநா.66.

430. ஆரணர் - பிரமதேவர். காண - காணுதற்கு. பெரியவர்... .........யொத்தே: "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும்" (நாலடி.125); "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" குறள், 782.

431. மணம்புரியும் காலத்தில் மாதர்கள் அருந்ததியை வணங்கும் மரபை நினைந்து, 'மணம்புரி மாத ரருந்ததி நீயென வந்திப்பர்' என்றார்.

## உகூ. ஓதற் பிரிவு.

### கல்விப்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தல்.

432. கொடுக்கக் கொடுக்கக் குறையாத வான்பொருள் கொள்பவர்கள்
மடுக்கத் தெவிட்ட கிலாவின்ப வாரி மகிழ்ந்துவல்லோர்
தொடுக்கத் தொடுக்கத் தொலையா மணமலர் தூயகல்வி
அடுக்கக் கருணை புரிவோன் சிராமலை யாயிழையே. (க)

இதுவுமது.

433. பன்னு கலைபெறி னெம்மான் சிராமலைப் பான்மொழியாய்
மன்னூர் புகழும் விளங்காட்டுப் பாக்கநன் மாநகர்வாழ்
கன்னவ ர்ராய மரபரு ணாசல கன்னனருள்
தென்னவன் மாரியப் பேந்த்ரன் மகிழ்ந்தருள் செய்குவனே. ()

தலைவனைப் பாங்கி விலக்கல்.

434. பாம்பாவை யூர்ந்தணி வோனன்ப ரன்பினிற் பாடுமிசை
ஆம்பாவை வேய்ந்தரு ளெம்மான் சிராமலை யன்னமன்ன
பூம்பாவை யுய்ந்திடச் செய்யும் பிரானிற் புகலும்விஞ்சை
தாம்பாவை யுய்ந்திட வுண்டேலக் கல்விக்குச் சார்ந்தருளே.()

---

432. கல்வியானது வான்பொருள், இன்பவாரி, மணமலர்; "சொல் லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும், நல்லிருந் தீந்தாது நாறுதலால் - மல்லிகையின், வண்டார் கமழ்தாம மன்றே மலையாத, தண்டா ரான் கூடற் றமிழ்" மதுரைக்காஞ்சி, இறுதிவெண்பா.

433. கலை - பலவகையான கல்வி.

434. ஆவை ஊர்ந்து பாம்பை அணிவோன்; எதிர்நிரனிறை. இசை ஆம் பாவை - இசை நிறைந்த பாட்டுக்களை. பிரானில் - திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரைப் போல. விஞ்சை - வித்தை. இறந்தவர்களைப் பிழைப் பிக்கும் வித்தையைக் கற்றுக்கொண்டு வாரும்; "ஆரும் விரும்பிய கல்வி மே லாசை யுமக்குள தாயிடிற், பாருற வென்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே, நீரு மருந்தமிழ் செப்பிடு நீர்மை யறிந்திவ ணேகுவீர், மேரு நெடுஞ்சிலை யத்தனர் வீறரு ணுபுரி வெற்பரே" (அருணைக். 20); "ஓது வதற்கண்ண லேபிரிந் தாலொண் மயிலையென்பு, மாது படுத்தினர் போலோதி வாரும் வருந்தமிழைக், கோது பிரித்தறி கோமான் குலோத் துங்கன் கோழிவெற்பில், தீது படக்கொடி யாவிசென் றூலுங் திருப்புகைக் கே" (குலோத். கோவை, 479); "விண்ணுக்கு மாமதி காயவெங் காம வெரி கொளுந்தப், பண்ணுக்கு மாமொழி மாதங்க மாம்பஞ்ச - பூதியம்போம், கண்ணுக்கு மூக்குச் செவியாக்கை யற்ற கடத்திலங்கம், பெண்ணுக்கு வார் தமைப் போலோதி வாரும் பிரிபவரே" தனிப்பாடல்.

### தலைவன் பாங்கியை உடன்படுத்தல்.

435. பூமகள் கேண்மையைச் செய்தா யெனக்கந்தப் பூமகள்சேய்
நாமகள் கேண்மை பெறக்கொண்டு மேவுவ னுன்விரைந்தக்
கோமகள் பாற்றுனி மேவாமற் காத்தருள் கோதில்வரை
மாமகள் பால்வள ரெம்மான் சிராமலை வாணுதலே. (சு)

### பாங்கி உடன்படுதல்.

436. கண்ணும் வடிவமு முச்சுட ராகுங் கருணைப்பிரான்
நண்ணு மெழில்வள மோங்குஞ் சிராமலை நாடுமன்னு
உண்ணு மமுதி னினிதான பேரின்பத் தொன்றுமவர்க்
கெண்ணு மெழுத்தும் விழியா மெனினென் னியம்புவதே. ()

### பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

437. எழுத்து முதற்பல நூற்கட னீந்திட வென்றுலகம்
வழுத்து நினதன்ப ரேகினர் தேவர்க்கும் வாய்ப்பரிதாய்ப்
பழுத்து வளரன் புறவென் னுளத்துப் பரிந்தருளால்
அழுத்து மலர்ப்பதத் தம்மான் சிராமலை யாயிழையே. (சுஅ)

---

435. பூமகளென்றது தலைவியை. பூமகளின் சேய் நாமகள் - திருமகளின்சேயாகிய பிரமதேவரது நாவிலுள்ள மகள்; கலைமகள். விரைந்து மேவுவன். துனி - புலவிநீட்சி.

436. கண்முச்சுடர்; வடிவம் முச்சுடர் (மூன்று அக்கினிகள்); 'இறைவன் கூறுகிய முத்தீக் குண்டத்திட்டதனைக் கூறிற்று' (முருகு. 254, ந.) எண்ணுமெழுத்தும் விழியாம்: "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்" (கொன்றைவேந்தன்); "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும், கண்ணென்ப வாழு முயிர்க்கு" குறள், 392.

437. எழுத்துமுதல் - எழுத்திலக்கணம் முதலிய. நூற்கடனீந்திட: "கல்வியென்னும் பல்கடல்" (திருவாசகம்); "ஆய்ந்தே கடந்தா னறிவென்னு மளக்கர்" கம்ப. அரசியற். 5.

### கார்ப்பருவங்கண்டு தலைவி வருந்தல்.

438. கோபஞ் செறிதர மாலுற வார்த்துக் குடிலமுற்றுச்
சாபங் கொடுபடர்ந் தாரம்பு பெய்து தடித்தெதிர்ந்தியான்
தாபம் பெறவரு மென்றன்பர் தேர்கலை சாற்றலின்றே
பாபந் தவிர்த்தெனை யாள்வோன் சிராமலைப் பான்மொழியே.

### வருந்திய தலைவியை ஆற்றுவித்தல்.

439. கற்றிடு கல்வியி னெல்லை யுணர்தலிற் காதலர்தாம்
சொற்றிடு வாய்மை தவறார்பொற் றேரொடு தோன்றுவர்நீர்
பெற்றிடு காருட னீயினி வாடல் பெரிதுமகிழ்
வுற்றிடு தென்கயி லாய ரருளன்ன வொண்ணுதலே. (அ)

## ரு௦. காவற் பிரிவு.

### காவற்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தல்.

440. பூமாது கேள்வ னெனநீ யெனைச்செய்த பொற்பதனாற்
பாமாது கேள்வன் படைத்திட வோங்கிப் பரந்தநெடும்
பூமாது வாழப் புரந்திடப் போதுவன் பொன்னிமய
மாமாது வாழிடப் பாகன் சிராமலை வாணுதலே. (க)

---

438. மேகத்தின் செயல்களைப் பகைவருடைய செயல்களாகத் தோற்றும்படி தலைவி கூறுகின்றாள். கோபம் - இந்திரகோபம், சினம். மால்- மேகம், மயக்கம்; எழுவாய். குடிலம் - ஆகாயம், வஞ்சகம். சாபம் - வில். அம்பு - நீர், பாணம். தடித்து எதிர்ந்து - மின்னலுடன் எதிர்ந்து, பருத்து எதிர்ந்து. தேர்கின்ற கலையானது சாற்றாதோ.

"அயங்காட் டியமறை யார்விடை யாள ரருணைவெற்பிற், புயங்காட் டியமணித் தேர்வல வாமுன்பு போனகொண்டல், சயங்காட்டிக் கோபமுஞ் சாபமுங் காட்டித் தடித்திடித்துப், பயங்காட்டி னலஞ்சு மேதனி யேநின்ற பைங்கொடியே" (அருணைக்கலம். 48) என்பதனோடு இஃது ஒருவாறு ஒத்துளது.

439. காருடன்-மேகத்தால். காருடன் தோன்றுவரெனலும் ஒன்று.

பி-ம். 'வாய்மை திறம்பார்'

440. பூமாது கேள்வன் - திருமால்; இங்கே பூமாதென்றது தலைவியைச் சுட்டியது. பாமாது கேள்வன் - பிரமதேவர். பூமியாகிய பெண் வாழும்படி. இமய மாமாது - உமாதேவியார். நீ என்னைத் திருமாலாகச் செய்ததனால் அதற்கேற்பக் காத்தற்றொழில் புரியும்படி செய்வாக என்பது நயம்.

காவற்பிரிவு பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

441. பூபா லகரென யாவரும் போற்றிப் புகழ்பரிசால்
மாபா ரகமுற்றுங் காத்திட வேண்டிநம் மன்னர்சென்றார்
கோபா னலத்தெதிர் கூற்றுவற் கென்னைக் கொடாதருள்செய்
காபாலர் தென்கயி லாயத்தின் மேவுங் கனங்குழையே. (௨)

தலைவி கூதிர்ப்பருவங்கண்டு வருந்தல்.

442. உடலைத் துளைத்தென தாவியை வாடை யுருக்குகின்ற
நடலைக் கினியென்ன செய்குவன் காவலர் நண்ணகிலார்
கடலைப் பருகிய மாமுனி போற்றக் கருணைசெய்தோன்
அடலைப் பொடியணி யெம்மான் சிராமலை யாயிழையே. (௩)

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்.

443. கூட விழைத்திழைத் தங்குலி தேயக் குழைந்துமனம்
வாட வினியரன் வாழுஞ் சிராமலை மானுமன்னர்
தேட வருமகிழ் வெய்தத்தந் நாட்டினைச் சேர்ந்தளித்து
நீட வரும்புகழ் கூடவந் தெய்தினர் நேரிழையே. (௪)

## ௩௧. தூதிற் பிரிவு.

தூதிற்பிரிவு தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.

444. எதிர்த்தெழு வீரத் திணைந்திரு வேந்த ரிகலியொள்வாள்
விதிர்த்தெழு வீசிநின் றுரைநட் பாக்க விரைந்துசெல்வேன்
கதிர்த்தெழு பூண்முலை மான்வருந் தாவகை காத்தருள்வாய்
அதிர்த்தெழு மால மயின்றோன் சிராமலை யாயிழையே. (௧)

---

441. கோபானலத்து - கோபாக்கினியுடன். காபாலர் - காபால மென்னும் கூத்தையுடையவர்.

பி-ம். 'பூபாலர் தாமென'

442. வாடைநடலைக்கு - வடகாற்றினுடைய வஞ்சனைக்கு. ஆவியை உருக்குகின்ற வாடையென இயைக்க. கடலைப் பருகிய மாமுனி - அகத்திய முனிவர். அடலையாகிய பொடி - திருநீறு.

443. கூடல் - கூடற்சுழி; 290-ஆம் செய்யுளின் குறிப்பைப் பார்க்க. அங்குலி - விரல். தேடுதற்கு அரிய மகிழ்வு.

444. வீரத்து இணைந்து - வீரத்தோடு பொருந்தி. இகலி - பகைத்து. எழு - வளைதடி.

### தூதிற்பிரிவு பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

445. ஓரா திகலிரு வேந்தர் பகைமை யொழித்துநண்பாற்
பேரா தகமகிழ் வார்விக்க வேண்டிப் பிரசமலர்த்
தாரார் புயத்தன்பர் தாமகன் றூரென் றுந் தன்னடியார்க்
காரா வமுத மனையான் சிராமலை யாயிழையே. (உ)

### தலைவி முன்பனிப்பருவங்கண்டு வருந்தல்.

446. கூற்றந் தனைநிகர் முன்பனி யென்னுயிர் கொண்டிடுவான்
சீற்றஞ் செயுமிஃ தோராமல் வேந்தர் தெறுபகைதீர்த்
தேற்றம் பெறுநட் புறுவிக்க நம்மன்ப ரேகனன்றே
தேற்றம் பெறநம்ம யாள்வோன் சிராமலைத் தேமொழியே. ()

### தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

447. பாந்த ளணிசடை யெம்மான் சிராமலைப் பாற்றிகழும்
சாந்த மணிமுலை யாய்முன் பனிக்குத் தளர்தியென்றுன்
காந்த ரறிந்தெழிற் றேரூர்ந் தியங்கள் கலிப்பவிரு
வேந்தர் பகைதணித் தெய்துவர் நீயின்ப மேவுறவே. (ச)

## ௯உ. துணைவயிற் பிரிவு.

### துணைவயிற்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தல்.

448. சீர்மிகு மோரிறை யொன்னார் பலரொடு செய்சமர்க்கியான்
தார்மிகு தானைகொ டேகுதல் வேண்டுந் தருந்துணையாக்
கார்மிகு கண்டத்த னெம்மான் சிராமலைக் காரிகையாய்
கூர்மிகு வேல்விழி வாணுத லாட்கிது கூறுகவே. (க)

---

445. ஓராது இகல் - உணராமல் பகைக்கின்ற. அகமகிழ்வை ஆர்விக்கவேண்டி. ஆரா அமுதம் - தெவிட்டாத அமுதம்.

447. பாந்தள்-பாம்பை. தளர்தியென்று - தளர்வாயென்று எண்ணி. இயங்கள் - வாத்தியங்கள். மேவுற எய்துவர்.

448. துணையாக ஏகுதல்வேண்டும்.

பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

449. தமரா மொருபெரு வேந்தர் படையொடு சார்பகைஞர்
அமரா லயர்வ தகற்றத் துணைக்குநின் னன்பர்சென்றார்
கமரா மதிகங்கை வேணியிற் றாங்கிச்சங் காழிகையில்
அமரா னுயர்த்தரு ளெம்மான் சிராமலை யாயிழையே. (உ)

தலைவி பின்பனிப்பருவங்கண்டு வருந்தல்.

450. இன்பம் விளைத்திடு மெம்மான் சிராமலை யேத்துநம
தன்பர் தம்துற வாகு மரசர்க் கருந்துணையா
வன்ப ருடன்ம ராடச்சென் றாரின்னம் வந்திலரால்
துன்ப முறுபின் பனிக்கெவன் செய்குவன் றாமொழியே.(௩)

பாங்கி ஆற்றுவித்தல்.

451. பந்தன மாமுலை மானே வருந்தல் பகைதடிந்து
சந்தன மார்வரை மன்னனைக் காத்துத் தயாவுடன்மீண்
டிந்தன வாணுதல் பாகன் சிராமலை யேத்துமன்பர்
வந்தனர் நீபின் பனியால் வருந்தும் வகையுணர்ந்தே. (௪)

## ௫௫. பொருள்வயிற் பிரிவு.

பொருள்வயிற்பிரிவு தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.

452. பொருளா லிகபர மென்னுமுன் னீர்கண் பொழியவுள்ளம்
மருளா வயர்ந்தன டுநீர் தெளித்துடன் மாற்றமின்னே

---

449. படையொடு சார்ந்த பகைஞர். கம் அரா மதி கங்கை - தலையையும் பாம்பையும் சந்திரனையும் கங்கையையும். சங்கு ஆழி கையில் அமர் ஆன் - சங்கும் சக்கரமும் கையிற் பொருந்திய திருமாலாகிய இடபத்தை.

450. வன்பருடன் - வன்மையையுடைய பகைவருடன்.

451. பந்து அன்ன. பகை தடிந்து - பகைவரை அழித்து. இந்து அன் - பிறையை ஒத்த. வருந்தும் வகையுணர்ந்து வந்தனர்.

452. இன்ன - இவ்வளவு. தலைவன் முன்நிகழ்ந்த செய்தியை நினைந்து கூறியது இச்செய்யுள். "முனிவரு மன்னரும்" (திருச்சிற். 332) என்னும் செய்யுளையும் அதன் அவதாரிகையையும் விசேடவுரையையும் பார்க்க;

வெருளா வெழுந்தின்ன நாட்சென்ற தோவிங்கு மேவவென்று
தெருளா வணங்கிடு மெம்மான் சிராமலைத் தேமொழியே. (க)

பாங்கி தலைவிக் கறிவித்தல்.

453. நல்விற் பனர்தொழு மெம்மான் சிராமலை நாடலர்போல்
வல்விற் கிணைமுலை வாணுத ஞந்தனி வைகவின்று
கல்விக் குரிய பொருண்முற்று மன்பர் கடற்பிறந்த
செல்விக் குரிய பொருண்முற்று வானெண்ணிச் சென்றனரே. (உ)

தலைவி இளவேனிற்பருவங்கண்டு வருந்தல்.

454. நற்றாய் வெறுத்திடக் கோடாய் முனிய நலிவுறுபுள்
பற்றா ரெனவறை கூவவென் னாவி பதைக்குநிலை
கற்றார் பெறநிதி தேடச்சென் றாரொன்றுங் காண்கிலரன்
புற்றார் பணிபதத் தெம்மான் சிராமலை யொண்ணுதலே. (ங)

---

"திரைகட லோடித் திரவியந் தேடென்று செப்புமௌவை, உரைபழு தன்றெனச் சோர்ந்தாள் கழுக்குன்றத் தோர்மடமான், அரைபணி நீர்ச்சந்தனங்கொண்டு பாங்கிய ராற்றியபின், இரைகடல் போய்வர வெத்தனை நாளென் றெழுந்தனளே" தனிப்.

பி-ம். 'எண்ணில்நாட்'

453. விற்பனர் - விவேகிகள். வல் - சூதாடுகருவி; வல்லுக்கும் வில்லுக்கும் இணையாகிய வென்க. கல்விக்குரிய பொருள் முற்றும் அன்பர்-கல்விக்குரிய காரியத்தை முடித்த அன்பர். அன்பர் சென்றன ரென்க.

454. நற்றாயென்றது குயிலையும், கோடாயென்றது காக்கையையும்; கோடாய் - செவிலித்தாய். புள் - குயில்; "வேள் அக்காளமார்க்கு மிளவேனில்" (455) என்பர்பின். நற்றாய்......புள்: "வருந்தி யீன்றாண் மறந்தொழிந்தாள் வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந்தாள், முருந்தின் காறுங் கூழையை முனிவார் நின்னை யென்முனிவார், பொருந்திற் றன்றா லிதுவென்னாய் பொன்று மளித்திவ் வுயிரென்னாய், திருந்து சோலைக் கருங்குயிலே சிலம்ப விருந்து கூவுதியால்" (சீவக. 1661); "உயிர்த்த பொழுதே நின்குரல் கே ளாமுன் னோடிற் றீன்றதாய், நயத்தின் வளர்த்த தாய்குரல்கேட் டலுமே நடுங்கத் துரந்ததால், பயத்த மலர்ப்பூங் காவகத்தி லிருந்து பல்காற் கூவினாற், செயிர்த்து நின்னைக் குயிலேநான் வெறுத்தல் செப்ப வேண்டுமோ" (பிரபு. பிரபுதேவர். 63.) போர்செய்தற்கு மன்மதனை அழைப்ப. சென்றார் - தலைவர். ஒன்றும் - சிறிதும். நிலையைக் காண்கிலர். அன்பு உற்றார்-அன்புள்ள அடியவர். கற்றார் பெறும்பொருட்டுத் தாம் நிதிதேடச் சென்றார்.

### தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

455. மைக்காள கண்டர் சிராமலை யன்னநம் மன்னர்வட
திக்கா ளரச னிகர்ப்ப நிதிக்குச் செலினும்வில்வேள்
அக்காள மார்க்கு மிளவேனில் வந்த தறிந்திலர்கொல்
இக்காரும் வாணி வருந்தலென் னேவொல்லை யெய்துவரே. (௪)

### தலைவன் வந்தமை பாங்கி தலைவிக் குணர்த்தல்.

456. கொந்தார் தருமட்டு வார்குழல் பாகன் குளிர்புனலார்
இந்தார் சடைமுடி யெம்மான் சிராமலை யேந்திழையாய்
சிந்தா குலமுறல் சின்னங்க ளார்த்திடத் தேரிலன்பர்
வந்தாரிவ் வேனிலில் வந்தா ரெதிர்கொடு வந்திப்பையே. (௫)

### தலைவன் வந்துழி மகிழ்ச்சி.

457. உருவார் மதனென நீயிள வேனிலி லுற்றதனால்
மருவார் மலர்க்குழ லெம்பெரு மாட்டி மனமகிழ்வாற்
பெருவாழ் வெனவள ரானந்த போகத்தைப் பெற்றினிதாய்த்
திருவார் சிராமலை யெம்மா னருளெனச் சீர்கொண்டதே. (௬)

---

### வாழ்த்து.

458. வாழி மறையவர் வானவ ரானினம் வாழிசைவர்
வாழி மதிதொறு மும்மாரி பெய்தருள் வான்முகில்கள்
வாழி மனுநெறி மன்னவர் நாவலர் வையமெல்லாம்
வாழி சிராமலை யெம்மா னுடன்மட்டு வார்குழலே.

### சிராமலைக்கோவை முற்றும்.

---

455. காளம் - விடம். அரசன் - குபேரனை. வேளின் காளம் - குயில். இக்கு ஆரும் வாணி - கரும்பை ஒத்த சொல்லை யுடையாய். ஒல்லை-விரைவில்.

456. கொந்து - பூங்கொத்து. புனலும் ஆரும் இந்துவும் ஆர்ந்த; ஆர் - ஆத்தி. உறல் - அடையாதே. வந்து ஆர் - தென்றற்காற்று ஆர்ந்த.

457. எம்பெருமாட்டி மனம் சீர்கொண்டது.

458. வாழி மறையவர் வானவ ரானினம்: "வாழ்க வந்தணர் வானவ ரானினம்" (தே. திருஞா.) மதிதொறும் - மாதந்தோறும். முகில் - மேகம்.

உ

# செய்யுண் முதற்குறிப்பகராதி.

[ எண் - பக்க எண். ]


அடியார்க்குநல்லன் 35
அடியாருளத் 74
அடியாரை 19
அணங்கிற் 93
அணங்கொரு 127
அணிகோமலர் 30
அணிதிகழ்பூண் 114
அம்பஞ்சனை 97
அயிலொன்று 18
அரவமதியணி 106
அரவேபணி 106
அரியுமறிவருந் 121
அரும்பர்முலை 39
அருவாயரு 81
அருளாலெனைத் 82
அல்லார்தரு 106
அல்லேந்து 16
அலர்தரு 85
அவ்வண்ண 117
அளிதங்கு 59
அளையாரரவக் 81
அற்பாலுமை 66
அறந்தானுகைத்திடு 66
அன்போடுறு 126
அன்றேகணவர் 50
அன்றேயெமைத் 109
அன்னையுமத்தனு மாகு 38
அன்னையுமத்தனு மாவோன் 101
அனக்கேதனத் 25
அனமேமநம 72
அனைவடிவான 6
ஆட்டமு 74
ஆடவெடுத்த 36
ஆடியசேவடி 12
ஆடுந்திருநடத் 111
ஆடுநடனத்த 77
ஆடுநிமலன் 82
ஆடுமமலர் 52
ஆடுமமலன் 120
ஆண்டேதனை 80
ஆதிநடுவந்த 124
ஆரணமுற்ற 13
ஆரணமேத்துஞ் 41
ஆலந்திகழு 7
ஆறணிசெஞ்சடை 108
ஆனஞ்சு 94
ஆனேறுயர்த்தவ 94
இந்தமர்வேணி 110
இந்தாடு 40
இந்தினைவார் 53
இமையாசலக் 80
இரவிற்குறி 94
இரும்பாகிய 71
இரும்பாமன 44
இருவினைதீர்த் 51
இன்பம் விளைத்திடு 133
இன்பரைத் 51
இனத்தாமரை 89
இனம்பிரி 11
ஈதெனகாரண 124
உடலுமுயிரு 7
உடலைத்துளைத் 131
உரியேனென 84
உருவார்மத 135
உழையுமுழையு 52
உன்கண்ணிரண்டு 24
உன்னாருளங் 67
ஊனார்புழுக்கலு 31
ஊனேயுயிர் 103
எங்குநிறைந்தரு 104
எண்ணார்புர 64
எதிர்த்தெழு 131
எல்லாமறிந்தவர் 18
எழுத்துமுதற் 129
எளியார்துதிக் 95
என்பணிகொண் 44
என்னாசை 83
என்னாருயிர்க் 97
என்னுளிருந் 102
எனக்கேயுயி 44
ஒட்டார்புர 58
ஒருகோலிரு 105
ஒருமானிடத் 100
ஒன்றாயளவி 64
ஒன்றேயுனக்கு 87
ஓகையொடுந் 68
ஓங்கத்த 111
ஓராதிக 132
கங்கையும் பாம்பு 59
கண்டாடமை 45
கண்டாலுமோ 47
கண்ணாரொளி 26
கண்ணும்வடிவமு 129
கணியார்தரு 12
கணையொன்று 59
கயலார்விழி 40
கயவாய்கதி 54
கரவுமிகு 56
கரியவராரண 127
கரும்பார்தரள 79
கருமால்பணி 20
கருவாயுரு 65
கல்லாமெனது 32
கலர்மாலை 49
குலவாநமைத் 90
கற்றார்கவிகள் 67
கற்றிடுகல்வியி 130
கறையார்மிடற் 36
கன்றார்கரத்துப் 118
கன்னலன 102
கனத்தினைமானு 54
காந்தமு 34

காமக்கடுங்கன 78
காமம்வெகுளி 15
கார்க்குன்றுரித் 83
கார்காட்டியார் 83
கார்தருசோலைச் 126
கார்வளர்சோலைச் 118
காரார்தருமிடற் 100
காரார்மணிகண்டத் 52
காராரறல் 95
காலனழிய 72
காலையுங்காய்ந் 104
காவலர்காத 70
காவியினார்மணிகண் 41
காவைப்பொருந்திக் 68
காளியொடு 38
கான்செய்த 100
கான்படர் 112
கானக்கடுக்கை 113
கானஞ்செறி 86
கானார்கிழங்கு 49
குருவேயெனவரு 112
குருவேயெனவெனை 61
குளங்காட்டு 49
குன்றினையேந்து 42
குன்றேசிலை...கோல் 64
குன்றேசிலை...கோற் 33
கூடவிழைத் 131
கூற்றந்தனை 132
கையார்மழுப் 93
கொடுக்கக்
கொடுக்கக் 128
கொடுத்தலு 10
கொந்தார்குழற் 116
கொந்தார்தரு 135
கோங்கரும்பா 101
கோதாரும்பாசங் 63
கோபஞ்செறிதர 130
கோவாமணி 48
கோளாடரவணி 6
சங்கைக்குழை 36
சந்தார்பொழிலுஞ் 99
சாந்தமணி 75
சாரதபோதனர் 120
சிங்கநிரை 71
சித்தியைக் 15
சின்மயனாளுஞ் 39
சீர்கொண்டதாமரை 1
சீர்பூத்ததார் 1
சீர்மிகுமோரிறை 132
சீரார்சிராமலை 23
சீராரடிமலர் 11
சீராருமீசர் 3
சீரியரே 55
சுகமன்னு 45
சுடரன்றி 43
சுரக்குங்கருணைப் 71
செந்தாமரை 32
செப்பார்முலை 49
செல்லேனினை 93
செவ்வீரடி 107
சேடார்தரு 99
சேணேமருவுஞ் 33
சேய்க்குநிகரு 105
சேயகளபங் 117
சேயனையானெடு 107
சேயாரிதழ் 122
சேயானனங் 122
சேலாகி 79
சேலாய்த்திகழும் 66
சேலானகண் 20
சேலைப்பொரு 17
சேலையும்வேலையும் 53
சேவியலார்கொடி 4
சேற்றார்கமல 116
சோலையின்மீ 66
ஞானம்பெற 55
தகரக்குழன் 95
தண்ணார்கயத்திற் 73
தண்ணார்புனல் 87
தண்ணார்மதிமுடி 75
தண்ணாரமுத 93
தண்ணாருங் 13
தணியாமிகு 10
தந்தியடர்த்துப் 96
தந்தியைச் 62
தம்மனைவாழிடப் 62
தமராமொரு 133
தழைகொண்டு 44
தன்னம்புய 113
தன்னை...சாரலில் 108
தன்னை...தாழ்குழ 119
தன்னைப்பரமென 91
தன்னைப்புரந்து 114
தன்னையுணர்த்தித் 98
தனக்கேயுயிர் 41
தனத்தார்பசப்பும் 75
தனைமகிழ் 40
தாதைதன் 37
தாயாகிவந் 25
தாயுஞமலியு 69
தாயேயெனமகிழ்ந் 32
தாராரும்வேலவ 43
தானேதனக்கு 16
தானேயெனைத் 102
தானென்றிரண் 29
திக்கும்புலி 68
திகழ்தருமாரங் 119
திடமார்தரு 117
திருநாமகட் 101
திருவேமகிழ் 82
திரையார்தரு 38
தீதாருந்தீவினை 52
தீராததீவினை 15
துங்கன்சிரகிரி 72
துடியாரிடை 91
துடியொன்று 14
துடைத்துப் 5
துதிவழியே 32
துறந்தார்வினை 80
துன்பார்வினைப் 47
தூயகடவுள் 115
தெள்ளித்தெளித்த 31
தென்முகவேந்தை 5
தேடத்தகாத 126
தேடித்தலைவர் 121
தேடியமாலயன் 90
தேடுவராகமுங் 57
தேவாதிபர் 65
தேறினர் யாரும் 18

தேனார்குதலைத் 96
தேனார்மலர்சுரர்க் 122
தேனார்மொழி 46
தேனோடி 27
தோண்டரை 13
தோடிடுங்காதின 56
தோடுங்கலையுந் 9
தோடுறுகாதின 39
நங்கையொர் 34
நஞ்சமிளிர்களத் 113
நஞ்சார்தரு 97
நண்ணார்புர 30
நதிகொண்டசெஞ் 4
நதியாடர 26
நதியைச்சடை 56
நந்தார்கரன் 109
நந்தியையூர் 81
நம்புமவர்க்கருள் 89
நம்மனையே 109
நமக்குக்குல 95
நல்விற்பனர் 134
நற்றாய்வெறுத்திட 134
நன்றுடையானை 54
நன்னாககன்னியர் 120
நனவிலுடலுறு 125
நனையார்குழ 70
நாகம்புனைந் 110
நாதாந்தமீது 12
நாலாரணந்தொழு
 தேத்து 63
நாலாரணந்தொழு
 நம்மான் 109
நாளுமெனக்குத் 98
நானெனதென்னுஞ் 8
நிறையாருமின் 48
நின்றேகவன்றயர் 87
நீங்கரும்பாசந் 47
நீடுமிராய 86
நீதந்தகாமக் 60
நீரம்புலி 78
நீரார்சடை 67
நீரார்தருசடை 16
நீளுங்கயல் 94
நூலாகு 31
நெஞ்சேயெனக் 64
படிவான 22
பண்டுறுமார்வத் 125
பண்ணார்கிளி 76
பண்ணார்மொழி......
 பாகர் 9
பண்ணார்மொழி......
 பாகன் 48
பண்ணாரிசை 114
பண்ணியறேர்ந்தவர் 17
பண்பாலுயிர் 34
பண்பான்மறையவ 86
பணிகொண்ட 75
பணிந்தும் 58
பணியுமதியு 5
பத்தானன 77
பதியாதுரை 29
பந்தப்பவந் 86
பந்தனமாமுலை
 மானே 133
பந்தனமாமுலையாயுள 89
பரவைமனை 63
பரையொன்று 26
பற்றேதவிர்த் 105
பன்னவரும்புக 92
பன்னாடவங்க 14
பன்னாளகன்றமை 119
பன்னாளும் 45
பன்னுகலை 128
பாகத்தைமாதுக் 58
பாகமுறவுண 115
பாசமகற்றி 23
பாசமிகந்துயிர் 115
பாணினுஞ் 98
பாதிமதியணி 84
பாந்தளணிசடை 132
பாம்பாவை 128
பாயசலூனொடு 104
பாருந்.........திரிந்து 8
பாருந்......புகழும் 43
பாலாழி 50
பாவார்தரு 11
பானேர்மொழி 62
பிடிதானிகர் 51
பிறவாதவாழ்வு 77
பிறையார்சடைமுடி 19
பிறையார்சடையர் 51
பின்னார்தருசடை 122
பின்னுஞ்சடைக் 108
புயங்காபரணத் 92
புயமுற்ற 61
பூதங்கரணம் 91
பூதியணிபுயத் 105
பூபாலகரென 131
பூமகள்கேண்மை 129
பூமாதுகேள்வ 130
பூமாதெனத் 117
பூவாழளி 28
பூவியைமா 21
பெண்ணார்தரு 41
பெண்பாலமர்ந் 104
பெண்பாலிடத் 88
பெண்பான்மகிழும் 125
பெண்மானனைய 19
பெம்மான்சிராமலை 23
பெம்மானெமக் 69
பேராத 118
பேறுகளிற் 127
பையாரரவல்குல் 119
போடிப்பாருட 67
பொய்வாழ் 14
பொருந்தாவுலோகம் 25
பொருமித்திரண்டு 10
பொருளாலிகபர 133
பொழியுங்கருணைப் 84
பொற்புக்கொருவரு 97
பொன்மணவாள 92
பொன்னாட்டவர் 57
பொன்னார்...பூண் 4
பொன்னார்...பூவை 45
பொன்னார்...........
 போற்று 53
பொன்னாள்கண 6
பொன்னியல்வார் 91
பொன்னிவளந் 35

பொன்னேதகு 121
பொன்னேயெழிற் 107
பொன்னைமருவு 74
போற்றார்புரங்கள் 103
மகத்தைப்புரியு 33
மங்கையைப் 19
மண்ணும்பர 27
மணிமிகவாருஞ் 61
மதிகொண்டசெம் 21
மதிபூத்த 69
மதிமுகமாகு 3
மருங்கோல 27
மருவளர்கொன்றை 22
மருவாச 28
மருவார்புர 69
மழுவார்தருகரத் 116
மறவாதகாத 98
மறியார்தரு 71
மன்றுணடம் 73
மன்றுணடித் 76
மனமுநிறையுங் 50
மாதங்கவோங்க 26
மாதார்தருமிடப் 108
மாதாரும்பாகத்த 100
மாதேநமர்கண் 84
மாதோர்மருங்கினர் 42
மாயாமலந்தவிர்த் 103
மாயாவிகாரத் 60
மாலாயுதம் 68
மாலையன்றாய் 124
மாற்றுமை 76
மானார்தரு 9
மானாரிடத்தினர் 57
மானைவினாவி 42
மின்காட்டி 123
மின்பூத்தவேணிப் 70
மின்னார்சடைமுடி 18
மின்னார்சடையிடை 85
மின்னாரல 99
மின்னாருநுண் 113
மின்னேநிகர் 85
முப்புரம்வேவ 72
முருந்தநி 111
முருந்தாமுறுவ 55
முலைகண்டு 46
முன்னாருள 57
முன்னாள்சிராமலை 7
முன்னூற்கலை 29
மூலாகமப் 59
மூவாத 24
மூவிலைவாய்ந்த 30
மெய்யரன்பால் 3
மெய்யருள 96
மெய்யுமை 42
மைக்காள 135
மையார்குவளை 24
மையார்விழிமட 37
மையார்விழியுமை 79
மையாரயில்விழி 118
மையாரிருட் 60
மையிற்றிகழு 28
மோனவயித்திய 88
யாரொடுநான் 116
யானென்ன 96
யானேதியம்புவ 110
வம்பார்முலை 63
வருத்தும்பசி 34
வளந்திகழ் 35
வாசம்பெறு 8
வாட்டுங் 46
வாம்பெற்ற 21
வாமாமறை 102
வாரார்முலை 65
வாரித்திரைமுத் 92
வாரித்திரைவளை 74
வாருறுபூண் 112
வாவாவெனக் 2
வாழிமறையவர் 135
வானகமோ 2
வானவர் 8
வானேய்மதி 124
வானைப்புணருஞ் 17
விடைக்குன்று 73
விடையுற்ற 22
விண்ணினர் 20
விண்ணும்பரவுஞ் 29
விற்பனர் 70
விறப்புமிகு 90
வெருவேன்மற 112
வெவ்விடமாரு 54
வெறியார்கடுக்கை 103
வேண்டுவ 101
வேதமயன் 78
வேதியர்வாழ்த்தி 110
வேலைவிட 85

# சிறப்புப் பாயிரம்

[ சாமிநாதகவிராயர் சொன்னவை ]

(கட்டளைக்கலித்துறை)

1. பூவார வேதியர் நல்வேத மென்பர்த போதனர்கள்
நாவார வாகம மென்ப ரெழுத்தென்பர் நாவலர்கள்
மேவார வேண்மனு நூலென்பர் காமுகர் வேந்தர்சைவர்
தேவார மென்பர் சிராமலைக் கோவையைச் செப்பிடினே.

2. சத்தாந் தனிமறை யாகம சாத்திர மாமங்கமாம்
சித்தாந்த மாமுழு வேதாந்த மாஞ்சித்ர காவியமாம்
முத்தாந்த மூவர்சொல் வாசக மந்த்ர முதுபொருளாம்
கொத்தாந் தலைமனு நூலாஞ் சிராமலைக் கோவையதே.